# ஜீவநதி

## முதலாம் ஆண்டு நிறைவு மலர்




**கலை இலக்கிய இருதிங்கள் ஏடு**

வைகாசி – ஆனி 2008

150/=

இணையாசிரியர்கள்
சி.விமலன் & க.பரணீதரன்

0.6
PR



YARL BEACH HOTEL
All food Available
எமது ஸ்தாபனத்தில் உங்களுக்குத் தேவையான
உணவு வகைகள் பெற்றுக்கொள்ளலாம்.
பிரியாணி, கோழி, ஆடு, மாடுஸ
பிரியாணி , மரக்கறி,
பிறைட் றைஸ்
டெவல் , இறால், கணவாய்,
சீவூட்
கோழி சூப்,
கொத்து றொட்டி , ஆடு, மாடு, கோழி,
நூடில்ஸ், மரக்கறி, கோழி.
மற்றும் மதிய உணவுகளான, மீன் சாப்பாடு, மரக்கறிச் சாப்பாடு,
கோழிச் சாப்பாடு என்பவற்றின் ஓடர்களும் ஏற்றுக் கொள்ளப்படும்.
வதிரி road, உடுப்பிட்டி
T. P.-021 226 3966

# நதியினுள்ளே...

## கட்டுரைகள்


பேராசிரியர் செ.கிருஸ்ணராஜா 03
பேராசிரியர் அ.சண்முகதாஸ் 15
டொக்ரர் எம்.கே. முருகானந்தன் 19
கலாநிதி செ.யோகராசா 22
அன்புமணி 30
சின்னராஜா விமலன் 33
செங்கை ஆழியான் 37
க.திலகநாதன் 52
கி.நடராசா 55
த.அஜந்தகுமார் 56
பொன்னையா அரவிந்தன் 63
இ.இராஜேஸ்கண்ணன் 68
மு.அநாதரட்சகன் 71
க.பரணீதரன் 76
செல்வஅம்பிகை நடராஜா 88
பெரிய ஐங்கரன் 91
டொக்ரர் வே.கமலநாதன் 94
ச.லலீசன் 101


## சிறுகதைகள்


க.சட்டநாதன் 10
தெணியான் 25
த.கலாமணி 47
குப்பிளான் ஐ.சண்முகன் 60
ச.முருகானந்தன். 74
பி.கிருஸ்ணானந்தன் 78
தனா 82


## கவிதைகள்


த.ஜெயசீலன் 09
மேமன்கவி 21
இயல்வாணன் 32
நா.நவராஜ் 36
பொன். சுகந்தன் 45
ம.பா.மகாலிங்கசிவம் 46
தீபச்செல்வன் 59
எஸ்.கார்த்திகாயினி 67
மைத்திரேயி 73
வேல்நந்தன் 75
எல்.வஸீம்அக்ரம் 81
வெ.துஷ்யந்தன் 87
சோ.பத்மநாதன் 90
ச.முருகானந்தன் 100


## பத்தி எழுத்துக்கள்


விஷ்ணு 103
பா.ரகுவரன் 105


## மதிப்பீட்டுரைகள்


தனலஷ்மி நகுலேசபிள்ளை 97
அ.விந்தன். 107

**ஜீவநதி**

(கலை இலக்கிய இருதிங்கள் ஏடு)

அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!
- பாரதிதாசன் -

# பிரகாசமான எதிர்காலத்தை நோக்கி

ஜீவநதி ஊற்றெடுத்துப் பெருகிப் பாய்வதற்கு ஆரம்பித்து ஓராண்டு காலம் நிறைவடைகிறது.

ஜீவநதியின் முதல் இதழ் நேற்றுத்தான் வெளிவந்தது போல ஓர் உணர்வு எமது உள்ளத்தில் இன்று எழுகின்றது.

அதற்குள் ஓராண்டு காலத்தைக் கடந்து வந்துவிட்டோம் என்பது உண்மையில் பிரமிப்பாகவே இருக்கின்றது.

தரமான ஒரு கலை இலக்கியச் சஞ்சிகையை வெளியிடுகின்றவர்கள் முகங் கொடுக்கவேண்டிய அத்தனை பிரச்சினைகளுக்கும் முகங் கொடுத்தே, இந்த ஓராண்டு காலத்தில் ஜீவநதியைத் தொடர்ந்து நாம் வெளிக் கொணர்ந்தோம். இச்சஞ்சிகையை வெளியிடுவதற்கு ஆரம்பித்த வேளையில் கலை, இலக்கிய ஆர்வம் ஒன்றே எமது மூலதனமாக இருந்து வந்தது. இலக்கிய வெளியீடு சம்பந்தமான முன் அனுபவங்கள் எவையுமே எமக்கப்பொழுது இருக்கவில்லை. அதனால் எத்தகைய தளப்பமுமின்றி, இளங் கன்றின் பயமறியா இயல்புகளுடன் ஜீவநதியை வெளியிடுவதற்கு ஆரம்பித்தோம். அதுவே எமது வெற்றிக்குக் காரணமாகவும் அமைந்தது.

இந்த ஓராண்டு காலத்தில் நாம் பெற்றுக் கொண்ட அனுபவங்கள் பல. ஜீவநதியின் வளர்ச்சி காரணமாக, ஆரம்பகாலத்தில் இருந்து வந்த ஆரோக்கியமான சூழ்நிலைகள் யாவும் முழுமையாக இப்பொழுதும் இருந்து வருவதாகக் கருதமுடியவில்லை. ஆனால் எதனாலும் நாங்கள் சோர்ந்து விடவில்லை. நாம் பெற்ற அனுபவங்களைப் பசளையாக்கி, ஜீவநதியை மேலும் சிறப்பாக வெளியிடுவதற்கு நாம் உறுதி பூண்டுள்ளோம்.

ஈழத்து இலக்கியத் துறையில் இன்று மிகவும் நலிவுற்ற நிலையில் இருப்பது விமர்சனத்துறை. முற்போக்கு இலக்கியம் எழுச்சியுற்றிருந்த காலத்தில், முற்போக்கு விமர்சகர்களால் காத்திரமான விமர்சனங்கள் முன்வைக்கப் பெற்றன. ஈழத்து முற்போக்கு விமர்சகர்களின் விமர்சனக் கருத்துகளுக்குத் தமிழ்நாட்டிலும் வரவேற்பிருந்தது. அக்காலகட்ட கலை, இலக்கிய வளர்ச்சிக்கு அந்த விமர்சனங்கள் உந்துசக்தியாக அமைந்தன. இன்று கலை, இலக்கிய விமர்சனங்கள் இடம்பெறாது அருகிப் போய்விட்டதனை நாங்கள் உணர்கின்றோம். ஜீவநதி விமர்சனத் துறை சார்ந்த அதிக நாட்டத்தைக் கொண்டுள்ளது. பத்திரிகைகள், சஞ்சிகைகளில் வெளிவந்து கொண்டிருக்கும் நூல் மதிப்பீடுகள் உண்மையான விமர்சனங்கள் என்று கொள்ளத் தகுந்தவை அல்ல. நொய்ந்து போய் இருக்கும் விமர்சனத்துத்துறையை வளர்த்து ஆரோக்கியமான இலக்கியங்களை இனங்காண்பதுடன், நல்ல இலக்கியங்களை வளர்த்தெடுக்க வேண்டுமெனவும் கருதுகின்றோம். நமது நாட்டிலுள்ள விமர்சகர்கள் ஜீவநதியின் நோக்கத்தைப் புரிந்துகொண்டு உதவவேண்டுமென எதிர்பார்க்கின்றோம். அதேசமயம் ஜீவநதியின் ஆரோக்கியமான விமர்சனத்தையும் விரும்பி வரவேற்கின்றோம்.

ஜீவநதி காத்திரமான ஒரு சஞ்சிகையாக வெளிவந்து கொண்டிருப்பதற்குக் காரணமாக இருப்பவர்கள், நமது படைப்பாளிகள். தொடர்வரவுக்கு ஆதரவாக இருக்கின்றவர்கள் வாசகர்கள், விளம்பரதாரர்கள். இவர்கள் அனைவரையும் ஜீவநதி நன்றியுடன் நினைவு கூருகின்றது. இரண்டாவது ஆண்டு இறுதியிலும் இது போன்று சிறப்பாக ஆண்டு மலர் ஒன்றினை அளிப்போம் என்ற நம்பிக்கையுடன் இந்த மலரையும் உங்கள் கரங்களில் அளித்து மனமகிழ்கின்றோம்.

- ஆசிரியர்கள்

# வடமராட்சியிலுள்ள பெருங்கற்கால கடல் முகப்புத்தளங்கள் மற்றும் கற்காலப் பண்பாட்டு மையங்கள் : அடையாளம் காணலுக்கான ஓர்அறிமுக ஆய்வு

- பேராசிரியர் செ.கிருஸ்ணராஜா

இலங்கைத்தீவின் பண்பாட்டு வளர்ச்சியானது கடல் முகப்புத்தளங்களையே (Sea based open cultural yard) பின்னணியாகக் கொண்டு உருவானதாகும். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்தே தென் - தென்கிழக்காசிய நாடுகளுக்கிடையே கடற்பயணங்கள் மேற்கொள்ளப் பட்டு பண்பாட்டுத்தொடர்புகள் உருவாகியிருந்த வகையினை தென்கிழக்காசிய நாடுகளிலுள்ள தொல்லியலாளர்கள் தற்போது எடுத்துக்காட்டியுள்ளனர். இலங்கை வரலாற்றைக் கூறும் மகாவம்சத்தில்கூட அத்தொடர்புகள் மறைமுகமாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. கௌதமபுத்தரின் இலங்கைக்கான மும்முறை விஜயம் கூட கடற்கரையோரமாக, கடல்முகப்புத் தளங்களையே மையப்படுத்தி நிகழ்ந்தமையினைக் காண்கின்றோம். மகாகமை, திசமகராமை (கதிர்காமப்பரப்பு) ஆகியன உள்ளிட்ட தென்னிலங்கைப்பிராந்தியம் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து யாவாவுடன் கொண்டிருந்த தொடர்புகள் இப்பொழுது தொல்லியல் அடிப்படையில் உறுதிப்படுத்தப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இக்கடல் முகப்புத்தளங்கள் பெருமளவிற்கு உள்நாட்டு நன்னீர் வளப்பரப்புக்களை பின்னணி நிலமாகக்கொண்டு, கடல்வாணிபப் போக்குவரத்துப் பாதைகளை தரைப்பரப்புடன் இணைத்து வைத்து, பண்பாட்டுக் கடவைகளாக , கடற்கரையோரக்கிராமங்களாக, துறைமுகங்களாக, கோரிகளாக விளங்கி யிருந்த தன்மையைக் காண்கின்றோம். யாழ்ப்பாணக்குடாநாடும் வரலாற்றுக்கு முற்பட்ட காலப்பரப்பிலிருந்தே கடல்முகப்புத்தளங்களின் அதீத செல்வாக்கிற்கு உட்பட்டு வந்திருந்தமையினை தொல்லியற் சான்றுகளினூடாகக் கண்டுகொள்ள முடிகின்றது.

யாழ்ப்பாணக்குடாநாட்டைப் பொறுத்தவரையில் அதன் கடல் முகப்புத்தளங்கள் தொடர்பான தொல்லியல் ஆய்வுகள் இன்னும் தொடங்கப்பெறாத ஒரு நிலையில் உள்ளதால் குடாநாட்டுப்பரப்பிற்குள் ஊடுருவியிருந்த சமுத்திரவியற் பண்பாட்டின் வாயில் முகப்புக்கள் தொடர்பாக திட்டவட்டமாக இங்கு எதனையும் குறிப்பிட முடியாமல் உள்ளது. ஆயினும் சமுத்திர நீரோட்டங்கள் (Currents & Tidal waves) காரணமாக கலைப்பொருட்கள் மற்றும் தாவர வித்துக்கள், அரிய உயிரினங்கள், காட்டு விலங்குகள் யாவும் சமுத்திரங்களினூடாக இன்னோரிடத்திற்குக் கடத்தப்படுவதனைக் காணக்கூடியதாகவுமுள்ளது. இந்து சமுத்திரத்தினூடாக இந்திய உபகண்டத்திலுள்ள கிழக்குக் கடற்கரையோரக் கலைப்பொருட்கள் பல வடமராட்சிக்கடற்கரையோரங்களில் சுனாமி அலைகளினூடாகக் கொண்டு வரப்பட்டு படிவு செய்யப்பட்டிருந்த வகையினை தற்போது எம்மால் உறுதி செய்துகொள்ள முடிகின்றது. தொல்லியல் சிறப்புக்கலை பயின்ற மாணவன் திரு. வசீகரன் பருத்தித்துறை துறைமுகத்திற்கண்மையிலுள்ள மணற்பரப்பில் இருந்து அண்மையில் மீட்டெடுத்த யானைத்தந்தத்தினால் உருவாக்கப்பட்ட குழலூதும் கிருஸ்ணர் சிலை ஆந்திரக் கலைமரபிற்குரியதாக இருப்பது இங்கு மேலே கூறப்பட்ட கருத்தினை உறுதி செய்வதாகவுள்ளது. அவருடைய இக்கண்டுபிடிப்பானது கடற்கரையோரம் மீதான தொல்லியல் மேலாய்வுகளின் அதீத முக்கியத்துவத்தினை, அத்தொழிற்பாட்டினை காலதாமதம் செய்யாது விரைவுபடுத்தி, மேற்கொள்ளத் தூண்டுவதனை எம் எல்லோருக்கும் உணர்த்தும் செய்தியாக உள்ளது. ஆந்திரக்கலைக் கூடம் வைணவ மதத்தினையும், மகாயான பௌத்தமதத்தினையும் ஓரணியில் இணைத்து வைத்ததோடு மட்டு மல்லாது சமுத்திரப்பண்பாட்டு முகப்புக்களை தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் குறிப்பாக வட இலங்கையிலும் உருவாக்கியிருந்தமையைக் காண்கின்றோம். கி.பி. முதலாம் நூற்றாண்டின் தொடக்கத்துடன் வைஷ்ணவம் மற்றும் மகாயான பௌத்த சமயத்துடன் நெருங்கிய தொடர்புடைய கடல்முகப்புத்தளங்களும், கி.பி. 5ம் நூற்றாண்டிலிருந்து சைவ மதத்துடன் தொடர்புடைய கடல் முகப்புத்தளங்களும் வட இலங்கையில் தோற்றம்

பெற்றிருந்தமையினை தொல்லியல் மூலங்கள் உறுதிப்படுத்தியுள்ளன. கீரிமலை-நகுலேஸ்வரம்,சந்திரமௌலீஸ்வரம் (ஆனைவிழுந்தான் சந்தி - புலோலி), காங்கேயன்துறை, மாதோட்டம் போன்ற மையங்கள் கடல்முகப்புத் தளங்களாக உருவான காலப்பரப்பானது உண்ணாட்டு நகரங்கள் தோற்றம் பெற்ற பின்னர் ஏற்பட்டவையாகும். ஆனால் வல்லிபுரம், பொன்னாலை, பண்ணை,வில்லூன்றி,சாட்டி கௌத்தன் துறை, கற்கோவளம், நயினாதீவு (நாகவிகாரை) போன்றவை கிறீஸ்தாப்த காலத்திலிருந்தே தோற்றம் பெற்ற கடல்முகப்புத்தளங்கள் ஆகும்.

## கடற்கரையோர நன்னீர் வழங்கல் மையங்கள்

வடமராட்சியைப் பொறுத்தவரையில் நன்னீரை வழங்கிவந்த கடற்கரையோர மையங்களாக வல்வெட்டித்துறை, ஊறணி, கந்தவனக்கடவை, இம்பருட்டி (இம்பர்சிட்டி),தம்பசெட்டி, சக்கோட்டை, சுப்பர்மடம், கற்கோவளம் ஆகியன விளங்கி வந்துள்ளன. வடமராட்சி கிழக்கில் கௌத்தன் துறை (நாகர்கோவில்), உடுத்துறை, செம்பியன் பற்று, குடாரப்பு, வெற்றிலைக்கேணி, மருதங்கேணி, மண்டலாய், நல்ல தண்ணித்தொடுவாய் ஆகியன நன்னீர் மையங்களாக விளங்கி வந்துள்ளன. இங்குள்ள கடலைப்பார்த்த புராதன குடியிருப்புக்கள் வடமராட்சியில் முன்னோடியாகத்தோற்றம் பெற்ற வகையை மேற்குறிப்பிட்ட கடற்கரை மையங்களிலேயே காணமுடிகின்றது. அந்த வகையில் தென்னிந்திய கிழக்குக்கரையோர கடல் முகப்புத்தளங் களுடனும், தென்கிழக்காசிய கடல்முகப்புத்தளங்களுடனும் வடமராட்சியிலுள்ள மேற்குறிப்பிடப்பட்ட கடற்கரையோர மையங்கள் நேரடியான பண்பாட்டுத்தொடர்புகளைக் கொண்டிருந்தமையைக் காண்கின்றோம். சதவாகனர் மற்றும் சங்ககாலப்பண்பாட்டு மரபுகளுக்கும் முன்னோடியான கடற்கரையோரக்குடியிருப்புக்களை தொல்லியல் ரீதியில் இங்கு மிகவும் இலகுவாக அடையாளம் காணமுடிந்துள்ளது. நாகர்கோவிலில் திரு.ஆ.தேவராசன் என்பவரால் கண்டெடுக்கப்பட்ட வெள்ளிக் கட்டியினாலான அச்சுக்குத்தப்பட்ட நாணயமொன்றும், வல்லிபுரத்தி லிருந்து சேகரிக்கப்பட்ட ஆந்திரப் பண்பாட்டுக்குரிய (சதவாகனர் வம்சத்தினருக்குரிய) நாணயங்களும், மானாண்டி யிலிருந்தும் நாகர்கோவிற்பரப்பிலிருந்தும் மீட்டெடுக்கப்பட்ட சங்ககாலச் சுடுமண் பேழைகளும், உடுத்துறை யிலிருந்து மீட்டெடுக்கப்பட்ட நந்தி விக்கிரமும், கௌத்தன் துறை –கருமணற் பிட்டியிலிருந்து மீட்டெடுக்கப்பட்ட மாட்டுச்சாணமும் - மட்பாண்டமும் - சாம்பலும் ஒன்றாகச்சேர்ந்து இறுகிப்போன சுவட்டெச்சமும் ( **Hand- made pottery with ash and cowdoung**) மற்றும் புராதன தூண்டில் ஊசிகளும் எமக்கு வடமராட்சியினதும், வடமராட்சி – கிழக்குப்பிராந்தியத்தினதும் தொன்மை வரலாற்றினை – மக்கள் சஞ்சாரத்தினை, ஜீவனோபாய முறைகளினை நிர்ணயிப்பதற்குக் கிடைத்த தொல்லியற் சான்றுகளாக உள்ளன.

## பெருங்கற்பண்பாட்டு மையங்களாக கடல் முகப்புக்கள்

இதுவரையில் ஆராயப்படாதவோர் அம்சமாக வடமராட்சியின் தொன்மை வரலாற்றில் இருந்துவரும் இத்தொல்லியல் அலகு தற்போது எம்மால் மேற்கொள்ளப்பட்ட மேலாய்வுகளின் பயனாக ஓரளவிற்கு வரலாற்று வெளிச்சத்திற்கு எடுத்துவரப்பட்டுள்ளதெனலாம். 1995ஆம் ஆண்டிலும் அதற்கு முற்பட்ட வருடங்களிலும் திரு. S. கனகரட்ணத்துடனும், திரு வி. கனகராசாவுடனும் இணைந்து மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் மேலாய்வுகளின் பயனாகவே திடல் (காக்கைத்திடல்) என்றழைக்கப்பட்ட கிராமம் கறுப்பு - சிவப்பு மட்பாண்டங்களை மண்படைகளில் கொண்டிருப்பது தெரிய வந்தது. இதே போன்று ஆலங்கட்டையும் அதன்கீழ் மண்படைகளிலே கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்களைக் கொண்டிருப்பதனைக் கண்டுகொள்ள முடிந்தது. ஆலங் கட்டையின் பிரதான மதகிலிருந்து கோட்டைத்தெருவிலுள்ள புளியமரத்தடி வரைக்கும் கறுப்பு- சிவப்பு மட்பாண்டங்களின் மண்படைகளினூடான செறிவினை என்னால் உறுதிப்படுத்திக் கொள்ள முடிந்தது. சுடுமண்சிற்பங்கள் (பெண்பாவைகள்), சுடுமண்விளக்குகள் போன்றவற்றை எம்மால் இப்பிரதேசத்திலிருந்து சேகரிக்க முடிந்துள்ளமையும் இங்கு குறிப்பிடத் தக்கதாகும். தேவரையாளி என்ற கிராமம் மிகவும் தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த நிலையில் ஒரு கடல்முகப்புக் கிராமத்தின் பின்னணித்தரவையாக , ஐதீகங்கள் நிறைந்த பண்பாட்டுக்கிராமமாக இருந்து கொண்டிருப்பதனையும் காண்கின்றோம். திடல் என்று அழைக்கப்படும்

காக்காய்திடலில் அகழ்வாய்வுக்குழிகளைத் தோண்டும்போதே ஆலங்கட்டை, தேவரையாளி, மானாண்டி போன்ற கிராமங்களின் பண்பாட்டிருப்பு வெளிப்படும் என்பது திண்ணம்.

## நெடியகாடு:

கடல்முகப்புத்தளத்தினை இடு காடாகக் கொண்ட மிகப்புராதனம் வாய்ந்த நீட்சியான ஒரு கிராமமாக விளங்கிவந்த நிலையில், நெடியகாடு இன்று குடிசனம் செறிந்த ஒரு பரப்பாக **வல்வெட்டித்துறையின்** ஒரு பிரிவாக அமைந்துள்ளது. **நெடியகாட்டின் தெற்கேயுள்ள பின்புலம்** முழுவதும் **புராதன சடங்குகள், கழிப்புக்கழித்தல், காய்வெட்டுதல் / தடைவெட்டல், மைவெளிச்சம் பார்த்தல்,** போன்றவற்றால் நிறைந்திருந்தது. இதன் இன்றைய நடைமுறை வடிவத்தினை **உப்புக் கிணற்றடிப்பிள்ளையார் கோயிலடியை** அடுத்துக் காணப்படும் **பெரியதம்பிரான் கோவிலடியில்** காணலாம். இந்த **வனக்கிராமத்தில்** இற்றை வரைக்கும் **பெருங்கற்கால இடுகாட்டுக் கிரிகைகள், பலியிடுதல், ஆணிஅறைதல், விருட்சத்திற்கு மனித** அல்லது **மிருகக்குருதியை நிவேதித்துவிடல்,** போன்றன இடம்பெற்ற வண்ணமுள்ளன. இக்கிராமத்தின் முகப்பாக விளங்கும் நெடியகாடு இன்று நகரமயமாக்கத்திற்குட்பட்டுவிட்டபோதிலும், புராதன வாழ்க்கை முறையின் எச்சமான கடல் முகப்பிற்கேயுரித்தான வாழ்வின் சில அம்சங்கள் அக்கிராமத்தின் பின்னணியில் இன்னும் அங்கு காணப்படத்தான் செய்கின்றன. ஆகையால் இப்பிராந்தியம் தொல்லியல் ஆய்வுக்கு மட்டுமல்லாது சமூக-மானிடவியல் பண்பாட்டாய்வுகளுக்கும் உட்படுத்தப்பட வேண்டிய அவசியம் எமக்குள்ளது.

## வல்வெட்டித்துறை – சங்ககால வாணிப நகர் (கேரளப்பண்பாடு? )

**காங்கேயன்** மாட்டுச்சந்தையிலிருந்து (தென்னிந்தியாவிலுள்ள திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள மாட்டுச்சந்தை) **வடக்கன்(சிந்து)** காளைமாடுகளைக் கட்டுமரத்திலேற்றிக் கொண்டு **காங்கேயன் துறைமுகத்தினூடாக** யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குள் எம்மூதாதையினர் கொணர்ந்து பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். இதேபோன்றே **வெல்வெட்** மற்றும் **மஸ்லின் துணிவகைகளை** தென்னிந்தியாவின் கீழைக்கரைக்கிராமத்திலிருந்தும் **முசலிப்பட்டினம்** அல்லது **மசூலிப்பட்டினம்** என்ற ஆந்திராவிலுள்ள கடற்கரையோரப்பட்டினத்திலிருந்தும் கட்டு மரத்திலேற்றிக் கொண்டு வந்து **வல்வெட்டித்துறை துறைமுகமூடாகவே** எம்முன்னோரான **சிற்றரசர்கள்** இங்கு வாணிபத்தில் ஈடுபட்டிருந்தனர். யாழ்ப்பாணக்குடாநாட்டின் குறிப்பிட்ட மையங்களிலே **சங்ககாலக்குறு நிலமன்னர்களுடைய** அரசாட்சி இடம்பெற்றிருந்தமைக்கான தொல்லியற்சான்றுகளும் எமக்குக் கிடைத்துள்ளன. ஆனைக்கோட்டையில் துஞ்சிய சிற்றரச மன்னன் **பாண்டிய வம்சமா?** அல்லது **சோழ வம்சமா?** அல்லது **சத்திய புத்திர வம்சமா?** என்பது இன்னும் கண்டுகொள்ளப்படவில்லை. **வல்வில்** ஓரி என்றொரு சிற்றரசனும் சங்ககாலத்தைய ஆட்சியாளனாவான் என்பது நாம் இலக்கியங்கள் வாயிலாகக்கண்ட ஒரு செய்தியாகும். **சங்ககாலத்தைய சுடுமண் உருவங்கள்** மற்றும் **தொல்லியற்சின்னங்கள்** அதிகளவில் **கிடைத்துக்கொண்டிருக்கின்ற மல்வில்** (புராதன விஸ்ணு கோவில் - வட்டக்கச்சி) என்பது ஓரிடத்தின் பெயரைக்குறித்தது எனக்கொண்டால் **வல்வில் என்பதும் இடத்தின் பெயரையே குறித்தது** எனக்கொள்வது பொருத்தமாகும். எனவே **வல்வெட்டித்துறை** என்ற பெயருடன் **வல்வில்** ஐ இணைக்கலாமா என நாம் **சிந்திக்க வேண்டும்.** ஏனெனில் இலங்கையில் **குறுநிலமன்னர்களே** அன்றும் என்றும் **கடல் வாணிபத்துறையில்** பெருமளவிற்கு ஈடுபட்டிருந்தவகையை தொல்லியற் சான்றுகள் எடுத்துக்காட்டுவதனாலாகும். நகரியில் ஆட்சி செய்த **வேளிர் குறுநிலமன்னன்** பற்றிய மட்பாண்டத்தமிழ் பிராமிச்சாசனம் கிடைத்துள்ள நிலையில் நாம் அக்கருத்தினை உறுதி செய்யலாம். **கோவேந்தன்** என்ற **ஆனைக் கோட்டை** குறுநிலமன்னனின் வம்சத்தோற்றம் **சேர** மன்னர் வழித்தோன்றலாக **இருந்திருக்கக்கூடும்.** **புகலூர்க் கல்வெட்டுக்** குறிப்பிடும் **கோஆதன்** செல்லிரும் பொறையின் வழியில் **கோவேந்தன்** என்ற வம்ச ஒட்டுப்பெயர் காணப்படுவதினால் **ஆனைக்கோட்டையில்** ஈமப்படுத்தப்பட்ட அரசவம்சத்தினை **சேரமன்னர்** பரம்பரை என்று கொள்வதே மிகப்பொருத்தமாகும். **வல்வில் ஓரியும்** சேரமன்னன் பரம்பரையைச் சேர்ந்த ஒரு சிற்றரசனாவான் என்பதும் வெளிப்படையான உண்மையாகும். **இந்நிலையில் பாலக்காட்டு** அரசவம்சத்தொடர்புகள் **(வல், வில், ஒட்டி, துறை)** வல்வெட்டித்துறையுடன்

கிறிஸ்துசகாப்தத்திற்கு முற்பட்ட காலத்திலிருந்து நிலவி வந்திருந்தமைக்கான பண்பாட்டுக்கூறுகளை தற்போது இனங்காண முடிகின்றது. நெடியகாட்டில் காணப்படுகின்ற 'ஹுமன் மைவெளிச்சம் (மைபோட்டுப் பார்த்தல்) பார்க்கும் முறையும் எள்ளிலிருந்து எள்ளுப்பாகு, எள்ளுண்டை போன்ற பண்டங்களைச் செய்கின்ற தொன்மமான முறையும் ஒரு மலையாளப்பண்பாடாகும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

**ஊறணி** ( ஊருண்ணி = ஊரை உண்ணி - ஈமக்காடு / சுடலை )

வடமராட்சியிலுள்ள கடல் முகப்புத்தளங்களில் தற்போது ஊறணி என அழைக்கப்படும் கடற்கரையோரக்கிராமம் தனித்துவமான இயல்புகளைக்கொண்டு காணப்படுவது குறிப்பிடத்தக்கது. நன்னீர் ஊற்றுக்கள் நிறைந்த இக்கிராமம் பெருங்கற்காலப்புதையல்கள் விரவிக்காணப்படுகின்ற ஒரு பூர்வீகக்கிராமமாகும். ஏராளமான சுடுமண்பாவைகள், சுடுமண்விளக்குகள், சங்குவளையல்கள் என்பன இக்கிராமத்தின் பின்னணியிலுள்ள முதுபனங்காணிகளுக்குள்ளிலிருந்து எம்மால் சேகரிக்க முடிந்துள்ளது. சுடுமண்ணால் செய்யப்பட்ட கிணற்றுவளையங்கள் அதிகளவில் இங்கு காணப்படுகின்றன. யாழ்ப்பாணக்குடாநாடு அதிக மழை வீழ்ச்சியைப் பெறுங்காலங்களில் இக்கிராமத்தின் கடற்கரை முகப்பிலே ஊசியருவிகள் (**OOZING**) போன்று நன்னீர் ஊற்றுக்கள் கடலினுள் பீறிட்டுப்பாய்வதனைக் காணமுடியும். குடாநாடு கடும்வெள்ளத்தினை எதிர்நோக்குகின்ற காலங்களில் ஊறணிக்கிராமத்துக்கிணறுகள் முழுவதுமே நன்னீரை உள்வாங்கி, தேக்கி வைத்திருப்பதோடு (உறைகிணறுகளாகவுள்ள இடுகாட்டுப்பரப்பிலே) மேலதிகநீர் தேங்கி நில்லாதவாறு மண்மேற்பரப்பினூடாக விரைந்து கடலைச் சென்றடைவதனையும் காண்கின்றோம். போத்துக்கீசர், ஒல்லாந்தர் கால கிறீஸ்தவத்தேவாலயங்கள் இக்கிராமத்தின் கடற்கரையோரமாகக் காணப்படுகின்றன. **ஊறணி ஆஸ்பத்திரியின் தோற்றமும் போத்துக்கீசருடன் அல்லது ஒல்லாந்தர் காலத்துடன் ஆரம்பிக்கப்பட்டதாகக் கொள்ளப்படுகின்றது**. நன்னீர் வளமும் கடற்கரைக்காற்றும் நாற்சாரமனைகளுமே இங்கு புராதன வைத்தியசாலை ஒன்றின் தோற்றத்திற்கு வழிவகுத்ததாகச் சொல்லப்படுகின்றது. எனவே ஊறணிக்கிராமம் என்ற கடல்முகப்பானது தொன்மையான இரு முக்கியத்துவம் வாய்ந்த பண்பாட்டு நிறுவனங்களைக் கொண்டிருந்தமை புலனாகின்றது. ஒன்று - **நன்னீர் ஊற்றுக்கள் சூழ்ந்த உறைகிணறுகள், மற்றும் ஈமப்பரப்புக்கள் இரண்டு- கடற்கரையோரப் புராதன வைத்தியசாலை. இந்த இரண்டு அம்சங்களுமே ஊறணி என்றழைக்கப்படும் கடல் முகப்புத்தளத்தின் வளர்ச்சிக்கு அடிப்படையாக தொன்றுதொட்டு இருந்து வருவதனைக்காணலாம். ஒல்லாந்தர் காலத்தில் ஊறணி ஒரு பெரும் பொருளாதார வலைப்பின்னலுக்குள் அமைந்த ஒரு டச்சு வீதியால் குடாநாட்டின் ஏனைய வாணிப நகரங்களுடன் இணைக்கப்பட்டிருந்தமையையும் காண்கின்றோம்.**

**கந்தவனக்கடவை:**

வடமராச்சியில் உள்ள கடற்கரையோரப் பண்பாட்டு முகப்புக்களில் கந்தவனக்கடவை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குகின்றது. முருகவழிபாட்டினதும், வெள்ளரிக்கொல்லை பற்றிய ஐதீகத்தினையுடையதுமான கந்தவனக்கடவை பெருங்கற்கால வாணிபப்பொருளாதார முகிழ்ப்பில் மலர்ந்த ஒரு பண்பாட்டுத்தலம் என்பதில் எவ்வித ஐயமும் இருக்கமுடியாது. கந்தவனக் கடவையூடாக வடமராச்சிக்குள் காலத்திற்குக்காலம் பல்வேறு வகைப்பட்ட பண்பாட்டு மரபுகள் உட்பிரவேசித்திருந்தமையைக் காண்கின்றோம். கண்ணகி வருகை பற்றிய மரபுக்கதையும் அவற்றுள் அடங்கும். கந்தவனக்கடவையைச் சுற்றிக் காணப்படுகின்ற இடப்பெயர்களை நோக்கும் பொழுது அம்மையம் பெருங்கற்காலப்பண்பாட்டுச்சுவடுகளிலிருந்து சோழப்பண்பாட்டு மயமாக்கம் வரைக்கும் மிகவும் நெருக்கமான குடியிருப்புக்களை கொண்டு விளங்கியிருந்தமையினைக் காண்கின்றோம். பாலாவி, ஏழுபுளியடி, கங்கைகொண்டான், ஆதித்தியன் புலம், சிவனெழுவை, விறுமர் கோவிலடி, அழுக்கம்கொம்பிராய், உல்லியோடை, தெணி, உப்புக்கிணற்றடி ஆகிய காணிப்பெயர்கள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவையாகக் காணப் படுகின்றன. இவை யாவும் கந்தவனக்கடவையைச் சுற்றிக்காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இக்கடல் முகப்புத்தளத்தினை பின்னணியாகக் கொண்டே இக்கிராமங்கள் வளர்ச்சியடைந்து காணப்பட்டன. கந்தவனக்கடவையில் முருகைக்கற்களால் உருவாக்கப்பட்ட

குளக்கட்டுக்கள் இன்றுவரைக்கும் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது. பல்வேறு ஐதீகங்களினால் உருவாக்கப்பட்ட கந்தவனக்கோவிலின் தல வரலாறானது இன்னும் முழுமையாக எழுதப்படாது இருக்கின்ற காரணத்தினால் அக்கோவிலின் மிகநீண்ட தொன்மையான வரலாற்று வளர்ச்சியை எடுத்துக்காட்ட முடியாமலுள்ளது. இக்கோவிலைப் பொறுத்தவரையில் பழையவர் எனக்குறிப்பிடப்படுகின்ற புராதனம் வாய்ந்த ஒரு முருகன் சிலையும், மிகப்பழமையான கடம்பமரமுமே அக்கோவிலின் தொன்மத்தினை இன்றும் எடுத்துக்காட்டுகின்ற அம்சங்களாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. காலத்திற்குக்காலம் ஊறுபட்ட கற்சிற்பங்கள் இக்கோவிலின் உள்வீதித்திருக்குளத்தினுள் போடப்பட்டு வந்தநிலையில் சுமார் 08 கற்சிற்பங்கள் பண்பாட்டடிப்படையில் ஆராயத்தக்கனவாக இன்று காணப்படுகின்றன. மேலும் இப்பெருங் கோவிலின் தெற்கு வீதியில் அமைந்திருந்த சமாதிமடமொன்றின் உட்பிரகாரத்தில் தீட்டப்பட்ட ஒருநூற்றாண்டுக்காலம் பழமை வாய்ந்த ஓவியங்கள் அதிர்ஷ்டவசமாக வண்ணப் புகைப்படமாக்கப்பட்டுள்ளமையால் அவை இன்றும் ஆய்விற்குப் பயன்படுத் தக்கூடியனவாக உள்ளன. ஆனால் சமாதிமடமோ முற்றாக அழிந்துவிட்டது. இங்கு தீட்டப்பட்டிருந்த வர்ண ஓவியங்கள் கந்தபுராண கலாசாரத்தின் இயல்புகளையே வெளிப்படுத்தி நிற்பதனைக் காண்கின்றோம். இற்றைவரைக்கும் கந்தவனக் கடவையானது கந்தபுராணக்கலாச்சாரத்தின் சின்னமாகவே வடமராச்சியில் திகழ்ந்து கொண்டுமிருப்பதனைக் காணலாம். அதுவே இக்கடல் முகப்புத்தளத்தின் சிறப்புமாகும்.

## இம்பருட்டி (இம்பர் சிட்டி):

மிகவும் தனித்துவமான, விளைகற்பூரம் விளைந்த ஒரு பெரும் வாணிகத்துறைமுகமாக இம்பர்சிட்டி வளர்ச்சி பெற்றிருந்தது. வியாபாரிமூலை என்ற கிராமத்தின் உருவாக்கத்திற்கும் இத்துறைமுகம் பெரும் பங்காற்றியுள்ளது. வடமராட்சியிலுள்ள பெரும் வணிகர் வாழ்ந்த கிராமமாக வியாபாரிமூலை அமைந்திருந்தமையின் பின்னணியில் இம்பர்சிட்டி துறைமுகம் தொழிற்பட்டிருந் தமையைக் காணலாம். புடவை வாணிகர்கள், கற்பூரவாணிகர்கள், நெல் வியாபாரிகள், மாட்டு வியாபாரிகள் எனப் பலதரப்பட்ட வணிக சமூகம் இங்கு வரலாற்றுக்காலம் காலம் முதல் வாழ்ந்துவந்தமைக்கான சான்றுகள் கிடைத்துள்ளன. அவ்வகையில் புதுச்சேரி - வியாபாரிமூலை, திருகோணமலை - வியாபாரிமூலை, நாகபட்டினம்-வியாபாரிமூலை என்ற வாணிப மார்க்கங்களுக்கு இம்பர் சிட்டி துறைமுகமே கடல்முகப்புத்தளமாக இருந்து வந்தமையைக் காண்கின்றோம். இம்பர் சிட்டியிலுள்ள புராதன மடமும் , பிள்ளையார் கோவிலும் மிகத் தொன்மமான கருவூலங்களைக் கொண்டிருப்பதனைக் காணலாம். கந்தநயினார் என்பவருக்கு சொந்தமான அப்புராதன மடத்தில் பல்லவர் பாணியிலான கருவூலங்கள் பலவுண்டு. பல்லவர் பாணியிலமைந்த ஒரு சோடி நாகதீபம் இம்மடத்தில் இன்றுவரை காணப்படுவதும் மிகவும் குறிப்பிடத்தக்க விடயமாகும். இம்மடத்தி லிருந்த கி.பி. 17ஆம் நூற்றாண்டுக்குரிய சுதையினால் செய்யப்பட்ட ஓர் அழகான, இருக்கின்ற நிலையிலுள்ள விநாயகர் சிலையை அமரர் கந்தநயினார் உடையார் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொல்லியல் நூதனசாலைக்கு இற்றைக்கு 10 வருடங்களுக்கு முன்னர் அன்பளிப்பு செய்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

புலோலி, வியாபாரிமூலை ஆகிய கிராமங்களில் ஊற்றேடுத்த இலக்கிய வளத்தின் பின்னணியில் இம்பர்சிட்டி துறைமுகம் பெரும்பங்கு ஆற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. நாகைச்சாமியார் எனக்குறிப்பிடப்பட்ட அருளம்பலச்சுவாமியார் மகாகவி பாரதியாரின் குருவாக மாறியதன் பண்பாட்டுப்பின்னணியில் இம்பர்சிட்டித்துறைமுகம் வகித்திருந்த பங்கினை எவருமே மறுக்க முடியாது. போத்துக்கேயர், ஒல்லாந்தர் காலங்களில் இம்பர்சிட்டித்துறைமுகத்தின் முக்கியத்துவம் பருத்தித்துறைத் துறைமுகத்திற்கு மாற்றப்பட்டுவிட்டமையை பிற்காலத்தில் நாம் உணர்கின்றோம். இருந்தபோதும் இன்று வடமராட்சியிலுள்ள பிரதான மீன் பிடித்துறைமுகங்களுள் இம்பர் சிட்டியும் ஒன்றாக விளங்குவதனைக்காணலாம்.

## கற்கோவளம்:

வடமராச்சியில் நிலவும் மரபுகளின்படி ஆண்கடலையும் பெண்கடலையும் பிரிக்கும் ஓர் ஆழித் தளமாக கற்கோவளம் விளங்குகின்றது. மணல் கடற்கரையையுடைய கிழக்குச் சமுத்திரம் பெண்கடல் எனவும்,

வெளிச்சவீட்டிற்கு மேற்காக உள்ள கடல் ஆண்கடல் எனவும் மக்கள் வகைப்படுத்துகின்றனர். இவ்வாறான ஒரு பிரிவெல்லையில் கற்கோவளம் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. கோவளம் என்ற பெயர் கேரளாவில் அமைந்துள்ள ஒரு நகரத்தின் பெயராகும். **கோவேதன், கோஆதன்**, என்ற சேரவம்சப் பண்பாட்டு பெயர்கள் வரிசையில் **கோவளம்** என்ற பெயரும் உள்ளடக்கப்படுவதனை நாம் அவதானிக்கின்றோம். ஆனைவிழுந்தான் சந்திக் கண்மையில் மணற்பரப்பிற்குள் இருந்து சுடுமண்வளையத்தாலான கிணறு ஒன்று கண்டு பிடிக்கப் பட்டமையைப்போன்று கற்கோவளத்திலும் அண்மையில் **சுடுமண் வளையக்கிணறு** ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. பெருங்கற்காலப் பண்பாட்டு யுகத்திலிருந்து ஒல்லாந்தர் காலம் வரைக்கும் குடிநீரைப்பெற்றுக்கொள்வதற்காக வடமராட்சி கிழக்கு மக்கள் சுடுமண் வளையங்களை உருவாக்கி, மணற்பிரதேசத்திலுள்ள நன்னீர் ஊற்றுக்கள் மீது நடுவண்ணாக அமைத்து, அவற்றை குடிநீர் பெறும் கிணறுகளாகப் பயன்படுத்திக் கொண்டிருந்தனர். எனவே கற்கோவளமும் குடிநீரை கடற்பயணிகளுக்கும் **வணிகர்களுக்கும் வழங்கிய ஒரு கடல் முகப்புத்தளமாகவே செயற்பட்டிருக்கவேண்டும் என்பது புலனாகின்றது.**

கற்கோவளம் தொடர்பான வரலாற்றுப் பண்பாட்டுச் செய்திகள் பல தென்னிந்தியாவிலிருந்தும் எமக்கு கிடைத்தவண்ணமுள்ளன. சோழர் காலக் கல்வெட்டுக்களில் கற்கோவளம் தொடர்பான குறிப்புக்கள் இடம்பெற்றுள்ளன. மணிமேகலையிலும் கோவளக்கடற்கரை தொடர்பாக சில செய்திகள் கொடுக்கப் பட்டுள்ளன. கண்ணகியினுடைய இலங்கை வருகை பற்றிய செய்தி கோவளக்கடற்கரையுடன் இணைக்கப்பட்டிருப்பதனையும் காண்கின்றோம். தும்பளைக் கிராமத்தில் மறைந்திருந்த நல்லூர் இராச்சியத்தின் இறுதி மன்னனான சங்கிலியனை கற்கோவளக்கடலில் **வைத்துப் போத்துக்கீசர் சிறைப்பிடித்ததோடு**, தென்னிந்தியாவிற்குக் கொண்டு சென்று சிறையில் அடைத்ததனையும் காண்கின்றோம். எனவே வடமராச்சியில் கற்கோவளம் வகித்திருக்கக் கூடிய **கடல்முகப்புத் தொழிற்பாட்டின் தன்மையானது பன்முகப்பட்டது** என்பது மிகத்தெளிவாகின்றது.

## கற்காலப்பண்பாட்டு மையங்கள்:

இதுவரைக்கும் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் மேலாய்வுகளின் பயனாக கற்காலப் பண்பாட்டு மையங்கள் என **இரு தலங்கள்** வடமராச்சியில் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று – மாயக்கைப்பிராந்தியம், மற்றையது – பழைய சக்கோட்டைப்பரப்பு (பழைய வேதக் கோவிலடி) என்பனவே அவையாகும். புழைய வேதக்கோவிலடியில் உள்ள சவக்காலைப் பரப்பிலிருந்தே மிகவும் அருமையான குத்துக்கல் போன்ற **வைரச்சுண்ணக் கற்கருவி** கிடைத்துள்ளது. 1985 ஆம் ஆண்டில் இக்கற்கருவியை இக்குறிப்பிட்ட பரப்பிலிருந்து அதாவது கடும்மழையினால் அரிப்புக்குள்ளான பிட்டிக்கும் வெள்ளவாய்க்காலுக்கும் இடையே வெளிப்படுத் தப்பட்ட மண்படையடுக்கொன்றிலிருந்து இக்கட்டுரையாசிரியர் பெற்றுக்கொண்டிருந்தார். இதே போன்று மாயக்கையில் மிகவும் நீளமாகக் காணப்பட்ட குகையொன்று அவ்வூர் மக்களால் மிகவும் நீண்ட காலமாக **கற்குவாறியாகப்** பயன்படுத்தப்பட்டு வந்திருப்பினும், எஞ்சியிருக்கின்ற அக்குகைப் பரப்புக்குள்ளிருந்து வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்திருக்கக்கூடியதாக நம்பப்படும் **குகைவாழ் மக்கள்** பயன்படுத்தியிருந்திருக்கக்கூடிய சில கற்கருவிகள் இக்கட்டுரையாசிரியரால் 1985ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதே மையத்தில் பல மண்படைகளிலிருந்தும் கிறீஸ்துவுக்கு முற்பட்ட நூற்றாண்டுகளில் பயன்படுத்தப்பட்ட கூரையோடுகள் (கந்தரோடையிலிருந்து கிடைத் தவையை ஒத்தவை ) புராதன நாணயங்கள், செங்கட்டிகள், சுடுமண்ணால் செய்யப்பட்ட விளக்குகள் மற்றும் மத்திய கால, பிற்கால கட்டங்களுக்குரிய தொல்லியல் எச்சங்கள் யாவும் கிடைத்துள்ளன. இந்தவடிப்படையில் மாயக்கை ஒரு புராதன தொல்லியல் மையம் என்பது நிரூபணமாயிற்று. ஆனால் அம் மாயக்கைக் குகைக்குள்ளிருந்து மீட்கப்பட்ட கற்கருவிகளை அங்குவைத்து கற்கால மனிதன் பயன்படுத்தி யிருந்தானா என்பதனை எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் தொல்லியல் அகழ்வாய்வு மூலமே கண்டறியவேண்டியவர்களாகவுள்ளோம். □□□


## கால நதியோட்டம்

காலம் மிகவிரைவாய்க் கடக்கிறது எங்களினை!
காலம்தன் வேகத்தில்
அழைக்கிறது எங்களினை!
காலத்தின் கதிக்கு ஈடு கொடுத்தோடல் கூடுமோ?
காலம் "பரியாய்ப் பறக்கிறதே"!
காலம் கணப்பொழுதும் ஓய்வு எடுக்காமல்
ஓடுகிற கங்கை.
உடன் நாமும் ஓடாட்டில்
ஓர்நொடியில் உருட்டும் உடலை. இக்
காலமெனும்
குதிரையின் 'சேணம்'
எம்கையில் இல்லையில்லை!
அதைத்தடுக்கும் ஆற்றல்
அணுவளவும் எம்மிலில்லை!
அதை அடக்கும் வீரம் அறம் பலங்கள் ஏதுமில்லை!
அதுஓடஓட...
எமது வயது மெல்லோ
அதன்பின்னே ஓடிடுது!
அது எம்மை எமன்கையில்
கொடுக்கும் அவசரத்தில் தானோ கொதித்தபடி
அடித்தள்ளிப் போகிறது?
காலத்தின் கைபிடித்து
ஓடாட்டில்... அதன் கரையில்
ஒதுங்கும் சருகாவோம் ஓடினால்...
அதன் தயவில்
உண்மை கொஞ்சம் கண்டறிவோம்
காலத்தைத் தடுத்து அதன்
முதுகில் சவாரிவிடும்
ஞானம் விளங்காமல்
நகரும் ஒவ்வோர் நொடியும்
நாமெம்மை அறியாமல்
சா நோக்கிச் செல்கின்றோம்.
காலம் எதுவரைக்கும்
எம்மை நகர்த்திடுதோ...
வாழ்வு அதுவரைக்கும் வரம்
என்று பின் தொடர்வோம்!
காலக் குதிரைகளோ மூசி இழுத்தோட
போகும் இரதமாக வாழ்வு.
அச்சென்றுடைந்து
போகும்? புரியாது... புயலாக ஓடுகிற
காலத்தில் துரும்பாய்க் கருத்தற்று
நம் கனவு!

## நேரத்துடன் வீடேக வேண்டும்

மாலை மிகவிரைவாய் மங்கி இருளுதிப்போ!
தூரப் பயணத்தால்
தொலைவேக வேண்டியதால்
தூறல் விழுந்து... தொடர்ந்திடியும் மின்னலும்
ஏதோஒர் அச்சத்தை
இதயத்தில் இழைத்ததனால்
நேரத்துடன் வீட்டை நெருங்கிவிட வேணுமென்று
சோர்ந்திறுகி... மீண்டும்
துணிந்து நடக்கிறதென்
கால்கள்!
அயலில் கவியும் தனிமையதால்
போம்வழியில் சுடலை பேயுலவும் வெளிகடக்க
வேணுமென்ற அச்சத்தால்
விரிகிறதென் விழிகள்!
மாலை மிகவிரைவாய் மங்கி இருளுதிப்போ!
மழையில் நனைந்தீரம் சுவற
விரும்பாது
சூழும் துயரிருளில் நிலவுமற்ற நடுவழியில்
யாரும் விளக்கேற்றித்
திசைகாட்டா முட்தெருவில்
தங்கி அஞ்சுந் துயரைத் தவிர்க்கும் பதட்டத்தில்
வீட்டின் நிலையெண்ணி
எனைக்காணா தென்னுறவு
ஏங்கித் துடிப்பதெண்ணி
எப்படியும் வேளைக்கே
வீடேகி நிம்மதியாய் ஆறவேண்டி
இதயத்தின்
சத்தம் துரத்த
நாயூளையும் விரட்ட
எட்டி நடக்கின்றேன்! ஏய்... சகியே
என்கையைப்
பற்று இறுக்கமாகப் பற்று.
பின் தங்கிடாதே!
சற்றே களைத்தாலும் சமாளி
அடி எட்டிவை.
எனக்குத் துணையாக மனதுக்குத் தெம்பாக
எனது பயணத்தில்
இணையாக வா... தொடர்ந்து

த.ஜெயசீலன்.



# பேரிளமை

- க.சட்டநாதன்

சரசு அதைக்கூறியபோது, இறக்கை விரித்து மேலே உயர உயரப் பறப்பது போல இருந்தது மகேசுக்கு.

"உண்மையாகவா...? என்னைப் பற்றி விசாரித்தாரா. உணர்ச்சியும் அதிமென்மையும் கொண்ட அந்த மனிதர் எழுத்து, இலக்கியம் என்பதற்கு அப்பால் எதையுமே பார்த்தறியாத அவர். மகேஸ் சுகமாக இருக்கிறாவா...? என்று கேட்பதென்றால்..."

நினைவுகளில் கனிந்து கரைந்து போயிருந்தவளைச் சரசுதான் மீளவும் சுயநிலைக்குக் கொண்டுவந்தாள்

"அவர் கதைத்த பொழுது ஒளிப்பு மறைப்பு ஏதும் இல்லை. உங்க சினேகிதியை வந்து பார்க்கலாமா? அவவோட பேசமுடியுமா? என்று வேறு கேட்டார். இந்த வயதில் என்ன சடங்கென்று இருக்கிறாவா...? சடங்கு முடிக்கிற உத்தேசம் ஏதாவது உண்டா..? என்றெல்லாம் விசாரித்தார்.."

சரசுவின் கண்களில் தென்பட்ட ஒளி இவளை மேலும் குதூகலமடையச்செய்தது.

சரசுவின் கரங்களை இறுக்கமாகப் பற்றிக் கொண்ட மகேஸ்வரி அவளது கண்களைத் தீர்க்கமாகப் பார்த்தபடி கேட்டாள்.

"நீர்தான் நடாவைச் சந்திக்க, அவருடன் பேச ஏற்பாடு செய்யவேணும்...!" உதடுகளில் கிளர்ந்த லேசானசிரிப்பும் கண்களின் பளபளப்பும் அவளது உள்ளக்கிடக்கையை சரசுவுக்குப் பட்டும் படாமலும் உணர்த்தியது போலும்...

"நாப்பது வயசாகப் போகுது. குமர்ப்பெட்டை மாதிரி இதென்ன கூத்து..." சரசுவின் மன உணர்வுகளைப் புரிந்து கொண்டு மகேஸ் கூறினாள்.

"ஸொரி சரஸ்... அவரிலை ஒரு மனச் சாய்வும் விருப்பமும் பதினைஞ்சு பதினாறு வருஷத்துக்குமுந்தியே எனக்கு இருந்தது. அது உமக்கு நல்லாத் தெரியும். மிக நெருக்கமான பழக்கமது. நான்தான் முதலிலை என்ரை ஆசையை அவருக்குத் தெரிவிச்சனான். காதல் எண்டு வரும போது ஆள் சரியான "ஹாட் நட்..." இறுக்கம். இருந்தும் அவற்ரை மனசும் என்னிலை கரைஞ்சது. பிறகு சந்தர்ப்பவசத்தால சகலதும் குழம்பிப் போச்சுது. சின்னமாமான்ரை சாதித்தளுக்கும், திமிரான எடுபிடிக் கதையளும் அவரைக்குழப்பிப் போட்டுது. மனம் மாறின அவர் "நான் கோவியப்பொடியன்.. இவவை.. இந்த வெள்ளாளப் பெட்டையைக் கட்டிக் கொண்டு. மல்லுக் கட்டேலுமா..?. எண்டு கனவானாய் ஒதுங்கிற்றார். இப்ப அம்மாவுமில்லை... மோசம் போயிட்டா... மாமாவும் பெண்சாதி பிள்ளையளோட கனடாவில. தனிச் சிருக்கிற எனக்கு அவர் வாறது, கதைக்க ஆசைப்படுறது, எல்லாம் ஆறுதலாயிருக்கும். அவரைச் சடங்கு முடிச்சா, முகம் சுளிக்கச் சாதி சனமெண்டு ஆர் இருக்கினம்! ஒருத்தருமில்லை. அயலட்டம், காலங்கடந்த கலியாணமெண்டு சில வேளை கதைக்கும் கதைக்கட்டுமன்.

மகேசின் மனநிலையை மேலும் சலனப்படுத்த விரும்பாத சரசு விடைபெற்றுக் கொண்டாள்.

* * *

எண்பதுகளின் கடைக்கூறு பல்கலைக் கழகத்துக்குத் தெரிவான மகேஸ்வரி கலைப்பீட மாணவியானாள். யாழ்ப்பாணத்தில், அதுவும் ஊரில் இருந்து படிப்பதில் அவளுக்கு நிரம்பிய திருப்தி இருந்தது. அப்பர் இல்லாத குறை தெரியாத அளவுக்கு அன்பு பாராட்டி அவளை அம்மா வளர்த்தாள். சின்னமாமாவின் துணையும் வழிகாட்டலும் அவளைத் தலைநிமிர்ந்து நடக்க வைத்தன. அவரில் அவளுக்குப் பிடிக்காத தெல்லாம் அவரது சாதித் தடிப்பும் "நாம தாவாடிக்காரர். ஆள்பார்த்துப் பழக வேணும்... கண்ட கண்ட இடத்தில் கை நனைக்கக் கூடாது. சிநேகித மெண்டாலும் தெரிஞ்சு பழகவேணும்..." என்ற அவரது போதனைகளும் தான்.

பட்டணத்துப் பெட்டையல்ல அவள். பக்கத்துக்கிராமத்தில் பிறந்து வளர்ந்தவள். ஊரில் மத்திய மகாவித்தியாலயத்தில் ஏ.எல்.வரை படித்து பாஸ் ஆகி பல்கலைக்கழகம் வந்திருக்கிறாள்.

பல்கலைக்கழகத்தில், அவளது முதல் நாள் அநுபவமே, சீலை நழுவிய கிரிசை கேடாகி

விட்டது. பகிடிவதை என்ற பெயரில், சிரேஷ்டமாணவர்கள் ஆண்களும் பெண்களுமாகக் கூட்டணி வைத்துக் கொண்டு ஆபாசமாக நடந்து கொண்டார்கள். அதை அவளால் தாள முடியவில்லை.

"மகேஸ்வரி நில்... நீ தீவுதானே... தீவாரும் படிக்கக் கிளம்பியாச்சுபோல.." நாராசமாய்ப் பேசிய அந்தப் பட்டணத்துக் குட்டிச் சுவரை. அவள் நிமிர்ந்து பார்த்தாள். பல்லு மிதப்புடன் மேல் உதட்டின் மீது மீசை அரும்பாத முன் தலையில் சொட்டை விழுந்த அந்த மாணவனின் கண்களில் தெரிந்த விஷமத்தனம் அவளுக்கு மிகுந்த எரிச்சலைத் தந்தது. நெருங்கி வந்த அவன். அவளைப் பார்த்துக் கேட்டான்.

"ஏதோ மச்சமாம்!... கறுப்பா படர்ந் திருக்காம்! உன்ரை இடது... எங்கை பாப்பம்...!" கூறியவன் அவளது சேலைத் தலைப்பைப் பற்றினான்.

மகேஸ்வரிக்கு எங்கிருந்து அப்படி ஒரு அசுரபலம் வந்ததோ தெரியவில்லை. காளியின் கோலங்காட்டியவள் அவனது கைகளை மிகுந்த பலத்துடன் தட்டிவிட்டாள்.

முகம்கோணி வலிப்புக்காட்டிய அந்தச் சோதா அவளைப்பார்த்து கோபத்துடன் ஆபாசமாக ஏதேதோ திட்டினான். மீளவும் அவளை நெருங்கியவன் அவளது இடது கையைப் பற்றினான்.

"சிவதாஸ்...! பகிடிவதை வேணும்.. ஆனால் அதுக்காக கேர்ல்ஸைத் தொட்டுப் பேசிறது வடிவில்லை..."

கணீரென்ற அந்தக் குரலுக்குக் கட்டுப்பட்ட சிவதாஸ் ஒதுங்கிக் கொண்டான்.

"மிஸ் நீங்க போங்க... இதைப் பெரிசா எடுக்காதேங்க பல்கலைக்கழக வாழ்க்கையில் இது ஒரு பகுதி... வழக்கமா நடக்கிற விஷயம்."

"ம்..."

"போங்க...!"

நன்றிப் பெருக்குடன் அவனை அவள் நிமிர்ந்து பார்த்தாள்.

அவன் ஒடிசலாக இருந்தான். சடசட என ஒரு வளர்த்தி. அவனது கண்களில் தீர்க்கமான பார்வை. அதில் சபலமோ சஞ்சலமோ இல்லை. மிகத் தெளிவாகவே சிந்திக்கக் கூடியவன் இவன் என நினைத்தவள். திரும்பத்திரும்ப அவனையே பார்த்தபடி நடந்தாள்.

"அவன் யார்..? எந்த வருடத்தில் பயிலும்



மாணவன். கலைப்பீடமா? அல்லது விஞ்ஞானமா...? எது..."

அவளது சந்தேகத்தைத் தீர்த்து வைத்தவள் அவளது பிராண சிநேகிதியும் உடன் பயிலும் மாணவியுமான சரஸ்வதிதான்.

"நடராசா நல்ல மாதிரி. பல்கலைக்கழக மாணவ மன்றத் தலைவர். புவியியலைச் சிறப்புப் பாடமாக எடுத்துப் படிக்கிறார். மூண்டாவது வருஷம்..."

"ஆள்... பழக்கமா..."

"இல்ல... தெரியும்..."

மனசு அவனையே நாடிச் செல்வதையும் அவனை மறக்க முயற்சித்த போது நினைவுகள் அவனையே சுற்றிச்சுற்றி தட்டாமாலை ஆடுவதையும் அவளால் கட்டுப்படுத்த முடிய வில்லை. "அவனை மீளவும் சந்திக்க வேணும் அவனுடன் மனசு முட்டமுட்டப் பேசவேணும்..." என்ற ஆவலே அவளில் குதியாட்டம் போட்டது.

அவள் சரசுடன் பொருளியல் மண்டபத்தை நோக்கி நடந்தாள். பழசெல்லாம் மறந்து போக வாழ்க்கை புத்தம்புதிதாய் ஆனது போல அவளுக்கு அப்பொழுது இருந்தது.

* * *

நடா நூலகத்தினுள் நுழைவதைக்கண்ட மகேஸ் அவனது கவனத்தைத் தன்பக்கம் திருப்பும் உத்தேசத்துடன் காற்செருப்புகளை உரசி சலனப் படுத்தியபடி தானும் நுழைந்தாள்.

திரும்பிப்பார்த்தவன் "இதென்ன சறுக்கல்.. சடுகுடு எல்லாம் நடக்குது" அவனது பேச்சு அவளுக்கு வெக்கத்தைத் தந்தது. நாக்கை மெதுவாக கடித்தபடி "ஸொரி" சொன்னாள்.

நெருக்கமாக வந்தவன். நிமிர்ந்து பார்த்தான்.

அவள் நல்ல உயரம். கண்கள் பெரிதாகவும் குளிர்ச்சியாகவும் இருந்தன. சிறிது சரிந்த மார்பகங்கள். உதடு திரட்சியாக பழத் துண்டுகள் மாதிரி இருந்தன. வதவத என முழங்காலைத் தொடுவது போலக்கைகள். விரல்கள் மிகமிக நீளமாக கூந்தல் கூட மிக அடர்த்தியாகத் தழைந்தபடி...

நீல வண்ணப் புடவையில் அவள் அழகாக இருந்தாள். அவளைச்சூழ ஏதோ வாசம் கொட்டிச்சிந்தியது போல..! அந்த வாசம் வலுவாய் அவனுக்குப் பிடித்திருந்தது.

"பெண் உடல் அதன் வாசங்களோடும் தாபங்களோடும் புல நுகர்ச்சிக்குப் பிரியமானது தான். இவளுக்கு.. இவளுக்கும் இந்த உணர்ச்சிச் சுழிப்புகள் இருக்குமா...? ஆணும் பெண்ணும் ஆன்ம லயிப்புடன் கலவியில் ஒன்றுதல் கூட ஒருவகைக் கலா அனுபவம் தானோ...?

அந்த நினைவுகள் அவள் மீது ஓர் ஆர்வத்தை அவனுக்கு ஏற்படுத்தியது. லேசான சிரிப்புடன் நெருக்கமாக வந்த அவனிடம் அவளும் மிக நெருங்கிவந்து அவனது கைகளில் இருந்த புத்தகத்தை வாங்கிப்பார்த்தாள்...

"என்ன புத்தகம்.. The tindrum. குந்தர்கிராஸ்...! இதெல்லாம் படிப்பியளா...! எனக்கு நா.பா. அகிலன், கல்கி போதும்.

"சுந்தரராமசாமி, புதுமைப்பித்தன், ஜெயமோகன், அசோகமித்திரன், எண்டு தமிழில் படிக்கப் பலர் இருக்கினம். உங்க வாசிப்பை கொஞ்சம் அகலப்படுத்துங்க.."

தொடர்ந்து "எனக்குப் பத்து மணிக்கு லெக்சர் இருக்கு.. வரட்டுமா" என்று கூறியவன், lending section னுள் நுழைந்தான். இவளும் அவன் மீது விழுந்த பார்வையை அகற்றாமலே reference பக்கமாக நடந்தாள்.

அவன் கூடவே வருவது போன்ற மாயத்தோற்றம் அவளைப் பாடாய்ப்படுத்தியது. இவன்தான்... "இவன்தான் என்னுடைய ஆள்..." என்ற உணர்வு அவளுள் இளந்தீயாய்ப் படர்ந்து ஒரு வகை வெத வெதப்பை ஊட்டியது.

இவனுடன் பழகிய இந்த ஆறுமாத காலத்தில் இப்படி நெருக்கமாக இவனது மூச்சுக் காற்றுப் படநின்றது. பேசியது எல்லாம் இன்றுதான்! "இது தொடரவேணும்..."

ஆசைகள் அடங்காத தவிப்பு அவளுள் வியாபகம் கொண்டது. அது அவளுக்கு இப்போதைக்குத் தேவையாயிருந்தது.

நாலுநாள் கழித்து கலை அரங்கத்தில் நடந்த நிகழ்ச்சியொன்றில் அவனைக் கண்டதும் அவனது பார்வை படுமிடத்தில் சற்று அருகாகவே இவள் உட்கார்ந்து கொண்டாள்.

பேச்சு இல்லாத மௌனமே அங்கு நிலவியது.

நிகழ்ச்சி முடிந்து எழுந்தபோது இவளைக் கண்டு கொள்ளாத, இவளது இருத்தலையே பொருட்படுத்தாத அவனது பாவனை இவளைக் காயப்படுத்தியது.

சில நாள் செல்ல அவளது எதிர்பார்ப்புகளைப் பொய்ப்பியாதவகையில் அவனே வந்து பேசினான் பழகினான்.

அப்படிப்பலிதமான சந்தர்ப்பமொன்றில் அவனைப் பார்த்து இவள் கேட்டாள்.

"ஒட்டி உரசி சிலவேளைகளில் தூரவிலகி நிக்கிற இந்த love and hate விளையாட்டெல்லாம் வேணுமா என்ன...?"

"என்ன.. என்ன சொல்லுறீர்..! வெறுப்பா.. எனக்கா... உம்மிலா...? இல்லவே இல்லை எல்லாமே விருப்பந்தான்."

அவனது பதிலின் வேகம் அவளைப் பற்றிக் கொண்டது. அவள் நன்றிப் பெருக்குடன் அவனது வலது கரத்தை எடுத்து தனது உள்ளங்கைகளில் அழுத்தமாகப் பொதித்துக் கொண்டாள்.

அவர்கள் அப்பொழுது நின்றது இரண்டு வகுப்பறைகளுக்குமிடையிலான ஒதுக்கமான ஒரு நடைபாதை. அந்த ஒதுக்கத்தைப் பயன்படுத்தி அவன் அவளது கன்னத்தில் முத்தமிட்டான். எதிர்பாராத அவனது முத்தம் அவளுக்கு மிகுந்த மலர்ச்சியைத் தந்தது. புத்தம் புதிதாய் கட்டுடைந்த மலர்க் கொத்தாய் அவள் குலுங்கிச் சிலிர்த்தாள்.

காதல் வசப்பட்ட அவ்விருவரும் அதன் பின்னர். மனதளவில் சடைத்திருந்த இறுக்கங்களும் கட்டுக்களும் குலைந்து தளர்ச்சி கொள்ள மிக நெருக்கமாகப் பழகத் தலைப்பட்டார்கள். அந்த நெருக்கமான உறவு. உடல் சார்ந்த சலனங்களை அவர்களிடையே ஏற்படுத்தவில்லை. அது

அவளுக்கு ஆறுதலாக இருந்தது.

அவர்களது காதல் வீடுவரை வந்த போது அவனது பெற்றோர்கள் அதிகமாக அலட்டிக் கொள்ளவில்லை. ஆனால் அவளது சின்னமாமா குதியோ குதி என்று குதித்தார். குரல் உயர்த்திப்பேசினார். அவரது பேச்சும் ஏச்சும் அவனது காது வரை எட்டியிருக்க வேண்டும். அவன் பெருந்தன்மையுடன் அவளிடமிருந்து ஒதுங்கிக் கொண்டான்.

அந்த ஒதுக்கம் ஏதோ பெரும் பொக்கிசத்தை இழந்ததான தவிப்பை. ஆழமான துயரத்தை அவளுக்குத்தந்தது.

* * *

அவனது உறவு தந்த பரிமள லகரி இத்தனை ஆண்டுகள் கழிந்த பின்னரும் அவளைச் சூழக் கவிந்திருந்தது. அவனை மனதில் இருத்தி நினைவு சூர்ந்தாள்.

அவன் இது வரை சடங்கு செய்யாதிருப்பது எதனால்...? என் மீது கொண்ட பிரேமையினாலா...? அல்லது அக்காதல் தந்த தோல்வியினாலா...

அந்த நினைப்பே அவளுக்கு மிகுந்த சிரிப்பைத்தந்தது. சேறு கண்ட இடத்தில் பிசங்கி தண்ணி கண்ட இடத்தில் கால் அலம்பும் பேர்வழிகள் இந்த ஆண்கள் என்பதை இப்பொழுதெல்லாம் அவள் நிரம்பத் தெரிந்து வைத்திருக்கின்றாள். காதல் தெய்வீகமானது என்பதெல்லாம் மனோரதியரசம் பூசிய ஒருவசியம் மட்டுமே எனக்காலம் அவளுக்குக் கற்றுத்தந்திருக்கிறது.

அவன். திருமணம் பற்றிப்பேசி அது விஷயமாகவே தன்னைச் சந்திக்க வருகிறான் என்ற செய்தியைச் சரசு கூறியபோது. அவள் ஓரளவு கிளர்ச்சியடையவே செய்தாள். காதல் உணர்வு களுக்கு மேலாக ஒரு ஆணின் துணையும் உடனிருப்பும் அவளுக்கு அவசியமாகப்பட்டது. அவன் ஏற்கனவே அறிமுகமானவன் என்பதால் அதனை ஒரு கூடிய தகுதியாக அவள் கருதினாள். அது அவளுக்குச் சிறிதளவு தெம்பையும் நிம்மதியையும் தந்தது.

மெல் உணர்வு மிக்க காதலனாகவே பார்த்துப் பழக்கப்பட்ட அவன் ஒரு சில வேளைகளில் முரண்பாடுகளின் மொத்த உருவ மாகவும் அவளது நாளைச்சீண்டி காரணம் ஏதுமில்லாமலே காயப்படுத்துபவனாகவுமே இருந்திருக்கிறான்.

முன்னொரு சமயம் "காதலுக்கு அப்பால் சென்று கதைக்க உம்மிடம் என்ன இருக்கிறது...? அறிவு பூர்வமான உசாவுகை என்பது உம்மிடம் சாத்தியமானதுதானா...? " என்று கேட்டது அவளுக்கு ஞாபகம் வந்தது.

இன்னொரு சந்தர்ப்பத்தில் இப்பொழுதும் அகிலனும் நா.பாவும். கல்கியும் தான் உமது ஆதர்சமா...? என்ரை கதைகளை கவிதைகளைப் படிப்பதுண்டா...? என்னைத்தவிர இன்னும் சிலர் படிக்கக்கூடிய மாதிரி எழுதுவது தெரியுமா..." என்று அவன் கேட்டது அவளது நினைவில் படர்ந்து. அவளை அசுவாரஸ்யப் படுத்தியிருக்கிறது.

பலதையும் பத்தையும் சிந்தித்தபடி இருந்த அவளது பார்வையில் ஒரு பழைய அல்பம் பட்டது. அதை அவள் புரட்டினாள். அதில் அவனும் அவளும் இணைந்தபடி நின்ற நிழல் படம் ஒன்று இருந்தது.

படத்தில் காட்சி அளித்த அவனது தோற்றம் அவளுக்குப் பிடித்திருந்தது. அவனது கண்களில் தெரிந்த தீட்சண்யம் அவளது அந்தராத்மா வரை சென்று அவளைத் தொட்டுப் பேசியது. அதிகம் உணர்ச்சிவசப்படாத. எதையுமே உரசி உரசிப் பார்க்கும் அவனிடம் அவளுக்குப் பிடித்ததெல்லாம் அவனது நேர்மையான பேச்சும் சில சமயங்களில் வலிய வந்து தானாகவே கொள்ளும் உறவும் நட்பும் தான்.

இவை எல்லாமே. அவனைக் கண்டு கதைக்க அவன் விரும்புகிற பட்சத்தில் அவனைத் தனது துணையாக வரித்துக் கொள்ளப் போதுமானவையாக அவளுக்குப்பட்டது.

நேற்றையதினம் இவளைச்சந்தித்த சரசு வாற சனி. காலை பத்துமணிக்கு நடா வாறார். பொம்பிளை பார்க்க எதுக்கும் ரெடியாய் இரும்...

சரசுவின் பேச்சைக் கேட்டதிலிருந்து. நிதானமிழந்த அவள் ஒரு வகைப்பதட்டத்துடன் அவனது வரவை எதிர்பார்த்தபடி இருந்தாள்.

மனசோடு அவனிருக்க. அவனது நினைவோடு அவள் இருந்தாள்.

* * *

சரசு கூறியது போல சனிக்கிழமை காலை பத்துமணியளவில் நடா வந்தான். உள்ளே வந்து செற்றியில் அமர்ந்தவன் அவளை வைத்த கண் அகற்றாது பார்த்த படி இருந்தான்.

அவளது தோற்றம் அவனது மனதுக்கு இதம் தருவதாய் இருக்கவில்லை. ஏமாற்றத்தையே

தந்தது. அதனைக் காட்டிக் கொள்ளாத பாவனையில் காலம் கரைந்தது.

இவள் என்ன இப்படி உலர்ந்து உடல்மெலிந்திருக்கிறாள். இவளது அந்தப் பெரியகண்கள் எங்கே...? அவை குளிர்ச்சி இழந்து, குழியுள் பதுங்கியபடி..! மார்பகங்கள் இருப்பதாகவே தெரியவில்லை. நெஞ்சோடு நெஞ்சாய்ப் பூசியது போல.. உதடுகள் திரட்சி இழந்து ஈரப்பசை அழிந்து சொரசொரப்பாக... பற்கள் பழுப்பாய்... ஈறுகள் கரைந்து. நீக்கலுடன். கரங்கள் மெலிந்து கைவிரல்கள் சூம்பி... இதென்ன எலிவாலாய் ஒரு பின்னல்...

"நாம சந்திச்சு நாலஞ்சு வருஷ மிருக்குமா..?"

"ம்..."

"சுகமில்லாமல் இருந்தனீங்களா.. இப்படி உடம்பு கொட்டிண்டு கிடக்குது... அம்மா போன துக்கமெல்லாம் சேர்ந்திட்டுது போல..."

"ம்..."

அவனது மன ஓட்டத்தைப் புரிந்து கொண்ட மகேசு! "மனசு மாறேல்லை உடம்புதான் ஒரளவு கொட்டிண்டு போச்சு..." என்றாள்.

"ஒரளவா...? ரி .பி. வந்தாக்கள் போல இருக்கு. எதுக்கும் நெஞ்சுச்சளி எடுத்துச் சோதனை செய்யிறது நல்லது."

அவன் மீதான காதலும் மனசோடு ஆகிவிட்டரசனைகளும் வடிந்து போக. அவள் உலர்ந்தசிரிப்புடன். "வயசு போனால் ஆசைகளும் தீய்ந்து போக வேண்டியதுதானே..." என்றாள்.

"ஸொாரி... உங்களைத் துக்கப்படுத்த வேணுமெண்ட நோக்கம் எனக்கில்லை... உண்மையைத்தான் சொன்னனான். சடங்கு செய்யிற யோசனை எனக்கு இருந்தது. ஆனால் இப்ப அதுக் கென்ன அவசரமெண்டிருக்கு புதிசா நுகத் தடியில சிக்கின மாடு மாதிரி அவலப்பட வேணுமா என்ன..."

கூறியவன் கலகல எனச் சிரிக்கவும் செய்தான். அவனது சிரிப்பு அவளுக்கு மிகுந்த எரிச்சலை தந்தது. தனது விதியை நொந்து கொண்ட அவள் அவனை இன்னும் கிட்ட நெருங்கி சாக்கடையில் நெளியும் ஒரு அற்ப புழுவைப் பார்ப்பது போலப் பார்த்தாள்.

"ம்... அங்கமட்டும் என்னவாழுதாம்! கண்ணாடி மாளிகையில் இருந்தபடி கல் போடேலுமா...? ஒடிசலான அந்த வதவத உடம்பு ஏன் இந்த மாதிரிப் பெருத்து. மத்தளம் மாதிரி ஆகிவிட்டிருக்கிறது. கடைவாயிலும் முகத்திலும் வெள்ளை விழுந்து அசிங்கமாக தலைமுடியும் மீசையும் கூட நரை கண்டு கறையான் அரித்துக் கொட்டியது போல.. இவனது உடல் மட்டுமல்ல உள்ளமும் தளர்ச்சியடைந்து. பேச்சிலும் செயலிலும் நிதானம் தப்பிவிட்டிருக்கிறதே..."

கீழ்க்கண் கொண்டு ஏளனமாக அவனைப்பார்த்தாள். உதடுகளிலும் கீறலான ஒரு சிரிப்பு அவனை வதைத்தது.

அவசர அவசரமாக இருக்கையை விட்டு அவன் எழுந்து கொண்டான்.

மெதுவாக கதவுப்பக்கம் நகர்ந்த அவள் கதவைத்திறந்தபடி அவனை மௌனமாகப் பார்த்தாள். பின்னர் பித்தம் தலைக்கேறியவள் போலப் பேசவும் செய்தாள்.

"போறேங்களா...? போங்க... இந்த பந்தம். இந்த ஜென்மத்துக்கு மட்டுமல்ல ஏழேழு ஜென்மத்துக்கும் வேண்டாம். அழகா இளமையா சுண்டிப் பார்த்துபுதிசா திரட்சி கொண்ட பெட்டையொண்டைப்பாருங்க... தளர்ந்து போன உங்க உடம்புக்கு அது தோதாய் இதமாயிருக்கும்."

அவளது பேச்சில் இழைந்த. காரமும் இங்கிதமின்மையும் அவனைக் கலவரப்படுத்தியது.

"அதிகமாகத்தான் பேசிப் போட்டனா... அநுதாபப்படுவதாக நினைத்துக் கொண்டு மனதில் பட்டதை யெல்லாம் இப்படிக் கொட்டிச் சிந்தியிருக்க வேண்டாம்.

உள்நோக்கம் ஏதுமில்லாத எனது கதைப்பு அவளை அந்த நல்லியல்புடைய பெண்ணை நன்றாகவே காயப்படுத்திப்போட்டுது.

கழிவிரக்கத்துடன் கூடிய அவனது கவலை அவனது கண்களில் தெரிந்தது. அதனை இனங்கண்டு கொண்ட அவள் அவனது முகத்தில் கசிந்த கனிவை கண்டு குலுங்கினாள். வந்த விம்மலைச்சிரமப்பட்டு அடக்கிக்கொண்டாள்.

அவன் மெய்யாகவே வருந்துவது அவளுக்குத் தெரிந்தது. ஆனாலும் அவளால் எதுவும் செய்யமுடியவில்லை. அவன் மௌன மாகப்படி இறங்கிப்போவதைப் பார்த்தபடி நின்றாள்.

அவன் வீதி முடக்கில் திரும்பி கண்ணில் காணாமல் போகும் வரை பார்த்தபடி நின்றவள். தனது கண்களைத் துடைத்துக் கொள்ளவும் செய்தாள். □□□

மதிப்பீட்டிற்கு உங்கள் நூலின் இரு பிரதிகளை அனுப்பி வையுங்கள்.



# செம்மொழி பற்றிய ஒரு குறிப்பு

- பேராசிரியர் அ. சண்முகதாஸ்

## 1. தமிழ் செம்மொழி என அறிவிக்கப்பட்ட வரலாறு

இன்று உலகத்திலே பேசப்படுகின்ற பல்லாயிரக் கணக்கான மொழிகளுள் ஒரு சில மொழிகளே செம்மொழிகளெனக் கருதப்படுகின்றன. பண்டைக்காலந் தொடக்கம் நீண்ட காலப் பயன்பாடுடையதும், நீண்ட கால இலக்கியப் பாரம்பரியமுடையதும், வேறெந்த மொழியிலுமிருந்து கிளைத்தெழாததுமாகிய மொழியே செம்மொழி எனப்பட்டது. நீண்ட காலமாக கிரேக்கம், இலத்தீன், சமஸ்கிருதம், புறு, பாரசிகம், அரபிக், சீனம் ஆகிய மொழிகளே செம்மொழிகளெனப் போற்றப்பட்டன. தற்போது தமிழ் மொழியும் இந்த செம்மொழி வரிசையிலே சேர்க்கப்பட்டுள்ளது. தமிழ் மொழி இந்த வரிசையிலே சேர்ந்தது ஒரு பெரிய கதை. அதனை முதலிலே நோக்குவோம்.

இந்திய மத்திய அரசு 12.10.2004 அன்று பிறப்பித்த அரசாணையால் தமிழ் செம்மொழி என வகைப்படுத் தப்பட்டது. இந்திய அரசின் இணைச் செயலாளர் A.K. ஜெயின் இந்த அறிவிப்பினை வழங்கினார். இவ்வறிவிப்பில் நான்கு விடயங்கள் அடங்கியிருந்தன:

1. செம்மொழிகள்' என ஒரு புதிய மொழிப் பகுப்பினை உருவாக்குவதென இந்திய அரசு முடிவுசெய்துள்ளது.

2. செம்மொழி என வகைப்படுத்தக் கருத்திற் கொள்ளப்படும் மொழிகளின் தகுதிப்பாட்டினை உறுதி செய்யப் பின்வரும் அளவைகள் பயன்படுத்தப்படும்:

   (i) 1500 – 2000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட உயர் பழைமை வாய்ந்த அதன் நூல்கள் / ஆவணப்படுத்தப்பட்ட வரலாறு.

   (ii) தலைமுறை தலைமுறையாக அதனைப் பேசுபவர்களால் மதிப்புயர்ந்த பாரம்பரியச் சொத்து எனக் கருதப்படும் ஒரு தொகுதி பண்டை இலக்கியம்/நூல்கள்

   (iii) இன்னொரு மொழி பேசும் மக்கட் குழுவிடமிருந்து கடன் பெற்றதாக அலலாமல் தொடக்கமுதலாக இருந்துவரும் இலக்கிய மரபு.

3. "தமிழ் மொழி" மேற்படி 2 ஆவது பந்தியில் பட்டியலிடப்பட்டுள்ள அளவைகளுக்கு ஏற்புடையதாயமை வதால் செம்மொழி என இன்று முதல் வகைப்படுத்தப்படும் என்பதும் அறிவிக்கப்படுகின்றது.

4. மேற்படி தீர்வுகளை நடைமுறைப்படுத்தவும், தொடர் நடவடிக்கைகளுக்கும் பண்பாட்டு அமைச்சு மேலதிக நடவடிக்கைகளை எடுக்கும்.

இந்திய அரசு இந்த அரசாணையைப் பிறப்பிப்பதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னரேயே ஊக்குவிப்பு நடவடிக்கைகள் பல மேற்கொள்ளப்பட்டன. 1887 இல் ஒரு வரலாற்று நிகழ்வு நடந்தது. இந்திய மத்திய சட்ட சபையில் சுதேசத் தாய் மொழிகளையெல்லாம் சர்வகலாசாலைப் பாடப் பகுதிகளினின்றும் நீக்கிவிட வேண்டும்" என்பதாக ஒரு பிரேரணை கொண்டுவந்தனர். ராஜப்பிரதிநிதி இப்பிரேரணையைச் சென்னை சர்வகலாசாலைக்கு அதன் கருத்தைத் தெரிவிக்கும்படி அனுப்பினார். சர்வகலாசாலை சென்னை ஆசிரியர் சங்கத்திற்கு இப்பிரேரணையை அனுப்பிவிட்டது. இந்நிலையில்தான் வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார், மு.சி. பூரணலிங்கம் பிள்ளை துணையுடன் ஆசிரிய சங்கத்திலே தமிழ் ஒரு செம்மொழி என்று பிரகடனஞ்செய்து அது பல்கலைக் கழகத்தில் ஒரு பாடமாக இருக்கவேண்டுமென வலியுறுத்தி சென்னைப் பல்கலைக்

கழகத்துக்கு அறிவித்தனர். வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார் . மு.சி. பூரணலிங்கம் பிள்ளை ஆகியோரின் முயற்சிதான் நம் தமிழ்மொழியின் இன்றைய உயர்வுக்குக் காரணமாயிற்று. தமிழ் ஒரு செம்மொழி என்பதிலே ஈடுபாடு கொண்டு அதனை உலகுக்கு உரத்துக் கூற வேண்டுமென்ற ஆவலுடன் வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார் கட்டுரைகள் எழுதினார் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். வடமொழி. கிரீக்கு. இலத்தீன் போன்றவற்றைப்போல தமிழும் ஒரு உயர்தனிச் செம்மொழி என்று தன்னுடைய தமிழ் மொழியின் வரலாறு என்னும் நூலில் குறிப்பிடுகிறார்.

1887இல் வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியாரின் செம்மொழிப் பிரகடனத்தின் பின்னர் சென்னைப் பல்கலைக் கழகத்துக்குப் பல தீர்மானங்கள் அனுப்பப்பட்டுவந்தன. செம்மொழித் தமிழிலே தேர்ச்சி பெற்ற அறிஞர் பலர் செம்மொழி பற்றிக் கட்டுரை எழுதியும் அரசுடன் தொடர்பு கொண்டும் முயற்சிகள் மேற்கொண்டனர். தமிழைச் செம்மொழியாக மத்திய அரசு ஏற்றுக்கொள்ளும் வண்ணம் ஒரு கருத்துரையை வழங்கும்படி தமிழக அரசு பேராசிரியர்களான ச. அகத்தியலிங்கம். பொன். கோதண்டராமன். டாக்டர் வ.செ. குழந்தைசுவாமி. டாக்டர் ஜான் சாமுவேல். மணவை முஸ்தாபா ஆகியோரைக் கொண்ட குழுவினை நியமித்தது. அக்குழு வழங்கிய கருத்துரை மத்திய அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. மத்திய அரசு அதனை மைசூரிலுள்ள இந்திய மொழிகளின் நடுவண் நிறுவகத்துக்கு அனுப்பியது. தமிழைச் செம்மொழியாக அறிவிக்கலாம் என்னும் பரிந்துரை அங்கிருந்து மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இதன் விளைவாகவே 12.10.2004 அன்று செம்மொழித் தமிழ் அரசாணை பிறப்பிக்கப்பட்டது.

## 2. செம்மொழிகள் யாவை?

செம்மொழிகள் யாவும் பண்டைய மொழிகளே. அவை பண்டைய நாகரிக. பண்பாட்டு வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியுள்ளன. பண்டைய நாகரிகங்களின் இலக்கிய. தத்துவ பாரம்பரியங்களை இச்செம்மொழிகளே உருவாக்கியுள்ளன. இச்செம்மொழிகளை உலக மொழிக்குடும்ப அடிப்படையில் பின்வருமாறு பாகுபாடு செய்யலாம்:

1 **இந்தோ-ஐரோப்பிய மொழிக்குடும்பம்:** *கிரேக்கம் . லத்தீன். சமஸ்கிருதம். பாரசிகம்*

2 **ஆபிரிக்க-ஆசிய மொழிக்குடும்பம்:** *அரபிக். புறு*

3 **திராவிட மொழிக்குடும்பம்:** *தமிழ்*

4 **சினோ-திபேத்திய மொழிக்குடும்பம்:** *சீனம்*

மேற்படி செம்மொழிகளுள் லத்தீனும் சமஸ்கிருதமும் இறந்த மொழிகளாகிவிட்டன. சமஸ்கிருத மொழி ஒரு காலகட்டத்தில் தேவ பாஷையாகக் கருதப்படலாயிற்று. வேதங்களை ஓதவும் மந்திரங்களைக் கூறவும் உயர் நிலையினர் பேசவும் சமஸ்கிருதம் பயன்படலாயிற்று. பொது மக்கள் பாகத மொழி பேசினர். உயர்நிலையினர் எண்ணக்கையில் குறைந்தவர்கள். இதனால் சமஸ்கிருதம் ஒரு சிறு குழுவினரிடையே மந்திரம் ஓதும் மொழியாக மாறிவிட்டது. பொதுமக்கள் பேச்சு மொழியாக அது ஆக முடியவில்லை. இந்நிலை சமஸ்கிருத மொழி வழக்கிறந்து போவதற்குக் காரணமாயிற்று. லத்தீன் மொழிக்கும் இந்நிலையே ஏற்படலாயிற்று.

செம்மொழிகளுக்குக் கூறப்பட்ட வரைவிலக்கணங்கள் எவ்வாறு தமிழ் மொழிக்கும் பொருந்துகின்றன என்பதை இனி விரிவாக நோக்குவாம்.

## 3. பண்டைக்காலம் தொடக்கம் பயன்பாடுடையது

செம்மொழிகள் என்பவற்றுக்குப் பண்டைய வரலாறு இருக்கின்றது. தமிழ் மொழியும் கிறிஸ்து பிறப்பதற்கு முன்னரே வழக்கிலிருந்தது மட்டுமன்றி இலக்கிய மொழியாகவும் இருந்துள்ளது. கி.மு. 2ஆம் நூற்றாண்டுத் திருநாதர்குன்றத்துத் தமிழ்க் கல்வெட்டு ஒரு சான்றாக அமைகின்றது. கி.மு. மூன்றாம் நூற்றாண்டளவில் தோன்றியிருக்கக்கூடிய தொல்காப்பியம் தமிழ் எழுத்துக்கும் எழுத்தாலான இலக்கியத்துக்கும் இலக்கணம் கூறுகின்றது. தமிழ் எழுத்து மொழியாக அமைவதற்கு முன்னர் பல நூற்றாண்டுகளாகப் பேச்சு மொழியாக பயன்பட்டிருக்கும். இவ்வாறு பண்டைக்காலந் தொடக்கம் பேசப்பட்டும் எழுதப்பட்டும் வந்த தமிழ் மொழி இன்றும் பயன்பாட்டிலே உள்ளது. இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சிக்கு முகங்கொடுக்கும் மொழியாகவும் அமைந்துவருகின்றது.

செம்மொழி எனக் கருதப்பட்ட மொழிகளுள் பண்டைக் கிரேக்கம், லத்தீன், சமஸ்கிருதம் ஆகியவை வழக்கிறந்துவிட்டன. இவை சமயக்கிரியை மொழிகளாக 'தேவ பாஷை'களாக இருந்தபடியாலே இயல்புநிலை மக்களுடன் ஒட்டி உறவாட முடியாதனவாக வழக்கிறந்துபோய்விட்டன. இந்த வகையில் பண்டைக் காலந்தொடக்கம் வழக்கிறந்து போகாமல் இன்று வரைக்கும் நின்றுநிலவும் மொழியாகத் தமிழ் விளங்குகின்றது.

## 4. மிகச்சிறந்த உலகுதழுவிய இலக்கியங்களைக் கொண்டது

கிரேக்கம், லத்தீன், சமஸ்கிருதம், புரூ, அரபிக், சீனம் ஆகிய மொழிகள் உலகப் புகழ்பெற்ற இலக்கியங்களை எமக்குத் தந்துள்ளன. இந்த வகையில் தமிழ்மொழி உலகப் புகழ்பெற்ற இலக்கியங்களைத் தந்துள்ளதா? ஒரு நூலினுடைய சிறப்பு அதன் பயன்பாட்டினையொட்டி அமைந்துள்ளது. பண்டைய சமய மறை நூல்களாகிய பைபிளும் திருக்குரானும் உலகெலாமுள்ள கிறிஸ்தவ இஸ்லாமிய மக்களுடைய தேவைக்காகப் பல மொழிகளிலே பெயர்க்கப்பட்டன. சமயப் பயன்பாட்டுக்காக இவை பெருந்தொகையான மொழிகளிலே பெயர்க்கப்பட்டுள்ளன. செம்மொழி இலக்கியங்கள் பல பிற மொழிகளிலே பெயர்க்கப்பட்டன. அவற்றின் பயன்பாடு அம்மொழிகளைச் சார்ந்தவர்களுக்காக மட்டுமன்றி பிறமொழி பேசுபவர்களுக்கும் சென்றடைந்தது. தமிழ் மொழியிலும் திருவள்ளுவர் இயற்றித் தந்த திருக்குறளுக்கு இந்த வாய்ப்புக் கிடைத்துள்ளது. உலகத்திலே எங்கு வாழ்பவர்களுக்கும் எம்மொழி பேசுபவர்களுக்கும் பயன்படக்கூடியதாக திருக்குறள் நூல் இயற்றப்பட்டுள்ளது. அந்நூல் முதன்முதலாக ஆங்கில மொழிக்குப் பெயர்க்கப்பட்டது. 19ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்திலிருந்து தமிழ் நாட்டுக்கு வந்த டாக்டர் ஜி.யு. போப் அவர்கள் திருக்குறளை ஆங்கிலத்திலே மொழி பெயர்த்தார். பின்னர் பல ஐரோப்பிய மொழிகளிலும் இந்திய மொழிகள் பலவற்றிலும் தென்னாசிய தென்கிழக்காசிய மொழிகள் சிலவற்றிலும் அது மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. வள்ளுவன்தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" என்று மகாகவி பாரதி கூறியதை இவ்விடத்திலே நினைவுகொள்ளலாம்.

கம்பன் இயற்றிய இராமாயணமும் இளங்கோவினுடைய சிலப்பதிகாரமும் உலக காவியங்களின் தரமுடையனவாக அமைகின்றன. வால்மீகியினுடைய இராமாயணத்தை அடியொற்றிக் கம்பன் இக்காவியத்தைப் படைத்தபோதிலும் தமிழ் மொழியின் பொருள் செய்யுள் மரபுகளின் செழுமைகளை அதனூடாகப் புலப்படுத்துகிறான். அவனுடைய சொந்தக் கற்பனைத் திறன், காவியக் கட்டமைப்பு, பாத்திர வார்ப்பு ஆகியன அறிஞர்களால் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளன. சிலப்பதிகாரம் முழுமையான ஒரு தமிழக் காப்பியம். இதனுடைய பிற மொழிபெயர்ப்புகள் அதிகமாக இல்லை. இக்காவியத்தினை பிற மொழிகளிலே முறையாக மொழிபெயர்த்துக் கொடுத்தால் தமிழ் ஒரு செம்மொழி எனக் கூறுதற்கு மிகச் சிறந்த சான்றாக அமையும்.

## 5. நீண்டகால இலக்கியப் பாரம்பரியமுடையது

தமிழ் மொழி கிறிஸ்து பிறப்பதற்கு முன்னரிருந்து இன்றுவரை இடையறாத இலக்கியப் பாரம்பரியமுடையதாக அமைகின்றது. இலக்கியச் செழுமையுடையனவாகவும், பண்டைத் தமிழருடைய சமூக, பண்பாட்டு, கலை விவரங்களை வெளிப்படுத்துவனவாகவும் அமையும் சங்க இலக்கியங்கள் தமிழ் மொழியின் தொன்மை வாய்ந்தவையாகும். வள்ளுவனையும் இளங்கோவையும் பெருந்தொகையான அறநீதி நூல்களையும் கொண்ட தமிழ் "பக்தியின் மொழி தமிழ்" என்று கூறக்கூடியதாக அமைந்தது. எலும்பினையே உருகவைக்கும் பாடல்கள் என்று சொல்லத்தக்க பக்திப் பாடல்களைக் கொண்டதாக அமைந்துள்ளது. டாக்டர் ஜி.யு. போப் திருவாசகப் பாடல்களை ஆங்கில மொழியிலே பெயர்த்துப் பிற மொழியாளர்களுக்கு அவற்றின் சிறப்புக்களை உணர்த்தினார். காவியங்கள், புராணங்கள, தனிப்பாடல்கள், சிற்றிலக்கியங்கள் என்று பல இலக்கியங்கள் தமிழ் மொழியிலே தோன்றின. நவீன காலத்துக்கேற்ப நாவல், சிறுகதை, நாடகம், கட்டுரையிலக்கியம், மறுமலரச்சியடைந்த கவிதை என்பன பெருவாரியாகத் தோன்றி வளர்ந்துகொண்டிருக்கின்றன.

தமிழ்ச் சமய இலக்கியத்தின் ஒரு தனித்தன்மை இங்கு குறிப்பிடப்படவேண்டியது. எவ்வெச் சமயங்கள் தமிழ் மொழியுடன் தொடர்புற்றனவோ அவ்வச் சமயங்களுக்கெல்லாம் தமிழ் மொழியிலே காவியங்கள் இயற்றப்பட்டுள்ளன. சமணம், பௌத்தம், வைணவம், சைவம், இஸ்லாம், கிறிஸ்தவம், றோமன்

கத்தோலிக்கம் என்பன தமிழ் மொழியுடன் தொடர்புற்ற சமயங்களாயின. இந்நிலையில், சமணசமய சீவகசிந்தாமணி, பௌத்தசமய மணிமேகலை, வைணவசமயக் கம்பராமாயணம், சைவசமயப் பெரியபுராணம், இஸ்லாம் சமயச் சீறாப்புராணம், கிறிஸ்தவசமய இரட்சணிய யாத்திரிகம், றோமன் கத்தோலிக்க சமயத் தேம்பாவணி காவியங்களைக் குறிப்பிடலாம்.

தமிழிலே தோன்றிய செவ்வியல் இலக்கியங்களுக்கு ஊற்றாக இருந்துவந்த வாய்மொழி மரபுகளும் நாட்டார் இலக்கியங்களும் சமாந்தரமாக வளர்ந்துவருவதையும் இங்கு குறிப்பிடவேண்டும். செவ்வியல் மரபும் நாட்டார் மரபும் இணைகின்ற போது மிகச் சிறந்த தமிழ் இலக்கியங்கள் உருவாகியுள்ளதைக் காணக்கூடியதாயுள்ளது. சிலப்பதிகாரமும் பக்திப் பாடல்களும் இதற்கு நல்ல எடுத்துக்காட்டுகளாக அமைகின்றன.

### 6. வேறெந்த மொழியிலுமிருந்தும் கிளைத்தெழாதது

தமிழ்மொழி சமஸ்கிருத மொழியிலிருந்து கிளைத்தெழுந்ததென்பதை நிலைநாட்டப் பல முயற்சிகள் காலத்துக்குக் காலம் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, மலையைக் குறிக்க 28 சொற்கள் தமிழிலே இருக்கின்றன. அப்படி அவை இருக்கவும் 27 சொற்கள் வடமொழியிலிருந்து பெறப்பட்டுள்ளன. வடமொழிச் சொற்கள் இருபத்தேழும் வழக்கிலே வர, தமிழ்ச் சொற்கள் இருபத்தெட்டும் வழக்கிழந்துபோய்விடலாம். வடமொழி இல்லாமல் தமிழ் மொழி இயங்கமுடியாது என்பதற்கு இதுவும் ஒரு சான்றாகிவிடும். இவை யாவற்றுக்கும் முற்றுப்புள்ளி வைப்பதுபோல் டாக்டர் கால்ட்வெல் தன்னுடைய திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் நூலில் தமிழ் மொழி திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது என்றும் அது இலக்கண அடிப்படையில் சமஸ்கிருத மொழியைச் சாராதது என்றும் விளக்கமாகவும் தெளிவாகவும் உலகுக்கு எடுத்துக் கூறியுள்ளார்.

### 7. முடிவுரை

தமிழ் செம்மொழி என்பதற்கு ஊன்றிய அணை கொடுப்பன அதன் பண்டைய இலக்கியங்களேயாகும். இவற்றை இன்றைய தலைமுறையினர்க்கும் இனி வருவோர்க்கும் செம்மையான முறையிலே கையளிப்புச் செய்வதற்கு ஏற்ற வழிவகைகள் செய்ய வேண்டும். சங்க இலக்கியங்களையும் சிலப்பதிகாரம், மணிமேகலை திருக்குறள் ஆகிய நூல்களையும் சிறப்பாகக் கற்பதற்கு இளம் மாணவர்களுக்குப் பல புலமைப் பரிசுகள் வழங்கி ஊக்கம் கொடுக்கவேண்டும். உலகப் பல்கலைக் கழகங்களில் வாய்ப்பு ஏற்படக்கூடிய இடங்களில் செம்மொழித் தமிழ்த் துறையினை அமைக்கவும், பேராசிரியர்ப் பதவிநிலையினை ஏற்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும். தமிழ் ஒரு செம்மொழி என்று அறிவித்தபின்னர் அது இன்னும் 50 ஆண்டுகளில் செத்துவிடும் என்று அச்சப்படாமலிருக்க வழிசெய்யவேண்டும். தொலைக்காட்சிகளிலும் வானொலியிலும் ஆங்கிலத் தமிழுக்குப் பதிலாக தனியாகத் தமிழ்மொழியைப் பயன்படுத்த வழிசெய்யவேண்டும்.

**சிறுகதை எழுத்தாளரும் 'தினகரன்' பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியருமான அமரர் ராஜ ஸ்ரீகாந்தன் அவர்களின்**
**4ஆவது நினைவுதின ஞாபகார்த்தச் சிறுகதைப்போட்டி**

*முதற்பரிசு - ரூபா 3000.00*
*இரண்டாம் பரிசு - ரூபா 2000.00*
*மூன்றாம் பரிசு - ரூபா 1000.00*


போட்டி விதிகள்

சமர்ப்பிக்கப்படும் சிறுகதைகள் முன்னர் எங்கும் பிரசுரிக்கப்படாததாக இருத்தல் வேண்டும்
போட்டியில் பங்குபற்றுபவர்கள் தமது பெயர், முகவரி போன்ற விபரங்களை வேறாக இணைத்தல் வேண்டும்.
தபால் உறையின் இடதுபக்க மூலையில் 'அமரர் ராஜ.ஸ்ரீகாந்தன் ஞாபகார்த்தச் சிறுகதைப்போட்டி எனக்குறிப்பிடுதல் வேண்டும்.

போட்டி முடிவுத்திகதி : 30. 06. 2008

அனுப்ப வேண்டிய முகவரி : ஆசிரியர்
'ஜீவநதி'
கலை அகம்
அல்வாய் வடமேற்கு
அல்வாய்

இப்போட்டிக்கான பரிசுகளை அமரரின் சகோதரர்கள் வழங்கவுள்ளனர்.



# தூக்கம் – வள்ளுவன் கூற்றுச் சரியா?

- டாக்டர் எம்.கே.முருகானந்தன்

"தூங்குவது போலும் சாக்காடு" என்றான் வள்ளுவன்.

இதன் அர்த்தம் என்ன? தூக்கம் என்பது மரணத்தைப் போன்றது என்பதுதானே. அதாவது உடல் மனம் யாவும் செயலிழந்து மரக்கட்டை போலக் கிடப்பதாகும்.

### இது சரியான கருத்துத்தானா?

பல நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த தமிழ் ஞானியான வள்ளுவன் மட்டுமன்றி மிக அண்மைக் காலம் வரையான விஞ்ஞானிகளும் இதையே சரியான கருத்தெனக் கொண்டனர். அதாவது சுமார் 1950 வரை முழு உலகமுமே தூக்கம் என்பது, உயிரினங்கள் செயலற்று அடங்கிக் கிடக்கும் காலம் என்றே எண்ணி வந்துள்ளனர். ஆனால் பல ஆய்வுகளின் பலனாக அது மறுதலிக்கப்படுகிறது. இப்பொழுது அது தவறான கருத்து என்பதை விஞ்ஞான உலகம் மட்டுமின்றி, சாதாரண மக்கள் கூட அறிந்துள்ளனர். தூக்கத்தின் போது கூட எமது மூளையானது முழு வீச்சில் இயங்கிக் கொண்டிருப்பதை விஞ்ஞானம் நிரூபித்துள்ளது. அத்துடன் தூக்கமின்மையானது நாளாந்த வாழ்வின் இயக்கத்தை பாதிக்கிறது. தூக்கமானது எமது உடல், மன ஆரோக்கியத்திற்கு அவசியமானது என்பது சொல்லித் தெரிய வேண்டியதல்ல

### எமது தூக்கத்தை எவை கட்டுப்படுத்துகின்றன?

நரம்புக் கலங்களின் இயக்கத்தை கட்டுப்படுத்தும் இரசாயன நரம்புத் தூண்டிகள் தாம் (neurotransmitters) இவை நாங்கள் விழித்திருக்கும் போதும் தூங்கும் போதும் நரம்புக் கலங்களைத் தூண்டிக் கொண்டுதான் இருக்கின்றன. ஆனால் வெவ்வேறு நேரங்களில் வெவ்வேறு நரம்புத் தொகுதிகளைத் தூண்டிக் கொண்டே இருக்கின்றன.

எமது மூளையையும் முண்நாணையும் இணைக்கும் நரம்புத்தண்டானது சிரோடொனின் (serotonin) மற்றும் நேஎவிநெவ்ரின் (norepinephrine) போன்ற இரசாயன நரம்புத் தூண்டிகளைச் சுரக்கிறது. இவை நாம் முழிப்பாக இருக்கும் போது எமது மூளையின் அடிப்பாகத்திலிருக்கும் வேறு நரம்புக் கலங்கள் இயங்கத் தொடங்குகின்றன. இதன் காரணமாக நாம் தூங்கும் போதும் மூளை இயங்குகிறது. ஆனால் பலத்த சத்தம் கேட்டால் விழித்தெழச் செய்கிறது. இருதயம் சீராகத் துடிக்கிறது. சுவாசம் ஒழுங்காக நடக்கிறது. இவ்வாறு நாம் தூங்கும் போதும் உடலும், மூளையும் எமது நினைவறியாமல் இயங்கிக் கொண்டே இருக்கின்றன.

### நாம் நீண்ட நேரம் விழித்திருக்கும் போது தூக்கக் கலக்கம் வருவதற்குக் காரணம் என்ன?

நாம் விழித்திருக்கும் போது எமது குருதியில் அடினோசின் (adenosine) என்ற இரசாயனப் பொருளின் அளவு அதிகரித்துக் கொண்டே செல்கிறது. விழித்திருக்கும் நேரம் கூடக் கூட குருதியில் அடினோவினின் செறிவு அதிகரித்து எமக்கு தூக்கக் கலக்கத்தை ஏற்படுத்துகிறது. பிற்பாடு நாம் தூங்கும் போது இவ் இரசாயனமானது படிப்படியாக சிதைந்து மறைந்து போகிறது.

இது ஒரு சிறிய உதாரணம் மட்டுமே. இதன் மூலம் புரிவது என்ன வென்றால் நாம் விழித்திருக்கும் போது எமது குருதியில் சேரும் "கழிவுப்பொருளான" அடினோசின் சிதைந்து அழிய வேண்டும். அதற்குப் போதிய நித்திரை தேவை என்பதுதானே. நாம் தூங்கும் நேரத்திலும் மூளையானது செயற்பட்டே இந்த இரசாயனத்தை அழிக்கிறது. அதனாலேயே மூளை மீண்டும் சுறுசுறுப்பாக இயங்க முடிகிறது.

### எவ்வளவு நேர தூக்கம் தேவை?

ஒரு வயதிற்கு உட்பட்ட பாலகர்களுக்கு தினசரி 16 மணிநேர தூக்கம் தேவையாகும். ஆனால் பதின்ம வயதினருக்கு 9 மணிநேர தூக்கம் தேவை என வல்லுனர்கள் கருதுகிறார்கள். ஏ.எல் படிக்கும் உங்கள் பிள்ளை எத்தனை மணிநேரம் தூங்கிறது என்பதை இந்த நேரத்தில் நினைத்துப் பாருங்கள் "இவன் படியாமல் தூங்குகிறான்" என நீங்கள் குற்றம் சாட்டுவது உண்டாயின் அது சரிதானா என மறுபரிசீலனை செய்யுங்கள்.

வளர்ந்த மனிதனுக்கு எவ்வளவு நேரத் தூக்கம் தேவை? எட்டு மணிநேரம் என வாய்ப்பாடு போல

பலரும் சொல்கிறார்கள்.ஆனால் அது சரிதானா? அமெரிக்காவில் ஒரு மில்லியனுக்கு மேற்பட்ட மக்களைக் கொண்டு Daniel F.Kripke,MD தலைமையிலான குழுவினரால் ஆறு வருடங்கள் செய்யப்பட்ட ஆய்வு மனிதர்களுக்கு 8 மணித்தியால தூக்கம் தேவையற்றது என உறுதியாகக் கூறுகிறது. தினமும் ஏழு மணி நேரம் தூங்குவதே திருப்தியானது. அதுவே ஆரோக்கியமானது என அதே ஆய்வு மேலும் தெளிவுறுத்துகிறது. இருந்தபோதும் வளர்ந்தவர்களுக்கு தினசரி 7 முதல் 8 மணி தேவை என்பதே பொதுவான கருத்தாகும். ஆனால் 5 மணிநேரம் மட்டும் தூங்கிவிட்டு தினமும் உற்சாகமாக உலவும் மனிதர்களும் இருக்கிறார்கள். மறுபுறம் 10 மணிநேரம் தூங்கினால்தான் திருப்தி அடைபவர்களும் இருக்கிறார்கள். கர்ப்பிணிப் பெண்களுக்கு அதிலும் முக்கியமாக கர்ப்ப காலத்தின் முதல் மூன்றுமாத காலத்தில் சாதாரணமானவர்களை விட பல மணிநேர தூக்கம் மேலதிகமாகத் தேவைப்படுகிறது. வயதாகும்போது மனிதர்களின் தூக்கம் ஆழமற்றதாகவும் குறுகிய காலத்திற்கே நீடிப்பதாகவும், அடிக்கடி வரும் குறும் தூக்கமாகவும் இருக்கும். ஆனால் மொத்தமாகக் கணக்கெடுத்தால் இளமைப் பருவத்தில் பெற்ற தூக்கத்திற்கு ஏறக்குறையச் சமனாகவே இருக்கும். ஆயினும் 65ற்கு மேற்பட்ட பலருக்கும் தூக்கக் குறைபாட்டுப் பிரச்சனைகள் இருப்பதுண்டு. இது வயதாவதாலும் ஏற்படலாம். அவர்களுக்கு இருக்கும் மூட்டுவலி, ஆஸ்த்மா, இருதய நோய் போன்ற பல்வேறு நோய்களாலும் ஏற்படலாம். அல்லது அதற்கு அவர்கள் உட்கொள்ளும் மருந்துகளும் காரணமாகலாம்.

"ஒரு நாளுக்கு ஒழி என்றால் ஒழியாய், இரு நாளுக்கு ஏல் என்றால் ஏலாய்" என ஒளவை வயிறு பற்றிப் பாடினார். வயிறானது ஒரு நாளுக்கு உண்ணாமல் இருக்கவும் மாட்டாது. உணவை ஒழித்த ஒரு நாளுக்காக மறுநாள் இரு மடங்கு சாப்பிடவும் மாட்டாது. ஆனால் தூக்கம் அப்படியல்ல. தூக்கத்தை முற்கடனாகக் கொடுக்குமோ தெரியாது. ஆனால் பாக்கியை வசூல் பண்ணத் தயங்காது. ஒரு நாள் உங்களுக்கு தூக்கம் போதாது இருந்தால் மறுநாள் சற்று அதிகம் தூங்கி உங்கள் உடல் அதனை ஈடு செய்யும் ஆற்றல் கொண்டது. ஆனால் கடன் அதிகமானால் கவனஈர்ப்புத் திறன், முடிவு எடுக்கும் திறன், செயற்படும் திறன் போன்ற பல உடற் செயற்பாடுகள் பாதிப்புறும்.

## உங்கள் தூக்கம் போதுமானதா என்பதை எவ்வாறு அறிவது?

பகல் நேரத்தில் நீங்கள் தூங்கி வழிந்தால் நீங்கள் முதல் இரவு கொண்ட தூக்கம் குறைவானது என்றே அர்த்தமாகும். முக்கிய வேலையின் போது தூங்கி வழிந்தால் மட்டுமன்றி, சலிப்படையச் செய்யும் வேலையின் போது தூங்கி வழிந்தால் கூட போதாது என்றே கொள்ள வேண்டும். ஒருவர் படுக்கையில் சாய்ந்த 5 நிமிடங்களுக்குள் வழமையாகத் தூங்கிவிடுகிறார் எனில் அவருக்கு பாரதூரமான தூக்கப் போதாமை இருக்கக் கூடும் அல்லது தூக்கக் குறைபாட்டு நோய்கள் இருக்கக் கூடும் என இத்துறையில் நிபுணத்துவம் பெற்றவர்கள் கூறுகிறார்கள். கோழித் தூக்கம் என்பதும் இதன் மற்றொரு வெளிப்பாடு ஆகும். கோழித் தூக்கம் என்றால் என்ன? முழித்திருக்கும் வேளைகளில் தன்னை அறியாமல் கண்ணயர்வதைத்தான் நாம் கோழித் தூக்கம் என்கிறோம். ஆங்கிலத்தில் Microsleep என்கிறார்கள்.

அண்மையில் ஒரு ஆய்வு, ஜெர்மனி நாட்டில் உள்ள டுச்செல்டர் பல்கலைக்கழகத்தில் டொக்டர் ஒலாப் லல் தலைமையில் செய்யப்பட்டது. தூக்கம் நினைவாற்றலை அதிகரிக்கச் செய்கிறது என அவரது ஆய்வின் முடிவு கூறுகிறது. பள்ளி மாணவர்களிடையே அவர் இந்த ஆய்வினை நடத்தினார். முதலில் மாணவர்களுக்கு சில வார்த்தைகளை மனப்பாடம் செய்யக் கொடுத்தார். அவர்களில் ஒரு பகுதியினரை 5 நிமிடங்கள் தூங்கச் சொன்னார். மற்றவர்களை தூங்காது விழித்திருக்கச் சொன்னார். ஒரு மணி நேரம் கழித்து அவர்களின் நினைவாற்றலை அவர் பரிசோதித்த போது விழித்திருந்த மாணவர்களை விட தூங்கிய மாணவர்களால் மனப்பாடம் செய்த வார்த்தைகளை எளிதில் நினைவு படுத்தி சொல்ல முடிந்தது. கற்றவற்றை மனத்தில் நிறுத்துவதற்கு தூக்கம் அவசியம் என்பது இதனால் தெரிகிறது அல்லவா, உங்கள் பிள்ளைகள் திறமாகக் கற்க வேண்டுமாயின் போதிய தூக்கம் அவசியம் என்பதை மறந்து விடாதீர்கள். மிட்சிகன் பல்கலைக்கழகத்தில் செய்யப்பட்ட மற்றொரு ஆய்வானது குண்டுக் குழந்தைகள் பற்றியது. போதிய அளவு தூக்கம் அற்ற குழந்தைகள் அதீத எடையுள்ளவர்களாக வளரக்கூடும் என்கிறது அவ் ஆய்வு. உண்மையில் தூக்கம் என்பது ஒரு மர்ம மாளிகையாகும். அதன் வாசல்களைத் திறந்து அதனுள் மறைந்திருக்கும் இரகசியங்களை விஞ்ஞானிகள் துருவிக் கொண்டே இருக்கிறார்கள். ஆயினும் ஆங்காங்கே சில கீற்றுக்கள்தான் தென்படுகின்றனவே ஒழிய தூக்கத்தை இன்னும் ஒருவரும் முழுமையாகப் புரிந்து கொள்ளவே இல்லை. அது வரை போதிய தூக்கம் கொண்டு மூளையைச் சுறுசுறுப்புடன் காப்பாற்றிக் காத்திருப்போம்.

# ஆதிக்குரலும் இன்றைய என் இருப்பும்

இரவின் அமைதியினைக்
கிழித்துக் கொண்டு
அந்த குரல் கேட்டது

என் ஆதிச் சமூகத்தின்
ஒரு பிரதியின்
ஒற்றை குரல்
அதுவாயினும்
பெருத்த ஓர் அறிவிப்பின்
கனதி கனத்தது அதில்,

அதன் கடும் விமர்சனத்தில்
என் இன்றைய வம்சத்தின்
சீரழிவுகளின் பட்டியல்
தொங்கியது,

இழந்து விட்ட
அந்த ஆதிச் சமூகத்தின்
மேன்மைகளையிட்ட
ஏக்கம் துளிர் விட்டது
அசடு வழிய
விடுதலை கிட்டாத
ஒரு பூகோளத்தின்
விரைந்து போய் நின்ற
பிரஜை என்மீது,

கனத்த சக்கரங்கள்
என் மீது
ஏறிப் போனதான
ஓர் அவஸ்தையில்
நான் முனகிக் கொண்டிருந்தாலும்

அந்த ஆதிச் சமூகத்தின்
குரல் – அசரீரியாய்
எனக்குள் இறங்கிக் கொண்டிருக்க
இன்றைய என் வம்சத்தின்
பிரதிநிதித்துவத்தை இழக்க முடியா
ஒரு வஸ்துவாய்
துடித்தது என் "நான்"



ஆனாலும்
அந்த ஆதிச் சமூகத்தின்
சுவடுகளின் நீட்சியாய் பூத்த
வீரியத்தின் ஒற்றை துளி
பிறப்பாய்
நானாக இருந்ததனால்
தொடர்ந்தது
அந்த குரல்.!

– மேமன்கவி



# ஈழத்தில் வெளிவந்த ஈழத்தின் முதல் நாவல் மறுமதிப்பீடு

- கலாநிதி செ.யோகராசா

ஈழத்தின் முதல் நாவல் 1855ல் (அசன்பேயுடைய கதை) வெளிவந்திருப்பினும் 'ஈழத்தின்' (தமிழ்நாட்டு இலக்கியத்திலிருந்து ஈழத்துத் தமிழ் இலக்கியம் வேறுபட்டதும் தனித்துவம் கொண்டிருப்பதாகும் என்ற பிரக்ஞை ஏற்பட்ட பின்பான) முதல் நாவல் எது என்பது பற்றி நிலவுகின்ற கருத்துக்கள் (முதல் நாவல் இளங்கீரனின் 'நீதியே நீகேள்' என்பதும் முதல் யதார்த்த நாவல் செ.கணேசலிங்கனின் 'நீண்ட பயணம்' என்பதும் அவ்வாறான கருத்துக்களில் முக்கியமானவை) மறுமதிப்பீட்டிற்குள்ளாக வேண்டிய நிலை காணப்படுகின்றது. ஈழத்து நாவல் வரலாற்றுப் பின்புலத்தில் இதுபற்றி அவதானிப்பது பொருத்தமானது.

ஈழத்தின் முதல் நாவல் வெளிவந்து 1885 தொடக்கம் 1908 வரையான நாவல் ஒன்றில் கதைநிகழ் களங்கள் பிறநாடு சார்ந்தனவாக (எ-டு அசன்பேயுடையகதை, மோகனாங்கி) அல்லது தழுவல்களாக (எ - டு உசோன் பாலந்தைக் கதை) அமைந்துள்ளன.

1905 இல் வெளிவந்த (சி.வை.சின்னப்பிள்ளை எழுதிய) வீரசிங்கன் கதை அல்லது சன்மார்க்க ஜெயம் தொடக்கமே ஈழத்தைக் களமாகக் கொண்ட நாவல்கள் வெளிவருகின்றன. இவ்வழி முதன்மைப் பெறும் அன்றைய சமூக நிலைமை சார்ந்த இந்நாவல் வர்த்தகம் காரணமாக யாழ்ப்பாணத்திலிருந்து அநுராதபுரம் சென்ற ஒரு இளைஞனது அனுபவங்களைப் பற்றி எழுந்துள்ளது.

1905 தொடக்கம் ஏறத்தாழ 1940 வரை வெளிவந்த நாவல்கள். (1) கற்பனை சார்ந்த காதலும் வீரசாகசமும் (எ - டு காந்தமலர் அல்லது கற்பின் மாட்சி 1936) (2) வரலாறு (எ - டு விஜயசீலன் 1916) (3) துப்பறிதலும் மர்மமும் (செல்வரத்தினம் 1935) (4) சமூகக் குறைபாடுகள் (எ - டு சாதி பற்றிய இடைக்காடர் எழுதிய நீலகண்டன் 1925, சீதனம், மதுபானம், தீயோர் நட்பு பற்றி ம.வே.திருஞானசம்பந்தப்பிள்ளை எழுதிய துரைரத்தினம் நேசமணி (1927 / 28). (5) சமகாலச் சமூக நிலைமையைப் பிரதிபலித்தல் (எ - டு கிறிஸ்தவமத மாற்றம் பற்றிய நொறுங்குண்ட இருதயம், கிறிஸ்தவ மதமாற்றத்தைக் கண்டித்து ம.வே.திருஞானசம்பந்தப்பிள்ளை எழுதிய கோபால நேசரத்தினம்) (6) தழுவல் (ஏரம்ப முதலி எழுதிய அரங்கநாயகி ) (7) மொழி பெயர்ப்பு (ஈழகேசரியில் வெளிவந்த ரஷ்ய நாவல் மொழிபெயர்ப்பான துர்க்கனேவ் முதலான பலரது படைப்புக்கள்) என்பன சார்ந்தனவாக வெளிப்பட்டன.

(தழுவல் மொழிபெயர்ப்பு முயற்சிகள் தவிர்ந்து மேற்கூறியவை அனைத்தும் அறப்போதனை செய்வதைத் தலையாய நோக்கமாகக் (அல்லது தலையாய நோக்கங்களுள் ஒன்றாக) கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. நாவல் எழுதப்படுவது அதற்காகவே என்பது அக்கால நாவலாசிரியர் அனைவரதும் அபிப்பிராயமாகும்.

மேற்கூறிய நோக்கத்திற்கு அமைவாக எழுந்துள்ள இக்காலத்து ஈழத்து நாவல்களிலே காவியப்பண்புகள் இடம் பெற்றிருப்பது வியப்பிற்குரியதன்று. முற்குறிப்பிட்டவாறு அறம் முக்கியம் பெற்றிருப்பதோடு (காவியப் பாங்கான) வர்ணனைகள், நீதிச் செய்யுள்கள், நீதி சார்ந்த மேற்கோள்கள் என்பன பரவலாக இடம் பெறுதல் (காவியப் பண்பு கொண்ட) பாத்திர வார்ப்பு எனப் பலவிதங்களிலும் காவியத்தாக்கம் வெளிப்படுவது குறிப்பிடத்தக்கது.

இக்காலகட்ட நாவல்களுள் இன்று பின்னோக்கிப் பார்க்கின்ற போது நாவலாசிரியர் இருவரது நாவல்கள் விதந்துரைக்கப்பட வேண்டியனவாகவுள்ளன. இவர்களுள் முதன்மையானவர் மங்கள நாயகம் தம்பையா, இவரெழுதிய 'நொறுங்குண்ட இருதயம்' சமகாலச் சமூக நிலைமைகளை (கிறிஸ்தவ மதமாற்றம் முதலியன) முதன் முதலாகச் சிறப்பாகச் சித்திரிக்கின்ற நாவலாகின்றது. அதுமட்டுமன்றி இந்நாவலின் இரு பெண் பாத்திரப்படைப்புகளை (பாரம்பரியத் தமிழ்ப் பண்பாட்டினை பிரதிபலிக்கின்ற கண்மணி, துணிவும்

புத்தி சாதுர்யமும், ஆண்களுக்கே ஆலோசனை கூறுகின்ற நுண்மதியும் கொண்ட பெண்மணி ஆகியோரை சமகால தமிழக நாவல்களிலும் காண்பதரிது. சமகாலத்தில் மட்டுமன்றி இன்று பார்க்கின்ற போதும் அவை வியப்பளிக்கின்ற பாத்திரவார்ப்புகள்)

மற்றொரு நாவலாசிரியர். ம.வே.திருஞானசம்பந்தப்பிள்ளை. இவர் "உலக பலவிதக் கதைகள்" என்ற பெயரில் காசிநாதன் நேசமலர் (1924) கோபால நேசரத்தினம் (1926 - 27) துரைரத்தினம் நேசமணி (1927 - 28) ஆகிய மூன்று நாவல்களை எழுதியுள்ளார். இவற்றுள் முதல் நாவல் சமயநோக்கும் அடுத்த நாவல்கள் சீர்திருத்த நோக்குமுடையவை. ஏனைய சமகால நாவல்களுடன் ஒப்பிடும் போது எளிமையான நடை கதையூடாக வாசகரைக் கவர்கின்ற தன்மை முதலான இயல்புகள் இந்நாவல்களில் இடம் பெற்றுள்ளன. இத்தியாதி காரணங்களால் தமிழ் நாவல் நூற்றாண்டு வரலாறும் வளர்ச்சியும் நூலின் இணை ஆசிரியர்கள். "திருஞானசம்பந்தப் பிள்ளையின் இந்த நாவல் முயற்சி (கோபால நேசரத்தினம்) ஈழத்துப் பின்னணியில் ஒரு முக்கியமான திருப்பம் என்று சொல்ல வேண்டும். இதைத் தொடர்ந்து எழுதிய துரைரத்தினம் நேசமணி என்ற நாவலையும் அன்றைய யாழ்ப்பாணச் சமுதாயத்திற் கண்ட மதமாற்றம், சீதனக் கொடுமை, சாதிப்பிரச்சினை முதலியவற்றைப் பொருளாகக் கொண்டு நடப்பியல் ரீதியில் யாழ்ப்பாண மக்களின் பேச்சுத் தமிழை உபயோகித்து திருஞானசம்பந்தப்பிளைளை எழுதினார்." என்று கணிப்பிட்டுள்ளனர்.

எனினும் ஈழத்து ஆய்வாளர் சிலர் மேற்கூறிய நாவல்களைக் கவனிக்காமற்போலும் இடைக்காடர் எழுதிய "நீலகண்டன்" நாவலை முதன்மைப்படுத்தியுள்ளனர்.

எவ்வாறாயினும் இவ்விடத்தில் குறிப்பிடத்தக்க விடயமொன்றுள்ளது. ஈழத்து நாவல்களிலே மேற்கூறியவாறு ஈழத்துப் பிரச்சினைகள் இடம்பெற்றிருப்பினும் ஈழம் என்ற உணர்வு எழுந்தமை காரணமாக அவை பேசப்பட்டன என்பதற்கில்லை. யதார்த்தப் பண்பும் முழுமையான விதத்தில் வெளியிட்டன என்று கூறுவதற்குமில்லை.

1940 தொடக்கம் 1950 வரையான நாவல்களில் கிராமியம் அல்லது பிரதேச மணம், அனுபவ வெளிப்பாடு முதலான பண்புகள் புதிதாக முகிழ்க்கத் தொடங்கின. அ.செ. முருகானந்தத்தின் வண்டிச்சவாரி (1944) புகையில் தெரிந்த முகம் (1950) முதலானவை இவ்விதத்தில் குறிப்பிடத்தக்கன. காவியச் செல்வாக்கிலிருந்து ஈழத்து நாவல் மெல்ல விலகி யதார்த்த சூழலுக்கு மாறுகின்ற நிலையும் இவ்வேளை உருவாக ஆரம்பித்தது.

பலராலும் கவனிக்கப்படாத இக் காலகட்டத்திற்குரிய "அனிச்சமலரின் காதல்" எனறொரு நாவல் பற்றி இவ்வேளை குறிப்பிடுவது அவசியமாகின்றது.அனுபவம் யதார்த்தம் என்பன பிரக்ஞைபூர்வமாக ஒரளவு இந்நாவலாசிரியரால் பின்பற்றப்படுகின்றது.

எவ்வாறாயினும் எறத்தாழ 1950கள் வரையும் ஈழத்தில் காவியப் போக்கிலிருந்து விடுபட்டு முழுமையான யதார்த்தப் பாங்குடைய நாவல்கள் எவையும் ஏன் வெளிவரவில்லை என்றொரு கேள்வி எழுகின்றது. தமிழ் நாட்டிலிருந்து வெளிவந்த இலக்கியத் தரமான நாவல்களெவையும் ஈழத்து வாசகர்களுக்குக் கிடைத்திருப்பதாகக் கூறுவதற்கில்லை. இச்சூழலில் தமிழ் நாட்டிலிருந்து இங்கு வந்து சேர்ந்த தரமற்ற நாவல்களுக்கு ஈழத்து நாவலாசிரியர் மத்தியில் பெருமளவு எதிர்ப்பும் காணப்பட்டது.

மேலும் எமது நாவலாசிரியர்கள் தமிழ்நாட்டு ஆரம்பகால நாவலாசிரியர்கள் போன்று தமிழிற்கு புதிய இலக்கிய வடிவங்களை அறிமுகம் செய்ய வேண்டுமென்று எண்ணமுடையவர்களாக விளங்கினரென் பதற்கில்லை. மேலைத்தேயச் சிறந்த நாவல்களைத்தேடி வாசிக்கமுற்பட்டனரென்பதற்குமில்லை.

மேற்கூறியவாறான ஆரோக்கியமற்ற நிலைமைகள் 1950 களிலிருந்தே மாற்றமுறத் தொடங்கின. இக்கால ஈழ அரசியல், சமூக மாற்றங்கள். 1956 இல் சிங்கள மொழிச்சட்டம் 1958 இல் ஏற்பட்ட இனக்கலவரம் எழுத்துலகையும் பாதித்தன. இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் இச்சூழலில் "ஈழத்து இலக்கியம்" பற்றிய உணர்வு ஈழத்து எழுத்தாளர் மத்தியில் முகிழ்ப்பதற்கேற்ற விதத்தில் பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டமை இன்று வரலாறாகிவிட்டதொரு விடயம். இத்தகைய சூழலிலே தான் இக்காலப்பகுதியில் வெளிவந்த (இளங்கீரனின்) நீதியே நீகேள் (1954) நாவல் ஈழத்தின் முதல் நாவல் என்று ஆய்வாளர் சிலரால் கணிக்கப்பட்டது. எனினும் அந்நாவலின் யதார்த்தப்பாங்கு எத்தகையது என்பது பற்றிக் கேள்வி எழுப்பப்படவில்லை.

ஆயினும். இன்று பின்னோக்கிப் பார்க்கின்ற போது குறிப்பாக யதார்த்தப் பாங்குடைய ஈழத்து நாவல் என்ற விதத்தில் "நீதியே நீ கேள்" நாவலைவிட (கனகசெந்திநாதன் எழுதிய) "விதியின் கை" கவனிக்கப்பட

வேண்டியதொன்றாகின்றது. இந்நாவலின் யதார்த்தப்பாங்கு முற்போக்கான பாத்திரவார்ப்புகள் மண்வாசனை என்பனபற்றி இளங்கீரனே பாராட்டியுள்ளார்! இதன்பின் வெளிவந்த நாவல்களுள் (இளங்கீரன் 1955 இல் எழுதிய) "தென்றலும் புயலும்" கவனத்திற்குரிய படைப்பாகின்றது. ஈழத்தின் முக்கியமான பிரச்சினைகளுளொன்றான சாதிப்பிரச்சினை பற்றிப் பேசுகின்ற முதல் ஈழத்து நாவலாக அது விளங்குகின்றது. மார்க்சிய நோக்குடைய முதல் நாவலாகவும் காணப்படுகின்றது.

"நீதியே நீ கேள்" நாவலின் விரிவாகவே "தென்றலும் புயலும்" முகிழ்த்துள்ளது என்பதில் தவறில்லை. ஆயினும் மிகுதியான பிரச்சாரமும் பேச்சுவழக்கு முரண்பாடுகளும் இந்நாவலில் இடம்பெற்றுள்ளன. இவற்றின் தர்க்க ரீதியான விளைவு என்னும் படியாக யதார்த்தப்பாங்கு குன்றியுள்ளது.


மேற்கூறிய இரு நாவல்களும் மார்க்சிய நோக்கில் அத்தத்துவத்திற்கேற்ப திட்டமிட்டு உருவாக்கப்பட்ட நாவல்களாகப் பரிணமித்தமை காரணமாக கலாபூர்வமான படைப்புகளாக அமையாமையும் கவனிக்கத்தக்கது. இவ்வடிப்படையில் இவ்விரு நாவல்களையும் விடக் கவனத்திற்குரியதொரு நாவலாக (1965 இல் வெளிவந்த செ.கணேசலிங்கனின்) "நீண்ட பயணம்" அமைகின்றது.

"நீண்ட பயணம்" வருவதற்குமுன் (1960) எழுதப்பட்டு (1964) வெளிவந்த போதியளவு கவனத்திற்குட்படாத (மு.தளையசிங்கத்தின்) "ஒரு தனிவீடு" என்ற நாவலின் வரவும் இக்காலகட்டத்தில் முக்கியம் பெறுகின்றது. புங்குடுதீவு கிராமத்தைக் களமாகக் கொண்டுள்ள இந்நாவலின் முதற்பாகம் அவ்வாறான வாழ்க்கையில் ஏற்படுகின்ற பொருளாதார ரீதியான மாற்றங்களையும் கொழும்பு கடை வியாபாரம் காரணமாக உயர்ந்து விட்ட ஒரு குடும்பத்தைச் சேர்ந்த சேதாவிற்கும் அவ்வாறான நிலையை அடைய முடியாது கடகம் இழைத்தல் முதலான வேலைகளைச் செய்து வருகின்ற சிங்கராசன் என்ற இளைஞனுக்குமிடையில் உருவான காதலின் தோல்வியையும் கலாபூர்வமாக சித்திரிக்கின்றது. பேச்சு மொழியும் பாத்திர வார்ப்புகளும் தத்ரூபமாக விளங்குகின்றன. இரண்டாம் பாகம் சமகால அரசியல் நிகழ்வுகளுக்கு 1958 இனக்கலவரம் முதன்மை கொடுக்கின்றது. கொழும்பில் கடை வைத்திருந்த சேதாவின் கணவன் இனக்கலவர சூழலில் கொல்லப்படுவதும் சேதா ஊருக்கு வருவதும் சிங்கராசன் அவளுக்கு மறுவாழ்வு கொடுப்பதும் ஒருபுறமாக அன்று உருவான அரசியல் சூழலில் தமிழரைப் பொறுத்தவரையில் எதிர்கால வாழ்வு தனிநாட்டுக் கோரிக்கையில் சென்று முடியுமென்பதைத் தூரப்பார்வையோடு வெளிப்படுத்துவதாக நாவல் முடிவுறுகின்றது. (ஒரு தனிவீடு என்பது ஒரு தனி நாடு என்பதன் குறியீடு) இந்நாவல் அச்சுருவில் வெளிவரத்தாமதமானமையாலோ இடதுசாரி அணியினரின் தேசியம் பற்றிய புரிதலை விமர்சிப்பதனாலோ என்னவோ ஆரம்ப கால ஈழத்து விமர்சகர்கள் இந்நாவல் பற்றி எதுவும் பேசினரல்லர். அது எவ்வாறாயினும் ஈழத்தின் சமகால அரசியல் பற்றிப் பேசும் முதல்நாவல் இதுவென்பதில் தவறில்லை.

"தென்றலும் புயலும்" நாவலை விட மார்க்சிய நோக்குடைய சாதிப்பிரச்சினையைக் கூர்மைப் படுத்துகின்ற (செ.கணேசலிங்கனின்) "நீண்ட பயணம்" ஒப்பீட்டு ரீதியில் யதார்த்தப்பாங்கு பேச்சுமொழி பாத்திரவார்ப்பு முதலான அம்சங்களில் சிறந்து விளங்குகின்றது. சடங்கு (1967) யாழ்ப்பாண நிலவுடைமைச் சமூகம் அனுட்டிக்கின்ற (திருமணம், இறப்புச்) சடங்குகளின் போலித்தன்மைகளை நுணுக்கமாகவும் ஓரளவு கலாபூர்வமாகவும் வெளிப்படுத்துகின்றது. தரையை மறந்து தாரகைகளைப் பிடித்து மாலையாக்க விரும்பும் மத்தியதர வர்க்கத்தினரின் உணர்ச்சியையும் வாழ்வையும் யதார்த்தமாகக் காட்டக் கூடியதாக வெளிப்படுத்துகின்றது தரையும் தாரகையும் (1968). ஓரளவு செயற்கைத் தன்மை இழையோடினும் ஈழத்து சமகால அரசியலை (எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா காலம்) பெருமளவு முதன்மைப்படுத்துகின்ற முதல் நாவலாகச் செவ்வானம் (1967) விளங்குகின்றது.

ஆக 1950 தொடக்கம் 1970 வரையான காலகட்டத்திலேதான் யதார்த்த பூர்வமான ஈழத்து சமூக அரசியல் பிரச்சினைகளை ஆழமாக நோக்குகின்ற தத்துவார்த்தப் பார்வை கொண்ட நாவல்கள் ஈழத்தில் வெளிவருகின்றன. இவ்விதத்தில் கனக செந்திநாதன், மு.தளையசிங்கம், இளங்கீரன், செ.கணேசலிங்கன் ஆகியோர் முதன்மை பெறுகின்றனர். 'ஈழத்து' நாவல் முன்னோடிகளாகின்றனர் எனலாம். □□□

ஜீவநதியின் வளர்ச்சிக்காக பண உதவி செய்த 'ஆழியாள்'(அவுஸ்திரேலியா) அவர்களுக்கு ஜீவநதி தனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறது.



# மறுபக்கம்

**- தெணியான்**

அவன் அதிர்ந்து போனான். இப்படி ஆகுமென்று அவன் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

அவளை அழைத்துச் சென்று திரும்பி வந்தவன் படுக்கை அறைக்குள் மெல்ல நுழைந்து தொப்பென்று கட்டிலின் மேல் வீழ்ந்தான். அவன் அணிந்திருக்கும் ஆடைகளை மாற்றுவதற்கு முடியவில்லை. சப்பாத்துக்களைக் கழற்றிக் கீழே போடுவதற்கு இயலவில்லை.

அகன்று பரந்து வெகுசொகுசான கட்டில் அது. அதில் படுத்துறங்குவதென்றால் அது ஒருதனிச் சுகம். அதன் ஒரு ஓரமாகத்தான் இப்ப அவன் ஒதுங்கிக்கிடக்கின்றான். அவன் கிடக்கின்ற கோலத்தைப் பார்க்கவேணும்! கால்களை மடித்து முழந்தாளை உயர்த்தி வைத்திருக்கின்றான். கைகள் இரண்டும் தொடைகளுக்கு இடையே நீண்டு கிடக்கின்றன. தலைதாழ்ந்து தாடை முழந்தாள்களைத் தொடுகிறது. அவன் புழுவாகச் சுருண்டு போனான்.

மாலை இருள் இன்னும் நன்றாக வெளியில் பரவாதநேரம். ஆனால் அந்தப்படுக்கை அறைக்குள் திருடனைப்போல இருள் மெல்லப் புகுந்து தடித்துக் கிடக்கிறது. அவன் அந்த இருள் போர்வையால் இறுகப் போர்த்திக் கொண்டு முடங்கிப்போனான்.

தலைக்குத் தலையணை வைத்துக் கொள்ளவோ அறைக்கு 'லயிற்'ரைப் போட்டுக் கொள்ளவோ, அவனுக்கு மனமில்லை.

படுக்கை அறைக்குள் நுழைந்தவன் எப்படி இருக்கின்றான்? எனப்போய்ப்பார்க்க அவளுக்கு மனம் கூசுகிறது. நினைக்கவே அருவெறுக்கிறது.

என்ன திமிர்! ஆமான ஆம்பிளை ஆனதால் தனக்கு எல்லாம் இயலும் என்ற இறுமாப்புடன் அலட்சியமாகத் தலை நிமிர்ந்து திமிர்த்துத் திரிந்தவன்.

அவனை நினைக்க அவளுக்குச் சிரிப்பு மூளுகிறது. ஏளனச்சிரிப்பு வாய்விட்டு எள்ளிச சிரிக்கின்றாள்.

அவன் அங்கிருந்து எழுந்து போனான். அதன்பின் அவள் அந்த நடுக் கூடத்துக் கதிரை ஒன்றில் வீற்றிருக்கின்றாள்.

அந்தக் கூடத்து வெளிக்கதவில் எத்தனை மாலைவேளைகளில் அவன் வருகையை எதிர்பார்த்து அவள் காத்திருந்தாள். அவன் மோட்டார் சயிக்கிள் வெகுதூரத்தில் வந்து கொண்டிருக்கும். அதன் மெல்லிய ஓசையை அவள் செவிகள் துல்லியமாக அப்ப அறிந்து கொள்ளும். அவள் மனசு ரீங்கரித்து தேன்சிட்டாகச் சிறகடித்து வானத்தில் பறக்க ஆரம்பிக்கும்.

அவன் வீடு வந்து சேரும் தருணம் அவள் வாசலில் நின்று தரிசனம் கொடுக்க வேண்டும். தவறிப்போனால் அவன் முகம் விழுந்து போகும். அன்று அவனைச் சமாதானப் படுத்துவது அவளுக்குப் பெரும் பாடாக இருக்கும். அவன் கோபத்துக்கு ஆளாகாமல் கையில் என்ன வேலையுடன் இருந்தாலும் அதை அப்படியே போட்டுவிட்டு வாசலில் வந்து சிரித்துநிற்பாள்.

அவன் வலது கரத்தில் அலுவலகத்தோற் பையைத் தூக்கிய வண்ணம் நடந்து வருகின்றான். உள்ளே வந்ததும் தோற்பை இடது கரத்துக்கு மாறுகிறது. வலது கரம் அவள் இடுப்பை வளைத்துப் பிடிக்கிறது. படுக்கை அறைநோக்கி அவளை அணைத்த வண்ணம் நடக்கின்றான் கட்டிலில் நெருக்கமாக அவளுடன் அமருகின்றான்.

'விடுங்கோ விடுங்கோ..' அவள் மெல்லச் சிணுங்குகின்றாள்

அவன் பிடி மேலும் இறுகுகிறது

அவன் இசையோடு பாட ஆரம்பிக்கின்றான்

'இஞ்சி இடுப்பழகி
மஞ்சள் சிவப்பழகி
கள்ளச்சிரிப்பழகி
மறக்க மனம் கூடுதில்லையே

அவள் மீது இசையுடன் இலயிக்கின்றான். பாடலை நிறுத்தி இடையில் ஒரு வினா'

இஞ்சி இடுப்பென்றால் என்ன?

தெரியாது அவள் சிணுங்குகிறாள்

"சொல்லு... சொல்லு... என்ரை பேபியெல்லே!

"இஞ்சிக்கிழங்குபோல இடுப்பு' வேண்டு மென்றே சொல்லிக் கொண்டு! களுக்" கென்று சிரிக்கின்றாள்.

"மொக்கு.. மொக்கு..." செல்லமாக தலையில் மெல்ல குட்டுகின்றான்.

"ஐயோ...! நோகுது... நோகுது..." பொய்யாகத் துடிக்கின்றாள்.

"கள்ளி... உன்ரை இடுப்பு இஞ்சிக் கிழங்கு போலவா இருக்கு. ஒரு இஞ்சி அளவு சின்ன இடுப்பு அது இந்த இடுப்பு சொல்லிக் கொண்டு அவள் இடுப்பை இன்னும் நெருக்கமாக இழுத்து அணைக்கின்றான்.

"வலிக்குது... வலிக்குது... விடுங்கோ..." அவள் கன்னம் சிவந்து தலைகுனிந்து அவன் மடியில் முகம் புதைக்கின்றாள்.

சிலசமயங்களில் அவளை அலாக்காகத் தூக்கி கரங்களில் ஏந்திய வண்ணம் படுக்கை அறைக்குள் வருவான்.

"இந்தாபோடுறன்... இந்தா போடுறன்..." பாவனை பண்ணிப் பண்ணி வீசுவான். பின்னர் மென்மையான அந்தக் கட்டிலின் மேல் நோகாமல் அவளைப் போட்டுவிட்டு தான் ஒரு பராக்கிரம சிங்கமென நிமிர்ந்து சிரிப்பான்.

அவள் ஒரு மலர்மாலைபோல கட்டிலில் துவண்டு கிடப்பாள். "வாழ்க்கை உங்களுக்கொரு விளையாட்டு" என செல்லமா சினப்பாள். "விளையாட்டுப்போல வாழ்க்கையை அனுபவிக்க வேணும்" என்பான் தொடர்ந்து "பெண்ணின் அமைதியும் அடக்கமும் ஆணுக்கு இனிமையான ஆனந்தம்" என அவளை நெருங்குவான்.

ஒரு தினம் கந்தோரில் இருந்து வீடு வந்து சேர்ந்த அவனிடம் வழமையான குதூகலம் இல்லை அவள் அதை அவதானிக்கின்றாள். சற்றுநேரம் தாமதித்து அவள் முகம் பார்த்துச் சொல்லுகிறான் "மூன்று வருஷமாகுது. என்ன ஒண்டையும் காணவில்லை என்று கேலி பண்ணிச் சிரிக்கிறார்கள்.

"நீங்கள் என்ன சொன்னனீங்கள்?"

"எனக்குப் பிறகு கட்டினவன் மகன்ரை பேத்டேயும் கொண்டாடிப்போட்டான்"

"நீங்கள் என்ன சொன்னனீங்கள்?"

அவன் தனது வலது கரத்தைத் தூக்கி விரல்களை மூடிப் பொத்தி கையைமடித்து பொங்கும் தசையை அவளுக்குக் காட்டுகின்றான்.

அவளுக்குச் சுள்ளென்று நெஞ்சில் வலிக்கிறது. மணமாகி ஒருவருட காலத்துக்குள் வயிற்றில் கர்ப்பம் தரிக்கவேண்டும் என எங்கோ வாசித்தது அவள் நினைவுக்கு வருகிறது.

"அப்ப.. இவர் என்ன நினைக்கிறார்? தனக்கு இயலும்... எனக்குத்தான்... அவள் தன்னை அறியாமல் மென்மையான தன்வயிற்றை ஒருதடவை மெல்லத் தடவி விட்டுக் கொண்டு உள்ளே புழுங்கிக் கண் கலங்குகின்றாள்.

"எனக்குக் குழந்தை வேணும்" அவன் சொல்ல ஆரம்பிக்கின்றான். அழகழகான சின்னச் சின்னப் பூங்குழந்தைகளின் வண்ணவண்ணப் படங்களைத் தேடிக்கொண்டு வந்து படுக்கை அறை எங்கும் அவள் கண்ணில்பட தொங்க விடுகின்றான். இந்த மார்பில் படரும் மெல்லிய பூங்கொடி நீ சொல்லிச் சொல்லி மனம் பூரித்து மாய்ந்து போகின்றவன். இப்ப அவள் உடல் பருக்க வேண்டுமெனச் சொல்ல ஆரம்பித்து விட்டான்.

ஏதேதோ வகைவகையா ஊட்டச் சத்துள்ள ரொனிக்குகள் வாங்கிவந்து அவளுக்குத் தருகின்றான்.

"பேபி... பேபி.." என வாஞ்சையுடன் அவளை வளையவந்தவன் அப்படி நெஞ்சுக்குநெருக்கமாக அழைப்பதைக் கொஞ்சங் கொஞ்சமாகத் தவிர்த்து இப்ப முற்றாகக் கைவிட்டுவிடுகிறான்.

அவள் பாவம் என்ன செய்வாள்? கடவுளைத்தான் நம்புகின்றாள். கடவுளைத் தவிர வேறுயாரிடத்தில் இறுதியில் போய்ச் சரணடைய முடியும்? தினமும் மாலைவேளைகளில் விடுமுறை நாட்களில் எல்லாம் அவனை அழைத்துக் கொண்டு ஆலயங்களுக்குப் போய் வருகின்றாள். நோன்புகள் நோற்கின்றாள். நேர்த்திகள் வைக்கின்றாள்.

ஆனால் அவள் எதிர்பார்த்தது நடக்க வில்லை. கடவுளும் அவளுக்குக் கண்திறப்பதாக வில்லை. அவள் தன் வேலைகளை முடித்துக் கொண்டு வருவதற்குமுன் அவன் படுத்து உறங்கிப் போய்விடுவான்.

அன்று ஆழ்ந்த உறக்கத்தில் கிடப்பது போல நிட்டிநிமிர்ந்து கட்டிலில் கிடக்கின்றான். பின்னர் கண்விழித்து ஒட்டாமல் மெல்லப் பேசுகின்றான்.

"உனக்காகத்தான் காத்திருக்கிறேன்"

"எனக்காக..."

"ஓம் உனக்காகத்தான் இவ்வளவும் காத்திருக்கிறேன்"

அவன் குரலில் பிரத்தியேகமான ஒரு தனி

அழுத்தம் தொனிப்பதை அவள் உணருகின்றாள்.

"சொல்லுங்கோ..."

"வாழ்வு வீணாகப் போய்க் கொண்டிருக்குது"

"என்ன சொல்லுகிறியள்...?"

"ஓ... ஓ... நீ... சின்னக்குழந்தை... உனக்கொண்டும் விளங்காது"

"மனதில் இருக்கிறது... எனக்கெப்பிடித் தெரியும்"

"ஏன் தெரியாது?"

"சொல்லுங்கோ!"

"திருமணம் முடிஞ்சு ஆறு வருஷம்"

"ஓமோம்"

"எனக்கொரு குழந்தை வேணும்"

"வேணுந்தான்"

"சொன்னால் போதுமா? பெத்துத்தாவன்"

...............................................................

"ஏன் பேசாமல் கிடக்கிறாய் உனக்கது ஏலாது"

"நான் ஒண்டு சொல்லுவன் கோபிக்காமல் கேட்பியளோ!"

"சொல்லு!"

"ஒரு குழந்தையை வாங்கி வளர்ப்பம்"

"ஆரிட்டை குழந்தை வாங்கப்போகிறாய்?" நக்கலாகக் கேட்கின்றான்

"உங்களின்ரை சகோதரங்களின்ரை.... அல்லது என்ரை சகோதரங்களின்ரை..."

"அது சரிவராது அதுகள் வளர்ந்த பிறகு தங்களின்ரை தேப்பன் தாயைத் தேடிக்கொண்டு போய் விடுங்கள்."

"அப்ப... ஒரு அநாதைக் குழந்தையைத் தத்தெடுத்து..."

"சீ! ஆற்ரையின் இரத்தத்திலை பிறந்ததை என்ரை பிள்ளையெண்டு வைச்சுக் கொஞ்சச் சொல்லுகிறாய்?"

"கோவியாதையுங்கோ...! அப்ப ஒண்டு செய்வம்!"

"என்ன?"

"ஒரு டொக்ரரிட்டை போவம்"

"என்ன பேய்க்கதை கதைக்கிறாய்! உன்னைப்போல நோஞ்சானில்லை நான் கைப்புண்ணுக்கு கண்ணாடியே வேணும்?"

"அப்ப...?"

"அப்ப என்ன... அப்ப நீதான் மலடி"


அவன் இப்படி வாய்திறந்து சொல்லுவான் என்று அவள் எதிர்பாக்கவில்லை. அவன் வார்த்தைகள் கேட்டு அவள் இதயம் வெடித்துச் சிதறுகிறது. வாய் அடைத்து வார்த்தைகள் வெளிவராது தடைப்பட்டுப்போகிறது.

விழிகள் ஆறாகப் பெருகுகின்றன.

அவள் குமுறிக்குமுறி வெந்து கொண்டு கிடக்கின்றாள். அவன் மறுபுறம் திரும்பிப்படுத்து அப்படியே உறங்கிப்போய் விடுகின்றான்.

காலையில் "கேற்றை" திறந்து அவனை வழியனுப்பி வைப்பதற்காக அவள் வெளியே வருகின்றாள். "சீ ! முதேவிமாதிரி முன்னுக்கு வந்து நிற்கிறாய்!" அவன் சீறிவிழுகின்றான்.

அவளுக்குப் பொங்கிக் கொண்டு வருகிறது. உதட்டைக் கடித்து உள்ளே அடக்கிக் கொண்டு இதயக்குமுறலுடன் தலை குனிந்து உள்ளே ஓடிப்போகின்றாள்.



வருவதில்லை. மாலையில் அவன் வருகைக்காகக் காத்திருப்பதுமில்லை. சமைத்துப் போடுவது. தின்றதுபாதி தின்னாதது பாதியாகப்பட்டினி கிடப்பது. தனிமையில் கண்ணீர் வடிப்பது சும்மா படுத்துக்கிடப்பதாக அவள் வாழ்வு இருள் சூழ்ந்துகிடக்கிறது.

அவள் ஒருத்தி அந்த வீட்டில் வாழ்ந்து கொண்டிருக்கின்றாள் என்னும் எண்ணம் அவனுக்கு இல்லாது போயிற்று அவனது ஒவ்வொரு அசைவும் அவள் நெஞ்சைக் குத்திக்குதறிக்குடைகிறது. அவன் நடத்தைகளால் மலர்போலும் மென்மையான அவள் இதயம் கொஞ்சம் கொஞ்சமாகக் கருகி அவளை அறியாமல் இறுகிக் கொண்டு வர ஆரம்பிக்கிறது.

அவள் இப்ப முன்னர்போல அழுவதில்லை. கண்ணீர் வடிப்பதில்லை. அவனுக்காக ஏங்குவதுமில்லை. வீட்டுக்காரியங்கள் செய்யும்

இயந்திரமாக நடமாடிக் கொண்டிருக்கின்றாள். வழமைபோல மதிய வேளைக்கு வேண்டிய உணவுகளைச் சமைத்து முடித்து அதன் பின்னர் குளித்து தாமதமாக உணவு உண்ட பின்னர் படுக்கை அறைக்குள் புகுந்து கட்டிலில் மெல்லச் சரிந்துபடுத்துக் கொள்ளுகின்றாள். முன்னர்போல உள்ளத்தை வருத்தி அலட்டிக் கொள்ளாது அப்படியே உறங்கிப்போய்விடுகின்றாள்.

அந்த உறக்கத்தில் தனது கன்னத்தில் யாரோ முத்தமிடுவது உணர்ந்து திடுக்கிட்டுத் துடிதுடித்து எழுகின்றாள்.

அவள் அருகே முகம்மலர்ந்து சிரித்த வண்ணம் அவன் குனிந்து நிற்கின்றான்.

தான் காண்பது கனவா? அல்லது என்ற நினைப்புடன் அவனைப்பார்த்து மலங்கமலங்க முழிக்கின்றாள்.

"பேபி..." எனக் குழைந்த வண்ணம் கட்டிலில் அவள் அருகே அமர்ந்து அவள் இடுப்பை மெல்ல வளைத்துப்பிடித்து அணைக்கின்றான். "பேபிக்குக் கோபமா...? எல்லாம் விளையாட்டாகத்தான் பேபி. நீ உண்மையென்று நினைத்துவிட்டாய்.. இல்லையா? இருகரங்களிலும் அவள் முகத்தை ஏந்தி தனது பக்கம் திருப்பி அவள் கண்களுக்குள் பார்த்து சிரிக்கின்றான்.

அவளுக்குத் திகைப்பாக இருக்கிறது. மனம் மலர்ந்து சிரிப்பதற்கு முடியவில்லை. அவன் இன்னும் நெருக்கமாக அணைக்கின்றான்.

"சிரிபேபி...! என்ரை பேபியல்லே சிரியுங்கோ!"

"அவள் கண்கள் உடைப்பெடுத்துப் பெருகிவழிகின்றன"

"பேபி அழக்கூடாது பேபி அழக்கூடாது... அவள் கண்ணீரை மெல்லத்துடைத்து விட்டுக் கொண்டு தனது மடிமீது அவளைச் சாய்த்துப் படுக்கவைத்து அவள் தலையை மெல்ல மெல்லத் தடவிக் கொடுக்கின்றான்.

"பசிக்குது பேபி சாப்பாடு தாருங்கோ...!" அவளை மடிமீதிருந்து தூக்குகின்றான் அவளுக்கு நம்ப முடியவில்லை. மீண்டும் தன் வாழ்வில் இப்படி வசந்தம் வந்து வீசுமென்று.

எப்படி இருந்தவன்! எப்படி மாறிப்போனான்! தொலைந்து போனவன் மீண்டும் கண்டடையப் பட்டு விட்டான் போல அவளுக்குத் தோன்றுகின்றது.

மீண்டும் வாழ்வு தித்திக்கிறது. ஆனால் அந்தத் தித்திப்பிலும் இனம் புரியாத ஏதோ ஒரு கசப்பை அவள் உணருகின்றாள். அது கசப்பா? தித்திப்பினால் வந்த தெவிட்டலா? அவளுக்கு விளங்கிக் கொள்ள இயலவில்லை.

அவளால் முன்னர்போல் முழுமனதுடன் வாழ்க்கையை அனுபவிக்க முடியவில்லை.

படுக்கை அறைக் கட்டிலின் மீது குளிர்தரு நீல ஒளி மெல்லப்பரந்து கிடக்கிறது. அவள் வருகைக்காக அவன் காத்துக் கிடக்கின்றான்.

அவள் மெதுவாக வந்து கட்டில் மீது மெல்லச்சரிகின்றாள். அவன் அவக்கென்று இழுத்து அணைத்த வண்ணம் மெல்லிய குரலில் இனிமையாகப் பாடுகின்றான்.

"தித்திக்கும் முதல் இரவில் நாணிக்கோணி தேர்போல அசைந்து வந்து புதுப்பெண்போடும் முத்துத்துக் கொப்பா மூவுலகில் வேறெது மில்லையென்பர்"

"விடுங்கோ... உங்களுக்கு இப்பவும் பாட்டும் கூத்தும் முதல் இரவும்?"

"என்ரை பேபியோடை வாழ்வது எனக்கு என்றும் முதல் இரவுதான்" அவளை இழுத்து நெருக்கமாக அணைக்கின்றான்.

காலம் நீண்டு கொண்டு போவது அவளுக்குத் தெரியவில்லை. அவன் அணைப்பின் சுகத்தில் அவள் கிறங்கிக்கிடக்கின்றாள்.

"பேபி நான் ஒண்டு கேட்பன் கோபிக்கக்கூடாது"

"சொல்லுங்கோ!"

"கோபிக்கமாட்டன் எண்டு சொல்லுங்கோ!"

"கோபிக்கமாட்டன் சரிதானே!"

"சரி... சரி... கோபிக்கமாட்டன்... சம்மதிப்பன் எண்டு சொல்லுங்கோ!"

"எதுக்கு..."

"முதல் சம்மதம் எண்டு சொல்லுங்கோ!"

"நீங்கள் கேட்டு நான் எதுக்கு மறுத்திருக்கிறேன்?"

"என்ரை பேபி ஒருநாளும் மறுக்காது எனக்கது தெரியும் சரிசொல்லுறன்... எங்களுக்கொரு குழந்தை வேணும்"

"............................................

"பேபி கோபிக்கக் கூடாது"

"............................................"

"என்ரை பேபி பேசாமல் இருக்குது"

"நான் என்ன சொல்லுறது"

"நான் ..........."

"சொல்லுங்கோவன்!"

"இல்லை பேபி..."

"என்ன தடுமாறுகிறியள்! சொல்லுங்கோ!"

"வாய்ப்பாடுபோல உதைத்தானே நெடுகச்சொல்லிக் கொண்டிருக்கிறியள்"

அது தான் பேபி... நான் இன்னொரு கலியாணம் செய்தால் என்ன எண்டு யோசிக்கிறேன்! எனக்கொரு குழந்தை... வாரிசு வேணும். பேபி சம்மதிக்க வேணும் பேபிக்கு துணையாச்சு நாங்கள் எல்லாரும் சேர்ந்து ஒற்றுமையா ஒண்டாக வாழலாம்"

அவள் உள்ளம் உடைந்து திரும்பவும் பாதாளத்தில் போய் சிதறி விழுகின்றாள். தித்திப்பில் இருந்த இந்தக் கசப்பு இதுதான் என்பது அவளுக்குத் துலக்கமாகிறது

அவள் எச்சரிக்கையாக விழித்துக் கொண்டு விடுகிறாள்.

அவன் எதிர்பார்த்ததுபோல அவள் சினந்து கொதித்துக் கொண்டு பொங்கி எழவில்லை. அவனுக்கு எதிர்ப்புக் காட்டவில்லை. அவன் அணைப்பில் இருந்து விடுவித்துக் கொள்ளவு மில்லை.

"சரி ஆரைக்கட்டப் போகிறியள்" சமாதானமாக மெல்லக்கேட்கின்றாள்.

"பேபிக்குச் சம்மதமா? முதல் அதைச் சொல்லுங்கோ!

"ஆரைக் கட்டயோசிச்சிருக்கிறியள்? அதை முதல் நீங்கள் சொல்லுங்கோ!"

"நாங்கள் ஒண்டாகக் கூடி ஒற்றுமையாக வாழுகிறதுக்குப் பிரச்சினை இல்லாத ஆள்"

"ஆர் அந்த ஆள்? சொல்லுங்கோவன்!"

"பேபிக்கு அவவை நல்லாத் தெரியும்"

"தெரியுமா?"

"பிரேமா... தெரியுந்தானே! என்னோடை கந்தோரிலே ஒண்டாக வேலை செய்கிறவ"

"பிரேமாவதி"

"ஓமோம் பிரேமாவதி"

"சரி நான் கேட்கிறதுக்கும் நீங்கள் சம்மதிக்க வேணும்."

"சொல்லு பேபி... நான் மறுக்கமாட்டேன்"

"எதுக்கும் ஒரு டொக்ரரிடம் போய் சோதிச்சுப்பாப்பம்"

"ஒக்கே இது தானே!" உற்சாகமாக மீண்டும் அவளை அணைக்கின்றான்.

அவர்கள் டொக்ரரிடம் சென்று பரிசோதனை முடிவை அறிந்து கொண்டு இன்றுதான் இருவரும் வீடு வந்து சேர்ந்தார்கள்.

அவன் தளர்ந்து வாடிச் சோர்ந்து அடி எடுத்து நடக்க இயலாது மெல்ல வந்து கூடத்துக் கதிரையொன்றில் உட்காருகின்றான்.

அவனைத்தொடர்ந்து பின்னால் வந்து கொண்டிருந்த அவள் அவன் எதிரில் வந்து நிமிர்த்து நிற்கின்றாள்.

மூளாத்தீயாக உள்ளே கனன்று கொண்டிருக்கும் அவள் உள்ளம் கொழுந்து விட்டுச் சுவாலித்துப்பற்றி எரிகிறது. பொங்கிவரும் சினத்தை உள்ளே அடக்கிக் கொண்டு அவனை நோக்கி நிதானமாக கேட்கின்றாள்.

"டொக்ரர் சொல்லிப்போட்டார். எனக்குக் கருத்தரிக்க இயலும். உங்களுக்குத்தான் தகப்பனாக முடியாதென்று. இப்ப நான் கேட்கிறதுக்கு பதில் சொல்லுங்கோ!"

அவள் முகத்தை நிமிர்ந்து பார்க்க இயலாது உள்ளமும் உடலும் ஒடுங்கி அவன் தலை குனிந்திருக்கின்றான்.

"என்ன பேசாமல் இருக்கிறியள்! எனக்கொரு குழந்தை வேணும். இந்த வயிற்றில் சுமந்து நான் பெறவேணும். உங்களுக்கு அது இயலாது. நான் இன்னொருவரைத் திருமணம் செய்து கொள்ளப்போகிறேன். உங்களைக்கைவிடும் எண்ணம் எனக்கில்லை நீங்களும் எங்களோடை சேர்ந்து ஒண்டாக வாழலாம். என்ன சொல்லுகிறியள்?


அவன் அதிர்ந்து போகின்றான். இப்படி அவள் கேட்பாள் என்று அவன் அணுவும் எதிர்பாக்க வில்லை. இதுவரை கேட்கப்படாத ஒரு கேள்வி. இப்ப அவள் கேட்டிருக்கின்றாள்.

அவன் குனிந்த தலைநிமிராமல் மெல்ல எழுந்து படுக்கை அறை நோக்கிச் சென்றவன்... இப்ப நன்றாக இருட்டிக் கொண்டு வந்துவிட்டது.

அவள் எழுந்து கூடத்து லயிற்றை ஒளிரச் செய்கின்றாள்.

படுக்கை அறையை நோக்குகின்றாள் படுக்கை அறைக்குள் இருள் கனத்துக்கிடக்கிறது.

அந்த அறைக்குள் சென்று இனி ஒளிரவைக்கப் போவதில்லை என அவள் தீர்மானித்துக் கொள்ளுகின்றாள்.☐☐☐



# தமிழ் இலக்கண நூல்கள்

- அன்புமணி

உலக மொழிகளில் தமிழ் மொழி உயர்தனிச் செம்மொழி என்பதை மேல் நாட்டவரே ஏற்றுக் கொண்டுள்ளனர். அதற்குக் காரணம் என்ன? அந்த மொழியிலே உள்ள இலக்கணநூல்கள் தான். இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் என்ற கோட்பாட்டுக்கமைய ஒரு மொழியில் இலக்கண நூல்கள் தோன்றுதானால் அதற்குப் பலநூறு வருடங்களுக்கு முன்னே அம்மொழியில் இலக்கியங்கள் தோன்றியிருக்க வேண்டும். அவ்வாறு இலக்கியங்கள் தோன்றுவதற்குப் பலநூறு வருடங்களுக்கு முன்பே அந்த மொழிக்கு எழுத்து வடிவம் தோன்றியிருக்க வேண்டும். அவ்வாறு எழுத்துவடிவம் தோன்றுவதானால் அதற்குப் பல நூறுவருடங்களுக்குமுன்பே அம் மொழி பேச்சுவழக்கில் இருந்திருக்க வேண்டும்.

இப்படிப்பார்க்கும் போது பல ஆயிரம் வருடங்களுக்கு முன்பே தமிழ்மொழி தோன்றியிருக்கவேண்டும் என்பதும் கல்தோன்றி மண்தோன்றாக்காலத்தே முன்தோன்றி மூத்தகுடி தமிழர் என்பதும் புலனாகின்றது.

தமிழ் மொழியைப் போன்று பல மொழிகள் வழக்கிலிருந்து மறைந்து விட்டன. பலமொழிகளுக்கு எழுத்து வரிவடிவம் இல்லை. பல மொழிகள் பேச்சு வழக்கில் கிளைகளாகப்பிரிந்து கிளைமொழிகள் (DIALECT) ஆகிவிட்டன. அவ்வாறு ஆகாமல் அன்று போலவே தமிழ் இன்றும் தனித்துவத்துடன் தலைநிமிர்ந்து நிற்கிற தென்றால் அதற்குக் காரணம் தமிழ்மொழியில் உள்ள இலக்கண நூல்களே அது பற்றிப் பார்ப்போம் தமிழ் இலக்கண நூல்களில் தற்போது நமக்குக் கிடைக்கும் தொல்காப்பியம் கி.மு. 3000ல் தோன்றிய தென்பர். ஆனால் அதற்கும் முன்பே பல தமிழ் இலக்கண நூல்கள் இருந்திருக்கின்றன.

## தொல்காப்பியர் இடைச்சங்க காலத்தவர்

அவருக்குப்பல வருடங்களுக்கு முன் முதற்சங்க காலத்தில் வாழ்ந்த அகத்தியர் "அகத்தியம்" என்னும் இலக்கணநூலை ஆக்கியுள்ளார். இந்நூலில் இயல் இசை நாடகத்தமிழ் பற்றிய இலக்கணம் அடங்கியுள்ள தென்பர்.

இந்த அகத்தியருக்குப்பின் வாழ்ந்த தொல்காப்பியர் அதங்கோட்டாசிரியர், காக்கைன பாடினியார் முதலானோர் அகத்தியம் என்னும் இலக்கண நூலுக்கு வழி நூலாக தொல்காப்பியம், வாய்ப்பியம், அபிநயம், காக்கைபாடினியம் முதலிய பல நூல்களை இயற்றினர். அகத்தியரின் மாணக்கர் 12 பேரும் ஒன்று சேர்ந்து "பன்னிரு படலம்" என்ற இலக்கண நூலையும் இயற்றியுள்ளனர்.

இவைகளுள் தொல்காப்பியம் என்ற இலக்கண நூலும் இறையனார் அகப்பொருள் என்ற இலக்கண நூலும் இன்று நமக்குக் கிடைத்துள்ளன.

பிற்காலத்தில் சங்க கால இலக்கிய நூல்களுக்கு உரை எழுதியவர்கள் குறிப்புகளிலிருந்து மறைந்துபோன இலக்கண நூல்கள் பற்றியும் இலக்கியநூல்கள் பற்றியும் நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

"மறைந்துபோன நூல்கள்" என்ற தலைப்பில் வெளிவந்துள்ள நூலிலிருந்து கடற்கோள்களினாலும் வேறு காரணங்களினாலும் நமக்குக் கிடைக்காமற்போய் விட்ட எண்ணற்ற நூல்களின் விபரங்கள் கிடைக்கின்றன. இவையெல்லாம் தமிழ் மொழியின் தொன்மையைப் பறைசாற்றுகின்றன

## தழிழும் பிறமொழிகளும்

கீழைத்தேசத்திற்கு வருகை தந்த கிறிஸ்தவப் பாதிரிமார். தமது கடமைகளை நிறைவேற்றுவதற்கு தமிழ்கற்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

தமிழ் என்பது ஒரு கிளைமொழி (DIALECT) என அவர்கள் நினைத்திருந்தார்கள். ஆனால் தமிழ்மொழியை கற்க ஆரம்பித்ததும் அதன் வளமும் சிறப்பும் ஆங்கில மொழியை விடப் பன்மடங்கு உயர்வாக இருப்பதை அவதானித்தார்கள். நவில் தொறும் நூல் நயம்போல் தமிழ் அவர்களைக் கவர்ந்தது. எனவே தமிழைப் பிறமொழிகளுடன் ஒப்பிட்டு ஆய்வு செய்தார்கள். அப்படிச் செய்தவர்களில் கால்ட்வெல்

(CALDVEL) ஒருவர். அவர் தமிழ்மொழிக்குடும்பத்தைச் சேர்ந்த பல மொழிகளையும் ஆய்வு செய்து "தமிழ் மொழி ஒப்பீட்டு இலக்கணம்" என்னும் ஒரு நூலை எழுதினார்.

இந்நூலில் கன்னடம், தெலுங்கு துளு, மலையாளம் முதலிய 12 மொழிகள் தமிழ்குடும்பத்தைச் சேர்ந்தவை எனக் கூறுகிறார். இதை அடிப்படையாகக் கொண்டே "மனோன்மணியம்" நூலாசிரியர் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை தனது நூலின் கடவுள் வாழ்த்தாக வரும் பாடலில்

*"கன்னடமும் களிதெலுங்கும்*
*கவின் மலையாளமும் துளுவும்*
*உன்னுதரத் துதித்தெழுந்தே*
*ஒன்றுபல ஆயிடினும்" எனப்பாடினார்.*

இதே பாடலில் தமிழ் மொழியின் சிறப்பைக் குறிக்கும் வகைகளில்

*"ஆரியம் போல் உலக வழக்*
*கழிந் தொழிந்து சிதையாவுன்*
*சீரிளமைத் திறம் வியந்து*
*செயல் மறந்து வாழ்த்துமே"*

எனப்பாடினர். தமிழ்மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மொழிகள் அல்லது பிறஐரோப்பிய மொழிகளான லத்தீன், பிரஞ்சு, ஆங்கிலம் முதலிய பிறநாட்டு மொழிகளில் இல்லாத தனிச்சிறப்புகள் தமிழ் மொழிக்கு இருப்பதை போப்ஜயர், பெஸ்கி பாதிரியார், மாக்ஸ்முல்லர் முதலியபலர் எடுத்துக்கூறியுள்ளனர். இவை ஒவ்வொன்றும் தனித்தனியாக ஆராயப்படவேண்டும்.

இன்னும் சொல்லப்போனால் இவ்வாறான ஆய்வுகளை தமிழ் அறிஞர்களைவிட ஆங்கில அறிஞர்களே அதிகம் செய்துள்ளனர். அதுமட்டுமல்லாது திருக்குறள், திருவாசகம் போன்ற நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளனர். திருவாசகத்தை மொழி பெயர்த்த போப்ஜயர் அதனை Bonl melting song எனக்குறிப்பிட்டு இருப்பதை உலகம் முழுவதும் அறியும்.

இன்னும் ஆச்சரியம் வெளிநாட்டு சர்வகலாசாலைகள் பலவற்றில் தமிழ் மொழி, தமிழ் இலக்கியம் பாடமாக இருப்பதுதான். அமரர் பேராசிரியர் கைலாசபதி தனது கலைமாணிப்பட்டத்தை எடின்பரோ சர்வகலாசாலையில் பெற்றார். பின்லாந்து என்னும் ஒரு சிறிய தேசம் அங்கேயுள்ள சர்வகலாசாலைப் பேராசிரியர் அல்கோ பார்ப்லோ சிலப்பதிகாரத்தைத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். இவரது உதவியாளர் நமது நாட்டை சேர்ந்த திரு சு.சிவலிங்கம் "உதயணன்" என்ற பெயரில் புகழ் பெற்ற எழுத்தாளர்.

## பிற நாட்டவரால் வளர்ந்த தமிழ்

தமிழரல்லாத பலர் தமிழ் மொழிக்குத் தொண்டாற்றியிருப்பது கண்கூடு. ஐரோப்பியரின் வருகையினால் பல உரைநடை நூல்கள் எழுந்தன. 17ம் நூற்றாண்டில் வாழ்ந்த றொபர்ட் நொயிலி என்பவர் தத்துவ போதகர். இவர் தன் வாழ்நாள் முழுவதும் தமிழராகவே வாழ்ந்து தமிழ் நூல்கள் பலவற்றை இயற்றினார். "ஞான உபதேசகாண்டம்" "மந்திரமாலை" "ஆத்மநிர்ணயம்" "தத்துவக்கண்ணாடி" "ஏசுநாதர் சரித்திரம்" "நீதிச்சொல்" "தமிழ் - போத்துக்கேய அகராதி" முதலிய நூல்களை இயற்றினார்.

இவருக்குப் பின்வந்த இத்தாலி நாட்டைச் சேர்ந்த பாதர் ஜோசப் பெஸ்கி என்பவர், தமிழை மிகவும் ஆழமாகக் கற்று மதுரைத் தமிழ் சங்கத்தினரால் "வீரமாமுனிவர்" என்னும் சிறப்புப்பட்டம் வழங்கப்பெற்றார். இவர் இயற்றிய சதுரகராதி தமிழ் மொழியில் முதல் அகராதி நூலாகும். அவ்வாறே தமிழ் லத்தீன் அகராதி, தமிழ் - போத்துக்கேய அகராதி முதலிய அகராதி நூல்களையும் இயற்றினார். திருக்குறளில் அறத்துப்பால், பொருட்பால் ஆகியவற்றை லத்தீன் மொழியில் மொழி பெயர்த்தார். இவர் "தேம்பாவணி" "அன்னை அழுங்கல் அந்தாதி" "கிந்தேரியம்பாள் அம்மானை" "அடைக்கலமாலை" "திருக்காவலூர்க் கலம்பகம்" "கலிவெண்பா" "கருணாம் பரப்பதிகம்" முதலிய செய்யுள் நூல்களையும் பரமார்த்த குருகதை, இராமன்கதை, வேதியர் ஒழுக்கம், வேதவிளக்கம், ஞானம் உணர்த்தல் முதலிய உரைநடை நூல்களையும் இயற்றினார். அத்துடன் அமையாது தமிழ் இலக்கணத்திலும் ஈடுபாடு கொண்டு "தொன்னூல் விளக்கம், கொடுந்தமிழ் இலக்கணம், லத்தீன் முதலிய இலக்கண நூல்களையும் எழுதினார். ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த சீகன்பால்கு ஐயர் ஒலைச்சுவடியை பதிப்பிக்கும் பணியில் ஈடுபட்டார். அந்த நூல்கள் தற்போது கிடைக்கவில்லை.

ஆங்கில அறிஞரான எல்லிஸ்துரை வீரமாமுனிவரது வாழ்க்கை வரலாற்றை எழுதினார். மேலும் அவர் இயற்றிய தமிழ் நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.

போப் ஐயர் என்பவர் இவ்வகையில் மிகவும் பிரசித்தமானவர். அவர் திருவாசகம் நாலடியார், திருக்குறள் முதலியநூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். மேலும் தமிழ் இலக்கணம் (3பாகங்கள்) செய்யுள் கலம்பகம் முதலியவற்றை எழுதினார். புறப்பொருள் வெண்பா மாலை நூலில் சில செய்யுள்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். ஆங்கில அறிஞர்களுக்கு இவை பெரிதும் உதவின.

அயர்லாந்தை சேர்ந்த கால்ட்வெல் ஐயர் என்பவர் "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்" என்னும் ஒப்பீட்டு இலக்கண நூலையும் மற்றும் "நற்கருணைத் தியானமாலை", "தாமரைத்தடாகம்" முதலிய சமய இலக்கிய நூல்களையும் எழுதினார்.

மதபோதனைக்காக யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த பேர்சிவல் பாதிரியார் ஆறுமுகநாவலரிடம் தமிழ்கற்றார் என்பது யாவரும் அறிந்த செய்தி. இவ்வாறு பிறநாட்டவர் (வடக்கிலும், கிழக்கிலும்) தமிழில் ஆர்வம் கொண்டு தமிழ் மொழியை கற்றனர். என்பது குறிப்பிடத்தக்கது. □□□

# சலனப்பொழுதின் படிமத்தோற்றம்


நான் ஒரு ஓவியனல்ல.
வண்ணங்களோ தூரிகைகளோ
என்னிடமில்லை.
எனது கண்களில்
ஓவியங்கள் துளிர்க்கின்றன.
பனி விலகும் காலையில்
உதிர்ந்த இலைகளால்
போர்வையிடப்பட்ட தரையில்
என் சின்ன மகள்
தன்னிச்சையாய் கிறுக்கிய
சுவர்க்கோடுகளில்
புத்தகத்தினுள்
சுவடாய்ப்பதிந்த
சிறு பூச்சியில்,
ஆலயத்தரையில்
சிந்திக் காய்ந்த
பறவையின் எச்சத்தில்,
சூரியன் மறைந்து சிவந்த
சலனமற்ற மேற்கு வானில்,
என் கண்கள் நுழைந்து
ஓவியங்களைத் துளிர்க்கச் செய்கின்றன.

துளிர்த்து மலர்ந்த ஓவியங்கள்
கண்களின் வழியே
மனதினுள் இறங்குகின்றன.
அங்கே அவை கவிதைகளாகின்றன.
கவிதைகள்
கடந்த வரலாற்றை
நினைவு கூர்கின்றன.
நிகழும் அரசியலைப்
பேசுகின்றன.
புதிதாய் தத்துவங்களை
உதிர்க்கின்றன.

திடீரென
எல்லாமழிந்து சூன்யமாகின்றது.
சூன்ய வெளியில்
இருளும் இருளின் கோடுகளும்
சுழன்று சுழன்று
புதிய புதிய ஓவியங்களாகின்றன.

- இயல்வாணன்

* * * *



# ஈழத்துச் சிறுகதைகளில் பிராணிகள் பற்றிய மனிதநேய வார்த்தெடுப்புகள்

**- சின்னராஜா விமலன்**

புனைகதை இலக்கியங்களில் சிறுகதையானது ஒரு சிறுசம்பவத்தை அல்லது ஓர் உணர்வுத்தெறிப்பைக் கருவாகக் கொண்டு தோற்றம் பெறுவது என்று சொல்வார்கள். அந்தச் சிறுசம்பவமானது அல்லது உணர்வானது எழுத்தாளனுடைய மனதை உறுத்துகின்ற ஒரு விடயமாகவே காணப்படும். இனியும் என்னால் முடியாது என்கிறபோது எழுதுகிறேன் என்பார் பாப்லோ நெருடா. சமுதாயத்தில் காணப்படுகின்ற பல்வேறுபட்ட பிரச்சினைகளையும் கூர்ந்து கவனித்து எடுத்தாளுகின்ற ஒருவராலேயே ஒருமக்கள் எழுத்தாளராகப் பரிணமிக்க முடியும்.

ஒரு படைப்பாளியினுடைய ஆளுமையை அவனைச் சார்ந்துள்ள சூழலே தீர்மானிக்கின்றது. இலக்கியம் என்பது காலத்தின் பிரதிபலிப்பு என்ற வகையில் இது தவிர்க்க முடியாத ஒன்றாகவே இருக்கின்றது. ஆரம்பகாலச் சிறுகதைகளில் உலகப் பொதுவான மனித அடிப்படைப் பண்புகள் பற்றி சித்திரிக்கப் பட்டிருந்தாலும், இன்றைய கால கட்டத்தில் சமூகத்தில் நிலவுகின்ற சமகாலப் பிரச்சினைகளான வறுமை, சாதியம், போர், குடும்ப உறவு, காதல், பாலியல், சீதனம் மற்றும் மனிதாபிமானம் குறித்து பல்வேறு எழுத்தாளர்களும் பன்முக ஆளுமைகளுடன் சிறுகதைகளை படைத்த வண்ணமே உள்ளனர். இவ்வாறு ஒவ்வொரு கால கட்டத்திலும் முனைப்புற்றுக் காணப்படும் தனித்துவப் பண்புகளால் சிறுகதைகளும் உருவ உள்ளடக்கங்களில் வித்தியாசப் படுத்தப்பட்டு மெருகூட்டப்பட்டே வருகிறது.

"மனிதன் ஒரு சமூகப்பிராணி" என்றார் அரிஸ்டோட்டில். சமூகத்தினது உதவியின்றி தனி மனிதன் ஒருவனால் தனித்து வாழ்ந்து விடுவதென்பது இயலாத காரியம். மனிதன் தோன்றிய காலத்திலிருந்து இன்றுவரை அவன் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறான் என்றால் அதற்கு அவன் சக மனிதர்களோடு மனிதாபிமானத்துடன் புரிந்துணர்வு மற்றும் விட்டுக் கொடுப்புடன் கூடிய வாழ்க்கை முறையை கடைப்பிடித்து வருகின்றமையும் காரணமெனலாம். எனவே மனித குலத்தோடு ஒன்றிப்போன மனிதம் மனிதாபிமானம் குறித்து சிறுகதைகள் தோற்றம் பெறுவது ஒன்றும் வியப்புக்குரிய விடயமே அல்ல

பேராசிரியர் சிவத்தம்பி குறிப்பிடுவது போல "சிறுகதையிலோ நாவலிலோ முக்கியப்படுவது கதை (story) அந்தக் கதை சுட்டும் மனிதநிலை (human Condition) தான் முக்கியம். உண்மையில் அந்த மனித நிலைகளைக் கொண்டு வருவதற்கான ஒரு சட்டகமே கதை / சம்பவம். உலகின் மிகப் பிரசித்தமான எந்த நாவலையும் சிறுகதையையும் எடுத்துப்பார்த்தால் அந்த உண்மை விளங்கும். கதையிலும் / சம்பவத்திலும் பார்க்க "மனிதத்துவ ஆழத்தை" வெளிக் கொணரும் அதன் அதிர்வொலியே முக்கியமானது " என்பார்.

அந்தவகையில் ஒரு மனிதனோ அல்லது மனிதக்குழுமமோ உடல், உள ரீதியாகத் துன்பத்தால் பாதிக்கப்படுகையில் சகமனிதன் ஒருவனோ அல்லது சக மனிதக் குழுமமோ தன்னிடமுள்ள பொருளாலோ பணத்தாலோ அல்லது சரீர உதவியாகவோ இரக்கம் கொண்டு உதவுவதை மனிதாபிமானம் என்ற ஒரு வரையறைக்குள் கொண்டு வரலாம்.

இவ்வகைமாதிரி கதைகளுக்கு உதாரணமாக ஈழத்து சிறுகதை வரலாற்றில் பலவற்றைச் சுட்டிக் காட்டலாம். எடுத்துக்காட்டாக கலாமணியினுடைய "ஒரு மனிதாபிமானியின் தரிசனம்" "மனிதம்" என்ற தலைப்பில் செங்கை ஆழியான், தெணியான் ஆகியோர் எழுதிய கதைகளையும் கூறலாம். இச்சிறு கட்டுரையின் நோக்கம் ஈழத்துச் சிறுகதைகளில் சகமனிதன் மீதல்லாமல் பிராணிகள் மீது மனிதன் காட்டும் மனிதாபிமானம் அல்லது கரிசனை குறித்து பேசுவதே ஆகும்.

ஈழத்து சிறுகதை வரலாற்றில் இன்று புதிய தலைமுறை எழுத்தாளராய் மிளிர்ந்துவரும் பிரமிளா செல்வராஜாவின் "பக்கி" என்ற சிறுகதையில் செல்லமாக வளர்த்து வந்த பக்கி என்ற கோழியை குடும்பத்தினர் முனியாண்டி சாமிக்கு பலிகொடுக்கப் போவதாகத் தெரிந்து அதிர்ச்சியும் அவஸ்தையும் அடைகின்றது அந்த கதை சொல்லி பாத்திரம்.

*பக்கியை சாமிக்கு நேர்ந்து விட்டிருப்பதாய் அம்மா சொன்னாள். எனக்கு அதன் அர்த்தம்*

*தெரியவில்லை. கண்டு கொள்ளாமல் இருந்து விட்டேன். ஆனால் முனியாண்டி சாமி திருவிழா ஆரம்பித்ததிலிருந்தே வீட்டில் ஒரே பரபரப்பு. பக்கியை பலிகொடுக்கப்போவதாய் எல்லோரும் பேசிக்கொள்ள உறைந்து போய் விட்டேன். கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை பக்கியை காப்பாற்ற ஒரு வழியும் தெரியவில்லை.*

இவ்வாறு மன உளைச்சலை எதிர் கொள்ளும் போதுதான் பக்கி திடீரென காணாமல் போய் விடுகிறது. பலிகொடுப்பதை விட இது மேலானது என்று நினைத்து ஆறும் வேளையில் பக்கி மீண்டும் கிடைத்து விடுகிறது. எப்படியாவது பலிகொடுப்பதிலிருந்து பக்கியை காப்பாற்றுவதற்காக அந்தப் பாத்திரம் எடுக்கின்ற முடிவுதான் சமயோசிதமானது.

*பக்கி ஒரு மூலையில் இருந்து வாறதுதெரியுது. இப்ப என்ன செய்யிறது? அம்மா பார்க்கமுதல்ல ஏதாவது செய்யணுமே ஒண்ணுமே புரியலையே. பக்கத்தில் இருந்த பெரிய கல்லை கையில் எடுக்கிறேன் தடார்ன்னு ஒரு சத்தத்தோட பக்கியும் சேர்ந்து அலறித்துடிக்க*

*என்ன சத்தம்... என்ன சத்தம் அம்மா பதறலுடன் ஓடிவாறாங்க*

*கோழி கிடைச்சிருச்சம்மா பிடிக்கப் போய் விழுந்துட்டேன் என்கிறேன்.*

*மாரியாத்தா! ஒனக்குன்னே வளத்த கோழி ஒரு கொறையும் வைச்சிறாத தாயீ... திடீரென ஏதோ உணர்ந்து பேச்சை நிறுத்திய பாட்டி கோழியை பார்த்திட்டு கத்திட்டாங்க. ஐயய்யோ ரெத்தம் வருது காலில ஒரு விரலை காணமே! எங்கேயோ அடி பட்டிருச்சி போல அப்ப எப்பிடி மாமி பலி குடுக்கிறது? அம்மா யோசிக்கத் தொடங்க கோழியதரையில் விட்டுவிட்டு பாட்டியும் யோசிச்சிட்டே போறாங்க.*

*ஒரு பக்கியை காப்பாத்திட்டேன். இது போல எத்தனையெத்தனை பக்கியள் பலியாகிறதோ? எனக்கென்ன போச்சி எப்படியோ என் பக்கி தப்பிச்சிடுத்தே அது வரைக்கும் போதும். பக்கியிடம் மானசீகமாய் மன்னிப்பு கேட்டபடியே மருந்து கட்டுவதற்காய் மீண்டும் பக்கியை தேடுகிறேன்.*

என்று முடிகின்ற கதையில் ஆலயங்களில் பலியிடல் தவிர்க்கப்பட வேண்டும் என்ற சீர்திருத்தக்கருத்தும் ஊடுசரடாய் வெளிப்படுவதை அவதானிக்கலாம்.

இவ்வாறே சி.கதிர்காமநாதனின் "செத்துப்போன...?" என்ற சிறுகதையில் பிளாக்கி என்ற நாயையும் நோயின் பிடியில் சிக்கித் தவிக்கும் தாயையும் எடுத்துக்காட்டி தாயின் வைத்தியச் செலவுக்காக படும் அவஸ்தைகளையும் சித்திரிக்கின்றார். பிளாக்கி நாய் ஒரு மாத காலமாய் சுகமில்லாமல் இருந்து இறந்து விடுகின்றது. இக்கதையில் முத்தாய்ப்பான அம்சம் சிறுகதையின் முடிவு.

*நான் பிளாக்கியை குழியில் போட்டு மண்ணை வெட்டி குழியை மூடத் தொடங்கினேன். குழியை வடிவாக மூடி முடிக்க மகன் கேட்டான் "ஏனப்பா அப்பம்மாவுக்கு இருமலுக்கு மருந்தெடுத்த மாதிரி பிளாக்கிக்கு ஏன் மருந்தெடுக்கேல்ல? பிளாக்கியையும் டொக்டரிட்டை காட்டி இருந்தால் தப்பி எல்லே இருக்கும். இப்படி செத்துப்போய் இருக்காது: என்னால்..."*

என்று கேட்கும் பொழுது அந்த உணர்வு எம்மனதிலும் ஒரு அதிர்வை ஏற்படுத்தவே செய்கின்றது.

இவ்வாறே பெண்படைப்பாளியான சாரங்காவின் "உயிர்த்திருத்தல்" என்ற சிறுகதையில் வீட்டில் எலித்தொல்லைக்கு முடிவு கட்டுவதற்காக கொண்டு வந்த பூனையே காலப்போக்கில் அவர்களுக்கு இடைஞ்சலாக மாறுகின்றது. அந்தப்பூனை வயிற்றிலே குட்டிகளை காவியிருப்பதையும் தெரிந்து அதனை நாய் பிடிப்போரிடம் கொடுத்து அழிப்பதாய் அக்கதை முடியும்.

*தன் வயிற்றுக்குள் குழந்தைகளை காவி இருந்த போது அப்பூனை எத்தனை வசந்தக்கனவுகளை கண்டிருக்கும். அனைத்தையும் நொருக்கி அதை சாக்களத்துக்கு அனுப்பிவிட்டான் அவன். இனி அவனால் அதைக்காப்பாற்ற முடியாது. அது நீரில் மூழ்கி மூச்சுத்திணறி இறந்திருக்கும். ஆனால் இவனுள் மட்டும் உயிர்த்திருக்கின்றது. மனிதன் உயிர்க்கின்ற பொழுதுகளின் அப்பால் பழிவாங்கற் திருப்திகளைச் சந்தோசமாக துய்க்க முடியாதெனும் தீர்மானத்தை அவன் கன்னத்தில் வழிகின்ற கண்ணீர் எழுதிற்று.*

கண்கெட்ட பின் சூரிய நமஸ்காரம் என்பது போல் அப்பூனை இறந்த பின்னர் மனச்சாட்சி உறுத்த அதனை நினைத்து பச்சாதாபப்படுவதாய் இச் சிறுகதை சித்திரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறே சுதாராஜ் அவர்களுடைய "அடைக்கலம்" என்ற சிறுகதையில் வருகின்ற கதை சொல்லி

பாத்திரத்தின் ஆசை - எதிர்பார்ப்பு சற்று வித்தியாசமாக சித்திரிக்கப்பட்டிருக்கும்.

*இங்கு வந்த நாளிலிருந்து எங்களுக்குள் ஓர் ஆசை - எதிர்பார்ப்பு. இந்த வீட்டில் ஒரு சரணாலயம் போல் பிராணிகள் தானாகவே வந்து கூடுகட்டி வாசம் செய்ய வேண்டுமென்று. அதற்காக வீட்டைச்சூழ பல பழ மரங்களையும். பூமரங்களையும் வளர்த்து ஒரு சோலையைப் போல ஆக்கி வைத்திருக்கின்றோம். மரங்களில் சிறிய தட்டுக்களை அடித்து வைத்து அவற்றில் சிறு தானியங்களை போட்டு விடுவோம்.*

என்று தொடரும் சிறுகதையில் தென்னை மரக்கூட்டிலிருந்து விழுந்த அணில் குஞ்சு ஒன்றின் மீது அவர்கள் காட்டுகின்ற அன்பும் அக்கறையும் அற்புதமாக வெளிப்படுத்தப்பட்டிருக்கும்.

*அந்த அணில் குஞ்சுக்கு முதலில் ஏதாவது ஆகாரம் கொடுக்க வேண்டும் என்று நினைத்தவனாய் மகளை அழைத்து பிரிஜ்ஜில் இருந்து பால் கொண்டு வரச் சொன்னேன். கிண்ணத்தில் இருந்து பாலை ஒரு இங்க் பில்லரால் எடுத்து அந்த அணில் குஞ்சின் வாயில் விட்டேன். அது முகத்தை உதறி பாலை குடிக்க மாட்டேன் என்கிறது என்று நான் விழித்தேன். அப்போது என் மனைவி உடம்புச் சூட்டில் தாய்ப்பால் கொஞ்சம் வெதுவெதுப்பாக இருக்கும் என்று எடுத்துச் சொல்லிய பிறகு தான் உறைத்தது. அவள் சொன்ன மாதிரியே பாலை இளஞ்சூடாக்கி கொடுத்த போது அந்த அணில்குஞ்சு குடித்தது.*

இது மட்டுமல்லாமல் அவ்அணில் குஞ்சை அடைத்து வைத்து வேடிக்கை பார்க்காமல் அது சுதந்திரமாக திரியும் வகையிலான கைங்கரியத்திலும் முழு மூச்சுடன் ஈடுபட்டிருப்பார்கள்.

*உடலில் தெம்பும் பலமும் கூடிவிட்ட இராமரை (அணில் குஞ்சின் பெயர்) சுதந்திரமாக உலவவிடலாம் என முடிவெடுத்தோம். அவனை இந்த முறை தென்னை மரத்தின் அடியில் கொண்டு போய் விட்ட போது . இதற்கு முன்னால் ஏதோ பயிற்சி பெற்றது போல் சரசர வென்று உச்சிக்குச் சென்று திரும்பி எங்களைப் பார்த்து வாலைத் தூக்கித்தூக்கி ஆட்டி கீச் கீச் என்றான். இனி என்னைப்பற்றிய பயம் வேண்டாம் என அவன் எங்களுக்கு சொல்வது போல் இருந்தது.*

இவ்வாறான மனித நேயம் மிக்க பாத்திரப்படைப்பினை சுதாராஜ் அவர்களுடைய "முயல் குட்டி" என்ற சிறுகதையிலும் தரிசிக்க முடியும்.

இவ்வாறே செம்பியன் செல்வனின் "சர்ப்பவியூகம்" சிறுகதையில் ஊரில் உள்ளவர்களுடைய மாடுகளையும். எருமைகளையும் விலைக்கு வாங்கியும் கள்ளமாகவும் பிடித்து டி.ஆர். ஓவின் அனுமதியுடனும் அனுமதி இல்லாமலும் ஏற்றுமதி செய்து வரும் வேலாயுதத்திடம் மாடுகளை விற்றுவிட்டு அவற்றின் மீது குறிசுடும் போது கழிவிரக்கப்படுகிறது திரவியம் எனும் பாத்திரம்.

*மாடுகளின் கதறல் கேட்டது "குறி சுடுகிறார்கள். அதுதான் மாடுகள் கத்துது" திரவியம் காதைப் பொத்திக் கொண்டான். போயும் போயும் என்ர அருமையான மாடுகளான 'வெள்ளைப்பூச்சியனையும் நெற்றிச் சுட்டியனையும் கறுத்த வாலனையும் இவனுக்கு வித்தனே? நான் என்ன செய்யிறது. அறாவிலைக்கு வித்து என்ன சுகத்தைக் கண்டன்? அதுகள் ரண்டும் இப்போது இல்லை. வித்ததால வந்த பணமும் இல்லை. நினைவும் வெறுமை பூத்து நெருஞ்சியென சிரித்துக்குத்தியது. என்ர குழந்தையள் போலையல்லவோ வளத்தன். அதுகளும் என்ர குரலைக் கேட்டாப் போதும் சொன்னபடி கேக்கும். அதுகளை நம்பித்தானே இந்த மூண்டேக்கர் நிலத்தை வைச்சிருந்தன். இனி மழை பெய்தாலும் எப்படி உழவு செய்யப் போறனோ?*

என்று கையறுநிலைப் புலம்பலாக சித்திரிக்கப்படுகிறது.

ஈழத்தின் மற்றொரு பெண் படைப்பாளியான மண்டூர் அசோகாவின் "ரொமி" என்ற சிறுகதையில் ஆசையாய் வளர்த்து வந்த "ரொமி" என்ற நாய் குடும்பம் ஒன்றின் மீது வைத்துள்ள விசுவாசமானது.

*ஏன் இந்தப் பிறவி எங்கள் குடும்பத்தின் மீது இத்தனை அக்கறை காட்டுகின்றது என்பதை நினைக்கும் போது எனக்கு பெரும் புதிராகவே தென்படும். மறுபிறவி என்பது உண்மையாக இருந்து எம்மிடத்தில் இருந்து பிரிந்து சென்ற எமது அன்புக்குரியவர்கள் யாராவது இப்படி ரொமியாகப் பிறந்து வந்து எங்களைக் காக்கிறார்களோ என்று நினைப்பேன்.*

என்று வெளிப்படுத்தப்பட்டிருக்கும் அதே சமயம் ரொமி மீது அக்குடும்பம் வைத்திருக்கும் பாசமும்.

*அதுகளும் பாசம் காட்டத்தான் ரொமியும் இப்படி ஒட்டிக் கொண்டு திரியுது. குழந்தையள*

*வளர்க்கின்ற மாதிரித்தானே ரெண்டு பேரும் சேர்ந்து வளர்த்ததுகள். சின்னக் குட்டியாய் ரோட்டில் கிடந்து கத்திக் கொண்டிருந்த ரொமியை அப்பாவிடம் கெஞ்சி சம்மதம் பெற்று தூக்கி வந்ததும் துணியில் தொட்டில் கட்டி அதற்குள் படுக்க வைத்ததும்.. அடிக்கடி பால் கரைத்து கொடுத்ததும் நேற்றுத்தான் போலிருக்கிறது.*

என சித்திரிக்கப்பட்டிருக்கும். கதையின் முடிவிலே ரொமி வாகனம் அடித்து இறந்து போய் விடும் பொழுது

*எனக்கு ரொமி வேணும் அம்மா. என்ர ரொமி வேணும்... சின்னமகள் போட்ட கூச்சலைத் தொடர்ந்து பெரியவளும் விம்ம அவர்களை அணைத்துக் கொண்டு நானும் அழ அந்த மாலை வேளையில் வீடே சோகத்தில் ஆழ்ந்து ஓர் இழவு வீடு போலாயிற்று:*

என்ற உணர்வு பூர்வ சித்திரிப்பானது ஒரு சாதாரண நாய் என்பதற்கும் மேலாக சக மனிதன் ஒருவனின் இழப்புக்கு நிகராகவே கொள்ளப்படுகிறது.

எனவே தொகுத்து நோக்கும் பொழுது ஈழத்துச் சிறுகதைகளில் மனிதன் மீதல்லாமல் பிராணிகள் மீது காட்டப்படும் மனிதாபிமானம் அல்லது கரிசனை குறித்த ஒரு கண்ணோட்டத்தினை மேற்கூறிய சிறுகதைகளின் மூலம் எடுத்துக் காட்டியுள்ளேன். கவிஞர்கள் மட்டுமல்ல படைப்பாளிகளில் பெரும்பாலானோர் மன்னுயிரையும் தன்னுயிர் போலக் கருதி சகல ஜீவராசிகளது துன்பதுயரங்களையும் படைப்பூக்க உந்தலாகப்பெற்று அதனை வாழும் இலக்கியமாக மாற்றி விடுகின்றனர். இவ்வாறான ஆக்க இலக்கியங்களை வெளிக்கொணர்வதற்கு ஒவ்வொரு படைப்பாளியும் மென் உணர்வுகளால் ஊட்டம் பெற்ற குழந்தை உள்ள சிருஷ்டிப்பு மனோநிலைக்கு ஆளாவது தவிர்க்க முடியாத அவசியமாகின்றது. □□□

# புல்

வசந்தம் வந்து முத்தமிடப்
பூமிகாட்டும் பச்சைக் கொடிகளோ

மழை அரக்கன் பிடியில்
பூமித்தாய் கற்பைக் காக்கும்
புதல்வர்களோ...

வானத் தலைவன் வடிவு கண்டு
நாணி நிற்கும்
நாணமுள்ள நங்கைகளோ...

பனித்துளி நடக்க
இயற்கை போட்ட
பச்சைப் பாதைகளோ...

அல்லது
மாற்றாருக்கு அஞ்சிப் பணியும்
கோழைகளின் குறியீடுகளாய்
பூமி மேல் வந்தவையோ...?

# வாழ்க்கை

கால நிலாத் தேய்வில்
கோலத்தில் மாற்றம்.


ஆடுகளின் மேய்ச்சல் போல்
மனக்குரங்கின் தாவல்
தூக்க மற்ற
இரவுகளைத் தர

நிகழ்காலத் தரையில்
எதிர்காலச் சிறைக்குள்

கட்டையில் கட்டிய
மாடாய்

இறந்தகாலத்தின்
இரைமீட்டல்கள்.

**- நா.நவராஜ்**



# எந்தையும் தாயும் குலாவி மகிழ்ந்த பூமி

- செங்கைஆழியான் க.குணராசா

1795. செப்டம்பர் மாதம் கப்ரின் ஸ்ருவார்ட் என்ற ஆங்கிலேயன் தலைமையில் ஆங்கிலேயக் கப்பல் படையொன்று பருத்தித்தறையில் வந்திறங்கி யாழ்ப்பாணத்தை நோக்கி முன்னேறியது. செப்டம்பர் 28 இல் யாழ்ப்பாணம் ஆங்கிலப்படைகளால் முற்றுகையிடப்பட்டது. ஒல்லாந்தரிடமிருந்து ஆங்கிலேயர் கரங்களுக்கு யாழ்ப்பாண ஆட்சி மாறியது. 1795 டிசம்பர் மாத்தில் யாழ்ப்பாணத்தின் முதலாவது கலெக்டராக (அரசாங்க அதிபர்) ஜோன் ஜார்விஸ் என்பான் நியமிக்கப்பட்டான்.

## மத சுதந்திரம்

1799 இல் யாழ்ப்பாண மக்களுக்குத் தாம் விரும்பிய மத அனுஸ்டானங்களை ஆற்றுவதற்குச் சுதந்திரம் வழங்கப்பட்டது. கூரை இறப்பில் வாழையிலையைச் செருகுவதும் மரத்தடிச் சூலத்தைச் சிலுவையாக்குவதும் ஒழிந்தது. 1802. மார்ச் 15 ஆம் திகதி முதலாவது அரசாங்கக் கசெட் வெளியீடு ஆரம்பமானதுடன். ஒல்லாந்த நாணயமாக விளங்கிய செப்புக்காசான சல்லி பாவனைக்கு விடப்பட்டது. யாழ்ப்பாணக்கோட்டையையே ஆங்கிலேய யாழ்ப்பாணநிர்வாகிகள் தமது வாசஸ்தலாமாகவும் நிர்வாகமையமாகவும் கொண்டனர். ராணி மாளிகை. தேவாலயம். வதிவிடங்கள் என்பன அதற்குள் அமைந்திருந்தன.

போத்துக்கேயர் காலத்தில் விளங்கிய யாழ்ப்பாண சிறிய நகரை ஒல்லாந்தர் சற்றுத் திருத்தியமைத்திருந்தனர். ஆங்கிலேயர் வருகை தந்த போது சதுரமான வடிவில் யாழ்ப்பாண நகரம் அமைந்திருந்தது. வடக்கே சப்பல் வீதி. மேற்கே முற்றவெளி வீதி தெற்கே கடற்கரை விதி கிழக்கே மூன்றாம் குறுக்குத் தெரு என்ற எல்லைகளுள் யாழ்ப்பாண நகரம் அமைந்திருந்தது. இவ்வெல்லைக்கு வடக்கே தாராக்குளமும் வயல்களும் அமைந்திருந்தன. வடகிழக்கே மஞ்சற்கரசன் குளம் தேவரீர் குளம் என்பனவும் அவற்றினை அடுத்து வயல்களும் இருந்தன. தெற்கே வண்ணான்குளமும். தென் கிழக்கே கரையூரும் அமைந்திருந்தன. இந்த வீதிகளுக்கு வடக்கேயும் தெற்கேயும் காணப்பட்ட வீடுகள் ஒல்லாந்தர். ஆங்கிலேயர் காலக் கட்டிடங்களாகும். இன்றைய பொன்னம்பலம் வீதி எனப்படும் மின்சாரநிலைய வீதிக்கு அப்பால் வடக்கே மரவள்ளித்தோட்டங்கள் பரந்திருந்தன.

யாழ்ப்பாணத்தின் பிரதான வீதி. கோட்டையிலிருந்து கச்சேரிக்கூடாக மாத்தளை வரை சென்றது. இந்த வீதியிலிருந்து மார்ட்டின் வீதி. ஓடைக்கரை வீதி. டேவிட் வீதி என்பன பிரிந்து சென்றன. ஏராளமான குச்சு ஒழுங்கைகள் காணப்பட்டன. ஆங்காங்கு கல் கட்டிடங்களும் பெரும்பாலானவை மண் வீடுகளாகவும் தென்னங் கீற்றினால் அல்லது பனையோலையால் வேய்ந்த வீடுகளாகவும் காணப்பட்டன. சாமி அறை. இன்னொரு அறை. விறாந்தை. பிறிதாக ஒரு தலைவாசல். குசினி என்றவாறு அமைப்பினைக் கொண்டிருந்தன. செல்வந்தர்கள் நாற்சார் வீடுகளைக் கொண்டிருந்தனர்.

1816 ஆகஸ்ட் 12 ஆந் திகதிக்குப் பின்னர் ஒல்லாந்தர்கால அடிமைச் சிறைக்குடிகளுக்குப் பிறக்கின்ற பிள்ளைகளுக்குச் சுதந்திரம் வழங்கப்பட்டது. 1826 இல் ஓர் அச்சகம் அமெரிக்கமி னரியினரால் தொடங்கப்பட்டது. முதன் முதலாக முத்திவழி என்ற நூல் அங்கு அச்சாகியது. பின்னர் இந்த அச்சகம் மானிப்பாய்க்கு எடுத்துச் செல்லப்பட்டது.

## நாகலிங்கப்பத்தர்

முதன் முதல் யாழ்ப்பாணம் கன்னாதிட்டியில் நாகலிங்கம் பத்தரால் 1828 இல் என்.எம் வைர நகைக்கடை தொடங்கப்பட்டது. அதே ஆண்டில் நாயன்மார்க்கட்டில் சுதேச வைத்தியசாலை ஆரம்பிக்கப்பட்டது. இலங்கையிலேயே முதன் முதல் ஆரம்பிக்கப்பட்ட ஆயுள்வேத ஆஸ்பத்திரி இதுவாகும்.

விசேடமாக எலும்பு முறிவு நோய்க்கு இந்த வைத்தியசாலை பிரபல்யம் பெற்றிருந்தது. ஆறுமுகம் வெற்றிவேலு, அவர் மகன் மயில்வாகனம், அவர் சகோதரர் சிவசுப்பிரமணியம் என்போர் அக்காலத்தில் பிரபல்யம் பெற்றிருந்தனர். 1831 இல் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி யாழ்ப்பாணக் குடாநாட்டில் 146, 528 மக்கள் வாழ்ந்திருந்தனர். அதேயாண்டு யாழ்ப்பாணத்தில் இராஜகாரிய முறை நிக்கப்பட்டது. 1834 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பாதர் பீற்றர் பேர்சுவெலால் ஆரம்பிக்கப்பட்டது. ஆண்களும் பெண்களும் வெவ்வேறாக விடுதிகளிலிருந்து கல்வி கற்றனர்.

யாழ்ப்பாணக்குடாநாட்டில் இருந்த அரச காணிகள் ஏக்கர் ஐந்து சிலிங்காக விற்கப்பட்டன. கோயில் உரிமையாளர்கள் இவ்வாறான அரச காணிகளை வாங்கிக் கொண்டனர் பச்சிலைப்பள்ளியில் தென்னங்காணிகள் இவ்வாறு விற்கப்பட்டன. 1840 ஆம் ஆண்டு இருபாலைத் தமிழ் அறிஞர் சேனாதிராஜமுதலியாரும், நல்லூர்க்கந்தசாமிகோயில் அறங்காவலர் மாப்பாண முதலியாரும் மரணமானார்கள். 1841 இல் ஹென்றி மார்டின் என்பாரும், சேத் பேசன் என்பவரும் இணைந்து மோர்னிங் ஸ்ரார் என்ற பத்திரிகையை முதன்முதல் வெளியிட்டனர். யாழ்ப்பாணத்தின் முதல் பத்திரிகை இதுவே. 1842 இல்இன்றைய யாழ்ப்பாண நூல்நிலையமாகப் பரிணமித்த நூலகத்தினை எப்.சி கிரேனியர் என்பவர் முதன் முதல் ஒரு வாசிப்பு அறையில் ஆரம்பித்து வைத்தார். இதே ஆண்டில் வண்ணார்பண்ணையிலும் ஒரு சைவத்தமிழ்ப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. வன்னியிலும் பச்சிலைப்பள்ளியிலும் யானைகளினால் பயிர்களுக்குப் பெரும் சேதம் ஏற்பட்டதால் அவற்றினைக் கொல்லுமாறும் அதற்குப் பரிசு வழங்குவதாகவும் யாழ்ப்பாண அரசாங்க ஏசண்டர் அறிவித்தார். அதனால் 150 வரையிலான யானைகள் கொல்லப்பட்டு அவற்றின் வால்கள் கச்சேரியில் ஒப்படைக்கப்பட்டு சன்மானம் பெறப்பட்டன.

### ஆறுமுகநாவலர்

இக்காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தில் சைவசமத்தின் இழிநிலை கண்டு அதனை மீட்கவும் தமிழை வளர்க்கவும் ஆறுமுகநாவலர் மேற்கொண்ட நடவடிக்கைகள் மிக முக்கியமானவை. சொற்பொழிவுகள் மூலமாகவும், சைவப்பாடசாலைகளை ஆரம்பித்ததன் மூலமும் நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டதன் மூலமும் தனது வாழ்வைச் சைவத்திற்கும் தமிழுக்கும் அர்ப்பணித்தார். 1847 தொடக்கம் தொடர்ச்சியாக சைவச் சொற்பொழிவுகளை வண்ணார்பண்ணை சிவன் கோயிலில் நடாத்தி வந்தார். அவர் சமயவாதியாக மட்டும் இருக்கவில்லை. யாழ்ப்பாண அரசாங்க ஏசண்டர் துவைனம் துரை செய்த ஊழல்களுக்கு எதிராக அவர் பல துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டார். சிவ தூஷன பரிகாரம் போன்ற பல பிரசுரங்கள் வெளியிடப்பட்டன.

யாழ்ப்பாண மக்களின் உணவுப் பழக்கத்தில் பாண் மெல்ல மெல்ல இடம் பெறத் தொடங்கியிருந்தது. அதனால் அவர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கத்துடன் 1865 இல் முதன் முறையாக சவிரிமுத்து பேதுருப்பிள்ளை என்பவரால் யப்னா பிறிமியர் பேக்கரி ஆரம்பிக்கப்பட்டது. சிறந்த பாண், பிஸ்கற் தயாரிப்பிற்காகக் கவனரின் வெள்ளிப் பதக்கம் அவருக்கு வழங்கப்பட்டது.

### வேல்ஸ் இளவரசர்


1875 ஆம் ஆண்டு ஆங்கிலேய வேல்ஸ் இளவரசர் எட்வேர்ட் கொழும்புக்கு வந்தார். அரசாங்க அதிபராகவிருந்த தவைனம் துரையும் யாழ்ப்பாணப்பிரமுகர்களும் தமிழ்மக்களின் சார்பில் அவரை வரவேற்க விரும்பினர். யாழ்ப்பாணத்து ஆபரணங்களை வகைமாதிரி செய்து வைரங்கள் பதிக்கப்பட்ட பாம்பு வளையல்கள், வைரங்கள் பதிக்கப்பட்ட சிங்கமுகவளையல்கள், முத்துக்கள் பதிக்கப்பட்ட யானைமயிர் வளையல்கள், சங்கிலி, நெக்லஸ், புரோச்சுகள் காதோலைகள், ஏழுவகை மோதிரங்கள் என்பனவற்றினை ஒரு அலங்காரமாக வெள்ளிப் பேழையில் வைத்து கச்சேசேரியில் பணிபுரிந்த கனகரெத்தினமுதலியார் மூலம் இளவரசருக்கு அனுப்பி வைத்தனர். அக்காலத்தில் அப்பரிசுகளின் பெறுமதி நான்காயிரம் ரூபாவாகும். இந்நிதி யாழ்ப்பாணப் பிரமுகர்களிடமிருந்து சேகரிக்கப்பட்டதாகும். 1880 இல் யாழ்ப்பாணம் கச்சேரியில் நடைபெற்ற ஒரு முக்கிய கூட்டத்தில் அந்த வரவேற்பு நிதியில் எஞ்சியுள்ள பணத்தினைக் கொண்டு முற்றவெளியில் ஒரு மணிக்கூட்டுக் கோபுரம் கட்டுவதென முடிவாகியது. அதற்கான வரைப்படத்தினை அரசகட்டிடக்கலைஞரான சிமித் என்பவர் வழங்கினார். அதனை அமைப்பதற்கான செலவு ரூபா ஆறாயிரமாகும். அதற்கான நான்கு மணிக்கூடுகளை வேல்ஸ் இளவரசர் சார்பாக சேர் ஜேம்ஸ் லோங்டன் என்பார் வழங்கினார்.

## பத்திரிகைகள்

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் முதன் முதல் பிரசுரமான பத்திரிகை The Morning star ஆகும் அதன் பின்னர் The Ceylon patriot, The jaffna catholic Guardian, The Hindu Organ ஆகிய பத்திரிகைகள் வெளிவந்தன. உதயதாரகை, சத்தியவேத பாதுகாவலன், இந்து சாதனம், சன்மார்க்கபோதினி, சூதசனத்தியம் முதலான தமிழ் பத்திரிகைகளும் வெளிவந்தன இவற்றுள் சில தொடர்ந்து வெளிவருகின்றன. The Ceylon patriot இன் ஆசிரியராக கதிர்வேற்பிள்ளை விளங்கினார். இப்பத்திரிகை 1863 இல் இருந்து வெளியிடப்பட்டது. யப்னா கதலிக் கார்டிய னின் ஆங்கிலப்பதிப்பிற்கு மார்டின் என்பவரும் தமிழ்ப்பதிப்பிற்கு தம்பு என்பவரும் ஆசிரியர்கள். இப்பத்திரிகைகள் 1876 இலிருந்து வெளியிடப்பட்டன. 1884இல் இருந்து வெளிவந்த வன்மார்க்கபோதினியின் ஆசிரியராக தம்பிமுத்து என்பவர் இருந்தார். இப்பத்திரிகை அச்சுவேலியிலிருந்து வெளவந்தது. இந்துசாதனம் ஆங்கிலப் பதிப்பும் தமிழ்ப்பதிப்பும் 1889 இலிருந்து சைவப்பிரகாசிகை அச்சகத்திலிருந்து வெளிவருகின்றன. ஆங்கிலப் பதிப்பின் ஆசிரியராக சபாபதியும் தமிழ்ப்பதிப்பின் ஆசிரியராகக் கார்த்திகேசு என்பாரும் விளங்கினர்.

## யாழ்ப்பாண அன்றைய விவசாயம்


யாழ்ப்பாணத் தோட்டங்கள் கிணற்று நீர்ப்பாசனத்தையும் வயல் நிலங்கள் மழையை நம்பிய மானாவாரித் தரைகளாகவும் விளங்கின. தோட்டங்களுக்கான கிணற்று நிர்ப்பாசனம் ஆடுகால் துலாவை நம்பியதாக விளங்கியது. பனையோலையால் இழைக்கப்பட்ட பட்டையின் மூலம் கிணற்றிலிருந்து நீர் அள்ளி



வார்க்கப்பட்டது. துலாவின் நீளம் கிணற்றின் ஆழத்தினைப் பொறுத்தது. துலாக்கயிற்றினை ஒருவர் பற்றி நீரை அள்ள துலாவில் ஏறிநின்று மிதிப்போர் உதவினர். பாய்கின்ற நிரை யாழ்ப்பாணத்து மண்வெட்டி கொண்டு வாய்க்கால் மூலம் ஒருவர் பயிர்களுக்குப் பாய்ச்சுவார். அன்றைய கமத்தொழில் கூட்டுறவாக விளங்கியது. முறை வைத்துத் தோட்டங்களுக்கு நீர்ப்பாய்ச்சினர். அதிகாலை படுக்கைப்பாயை விட்டு எழுந்து உரக்கக் குரல் கொடுப்பதன் மூலம் உதவவிருக்கும் ஏனைய பங்காளிகளைத் தோட்டத்திற்கு அழைத்தனர். குழைக்காட்டிலிருந்து (சாவகச்சேரி) பாரவண்டில்களில் இலைகுழைகளைக் காவி வந்து தோட்டங்களில் குழிபறித்துத்தாட்டனர். வீடுகளில் வேலிப்பட்டியடைப்பில் சேகரித்து வைத்திருக்கும் எரு. வேப்பஞ்சருகு, புளியஞ்சருகு என்பவற்றினை, காசு கொடுத்து வாங்கி வந்து தோட்டங்களில் பசளையாக இட்டனர். சூத்திரக்கிணறுகளும் யாழ்ப்பாணத்தில் நீர்ப்பாசனத்திற்கு உதவின. மாடுகள் சிலவிடத்து முன் பின்னாக நடந்தும் சிலவிடத்து வட்டமாகச் செக்கு நடைநடந்தும் நீரைச் சங்கிலிப் பிணைப்பிலான ஒன்றிற்கு மேற்பட்ட பட்டைகள் அல்லது வாளிகள் மூலம் இறைத்துத் தோட்டங்களுக்குப் பாய்ச்சின.

## புத்தூர் நிலவறை

புத்தூர் நிலாவரைக்கிணறு, ஊரெழு பொக்கனை, மானிப்பாய் இடி குண்டு என்பன யாழ்ப்பாணத்தின் வற்றாத நீர்க் குண்டுகளாம். நவக்கிரியிலுள்ள நிலாவரைக்கிணறு இருபதடி ஆரைச் சுற்றுக் கொண்டது. 100 அடிகளுக்கு மேல் ஆழமானது. இதன் இருபதடி வரையிலான மேற்பரப்பு நீர் நன்னீராகவும் அதன் கீழுள்ள நீர்



உவராகவும் இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. 1824 இலும் 1897 இலும் இரண்டு நீராவி எஞ்சின்கள் கொண்டு நிலாவறையை இறைத்துப் பார்க்க முயன்றனர். எனினும் நிலாவறையின் நீர்மட்டம் கிழிறங்கவில்லை. ஊரெழு பொக்கனைக் கிணறு 33 அடி ஆழமானதென அளவிட்டுள்ளனர். வறட்சிக்காலத்திலும் மழைக்காலத்திலும் நீர்மட்டம் மாறுவதேயில்லை. 1905 ஆம் ஆண்டு மே மாதம் 10ம் திகதி மானிப்பாயில் ஒரு மிகச்சிறு நீர்க்குண்டு தோன்றி, அது படிப்படியாக பெரியதொரு குண்டாக மாறியதைக் கண்டனர். சுண்ணாம்புக் கற்பிரதேசங்களில் இவ்வாறான இயற்கை நீர்க்குண்டுகள் சாதாரணமானவை. மானிப்பாய் நீர்குண்டு 40 அடி ஆழமானது. இதற்கும் புத்தூர்

நிலாவரைக்கும் தரைக்கீழ்த் தொடர்புண்டென அன்று பேசிக்கொண்டனர். நிலாவறைக்கிணற்றில் தேசிக்காய் போட்டால் அது கீரிமலைக் கடலில் மிதக்குமெனவும் பேசி மகிழ்ந்தனர்.

மானாவாரியாக யாழ்ப்பாணத்தில் செய்கை பண்ணப்படும் நெல் தேவைக்குப் போதாமையால் பரந்தனில் 1902 ஆம் ஆண்டு அரசகாணிகளை ஏக்கர் ஒரு சிலிங்காக வாங்கி நெற்செய்கையிலீடுபட்டனர். யாழ்ப்பாணத்தில் 13 வகையான தினைவகைகள் விளைவிக்கப்பட்டன. வரகு, குரக்கன், தினை, மொண்டி, சாமை, பயறு, எள், நிலக்கடலை என அப்பட்டியல் நீளும் காய்கறிச்செய்கையும் வெற்றிலைச்செய்கையும் முக்கியம் பெற்றிருந்தன யாழ்ப்பாண நகர்ப்புறத்தில் 200 வருடங்களாகத் திராட்சைச் செய்கை பிரபல்யம் பெற்றிருந்ததெனில் நம்ப மாட்டீர்கள் ஆனால் அது உண்மை அதன் பின்னர் மாதகல், சில்லாலை ஆகிய கிராமங்களில் சிறப்பான பயிராகியது. யாழ்ப்பாண வைன் இந்தியாவிலும் சிறப்பாக நாகப்பட்டினத்தில் விரும்பிப் பயன்படுத்தப்பட்டுள்ளது. குடாநாட்டின் கிழக்குப் பகுதிகளில் அன்னாசி பயிரிடப்பட்டது. புகையிலை ஒரு பணப்பயிராக விளங்கியது. பொயிலைப்போறனை மூலம் புகையூட்டிச் சுவையாக்கப்பட்ட புகையிலைக்கு இலங்கை எங்கும் வரவேற்பிருந்தது. புகையூட்டற்கலை யாழ்ப்பாணத்துக் கமக்காரனுக்கு மட்டுமே தெரிந்திருந்தது.

தென்னை இன்னொரு பணப்பயிர். பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் ஹாடி என்ற ஐரோப்பியன் அரச காணிகளை மலிவாக வாங்கித் தென்னந்தோட்டங்களை ஆரம்பித்தான். அன்று யானைக்காடான பச்சிலைப்பள்ளியில் அதன் பின்னர் யாழ்ப்பாணத்தார் தாமும் நிலம் பெற்றுத் தென்னந்தோட்டங்களை ஆரம்பித்தனர்.

### அன்றைய தொழில்கள்

மிகப்புராதன காலத்திலிருந்தே கைவினைத் தொழில்கள் யாழ்ப்பாணத்தில் நடைபெற்று வந்தன. சாயவேர் கிண்டல், சாயமிடுதல், நெசவு, சுருட்டுத் தொழில், பாய் பெட்டி இழைத்தல், ஆபரணவேலை என்பன பிரதான தொழில்களாக இருந்தன. போத்துக்கேயர், ஒல்லாந்தர்காலத்தில் சாயவேர் கிண்டல் மிக முக்கியத்துவம் பெற்றிருந்தது. படவைகளுக்குச் சாயமூட்டுவதற்கு முன் அவை நன்கு கழுவப்படும். அதன் பின்னர் ஒடியல் மாக்கரைசலில் முக்கி எடுக்கப்படும். கம்மியாதூரியகல் எனப்படும் கருவி கொண்டு புடவையின் இரு விளிம்புகளுக்கும் தேன் மெழுகு தடவப்படும். அச்சுக்கட்டி நீலம் தண்ணீரில் இரண்டு மூன்று நாட்கள் ஊறவிடப்பட்டிருக்கும்.தகரைக் கொட்டைகள் சுடுநீரில் கொதிக்க வைக்கப்படும். தில்லை எரிக்கப்பட்டு எடுக்கப்பட்ட சாம்பல் தண்ணீரில் கலந்து வடிகட்டப்பட்டிருக்கும். பின்னர் அச்சுக்கட்டி நீலம் தகரைக்கொட்டை அவிந்த நீர் தில்லைச் சாம்பல் மூன்றும் சமனாகக் கலந்த கலவையில் ஏற்கனவே தேன் மெழுகு தடவிக் கோடிட்ட புடவை அமுக்கப்படும் புடவையில் நீலக்கோடு முழிப்பாக வந்துவிடும். இதனை நீலக்கம்பி வேட்டி என்பர் நீலக்கம்பி வேட்டி விற்பனைக்குத் தயார். புடவையில் தேன்மெழுகினைத் கொண்டு இடப்பட்ட கோலவடிவங்களுக்கு இணங்கவும் நிறந்தீட்டலாம். சாயவேரையும் நிறங்களையும் பயன்படுத்திச் சாயமிடுவர்.

செக்குகள் மூலம் கொப்றாவிலிருந்து தேங்காய் எண்ணெய், எள்ளிருந்து நல்லெண்ணெய், வேப்பங்கொட்டைகளிலிருந்து வேப்பெண்ணெய், இலுப்பங்கொட்டையிலிருந்து இலுப்பெண்ணெய் என்பன தயாரிக்கப்பட்டன. பெரிய முற்றிய புளியின் அடிமரத்தில் செதுக்கப்பட்டு இராச்சத உரலாக செக்கின் அடிப்பாகம் அமையும். ஊத்துமரம் எனப்படும் உலக்கை (ஒன்றரை அடிச் சுற்றிருக்கும்) அதனுள் புதைக்கப்பட்டு, மாடுகளினால் சுற்றிச் சுற்றி இழுக்கப்படும் பாரமான கிடைமரத்துடன் பிணைக்கப்படும். அதனால் செக்கினுள் ஊத்துப்பெட்டியால் இடப்பட்ட எண்ணெய் விதைகள் அரைத்துப் பிழியப்பட்டு எண்ணெயாக வடியும். செக்கு மாடுகளினால் இழுத்துச் செல்லப்படும் போது எழுகின்ற ஓசை ஒரே சீராக இராகத்தோடு இருக்கும். சாண்டார் தெரு ஆனைக்கோட்டை முதலான கிராமங்களில் செக்குகள் நிறைய இயங்கின.

கிராமங்கள் தோறும் கைத்தறி நெசவு நடந்தது. தறிகள் ஓயாது இயங்கிக் கொண்டிருக்கும். வடமராட்சியிலும் தீவுகளிலும் பாய் பெட்டி இழைத்தல் முக்கியமாக நடைபெற்று வந்தது. வலிகாமத்தில் சுருட்டுத் தொழில் இயங்கியது. யாழ்ப்பாணச் சுருட்டிற்கு இலங்கை முழுவதும் பரந்த புகைத்தல் இரசிகர்கள் ஆங்கிலேயர் உட்பட இருந்தார்கள். யாழ்ப்பாணத்துக் கோடாபோட்ட சுருட்டு தனித்துவமானது. அக்கோடாக்கலவை இடத்திற்கிடம் வித்தியாசப்படும். யாழ்ப்பாணப் பெண்கள் பலர் வீட்டிற்குள் இருந்து சுருட்டுப் புகைப்பார்கள். சுருட்டுக் கொட்டில்களில் தயாரிக்க சுருட்டுகளின் உள்ளீடாக இரண்டாந்தரப்

புகையிலை எனப்படும் ஒடிசருகும் வெளிச்சுற்றாக முதலாந்தரப் புகையிலையான காப்பிலையும் அமையும். அதனால் யாழ்ப்பாணத்துப் பெண்கள் முதலாந்தரப் புகையிலையை வாங்கித் தாமே சுருட்டுச் சுற்றிப் புகைப்பார்கள் 1904 ஆம் செய்ன்.லையன்ஸ் எக்சிபினில் யாழ்ப்பாணச் சுருட்டிற்குத் தங்கப்பதக்கம் கிடைத்தது.

யாழ்ப்பாணமக்களின் உணவில் 40 சதவீதத்தைப் பனம் பொருட்களே தீர்த்ததால் கற்பகதருவெனப் பனை விளங்கியது. ஆண்பனை, பெண் பனை என இருவகையான பனைகள் உள்ளன. ஆண்பனை காய்க்காது. ஆனால் இரு வகைப் பனைகளும் கள் எனப்படும் பானத்தை வழங்கின. ஜனவரி தொடக்கம் ஓகஸ்ட் மாதம் வரை அவை கள்ளினைத் தந்தன. யாழ்ப்பாண மக்களின் முக்கிய பானமாகக்கள் இருந்தது. கள்ளிறக்கும் முட்டிக்குள் சுண்ணாம்பு தடவிவிட்டால் அதில் வடியும் கள் கருப்பனியாக வரும். மிகவும் இனிமை. சகலரும் அருந்துவர். கருப்பனியிலிருந்து பனங்கட்டி காய்ச்சுவர். அவை குட்டான்களில் வார்த்து இறுகியதும் விற்பனைக்கு வரும். சின்னக்குட்டான் ஒன்றுடன் தேநீர் அருந்துவது வழக்கத்திலிருந்தது. பனம் பாணியிலிருந்து பனாட்டுத் தயாரிப்பர். பனாட்டும் பழஞ்சோற்றுத் தண்ணீரும் கமக்காரர்களின் காலை உணவாக இருந்தது. ஒடியல் கூழ் மேலைத்தேய சூப்பிற்கு நிகரானது. அப்பதது மாவைப் புளிக்க வைப்பதற்குக் சிறிதளவு கள் பாவிப்பர். பனம் பழத்தைத் தணலில் சுட்டும் சிறிது புளியில் பிசைத்தும் விரும்பி உண்பர். பனங்கிழங்கு கிடைக்கின்ற பருவத்தில் உண்ணப்படும். கிடையாத காலத்தில் புழுக்கொடியல் உணவாகப் பயன்படும். ஒவ்வொரு வீட்டிலும் குறைந்தது பத்துப் பனையாவது இருந்தன. இவை ஏழை யாழ்ப்பாணத்தானின் பசியைத் தீர்த்தன. அதிக பிரயாசையின்றிப் பயன் தருகின்ற ஒரு வளத்தை அமெரிக்கன் கோதுமை மாவிற்காக இழந்து வருகின்றோம்.

## யாழ்ப்பாண விளையாட்டுக்கள்

யாழ்ப்பாண மக்களின் சுதேச விளையாட்டுகள் பலவாகும். மதியத்துடன் வெயில் ஏறியதும் கமவேலைகள் நிறைவுறும். அதன் பின்னர் வீட்டிற்குள் கைவினைத்தொழில்களில், மாடு ஆடு கோழி பராமரிப்பில், ஈடுபடுவோர் ஓய்வு நேர விளையாட்டுகளில் ஈடுபடுவர். சனிக்கிழமை நாட்கள் எண்ணெய் முழுக்கு நாட்களாகும். அன்று முழு ஓய்வெடுப்பர்.

அவர்களின் விளையாட்டுகளாக பாடியோட்டம், வார் ஓடுதல், கிட்டியடித்தல், கிளித்தட்டு, கெந்தியடி, கோலாட்டம், அம்மானை, சிங்கி, பசுவும் புலியும், மாங்கொட்டை போடுதல், கண்பொத்தி விளையாடல், இலுப்பைக்கொட்டை போடுதல், போர்த்தேங்காய், தாயம் போடுதல், சொக்கட்டான், பாண்டி விளையாடல் முதலியன விளங்கின. மாட்டுவண்டிச் சவாரி வீரவிளையாட்டாகக் கருதப்பட்டது. ஆங்கிலேயரின் வருகைக்குப்பின்னர் தேசியவிளையாட்டுகள் அருகிவிட்டன.

## வேறு சங்கதிகள்

1894 பெப்ரவரி 3 ஆந்திகதி யாழ்ப்பாணத்தில் சிறிதளவிலான புவிநடுக்கம் உணரப்பட்டது. 1889இல் நேர்வின் சிதம்பரப்பிள்ளையால் The Native Town High School என ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை 1889 இல் அப்புக்காத்து நாகலிங்கம் அவர்களால் பொறுப்பேற்கப்பட்டு வண்ணார்பண்ணையில் The Hindu High School எனத் தொடக்கப்பட்டது. அதுவே பின்னர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆகியது.

1896 ஜூலை 24ஆந் திகதி அரசாங்க அதிபரின் மனைவி திருமதி ஐவேர்ஸ் கச்சேரிப் பழைய பூங்காவில் At Home| என்ற சடங்கினை முதன் முதலாகக் வைத்தார். அற் ஹோம் என்பதன் அர்த்தம் கஷ்டப்பட்டவர்கள் ஒரு நாளைக் குறித்து உற்றம் சுற்றம் நண்பர்களை வீட்டிற்கு அழைத்து விருந்தளிப்பதன் மூலம் பணமாகவோ பொருளாகவோ நன்கொடை கேட்பதாகும். வறுமைப்பட்டவன் பணந் தெண்டித் தன் கஷ்டங்களை நீக்க அற்ஹோம் உதவும். கச்சேரிச் சீமாட்டிக்கு என்ன கஷ்டம் வந்ததோ? 1897, ஜனவரி 18 ஆம் திகதி யாழ்ப்பாணக் கோட்டையில் ராணி மாளிகையில் கவனரின் முன்னிலையில் தமயந்தி என்ற நாட்டுக் கூத்து ஆடப்பட்டது. 1900, பெப்ரவரி 9 ஆம் திகதி ஒரு புவிநடுக்கம் இலங்கையிலும் இந்தியாவிலும் பதிவாகியது.

1900 ஏப்பிரல் மாதத்தில் குருநாகலுக்கு இப்பால் புகையிரதப்பாதை அமைக்கின்ற முயற்சி தொடங்கியது. அதே ஆண்டு ஜூலை மாதம் காங்கேசன்துறையிலிருந்து சாவகச்சேரி வரை 21 மைல்கள் நீளத்திற்குப் பாதை அமைக்கப்படத்தொடங்கி 1902 ஆம் ஆண்டு மார்ச் 21 ஆம் திகதி முடிவுற்றது. வதிவிட

பிரதம பொறியியலாளர் ஒலிவர் எக்பார் இதனை அமைத்து முடித்தார். கவனர் சேர் உவெஸ்ற் றிட்ஸ்வே இப்புகையிரதப்பாதையைத் திறந்து வைத்தார். அதே ஆண்டு செப்டம்பர் மாதம் சாவகச்சேரியிலிருந்து பளை வரையிலான 14 மைல் நீளமான புகையிரதப்பாதை அமைத்துத் திறந்து வைக்கப்பட்டது. அடுத்த ஆண்டிற்குள் கொழும்புடன் இணைப்பு பூர்த்தியாகி யாழ்ப்பாணத்தில் காலை புறப்பட்டு கொழும்பை மாலையில் அடைகின்ற நிலை வந்துவிடுமென றிட்ஜ்வே குறிப்பிட்டார். 1903 ஆம் ஆண்டளவில் இப்பகையிரப்பாதை குருநாகலுடன் இணைந்து முழுமையானது.

## கண்டி வீதி அமைத்தல்

யாழ்ப்பாணக் குடாநாட்டையும் வன்னிப்பெருநிலப்பரப்பையும் இணைக்கும் ஆனையிறவுக் கடனீரேரி யாழ்ப்பாணத்தில் சிறைக் கைதிகளைக் கொண்டு தூர்க்கப்பட்டு பாதை அமைக்கப்பட்டது. முதலில் புகையிரதப்பாதை யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படுவதை மக்கள் விரும்பவில்லை. புகையிரதத்தின் இரைச்சலால் ஆடு மாடுகள் தெறிகெட்டு ஓடுவதால் அவற்றினை வளர்க்க முடியவில்லை என முறைப்பாடு செய்தனர். துஷ்ட பிசாசுகள் யாழ்ப்பாணத்திற்குள் பிரவேசிக்க வாய்ப்பாகிறது என முறையிட்டனர். யார் விறகு (மூன்றடி நீளமான விறகு) காடுகளில் வெட்டி வழங்குவதற்கு யாழ்ப்பாணத்தில் தலைமைக்காரர் சிலர் ஏலம் எடுத்தனர். யார்விறகு எரித்து அதனால் உருவாகிய நீராவியில் புகையிரதம் ஓடியது. முக்கியமான புதையிரத நிலையங்களில் பெரிய தண்ணீர்த் தாங்கிகள் அமைக்கப்பட்டிருந்தன. அவை நீராவிக்குத் தேவையான நீரை வழங்கின. பெற்றல் பம்பிகளில் எரிபொருள் பெறுவது போல றெயில்கள் நீரைப்பெற்றன. ஒரு முறை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்த கரிக்கோச்சியில் (புகையிரதம்) கட்டைவிறகு எரிபொருள் பளையில் தீர்ந்துவிட்ட நிலையில் அதில் பயணம் செய்த பயணிகள் கீழே இறங்கி விறகு கட்டைகள், தென்னம் மட்டைகள் என்பவற்றினைப் பொறுக்கி எஞ்சின் பெட்டியை நிரப்ப நேர்த்தது. அவற்றினை எரித்தே கரிக்கோச்சி வந்து தன் தரிப்பிடத்தை அடைந்தது.

## கத்தோலிக்க - பௌத்த கலவரம்

1903 ஜுன் 9 அம் திகதி அனுராபதபுரத்தில் பௌத்த யாத்திரிகர்களுக்கும் ரோமன் கத்தோலிக்கர்களுக்கும் இடையில் பெரும் சமயக்கலவரம் நிகழ்ந்தது. தமது புனித நிலத்தில் கிறிஸ்தவ ஆக்கிரமிப்பாகச் சில சமயக் கட்டிடங்கள் கட்டப்பட்டிருப்பதை சிங்களப் பௌத்தர் விரும்பவில்லை. இது சம்பந்தமாகக் கவனர் றிட்ஜ்வேயுடன் சமரசப்பேச்சு வார்த்தைகள் நடாத்தியும் பயன் கிடைக்கவில்லை. இந்நிலையில் அனுராதபுரத்திற்கு யாத்திரிகர்கள் வருகின்ற நாளைப் பயன்படுத்திச் சிலர் கலவரத்தினை ஏற்படுத்தினர். அதனால் ஒரு ரோமன் கத்தோலிக்கப் பாடசாலையும் சேர்ச்சும் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. பாதிரியார் கடுமையாகத் தாக்கப்பட்டார். யாழ்ப்பாணத்திலிருந்து ஆங்கிலேயப்படையினரை அனுராதபுரம் வருமாறு பணிப்பரை வழங்கப்பட்டது. அதற்குள் நாற்பது கலகக்காரர் கைது செய்யப்பட்டனர். அவர்களுக்கு ஒரு வருடத்திலிருந்து ஏழாண்டுகள் வரை கடுங்காவல் தண்டனையைச் சுப்பிரிம் கோர்ட் விதித்தது.

## யாழ்ப்பாணம் வந்த முதலாவது கார்.

அதேயாண்டு மே மாதம் 23 ஆம் திகதி முதலாவது மோட்டார் கார் யாழ்ப்ாணத்திற்குத் திருமதி ஸ்கோவர் என்ற பெண்மணி சவாரி செய்து வந்தார். அவருடன் அக்காரில் நுவரெலியாவிலிருந்து நான்கு ஆங்கிலேயர்கள் வந்தனர். 1905. செப்டம்பர் மாதத்தில் நல்லூர் சட்டநாதர் கோயில் பிராமணர்களுக்கும் புறக்டர் தம்பையாபிள்ளையின் மகன் டொக்டர் சிவப்பிரகாசம் பிள்ளைக்கும் ஆலய உரிமை வழக்கு நீதிமன்றத்தில் நடந்தது. பிராமணர்களின் அப்பீல் தள்ளுப்பட்டு ஆலய உரிமை டொக்டர் சிவப்பிரகாசம்பிள்ளைக்குரியதாகத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

## மாதர் மாநாடு

யாழ்ப்பாணப்பெண்களின் முதலாவது மாதர் ஒன்றுகூடல் மாநாடு 1906 ஆம் ஆண்டு ஜனவரி 10 ஆம் திகதி வண்ணார்பண்ணை திருமதி மாசிலாமணி இல்லத்தில் நடந்தேறியது. அதில் ஆண்களின் அடக்கு முறைகளுக்கு எதிராகக் குரல் எழுப்பப்பட்டது. அதேயாண்டு ஜனவரி 22 ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு முதன்முதலாக உவாறன் சர்க்கஸ் கம்பனி வந்து சாகச விளையாட்டுகள் நடாத்தியது. குடாநாடே வண்டில்

கட்டி வந்து பார்த்து மகிழ்ந்தது. முற்றவெளி முழுவதும் மக்களாயும் மாட்டு வண்டில்களாயும் காணப்பட்டது. 1907 ஆகஸ்ட் மாதத்தில் நல்லூர் பூதத்தம்பி வாயிலும் அதன் சுற்றுப்புறங்களும் அரசினால் பொறுப்பேற்கப்பட்டன. 1910 மே மாதம் மத்திய கல்லூரிக்கும் சென் பற்றிக்ஸ் கல்லூரிக்கும் முதன்முதலாகக் கிரிக்கெட் போட்டி நடைபெற்றது. அதில் சென் பற்றிக்ஸ் வெற்றி பெற்றது.

### முதலாவது தமிழ் அகராதி

1910 ஜுலை மாதம் தமிழறிஞரும் ஊர்காவற்றுறை பொலீஸ் நீதவானுமான கதிர்வேற்பிள்ளையின் முதலாவது தமிழ் அகராதியை மதுரைத் தமிழ்ச்சங்கம் அவரது மறைவின் பின்னர் வெளியிட்டது. கதிர்வேற்பிள்ளையிக் மகனான அப்புக்காத்து பாலசிங்கம் இந்த அகராதி வெளயிடுவதில் முக்கிய பங்கு வகித்ததோடு அதற்கு ஓர் முகவுரையும் வழங்கியுள்ளார். 1911. டிசம்பர் 18 இல் பொ.இராமநாதன் இலங்கை சட்டசபைக்குப் பிரதிநிதியாகத் தெரிவானார். 1912. மார்ச் 22 இல் முதன்முதலாக ஏழு சிறைக்கைதிகள் அந்தமான் தீவுக்கு அனுப்பப்பட்டனர். 1913 ஜனவரி 20. இந்துப் பெண்களுக்காக இராமநாதன் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. 1916 ஏப்பரல் 17 ஆம் திகதி ஏற்பட்டன. 1920 பெப்ரவரி 15 யாழ்ப்பாணத்தில் அரசிப் பங்கீட்டு முறைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. முப்பது அரிசி மூடைகளை நெடுந்தீவுக்குக் கடத்திய கிராமத்தலைவர் கையும் மெய்யுமாக அகப்பட்டார்.

ஐந்தாம் ஜோர்ஜ் மன்னரின் முடிசூட்டுவிழா வைபவம் யாழ்ப்பாணத்தில் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. யாழ்ப்பாண வீதிகள் கூடியவரை அலங்கரிக்கப்பட்டிருந்தன. அதனைக் கொண்டாடு முகமாக வைத்திலிங்கம் என்ற சாராயக் குத்தகைக்காரர் மாவட்ட நீதிமன்ற வளவில் வைத்து 5000 மக்களுக்கு அரிசி வழங்கி உதவினார். இந்த வழங்கல் வைபவத்தினை அரசாங்க அதிபர் பிறீமன் ஆரம்பித்து வைத்தார். ஒரு படி அரிசியும் ஐந்து சதமும் அவர்களுக்கு வழங்கப்பட்டன. அத்துடன் 1000 பேருக்கு றிட்ய்வே மண்டபத்தில் உடுபுடைவையும் வழங்கப்பட்டன.

## கங்கா சத்திரம்

யாழ்ப்பாணச்சத்திரம் எனப்பட்ட கங்கா சத்திரத்தையும் கிணற்றையும் பெரியகடையில் அமைத்துக்கொடுத்தவர் வல்லிபுரம் என்பவராவார். இவரே முதன் முதல் யாழ்ப்பாணத்தில் தேயிலைக்கடை ஒன்றினைத் தொடக்கி நடாத்தியவர். இச்சத்திரம் அன்றைய காலவேளையில் மிகவும் பயனுடையதாக விளங்கியது. யாழ்ப்பாணம் பெரியகடைக்கும் வைத்தியசாலைக்கும் வண்டில் தட்டி வரும் வெளிக்கிராமக்கள் தங்கி இளைப்பாறி உணவருந்திச் செல்லுமிடமாக விளங்கியது. தீவப்பகுதிகளிலிருந்து வள்ளங்களில் பல மணித்தியாலங்கள் பயணப்பட்டு வரும் மக்கள் தங்கி இளைப்பாற இச்சத்திரம் உதவியது. தீவுகளை இணைக்கும் பண்ணைப்பாலம், வாணர்பாலம், பொன்னாலைப்பாலம் என்பன இல்லாத காலவேளையில் சிறிய வள்ளங்களின் மூலம் யாழ்ப்பாணக்கரையில் இறங்கும் மக்களின் தங்குமிடமாக இச்சத்திரம் தொண்டாற்றியது. எமது கலாசாரத்தின் முக்கிய சின்னமாகப் பாதுகாக்கப்படவேண்டிய இச்சத்திரத்தை அவ்விடத்திலிருந்து இடித்து அகற்றி அவ்விடத்தில் தற்காலிகக் கொட்டில் கடைகளை அமைத்த பெருமை அக்கால மாநகரசபை ஆணையாளர் பாலசிங்கத்துக்குரியதாகும்.

### தர்மசிந்தை

பண்டைய யாழ்ப்பாண மக்களின் தர்மசிந்தனை பெரியது. சத்திரங்கள் தெருமூடிமடங்கள், பொது நன்னீர்க் கிணறுகள், தங்குமடங்கள், கால்நடைகளுக்கான துரவுகள் ஆவுரோஞ்சிக் கற்கள், நீர்த் தொட்டிகள், நிர்க்குண்டுகள், தலைச்சுமைப் பயணிகளுக்கான தெருவோரச் சுமைதாங்கிகள், தெருவோர நிழல் மரங்கள், தனிவழிப்பயணத்தின் பயத்தினைப் போக்கத் தெருவோரச் சிறுதெய்வச் சின்னங்கள் சங்கடப்படலைக் கொட்டில்களில் தெருவழிப் பயணிகளின் தாகத்தைக் தீர்க்கப் பானைகளில் நிறைந்த குளிர்நீர் அல்லது மோர் என ஊர்தோறும் தெருத்தோறும் தர்மம் விரிந்து கிடந்தது.

நீண்ட வழிப்பயணிகளுக்குத் தங்கவிடமும் உணவும் சத்திரங்கள் வழங்கின. இரவு நேரத் தனிவழிப்பயணம் கள்ளர்களின் தாக்குதல்களுக்கும் கொண்டுவரும் பொருட்களின் வழிப்பறிக்குமுள்ளாகின. ஆங்கிலேயர் காலத்தில் 1844 ஒகஸ்ட் மாதத்தில் புத்தூர் வெள்ளப்பரவை என்ற இடத்தில் நீண்ட காலமாக இயங்கி வந்த கொள்ளையர் கூட்டம் ஒன்று (300 தொட்டு 400 வரை) கத்தி, வேல் வாள் கொட்டன் முதலான ஆயதங்களுடன் பிடிக்கப்பட்டு சிறையிலடைக்கப்பட்டது. அக்காலத்தில் பெரும்

கொள்ளையர்களாக அம்மையப்பன் கரியன் பாளைவெட்டியகந்தன் ஆகியோர் அரசாங்க அதிபர் பேர்சிவல் ஆக்லண்ட்டையிக் காலத்தில் பிடித்துத் தண்டிக்கப்பட்டார்கள். வல்லைவெளி, கப்பூதுவெளி, கல்லுண்டாவெளி, போக்கறுப்புவெளி என்பனவற்றில் வழிப்பறிக் கொள்ளையரின் அட்டகாசம் அக்காலத்தில் இருந்தது. வழிப்பயணம் செய்வோர் வேல் ஈட்டி, சிலம்பத்தடி என்பனவற்றுடன் பயணப்பட்டனர்.

### தெரு மூடிமடம்

பருத்தித்துறையில் இன்று ஒரு தெருமூடி மடத்தினைக் காணலாம். தெருவை மூடி இம்மடம் கட்டப்பட்டுள்ளது. தெருவின் இருபக்கங்களிலும் மடத்தினுள் உயர்ந்த திண்ணைகள் உள்ளன. பொழிகற்களால் இவை கம்பீரமாகக் கட்டப்பட்டன. மடத்தினைத் தாங்கிய தூண்கள் வேலைச் செதுக்கல்களுடன் அமைந்தன அத்தெருவில் பயணம் வருவோர் தற்காலிகமாக இளைப்பாறவும் வண்டில் மாடுகளை அவிழ்த்து தண்ணீர் காட்டவும் இத்தெரு மூடிமடங்கள் உதவின. அதற்கு வாய்ப்பாக கிணறும் தனிக்கல்லில் பொழியப்பட்ட கற்றொட்டியும் அமைந்திருந்தன. தெருவின் கடும் வெயிலின் காங்கையை இத்தெரு மூடிமடங்கள் தணித்தன. பருத்தித்துறைக்கேயுரிய தட்டிவான்களில் பயணப்பட்டு கிளிநொச்சிக்குப் போவது இனிய அனுபவம்.

### கால்நடைத் துரவுகள்

வயல் வெளிகள், மேய்ச்சல் தரவைகள், பொட்டல்கள் என்பனவூடாகச் செல்கின்ற தெருவோரங்களில் துரவுகள் வெட்டிக்கட்டப்பட்டிருந்தன. இவை நீள்சதுரக் கிணறுகளாகக் கால்நடைகள் தாமாக இறங்கி நீர் அருந்தக்கூடிய வடிவில் அமைந்துள்ளன. இன்றும் யாழ்ப்பாணத் தெருவோரங்களில் முழுமையாகவும் சிதிலமடைந்த நிலையிலும் இவற்றினைக் காணலாம். இத்துரவுகளுக்கு அருகில் ஆவுரோஞ்கிக்கல் காணப்படும். துரவினுள் இறங்கி தாகம் தீர்த்த மாடுகள் தம் உடலின் உளைவையும் பேன் உண்ணிகளையும் இந்த ஆவுரோஞ்கிக்கில்லில் தேய்த்து நீக்கிக் கொள்ளும். பொதுவாக இவ்வாறான தெருக்களில் சுமைதாங்கிகள் கட்டப்பட்டிருந்தன. தலைகளில் சுமையோடு வருபவர்கள் எவரது உதவியுமின்றி தாமாகவே தலைச்சுமையை இவற்றில் இறக்கி வைத்துவிட்டு தாகம் தீர்த்து இளைப்பாறிய பின்னர் சுமைதாங்கியில் இறக்கி வைத்திருந்த சுமையை அப்படியே தலையில் தாங்கிக் கொள்வர். சுமையை இறக்கிவிடவோ தூக்கி விடவோ பிறர் உதவியின்றி அப்பணிகளைச் சுமைதாங்கிகள் செய்தன. இன்று அவை படிப்படியாகச் சிதிலமாகிவருகின்றன. நமது பண்பாட்டின் வேர்கள் அவை.

### தண்ணீர்த்தொட்டிகள்

யாழ்ப்பாண மக்களின் பண்டைய போக்குவரத்து வாகனம் மாட்டுவண்டில்களாகும். மாடுகள் வாய்களில் நுரைதள்ளிக் களைப்புறும் போது வண்டிலைத் தெரு வேராரங்களில் நிறுத்தி, நுகத்தடியிலிருந்து கழற்றித் தெருவோர தண்ணீர்த்தொட்டிகளுக்கு அழைத்துச் செல்வர். பயணத்தூரத்தினைக் கவனத்தில் கொண்டு தண்ணீர்த்தொட்டிகள் அமைக்கப்பட்டீருந்தன. இத்தொட்டிகள் வீட்டாரின் வளவுக்கிணற்றுடன் உயரமான கல் வாய்க்காலால் இணைக்கப்பட்டிருக்கும். அதிகாலை குளிக்கும்போது வீட்டினர் தண்ணீரை ஒரு வாளி உடலிலும் மற்றைய வாளியை இந்த வாய்க்காலிலும் விட்டுத் தொட்டியை நிரப்புவர். ஆரம்பத்தில் தனிச் சுண்ணாம்புக் கல்லில் இத்தொட்டிகள் குடையப்பட்டிருந்தன. யாழ்ப்பாணத்தின் கிராமப்புற ஊர்கள் சிலவற்றில் இத்தண்ணீர்த்தொட்டிகள் சிதைந்த நிலையிலும் குப்பை கூளங்களால் நிரப்பப்பட்டும் காணப்படுகின்றன.




### சங்கடப் படலை

சங்கடப்படலையும்குளிர்ந்த நீர் கொண்ட மண்பானையும் அன்றைய யாழ்ப்பாணத்தின் கலாசாரச் சின்னங்களாக விளங்கின. கலைநேர்த்தியோடு செய்த மரக்கதவுப் படலையை மத்தியில் கொண்டதாகத்

தெருவிலும் வளவிலும் கொட்டிலின் பகுதிகள் அமைய மூடிக்கட்டப்பட்ட சிறுகொட்டிலைச் சங்கடப்படலைக் கொட்டில் என்பர். வழிப்பயணிகள் இளைப்பாற சங்கடப்படலைக்கான வழியைவிட்டு இருபக்கங்களிலும் உயர் திண்ணைகள் இருந்தன. அத்திண்ணை ஒன்றில் மண் நிரப்பிய கடகத்தில் அல்லது பெட்டியில் வாய் நன்கு தும்பு சீவப்பட்ட சிரட்டைப்பாதியால் மூடப்பட்டிருக்கும். அள்ளி அருந்துவதற்கு நன்கு சீவிய சிரட்டை அல்லது ஏதனம் ஒன்று வைக்கப்பட்டிருக்கும். பானை நிர் எப்பொழுதும் குளிர் நீராக இருக்கும். செல்வந்தர்கள் அப்பானையில் சிலநாட்களில் மோர் இட்டு நிரப்பி வைத்திருப்பார்கள். உறைந்து விடும் மோரைக் கலக்கி அள்ளி ஏதனத்தில் வார்க்க வசதியாக அகப்பை ஒன்றினையும் வைத்திருப்பார்கள். அந்த தருமசிந்தைக் காலம் இன்று எங்குமேயில்லை

தெருவோரத் தெய்வங்கள்

ஆங்காங்கு அமைந்த சிற்றூர்கள், கிராமங்கள் என்பன யாழ்ப்பாணத்தில் சிதறி அமைந்திருந்தன. அவற்றினைச் சிறிய பட்டினங்களுடன் இணைக்கும் மண்பாதைகள் வயல் வெளிகள் தோட்டநிலங்கள்,



பனந்தோட்டங்கள் வடலிகள், பற்றைக்காடுகள் என்பனவூடாக அமைந்திருந்தன. தெருவைப் பகலிலும் இருள் வைத்திருப்பனவாக நிழல் மரங்கள் சடைத்து வளர்ந்திருந்தன. மண்பாதையின் பற்றைக்காடுகளில் நரிகள், முயல்கள், மான்கள், பன்றிகள முதலானவை வாசம் செய்தன. பளைப்பாதையில் யானைகள், கருங்கரடிகள் என்பன குறுக்கிட்டன. கைதடிப்பகுதிக்கும் யானைகள் வந்தன. சிலவேளைகளில் நகரப்பகுதிகளுக்குள்ளும் புகுந்தன. இப்பகுதிகளில் சிறுத்தைகள் கால்நடைகளுக்கு அச்சுறுத்தலாக இருந்தன. கள்ளர் பயமும் இருந்தது. மண்பாதையில் ஆங்காங்கு பிணங்களைத் தகனம் செய்யும் சுடலைகள் குறுக்கிட்டன. சில பொழுதில் சடலங்கள் எரிந்து கொண்டுமிருந்தன. மூடநம்பிக்கைகள் பலவற்றினாலும் ஆட்கொள்ளப்பட்டிருந்த எம்மூதாதையர் தமது வழிப்பயணத்திற்கு உறுதுணையாக இருப்பார்கள் என்ற நம்பிக்கையில் தெருவோரங்களில் வயிரவ சூலங்களையும் சிலவிடத்து சிறு கோயில் கொட்டில்களையும் அமைத்திருந்தனர். ஆலமரம், அரசமரம் , புளியமரம், வேப்பமரம், மருதமரம் போன்ற பாரிய விருட்சங்களின் அடியில் இவற்றினைத் தாபித்திருந்தனர். ஆலடி வயிரவர், அரசடிப்பிள்ளையார், புளியமரத்தடி கோயில்கள் அமைந்தன. சூழல் ஏற்படுத்திய பயம் இக்கோயில்கள் உருவாகக்காரணமாயின. அக்கோயில்களைக் கடக்கும்போது தரித்து நின்று சிலபொழுது தங்கி வணங்கிச் செல்கின்ற வழக்கம் பாரம்பரியமான பழக்கமாக மாறியது. வல்லைவெளி முனியப்பர், கல்லுண்டாவெளி வயிரவர், தெரு முருகண்டிப்பிள்ளையார் எனும் கடவுள் அவ்வகையில் முக்கியம் பெற்றுள்ளனர். □□□

## சிந்தித்தால் சிரிப்பு வரும் ...!

சிங்காரச் சிரிப்புகள் சிரித்தே
சிந்தையை சிதறியடிப்பான்
சீண்டும் சிரிப்பின் நோவில்
இன்பம் கண்டிடுவான்
சிந்தையில் சினம் வைத்தே
சிரிப்புதனை உதிர்ந்திடுவான்
சீர் கெட்ட நிலை கண்டால்
பெரிதாயே சிரித்திடுவான்

சீராக வாழ்வதற்காய் சிரிப்பை
தந்த கடவுளுமே
சீரின்றிய சிந்தையினால் நீ சிரிக்க
சிந்தை கலங்கியே
கடவுளும் அழுகின்றார்
உன்னாலே!

- பொன் . சுகந்தன்

# பொமரேனியன்

என் வீட்டுள்
முதன் முதலில் நீ நுழைந்த போது
மிகக் கவனமாகவே எதிர் கொண்டேன்
நாய்க்கடிகள் பற்றிய
அம்மாவினதும்
அக்காவினதும்
அனுபவங்கள் என்னைப் பயமுறுத்தின.
நெருங்கி வராமல்
உன் அசைவுகளை
அவதானித்தபடியே இருந்தேன்.
இளமைக் கம்பீரமும்
சடைமயிர்க் கற்றையும்
என்னையே சுற்றிவந்த
துருதுருத்த பார்வையும்
என்னுட் பரவசத்தை விதைத்தன.
எல்லோரையும் போல
எனக்கெனவும் ஒரு நாய்க் காவலைப்
பெருமிதமாய் உணர்ந்தேன்.
உச்சு எனும் அழைப்பின்
தாபத்தைப் புரிந்து கொண்டு
ஒட்டி உரசி உறவாடத் தொடங்கினாய்!

அறைக்குள் நுழைந்து
கால்களை நக்கி
நெஞ்சிற் குழைந்து
பல்லுப் படாமல் மெல்லக் கடித்து
என் மேல்
ஏறிப்படுக்கவும் உரிமைபெற்றாய்!

அதன் பின்...
மெல்ல மெல்ல மாறத்தொடங்கினாய்.
சுவர்த்திசை எங்கும் காலை உயர்த்தி
சிறுநீர் கழித்துன் எல்லைப் பரப்பை
ஏனைய நாய்களுக்கு உணர்த்த முயன்றாய்
ஒவ்வொரு வரவிலும்
மோப்பம் பிடித்துப்
பிறிதோர் வரவின்மை
உறுதிப் படுத்தினாய்.
காலப் போக்கிலே



நம்பிக்கை இழந்தாய்!
என்னைப் பிரிந்து வேறிடம் சென்றாய்!
இழப்பின் துயரம்
என்னை வருத்தினும்
பஞ்சு மேனியாற் கொஞ்சிய தகிப்பால்
வேறோர் நாயை
அவாவும் என் நெஞ்சு!

---

# ஏட்டுச் சுரைக்காயும் கூட்டுக் கறியும்

பெண்கள் பற்றிய
மரபு ஆணிகள்
என் உள்ளத்தில் ஆழமாகவே
அடிக்கப்பட்டுள்ளன!
என்தாயும் சகோதரியும் நடைபயின்ற
பழைமைக் கண்ணோட்டத்தில் தான்
உன்பற்றிய என் எதிர்பார்ப்புக்கள்!


* * * *

பெற்ற கல்வியும்
பெண்ணியச் சிந்தனைகளும்
உன்னைத்
திமிர்ந்த ஞானச் செருக்கோடு
நடப்பித்துள்ளன.
உன் நவீனத்துவம் என் பழைமைகளுக்கு
முற்றிலும் முரணாகக் கூட இருக்கலாம்.
எங்கள் தனித்துவத்தில்
சில விட்டுக் கொடுப்புகள்
சிரமமானதாகவும் இருக்கலாம்.

* * * *

எனினும்...
தண்டவாளப் பிணைப்பிலும்
வீணையின் நரம்புகள்
இனிய நாதத்தைப் பிரவாகிப்பதென
ஏட்டுச் சுரைக்காய் களெல்லாம்
எங்கள்
கூட்டுக்கறியைச் சுவைகெடுப்பதில்லை!

- ம.பா.மகாலிங்கசிவம்



# வீழ்ந்து விடாதிருப்பேன்...

- த.கலாமணி

எல்லோரிடமும் பரபரப்புத் தெரிந்தது.

"அவர்கள் நெருங்கிவந்து கொண்டிருக்கிறார்களாம்..."

எப்படியோ இச்செய்தி அக்கூட்டத்தினரிடையே பரவிவிட எல்லோரும் உசாரானார்கள். அதுவரை காலைக்கையை விட்டேற்றியாக எறிந்து படுத்துக்கொண்டும் கையை முட்டுக்கொடுத்துக் கொண்டு சாய்ந்தும் இருந்தவர்கள் அந்த நிலைகளிலிருந்து சுதாகரித்து எழுந்து தங்களை ஆசுவாசப்படுத்திக்கொண்டனர்.

ஆண்கள், பெண்கள், குஞ்சு குருமான்கள் என்று மக்கள் கூட்டம் அங்கு நிரம்பி வழிகிறது. ஊர் முழுவதுமே அங்கு கூடி இருக்கிறது. பிரகாரத்தின் மூலைமுடுக்கெல்லாம் ஆண், பெண் என்ற பேதம் எதுவுமின்றி அருகருகாக அமர்ந்து அவர்கள் பேதலித்துப்போய் உட்காந்திருந்தார்கள். அவர்களின் முகங்களில் "களை" இல்லை. களைத்துப் போனவர்களைப்போல சோர்ந்து துவண்டு போயிருந்தார்கள்.

சற்றுமுன்னர் அவர்களுக்கு ஏற்பட்ட பயங்கரமான அநுபவம் அவர்களை அந்த நிலையில் உறைந்துபோக வைத்திருக்கிறது. வானொலியிலும் துண்டுப்பிரசுரங்களிலும் விடுக்கப்பட்ட அறிவித்தலைத் தொடர்ந்து இன்று காலையில் அங்கு கூடியிருந்தவர்கள் சற்றும் எதிர்பாராத விதமாகத்தான் அது நடந்தது சத்தத்துக்குப் பயந்து வீடுகளுள் முடங்கி ஒடுங்கிக் கிடந்தவர்கள் "அருகிலுள்ள ஆலயங்களில் எல்லோரையும் கூடி இருக்கட்டாம்" என்ற செய்தியை அலட்சியம் செய்யாமல் அங்கு கூடினார்கள். கோயிலின் சுற்றுப்பிரகாரத்திலும் வெளியே ஆலமர நிழலிலும் அமர்ந்து, கூடிக்கதைத்துக் கொண்டிருந்தவர்கள் ஆலயத்தின் சுற்றுவட்டத்துள் எழுந்த அதிர்வொலிகளின் அச்சத்தில் கெலித்துப் போனார்கள். வெளியிலிருந்தவர்கள் எல்லாம் ஆலயத்தினுள் முண்டியடித்து ஓடிச் சென்றார்கள். "இனி இதில் தங்கள் கெட்டித்தனம் என்று எதுவமே இல்லை" உன உணர்ந்து தம் பெருமைகளை, பதவிகளை, அதிகாரங்களை, கோபதாபங்களை எல்லாம் உதறிவிட்டு "ஆலடியானே" என்றும் "பாலகணபதி" என்றும் கதறியழுதார்கள்.

எல்லாமே அதிர்வொலிகள் அடங்கும் வரை தான். சத்தம் அடங்கியதும் மீண்டும் கூடிக் கதைக்கத்தொடங்கினார்கள். அந்த அதிர்வொலிகளின் தாற்பரியத்தை சிலர் தங்களுக்குத் தெரிந்தவகையில் விளக்கிக் கொண்டிருந்தார்கள்.

இந்த நேரத்தில் இன்னும் சிலர் ஆலயத்துக்கு வந்து சேர்ந்தார்கள். அதுவரை ஆலயத்துக்கு வராமல் வீடுகளில் இருப்பதே பாதுகாப்பானது என்று நம்பியவர்கள் சற்றுமுன் எழுந்த அதிர்வொலிகள் இடங்கியதும் ஆலயத்துக்குப் புறப்பட்டு வந்திருக்கிறார்கள். அவர்கள் கொண்டு வந்த செய்திதான் எல்லோரிடத்திலும் புதிய பயத்தைத் தோற்றுவித்திருக்கிறது.

"அவர்கள் நெருங்கி வந்து கொண்டிருக்கிறார்களாம்;

அடுத்த கட்டத்தின் பயங்கரம் மெல்ல மெல்ல அவர்களைத் தொற்றிக்கொள்ளத் தொடங்கியதும், தம் பிள்ளைகளை எவ்வாறு காப்பாற்றிக் கொள்வதென்றயோசனை அவர்களைப் பற்றிக் கொண்டது

சிலர் தாம் எதிர்கொள்ள இருக்கின்றபுதிய நிலைமை பற்றிய ஆருடங்களைச் சொல்லத் தொடங்க, அருகிலிருந்து கேட்டுக் கொண்டிருந்த சில தாய்மார்கள் தம்பிள்ளைகள் எங்கே இருக்கிறார்கள் என்று தேடத்தொடங்கினார்கள்.

அவர்கள் வரும்போது தம் மடிகளிற் படுத்திருக்மாறு சில தாய்மார் தம் பிள்ளைகளுக்குப் புத்திமதி சொன்னார்கள். வளர்ந்த பிள்ளைகளுக்கு அது சங்கோசத்தை ஏற்படுத்தினாலும் ஒரு சிலர் தமது தாய்மாரின் பக்கலில் வந்து அமர்ந்து கொள்கின்றனர்.

அண்மையிற்தான் புதிதாக மணம் முடித்த இளந்தம்பதியினரிடத்து கண்களில் கலவரம் தெரிகிறது. ஒருவரையொருவர் பார்க்கின்ற பார்வை எத்தனையோ கதைகள் சொன்னது. இதை

அவதானித்த சிலர் அவர்களின் மேல் பச்சாத்தாபப்பட்டு பெருமூச்செறிந்தார்கள்.

இளம் விடலைகள் தங்கள் "சேஷ்டைகளை" எல்லாம் மறந்து பேய் அடித்தது போல விறைத்துப்போய் நின்று கொண்டிருந்தார்கள் முன்பே கேட்டிருந்த கதைகளும் பத்திரிகைச் செய்திகளும் அவர்கள் ஞாபகத்துக்கு வந்து பயமுறுத்திக் கொண்டிருந்திருக்க வேண்டும். இன்னும் ஒரு சில நிமிட நேரங்களில் தங்களின் எதிர்காலம் என்னவாகுமோ என்று ஏங்கிக் கொண்டிருந்தார்கள்.

வேதநாயகம் மாஸ்ரர் எல்லாவற்றையும் அவதானித்துக்கொண்டே இருந்தார். மனைவியும் மூன்று பிள்ளைகளும் இருந்த இடத்திலிருந்து பத்து மீற்றர் அளவு தூரத்தில் சுப்பிரமணிய சுவாமியின் ஆலயத்தருகில் தூணோடு சாய்ந்து அவர் அமர்ந்திருந்தார்

வேதநாயகம் மாஸ்ரர் ஒரு போதுமே இப்படி இடிந்துபோய் அமர்ந்ததில்லை. அவரின் பெயரைக் கேட்டால்இந்த ஊரே ஒரு முறை நிமிர்ந்து உட்காரும் அந்த அளவுக்கு கண்ணியம் கண்டிப்பு மிகுந்த வராகவும் நேர்மையாளராகவும் அவர் விளங்கி வருபவர். உலக நடப்புத் தெரிந்தவராக. நாலு பேருக்கு நியாயம் சொல்லக் கூடியவராக. பிணக்கு களைத் தீர்க்கக் கூடியவராக அவரை அந்த ஊர் இனங்கண்டு வைத்திருக்கிறது. உலக அரசியலையே பிட்டுப்பிட்டு அலசக்கூடியவர் இன்று இடிந்துபோய் உட்கார்ந்திருக்கிறாரென்றால்..!

வேதநாயகம் மாஸ்ரரிடம் பேசும்போது அளந்து பேசவேண்டும். காற்றுவாக்கிலே வருகின்ற செய்திகளைச் சொல்லி அவரிடம் விபரம் கேட்டால் அவர் கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாமல் திண்டாடவேண்டி வரும். ஆனால் ஏனையோர் தன்னைச் சூழ்ந்திருக்கும் போது அண்மைக்கால நிகழ்வொன்று பற்றி அவர் அவர்களுக்கு விளக்கம் அளித்துக் கொண்டிருப்பார்.

வேதநாயகம் மாஸ்ரர் இன்று ஒருவருடனும் ஒன்றும் பேசாமல் இருந்தாலும் அவரின் பார்வை அங்குள்ளவர்களின். செயல்களை அவதானித்துக் கொண்டுதான் இருக்கிறது. இடைஇடையே தன் குடும்பத்தவர்கள் மீதும் அவர் பார்வையை எறிந்து கொண்டுதான் இருக்கிறார்.

வேதநாயகம் மாஸ்ரரின் கண்கள் சில சந்தர்ப்பங்களில் அவரின் மனைவியின் கண்களைச் சந்தித்துக் கொள்கின்றன. அவ்வேளைகளி லெல்லாம் அவரின் மனைவி சங்கடப்படுவதை வேதநாயகம்மாஸ்ரர் உணர்ந்து கொள்ளாமலில்லை இரண்டு கிழமைகளாக இருவருக்குள்ளும் ஒரு முறுகல்நிலை. எல்லாம் மூத்தவள் சாந்த நாயகியைப் பற்றியது தான்.

வேறு விடயமென்றால் வேதநாயகம் மாஸ்ரர் நிதானம் இழக்க மாட்டார். இது சாந்தநாயகியின் வாழ்க்கைப் பிரச்சினை.

சாந்தநாயகி க.பொ.த.பரீட்சையில் மூன்றுபாடங்களில் சித்தியடைந்திருந்தாலும் பல்கலைக்கழக அனுமதிக்கான வாய்ப்பை இழந்தவள். மீண்டும் பரீட்சை எடுக்க மாட்டேன் என்று விடாப்பிடியாக நின்றவளை வெளிவாரியாக பட்டப்படிப்பைத் தொடர வேதநாயகம் மாஸ்ரர் தான் அனுப்பிவைத்தார்.

முதல் இரண்டுவருடப் பரீட்சைகளிலும் சித்தியடைந்து இப்போது மூன்றாம் வருடப் பரீட்சைக்கு சாந்தநாயகி தயாராகிக் கொண்டிருந்தாள் அவள் பட்டப்படிப்பை முடித்துக் கொண்டால் இரண்டொரு வருடங்களுள் அவளுக்கு நல்லமுறையில் திருமணம் செய்து முடித்துவிட வேண்டுமென்பதுதான் வேதநாயகம் மாஸ்ரரின் ஆசை. அதற்காக அவர் தன்னைத் தயார்ப்படுத்தி வைத்திருந்தார். தன்னுடைய "கொமிற்றட் பென்ஷன்" காசில் ஒரு சதம் கூட எடுக்காது சாந்தநாயகியின் பெயரில்தான் வங்கியில் சேமிப்புக் கணக்கில் வைப்பில் வைத்திருக்கிறார். அவளுக்கு வேண்டிய நகைகளைக்கூட அவ்வப்போது செய்து கொடுத்திருக்கிறார். இந்த நேரத்தில் தான் அவருக்கு "அது" தெரியவந்தது.

வேதநாயகம் மாஸ்ரரிடம் படித்தவன் தான் கமலநாதன். நல்லபிள்ளை என்று கணிப்பிட்டும் வைத்திருந்தார். தாய், தகப்பன் இல்லாத பிள்ளை. தன் சிறியதாயுடன் தான் வசித்துவந்தான் சிறியதாயும் சிறியதகப்பனும் எப்படி இவனைக் கழற்றிவிடலாம் என்று நினைத்திருப்பது கூட வேதநாயகம் மாஸ்ரருக்குத் தெரியும். கொஞ்சம் கவனமாகப் படித்திருந்தால் பல்கலைக்கழகம் போயிருப்பான். ஏ.எல் படிக்கும் போதே இடை இடையே மேசன்மாருடன் கூலியாளாக வேலைக்கும் போய்வந்து படித்துக் கொண்டிருந்தமையால் பரீட்சையில் கூடிய பெறுபேற்றைப் பெற முடிய வில்லை. ஏ.எல்லில் மூன்று பாடங்களில் சாதாரண சித்தியுடன் புறவாரியாக அவன் பட்டப்படிப்பைப் படித்திருக்கலாம். ஆனால் வழிகாட்ட ஒருவரும்

அவனுக்கிருக்கவில்லை.

சென்ற வருடம் ஒரு வேலைக்கு விண்ணப்பிப்பதற்காக வேதநாயகம் மாஸ்ரரிடம் கமலநாதன் வந்த போதுதான் அவர் அவனைப் பற்றி விசாரித்தார். புறவாரியாகப் பட்டப்படிப்பை முடித்துவிட்டால் இலகுவாக ஆசிரிய நியமனம் என்றாலும் பெற்றுவிடலாம் என்று கூறி வைத்தார். அதனைக் கருத்திலெடுத்த கமலநாதன் முதலாம் வருடப் படிப்பை முடித்து இப்போது இரண்டாம் வருடத்தில் இருக்கிறான்.

வேதநாயகம் மாஸ்ரருடன் ஏற்பட்ட இந்த தொடர்பின் பின்னர் கமலநாதன் இடைக்கிடை அவர்களின் வீட்டுக்கும் வந்துபோவான். சாந்தநாயகியிடமும் பாடக்குறிப்புகளை வாங்கிச் செல்வான். ஏ.எல்.பரீட்சை முடித்தவுடன் இந்த ஆலோசனை கிடைத்திருந்தால் இடையில் மூன்றாண்டுகளை வீணாக்காமல் இந்த நேரம் பட்டப்படிப்பை முடித்திருக்கலாமே என்ற எண்ணம் எழுந்து "இப்போதாவது படிப்பை மேற்கொள்ள முடிந்ததே" என்ற நிறைவுடன் வேதநாயகம் மாஸ்ரரையும் நன்றியுடன் அவன் நினைத்துக் கொள்வான்.

இந்த நேரத்தில் தான் வேதநாயகம் மாஸ்ரருக்கு அது தெரிய வந்தது. நம்பிக்கைத் துரோகம் என்று உடனடியாக அதற்குப் பெயர்சூட்டிவிட அவர் விரும்பவில்லை. சந்தர்ப்பமும் சூழலும் அமைந்தால் ஒருவர்மீது ஒருவர் காதல் கொள்வதற்கு வாய்ப்புண்டு என்பதையும் அவர் உணர்ந்திருந்தார். ஆனால் அந்தச் சங்கதியை தன் மனைவி தன்னிடம் ஏன் மறைத்து வைத்திருந்தாள் என்பது தான் அவருக்குப் புதிராக இருந்தது. அதனால்தான் இந்த இரண்டுகிழமைகளாக அவர்களுக்குள் பிணக்கும் கூட

சாந்தநாயகியின் திருமணத்தைப் பற்றி வேதநாயகம் மாஸ்ரர் பெரிய கணக்குப் போட்டு வைத்திருந்தார். அவரின் செல்வாக்கிற்கு அவர் விட்டில் திருமணம் செய்ய பலர் போட்டி போட்டுக்கொண்டு நிற்பார்கள் என்பதும் அவருக்குத் தெரியும். விரலுக்கு விஞ்சிய வீக்கத்தை அவர் விரும்பாவிட்டாலும் நல்ல உத்தியோகமுள்ள ஒரு மாப்பிள்ளை எடுக்க வேண்டும் என்பது அவர் விரும்பமாக இருந்தது. சாந்தநாயகி - கமலநாதன் காதல் விவகாரம் எல்லாவற்றையும் தவிடு பொடியாக்கி விட்டது.

நல்ல ஒரு வாழ்க்கையை அமைத்துக் கொடுப்பதை மாத்திரமன்றி இனசனசம்பத்து களையும் தன் மகளுக்குச் சம்பாதித்துக் கொடுத்து விட வேண்டும் என்றுதான் வேதநாயகம் மாஸ்ரருக்கு விருப்பமாக இருந்தது. ஒரு சராசரித் தந்தைக்குரிய விருப்பங்களைக்கூட தன்மகளுக்குச் செய்யா விட்டால் தகப்பன் ஸ்தானத்திலிருந்து தனது கடமையில் தவறியவனாவேன் என்று வேதநாயகம் மாஸ்ரர் தனக்குத்தானே சொல்லிக் கொண்டார்.

கமலநாதன் பெற்றோரைத் தின்னி. சிறியதாயும் சிறிய தகப்பனும் கூடப் பொல்லா தவர்கள். அவர்களுடனான உறவு சாந்தநாயகிக்கு மட்டுமெல்லாமல் தன் குடும்பத்துக்கும் தொல்லை யாகத்தான் இருக்கும் என்பது வேதநாயகம் மாஸ்ரரின் கணிப்பு. இந்த ஒவ்வாத காதலின் தாற்பரியத்தை எடுத்துச் சொல்லி சாந்தநாயகி - கமலநாதன் காதலை அரும்பிலேயே கிள்ளி எறிந்து விடலாம் என்றுதான் அவர் நினைத்தார். சாந்த நாயகியிடம் அவர் இது பற்றிக் கதைத்தபோது எந்தவித மறுப்புக் கதையும் சொல்லாமல் மௌனமாக அவள் இருந்ததை அவர்தனக்குச் சாதகமாக எடுத்துக் கொண்டார். கமலநாதனிடமும் எடுத்துச் சொல்லி அந்த உறவைக் கத்தரித்து விடலாம் என்றுதான் அவர் நினைத்துக் கொண்டிருந்தார். இந்த வேளையில்தான் நாட்டு நிலைமைகளில் எதிர்பாராத திருப்பங்களெல்லாம் ஏற்பட்டு. எல்லோருமே ஆலயத்தில் தஞ்சமடைய வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

வேதநாயகம் மாஸ்ரரின் கண்கள் கமலநாதனையும் நோட்டமிடாமலில்லை அவரின் குடும்பத்தினரது பார்வை வீச்சுக்குள் அடங்கும் தூரத்தில்தான் அவன் அமர்ந்திருந்தான். எதனையோ பறிகொடுத்தவனைப்போல அவனின் கோலம் காணப்படுகிறது. தலையைக் கூடச் சீவாமல் வீட்டில் கட்டிய சாரத்துடன் கசங்கிய ஒரு சேர்ட்டையும் அணிந்திருக்கின்றான். அக்கூட்டத் திலும் அவன் தனிமைப்பட்டிருப்பதான உணர்வுடன் அவன் இருந்திருக்க வேண்டும். எவருடனும் ஒன்றும் பேசாமல் அமைதியாக இருந்தான். வருபவர்கள் விசாரணைஎன்றபேரில் தன்னைப் பிடித்துக் கொண்டு போய்விடுவார்களோ என்ற அச்சமும் அவனின் மௌனத்துக்குக் காரணமாக இருக்கலாம் என்று வேதநாயகம் மாஸ்ரர் நினைத்தார். அவனை விசாரனைக்கென்று அழைத்துப்போய் விட்டால் அவனைப்பற்றி விசாரித்தறியக்கூட அவனுக்கென்று ஒருவருமில்லை என்பதும் அவருக்குத் தெரியும்.

சாந்தநாயகியின் நிலைப்பாடு என்னவாக இருக்கும் என்று நினைத்துக்கொண்டு அவனை இரகசியமாகக் கண்காணிக்கத் தொடங்கிய போதுதான் வேதநாயகம் மாஸ்ரருக்குத் திகைப்பாக இருந்தது. சாந்தநாயகி அடிக்கடி கமலநாதன் இருக்கும் பக்கமாகத் திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் முகத்திலும் கவலை தெரிகிறது. எல்லாவற்றுக்கும் கமலநாதன் நிர்ச்சலனமாகத்தான் இருந்தான். சாந்தநாயகியின் பார்வையைச் சந்திக்க நேர்ந்த வேளையிற் கூட தலையைத் தாழ்த்தி கீழே நோக்கியவாறே அவன் எதுவித அசுமாத்தமும் இன்றி இருந்தான். சாந்த நாயகியையும் கமலாநாதனையும் நோட்டமிட்டுக் கொண்டிருக்கும் வேதநாயகம் மாஸ்ரரின் கள்ளத் தனம் மனைவிக்கு விளங்கியிருக்க வேண்டும். இடைஇடையே சாந்தநாயகியுடன் பேச்சுக் கொடுத்து அவளின் கவனத்தைதிருப்பிக் கொண்டிருந்தாள்.

இப்போது கூட்டத்தில் இருந்தவர் களிடையே சற்றுச் சலசலப்புக் காணப்படுகிறது.

பிள்ளையார் கோயிலின் வடக்குப் புறத்திலுள்ள வெட்டைவெளிக்கும் அப்பாலுள்ள சுடலயடிக்கு அவர்கள் நெருங்கி வந்து விட்டார்களாம். சுடலைக் காணிக்குள் உள்ள பனங்கூடலில் மறைந்து மறைந்து அங்குலம் அங்குலமாக நகர்ந்து கொண்டிருக்கிறார்களாம்.

மெல்ல மெல்லக் கூட்டத்தினரிடையே பரவிய செய்தி வேதநாயகம் மாஸ்ரரின் காதுகளுக்கும் எட்டுகின்றன.

இளந்தாரிகள் உசாராகுவது போலப் பட்டது. தாங்கள் இருந்த இடங்களிலிருந்து விலகி கூட்டத்தோடு கூட்டமாகக் கலந்தும் பெண்களின் பக்கமாக அமர்ந்தும் பாதுகாப்பைத் தேடிக் கொள்கிறார்கள்.

வேதநாயகம் மாஸ்ரர் கமலநாதனை நோக்குகிறார். எந்தவொரு சலனமுமின்று இருந்த இடத்திலேயே அவன் இருந்து கொண்டிருக்கிறான். கண்களில் கலக்கம் தெரிகிறது. சாந்தநாயகி அவன் பக்கமாகத் திரும்பி ஏதோ சைகை காட்டுவது தெரிகிறது. கமலநாதனிடத்தில் எந்த மாற்றமும் இல்லை.

இப்போது சாந்தநாயகி எழுந்து கமலநாதனைத் தங்களுக்கருகே வந்தமர்ந்து கொள்ளுமாறு கைகாட்டி அழைக்கிறாள். அவன் சற்றுத்தயங்கிவிட்டு பேசாமல் இருக்கின்றான்.

சாந்தநாயகியின் கண்களில் கண்ணீர் அரும்பி நிற்பது வேதநாயகம் மாஸ்ரருக்குத் தெரிகிறது. சாந்தநாயகியையும் கமலநாதனையும் அவர் நன்றாகக் கவனிப்பது அவர் மனைவிக்குச் சங்கடமாக இருக்கிறது.

'அவர்களுக்கிடையில் அப்படி ஒன்றும் இல்லை' என்று மறுத்து மகளுக்கும் புத்திசொல்லி தன் கணவரைச் சரிக்கட்டி இருந்த வேளையில் இவற்றையெல்லாம் அவர் கவனிக்கும்படி ஆகி விட்டதே என்று அவள் கலங்கிக் கொண்டிருந்தாள்.

வேதநாயகம் மாஸ்ரர் தன் இடத்திலிருந்து மெதுவாக எழுகிறார். அவரின் குடும்பத்தினரை நோட்டமிட்டுக்கொண்டிருந்த ஒரு சிலருக்கு ஆச்சரியமாக இருக்கிறது. இந்த நேரத்தில் சூழ்நிலையின் யதார்த்தத்தை எடுத்துச் சொல்லி கமலநாதனையும் ஏடாகூடமாக அவர் ஏசப் போகிறாரே என்று அவர்கள் அச்சமுறுகின்றனர்.

வேதநாயகம் மாஸ்ரர் கமலாநாதனின் பக்கமாகச் சென்று நிற்கிறார். அடுத்த கணத்து விளைவுகளை எண்ணி அவர் மனைவி என்ன செய்வதென்றறியாது ஏம்பலித்துப்போய் தன் கணவனின் பக்கமாக நகர்ந்து வருகிறாள். அவரோ கைச்சைகையால் சாந்தநாயகியை அருகாக அழைக்கிறார். சாந்தநாயகி தயங்கித் தயங்கி கலக்கத்துடன் தந்தையை நெருங்கிவருகிறாள்.

"பெரியோர்களே ஒரு நிமிடம் இங்கே கவனியுங்கள்".

வேதநாயகம் மாஸ்ரரின் குரல் கணீரென்று ஒலிக்கிறது.

எல்லோருடைய கவனமும் அவர்கள் பக்கமாகத் திரும்புகிறது.

வேதநாயகம் மாஸ்ரர் கமலநாதனின் கையைப் பிடித்து அவனை எழுந்திருக்குமாறு கூறுகிறார். கமலநாதன் செய்வதறியாது திகைத்துப்போய் எழுந்து நிற்கின்றான்.

"அன்புக்குரிய உறவினர்களே, பெரியோர்களே! உங்கள் எல்லோர் முன்னிலையிலும் உங்கள் எல்லோரையும் சாட்சியாக வைத்து எனது மகள் சாந்தநாயகிக்கும் தில்லையம்பலத்தின் மகன் கமலநாதனுக்கும் இந்த முருகப்பெருமான் சந்நிதான த்திலே திருமணம் செய்து வைக்கிறேன்."

கூறிக்கொண்டே வேதநாயகம் மாஸ்ரர் இருவர் கைகளையும் ஒன்றாகப் பிணைத்து விடுகின்றார். எல்லோரும் புதுமையாக அவரைப் பார்க்கின்றனர். ஆனாலும் எல்லோரின் முகங்களிலும்

ஒரு சிறு மலர்ச்சி தெரிகிறது.

சாந்தநாயகியும் கமலாநாதனும் அதிர்ந்துபோய் அவரின் கால்களில் விழுந்து வணங்குகின்றனர். அவர் மனைவி அந்தக் காட்சியையே நம்பாதவளாய் கணவனின் பக்கத்தில் வந்து நிற்கிறாள். வேதநாயகம் மாஸ்ரர் எல்லா வற்றையும் ஏற்றுக் கொள்ளுமாற்போல் சிறிது புன்னகைக்கிறார்.

எல்லாம் ஒரு சில நிமிடங்கள் தான்.

எல்லோரும் குதூகலத்தை மறந்து ஆலய வாசற்பக்கமாக நோக்குகின்றனர். அவர்கள் ஆலயத்தினுள் பிரவேசித்துக் கொள்டிருந்தார்கள்.

திக்குத்திக்காகப் பிரகாரம் முழுவதும் சூழ்ந்த அவர்கள். விடலைகளாகப் பார்த்து ஒவ்வொருவராகக் கைகாட்டி எழுப்பி தம்மிடம் வருமாறு பணிக்கின்றனர். அவர்களுள் ஒருவன் கமலநாதனைக் கைகாட்டி அழைக்கிறான். சாந்த நாயகி அருகிலிருந்த பெண்ணொருத்தியிட மிருந்த ஒரு கைக் குழந்தையையும் தூக்கிக் கொண்டு வந்து அவன் கையில் தந்து அவனருகாக நிற்கிறாள். அந்த "அவன்" குழந்தையைக் கொடுத்துவிட்டு வருமாறு கமலநாதன் அழைக்கிறான்.

குழந்தையை அவள் கையில் கொடுத்து விட்டு அவள் அருகாகக் கூடவர "அவனை" நோக்கி நடந்துவரும் கமலநாதனின் நடையில் உறுதி தெரிகிறது.□□□

---

ஜீவநதி


**பிரதம ஆசிரியர்கள் :**

**சின்னராஜா விமலன்**

**கலாமணி பரணீதரன்**

**நிருவாக ஆசிரியர்:**

**துரைராஜா இராஜவேல்**



அட்டைப்படம் : பாஸ்கர்

**ஆலோசகர் குழு:**

திரு. தெணியான்

திரு. குப்பிளான் ஐ. சண்முகலிங்கம்

திரு. கி. நடராஜா



**தொடர்புகளுக்கு :**

கலை அகம்

சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார்வீதி

அல்வாய்.

தொலைபேசி : 0775991949

0776991015

Fax : 0212263206

E.mail : jeevanathy @yahoo.com



பதிப்புரிமை : கலை அகம் வெளியீடு

வங்கித் தொடர்புகள்:

K.Bharaneetharan & S.Vimalan

HNB - Nelliady Branch

A/C No.118-00-02-0945701-1



இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள். பிரசுரத்திற்கு ஏற்றுக் கொள்ளப்படும் படைப்புகளைச் செம்மைப்படுத்த ஆசிரியருக்கு உரிமை உண்டு.



# நாடகப் படைப்பாக்கச் செல் நெறிகள்

- க.திலகநாதன்

கலைப்படைப்பொன்றை படைப்பாக்கம் செய்பவருக்கு கற்பனை, படைப்பாக்க உந்து சக்தி, அவதானம் என்பன அவசியமாகின்றன. நாடகப் படைப்பாக்கமும் அவ்வாறே. நாடகத்தைப் படைப்பாக்கம் செய்பவர்களில் ஆசிரியர்கள் முக்கியமானவர்களாகக் காணப்படுகின்றனர். அத்தகைய ஆசிரியர்களுக்கு உதவுமுகமாக இங்கு சில விடயங்களைக் கூறிச் செல்லலாம் என எண்ணப்படுகிறது.

நாடகமும் அரங்கியலும் பாடத்தை பயிலும் ஆசிரியரும் மாணவர்களும் மற்றும் பிறரும் நாடக உலகில் நின்று ஈடுபட்டு வருபவருக்கும் பயனுள்ளதாக இத்தகைய படைப்பாக்கம் பற்றிய கட்டுரை உதவலாம்.

ஒரு நாடகத் தயாரிப்பில் நாம் கையாள வேண்டிய படிமுறையான செயற்பாடுகள். ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட நாடகத் தயாரிப்புக்கு அவசியம். நாடகம் நடிகரின் கலை எனக் கூறப்படுகின்றபோதிலும் ஒரு நாடகத் தயாரிப்புக்கு நெறியாளனே பிரதான மானவனாகக் கணிக்கப் பெறுகிறான். நாடகம் என்பது கூட்டுக்கலை எனக் கூறுவர் (CollectiveArt) ஆனால் ஓவியம், சிற்பம், இலக்கியம் எனப்பார்க்கும் போது தனி ஒருவனே உரிமையாளனாக இருப்பார். நாடகம் அவ்வாறு அல்ல. அது இசை, நடனம், ஓவியம், கட்டடம், இலக்கியம், சிற்பம், அனைத்தையும் இணைத்து குழு சார்ந்த முறையில் தயாரிக்கப்படுவது ஆகும். இவற்றை இணைத்துச் செயற்படுத்துபவன் நெறியாளர் ஆவான். அவர் கையிலேயே நாடகத்தின் வெற்றி தோல்வி தங்கியுள்ளது. கலைஞர்களையும் கைவினைஞர்களையும் தேவைப்படுவனவற்றையும் நாம் பின்வரும் ஒழுங்கில் நோக்கலாம்.

## தயாரிப்பாளர் (Producer)

ஒரு நாடகம் தயாரிப்பதற்கான அடிப்படை, தயாரிப்பாளரிலேயே தங்கியுள்ளது. இவர்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

01. தொழில் முறைத் தயாரிப்பாளர்
02. பயில்முறைத் தயாரிப்பாளர்
03. கலைத்துவத் தயாரிப்பாளர்

தொழில் முறைத்தயாரிப்பாளர்கள் நாடகப் பண்பாடுள்ள அனைத்து நாடுகளிலும் உள்ளனர். இவர்கள் வர்த்தக நோக்கம் கொண்டவர்கள். இவர்களின் நோக்கம் இலாபமீட்டலே. இதன் மூலம் நாடகத்திற்கான அங்கீகாரமும் அவர்களால் வழங்கப்படுகிறது என்று கூடச்சொல்ல முடியும். மேற்கு நாடுகளிற் குறிப்பாக அமெரிக்கா, பிரித்தானியா போன்றவற்றில் நாடகம் பார்ப்பதற்கான விற்பனவுச் சீட்டின் விலை அதிகரித்ததாக இருப்பதைக் காண முடியும். இதேபோன்ற நிலை ஆசிய நாடுகளிற் காணப்பட்டாலும், நாடகம் பார்ப்பதற்காக அதிக பணம் செலவழிக்க வேண்டிய தேவை குறைவு என்றே கூறலாம்.

பயில்முறைத் தயாரிப்பாளர்கள் எனும் போது அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிற் குறிப்பாக எமது இலங்கை போன்ற நாடுகளில் நாடகம் செய்பவர்கள் தொழிலுக்காக அல்லாது தயாரிப்பதைக் காண முடிகிறது. அவர்களுக்குத் தொழில் என்பதை விடத் தமது நிறுவனம் தான் முக்கியமாகிறது.

கலைத்துவமாக தயாரிப்பவர்கள் தமது கலைத்துவ ஆர்வத்தை நாடகங்களைத் தயாரிக்கின்றனர். இவர்களினால் அதன் திறமான தயாரிப்பிற்கு வழிசமைத்துக் கொடுக்கப்படுகிறது.

எமது ஆசிய மரபிலே, நிறுவனங்கள், கோவில்கள், விடுதலை இயக்கங்கள் எனப்பல்வேறு விதமானவற்றில் தொழிற்படுபவர்கள், தயாரிப்பில் ஆர்வம் காட்டுகின்றனர். அவர்கள் தமது கொள்கைகள், கோட்பாடுகளை மக்களிடம் எடுத்துச் செல்ல அவர்களே நாடகத் தயாரிப்பாளர்களாக மாறுகின்றனர். உதாரணமாக "சிக்குன் குனியா" பற்றிய செய்தியை நாடகத்தினூடாக காட்ட வேண்டும் என விரும்பும் சுகாதாரப் பிரிவு தாமே நாடகத்தை தயாரித்து மேடையேற்றலாம். ஆகவே இங்கு தயாரிப்பாளர் மாவட்ட சுகாதாரப் பிரிவு என்பதாகும்.

நாடகத் தயாரிப்பாளர் என்பவர் நாடகத்திற்கான திட்டம், நாடக இயக்குனர் தெரிவு என்பவற்றிற் கவனம் செலுத்த வேண்டும். நாடகம் தொடர்பான எல்லா விடயங்களையும் இவரே கவனிக்க வேண்டும். உதாரணமாக எழுத்துப் பிரதியை வாங்குதல் முதல் தொழில்நுட்பக் கலைஞர் தெரிவுவரை மட்டுமல்லாது அரங்கு, பார்வையாளர் போன்ற எல்லா அம்சங்களிலும் கவனம் செலுத்துதல் வேண்டும்.

## நாடக ஆசிரியர் (Script writer)

நாடகப் பிரதிகளை / எழுத்துருவை சிருஷ்டிப்பவர் நாடகாசிரியர். இவர் ஒரு கலைஞன் உலக நாடக அரங்க வரலாற்றிலே சிறந்த நாடகாசிரியர்கள் பலரைக் காண்கின்றோம். சோபோகிலிஸ், சேக்ஸ்பியர், பேணாட்சா, இப்சன், பிறெட், செக்கோவ், காளிதாசன், பவபூதி, பாசன், இராமானுஜம், மங்கை, வேலு சரவணன், சுந்தரலிங்கம், கணபதிப்பிள்ளை, சங்கரதாஸ் சுவாமிகள், சம்பந்த முதலியார், சரத்சந்திரா, தம்மயாகொட, மௌனகுரு, குழந்தை சண்முகலிங்கம்... இவ்வாறு பட்டியல் நீண்டு கொண்டே போகும் அளவிற்கு சிறந்த பல நாடகாசிரியர்கள் எம் மத்தியில் வாழ்ந்துள்ளனர். அவர்கள் யாவரும் அவர்கள் படைத்த பாத்திரங்களால் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். ஏன் சேக்ஸ்பியரை படிக்கிறோம்? ஏன் காளிதாசனைப் படிக்கிறோம்? என்றால் அந்த மனித நிலைச் சுட்டுகைக்காகவே, ஆகவேதான் அவர்கள் சிருஷ்டிகர்த்தாக்கள் ஆயினர்.

அந்த வகையிலே நாடக ஆசிரியர் என்பவர் சிறந்த படைப்புக்களைப் படைப்பவராக இருத்தல் வேண்டும். மேலைத் தேயங்களில் அநேகமாக ஒவ்வொரு குழுவிற்கும் ஒவ்வொரு நாடகாசிரியர் இருக்க வேண்டும். அல்லது இருப்பார் அவரே நாடகம் எழுதி அங்கு ஏற்படும் சிக்கல்களைத் தீர்த்துவைப்பார்.

நாடகம் எழுதும் ஆசிரியர் சமூகப் பொறுப்புள்ளவராகவும் சமூக பிரக்ஞை உள்ளவராகவும் இருத்தல் வேண்டும். சமூகத்தைக் கூர்ந்து அவதானிக்க வேண்டும். அத்துடன் நாடக நுணுக்கங்கள் பற்றியும் அது பற்றிய தெளிவும் நாடகாசிரியருக்கு இருத்தல் வேண்டும்.

## நெறியாளர்

நாடகாசிரியரால் எழுதப்பட்ட எழுத்துருவுக்கு உயிர் கொடுப்பவர் நெறியாளர். நாடகப்பிரதி எலும்புக்கூடு என்றால் தசையும் இரத்தமும் கொடுத்து நடமாட விடுபவன் நெறியாளனே.

முன்னர் கூறியது போன்று முழு அளிக்கைக்கும் பொறுப்பு இவரே. பன்முகத் தன்மை வாய்ந்த இவரது செயற்பாட்டிற் கவனமும் இறுக்கமும் வேண்டும். கற்பனை வளமுள்ள சமூக ஆர்வம் கொண்டவராக இருத்தல் வேண்டும். வெறுமனே நேரடியான விடயத்தைக் கூறாது. புதிய வெளிப்பாடுகளைப் பார்வையாளருக்குக் காட்டுதல் வேண்டும். பண்பாட்டின் வேரில் நின்று படைக்க வேண்டும். இதனாற்றான் இவனை மேடையின் படைப்பாளி என்கின்றோம்.

இத்தகைய நெறியாளர் என்பவர் நாடகம் பற்றிய அனைத்து விடயங்களையும் அறிந்தவராக இருப்பார். நடிகர்களின் திறமைகளை வெளிக்கொணர்பவர் இவரே. நடிபாகமாடும் நடிகர்களுக்குரிய பாத்திரங்களைச் செவ்வனே வழங்கி, நாடகத்தைச் சிறப்புடைய தாக்குபவர். நாடகத்திற்கு வேண்டிய துணைக்கருவிகளையும் துணைச்சாதனங்களையும் ஒழுங்கு படுத்தும் பொறுப்பும் இவருடையதாகும். எல்லாவற்றிற்கும் மேலாக நாடகாசிரியரின் பிரதிக்கு ஏற்றவாறு முழு நாடகத்தையும் திட்டமிட்டு அந்த எழுத்துருவுக்கு உயிர் கொடுப்பவர் எம்மத்தியில் நெறியாளரே. அனைத்து செயற்பாடுகளையும் செய்வதன் காரணமாக நாடகத்தின் வெற்றிக்கும் தோல்விக்கும் அவரே காரணகர்த்தா.

நெறியாளர் கையாளும் இரண்டு பொருட்கள் ஒன்று நடிகர், மற்றயது மேடை என்பர். நடிகன் எவவாறு மேடையில் அசைதல், பாவித்தல் போன்ற விடயங்களும் முக்கியமாகின்றன. நடிகனைப் பொறுத்தளவில் அவனது உடலும் குரலும் பிரதானமானவை. நடிகன் தனது வெளிப்பாட்டுக்கு நான்கு அம்சங்களைப் பயன்படுத்துகிறான் என்பர்.

01. உடல்வழி வெளிப்பாடு (ஆங்கீக அபிநயம்)
02. குரல்வழி வெளிப்பாடு (வாச்சிக அபிநயம்)
03. உணர்ச்சிவழி வெளிப்பாடு (சாத்வீக அபிநயம்)
04. காண்பிய வழி வெளிப்பாடு (ஆகார்ய அபிநயம்)

இத்தகைய வெளிப்பாட்டுக்குத் துணைச்சாதனங்கள் அவசியம் அவையாவன.

01. காட்சி
02. வேடஉடை
03. ஒப்பனை
04. ஒளி
05. இசை, இசையற்ற சத்தங்கள்

இத்தகைய துணைச்சாதனங்களை நடிகனுக்கு வழங்குபவர்கள் கலைஞர்கள். கைவினைஞர்கள் ஆவர். காட்சியை வழங்குபவன். காட்சியமைப்பாளன். அதே போன்று வேடஉடை. ஒப்பனையாளன். ஒளி அமைப்பாளன். இசை அமைப்பாளன் எனப்பலர் நடிகனுக்குத் துணையாகச் செயற்படுவர்.

காட்சி அமைப்பு என்பது குறிக்கப்பட்ட நாடகத்திற்குரிய காட்சி அமைப்பாக அமைய வேண்டும். காட்சி அலங்காரம். காட்சி விதானிப்பு எனப் பலவாறு அழைக்கலாம். காட்சி அமைப்பினர் நெறியாளருடன் இணைந்து காட்சிகளைத் திட்டமிடவேண்டும். அப்போதுதான் நாடகத்தின் மனநிலை அதன் பின்புலம். குறியீடுகள் என்பன புலப்படக் கூடிய வகையிற் காட்சியை வடிவமைத்துக் கொள்ளலாம். காட்சி அமைத்துக் கொள்ளும்விதம். நாடக வகைக்கேற்ப மாறுபடும். பொதுவாக மூன்று பெரும் பகுதிக்குள் அடக்குவர்.

01. கற்பிதவாத நாடகங்களுக்குரியன

02. யதார்த்தவாத நாடகங்களுக்குரியன

03. யதார்த்தமல்லாத நாடகங்களுக்குரியன.

காட்சியைக் கொண்டு பார்வையாளன் நாடகத்தின் காலத்தை. களத்தை. பண்பாட்டை. இடத்தை. மனநிலையைக் கண்டு கொள்ளுவான்.

வேட உடைகள் கூட வேட உடை விதானிப்பாளனாற் செய்யப்படுவது. மேற்குறிப்பிட்டவாறு நாடகத்தில் சூழலுக் கேற்றவகையில் அதற்குரிய ஆடைகள் அணியப்படல் வேண்டும். இலக்கிய நாடகங்களுக்குரிய ஆடைகளை யதார்த்த நாடகங்களில் அணிய முடியாது. ஆகவே வேடஉடை விதானிப்பாளன் அதற்குரிய ஒளி அமைப்பாளன். காட்சி அமைப்பாளனுடன் கலந்துரையாட வேண்டும். ஏனெனில் பாத்திரத்திற்குரிய ஆடையை தீர்மானித்த பின்னர் அதற்கு மாறுபாடான (Contrast) வர்ண ஒளியைப் பாய்ச்சினாற் பாத்திரத்தின் பொருத்தப்பாடு சீர்குலைந்துவிடும்.

ஒப்பனையும் அவ்வாறே. ஒப்பனைக்கலை இன்று வளர்ந்து விட்டதைக் கண் கூடாகக் காணமுடிகிறது. பாத்திர இயல்புக் கேற்றவாறு ஒப்பனை செய்தல் பொருத்தமானது. முதியவருக்கும் குழந்தைக்கும் ஒரே மாதிரியான ஒப்பனை பொருந்தாது.


ஒப்பனையால் முதியவருக்கு நடிக்க விருக்கும் கன்னங்கள் குழிய வேண்டும். அந்த நடிகர் குழந்தையாக நடிக்க வேண்டின் அந்த நடிகரின் கன்னங்கள் சற்று வெளித்தள்ளிப் பூரிப்பாக இருக்க வேண்டும். அதாவது பார்வையாளன். நடிகனின் பாத்திரத்தைச் சரியாக விளங்கிக் கொள்ள. ஒப்பனை அவசியமாகின்றது. நாடக வகைக்கு ஏற்றவாறு ஒப்பனை அமைவது அவசியம்.

நாடகத்திற்கான ஒளி அமைப்பு என்பதும் நடிகனுக்குரிய துணைச் சாதனங்களில் ஒன்றாகும். நாடகம் தோன்றிய காலம் தொட்டே இருந்து வந்துள்ளது. கிரேக்கத்திற் சூரிய ஒளியில் நாடகம் இடம்பெற்றது. தொடர்ந்து தீப்பந்தங்கள். விளக்குகள் gaslight மின்ஒளி எனத் தற்போது விரிந்த நிலையில் ஒளி அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

நாடகத்தின் மனநிலையைத் தூண்ட ஒளி உதவும். ஒளி என்பது வெளியின் அழகியற் கோலம். ஒரு இடத்தை "காண்" பிப்பது. அதுதான் ஒளியின் தன்மையாகும். திசை. செறிவு. வர்ணம் என்பவற்றாற் வாடி அளடி புலப்படும். தற்போது பல ஒளிவிளக்குகள் அறிமுகமாகி உள்ளன. பொட்டொளி பரப்பொளி பாதஒளி எனப்பல. இவற்றை எல்லாம் இயக்கும் ஒளி அமைப்பாளனே பிரதானம். வேடஉடையின் தன்மை. காட்சியின் கன்மை என்பன அறிந்து ஒளியைப் பாய்ச்சினாற் போதுமானது.

நாடகத்திற்கு இசை வழங்குபவர் இசை நெறியாளர். இவன் ஒரு சிறந்த கலைஞன். ஒட்டு மொத்தமான நாடகத்தின் மன நிலைக்கும் சூழலிற்குமேற்ற வகையில் இசை அமைத்துக் கொள்வார். இசைக்கு மயங்காதவர் எவரும் இல்லை. எமது நாடகப்பாரம் பரியத்திற் கண்ணன் அவர்கள் குறிப்பிடத்தக்கவர். பாத்திரங்களின் இயக்கத்திற்கேற்றவாறு இசை அமைக்கப்படும். இவ் விசை வாத்தியங்களாலும் வேறு சில பொருட்களாலும் ஏற்படுத்தப்படலாம். மேலும் இசையற்ற சத்தங்களும் நாடகத்திற்கு உதவுகின்றன.

மேற்குறிப்பிட்டவாறு ஒரு நாடகத்தைப் படைப்பாக்கம் செய்வதற்கு வேண்டியன தயாரிப்பாளர். நெறியாளர். நாடக ஆசிரியர். நடிகர் மற்றும் துணையான காட்சி வேடஉடை ஒப்பனை. ஒளி. இசை. போன்றவற்றைகையாள்பவர்கள் அனைவரும் இணைந்து உருவாக்கப்படுவதே ஒரு நாடகப்படைப்பாக்கமாகும். இந்த நாடகப் படைப்பாக்கமானது பார்வையாளர் முன்னிலையிலே முடிவடைகின்றது.



# மாறும் தமிழ்க்கவிதை

**- கி . நடராசா**


இலக்கிய வடிவங்களுள் கவிதை காலத்தால் முந்தியது. கவிதை என்பது வாழ்க்கையின் நோக்கினை அறிவால் உணர்வுடன் விளக்கிக் காட்டும் கருவி எனலாம். அறிவின் உதவிக்கு கற்பனையைத் துணையாகக் கொண்டு, உண்மையை மகிழ்ச்சியூட்டும் வண்ணம் ஒருவரது ஆளுமை விருத்திக்கு உதவுவதாகும். கவிதையில் சொற்கூட்டம், எதுகை, மோனை, ஓசைநயம் என்பன உடற்கூறாகவும், கற்பனை, வருணனை, உணர்ச்சி இனிமை, பொருள் ஆழம், அணிகள் முதலியன கவிதையின் உயிர்த்துடிப்பாகவும் விளங்குகின்றன. கரடு முரடான ஒரு மரத்தின் இளந்தளிர் போலவும் மனித உடலின் மிக மென்மையான உறுப்புக்களில் ஒன்றாகிய இதயம் போலவும், நீண்ட காலம் பண்பட்டு வளர்த்த இசை மரபின் வண்ணம் போலவும் இலக்கியக் கலையின் ஓர் உன்னத வடிவமாகத் தோன்றிய கவிதை, உருவ, உள்ளடக்கங்களில் அடைந்த மாற்றங்களையும் அண்மைக்கால சில கவிதை வடிவங்களையும் கோடிட்டுக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தமிழ்க் கவிதை தோன்றிய ஆரம்பகாலத்தில் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னர் ஒருபாடல், ஓர் உணர்ச்சி என்ற வகையில் தனிப்பாடல்களாகக் காணப்பட்டன. இதைத்தொடர்ந்து ஒரு பொருளைப் பல செய்யுட்களில்பாடும் தொடர்நிலைக் கவிதைகள் தோன்றின. ஒரு பொருளைப்பத்து அல்லது பதினொரு பாடலில் கூறும் பதிக முறையும் அதைத்தொடர்ந்து தொடர்கதையை காப்பியமாகப்பாடும் நெடுங்கவிதை மரபும் வளர்ச்சி பெற்றது. காலப்போக்கில் ஆங்கில மரபைப் பின்பற்றி SONNET என்ற கவிதை வடிவம் பரிதிமாற் கலைஞரால் அறிமுகப்படுத்தப்பட்டது. LYRIC எனப்படும் தன்னுணர்ச்சிப்பாடல்கள் பாரதி மூலம் தமிழுக்கு கிடைத்தது. ஈழத்து மகாகவியினது குறும்பா வடிவமும் தமிழுக்குப் புதியதே. வசன கவிதை என்ற வடிவத்தையும் பாரதியே அறிமுகப்படுத்தினான். வசன கவிதை வடிவங்களை தொடந்து "புதுக்கவிதை" என்ற இலக்கிய வடிவம் தனிக்கவிதைகளாக வெளிவந்து பின்பு நீண்ட கவிதை வடிவத்தைப் பெற்றன. மிக அண்மைக்காலங்களில் யப்பானிய மொழி ஆதிக்கத்தினூடாக "ஹைக்கூ" கவிதைகளும் வெளிவரத் தொடங்கியுள்ளன.

அண்மைக் காலத்தில் ஏற்பட்ட மிகப் பெரிய மாற்றம் புதுக்கவிதையின் வளர்ச்சியாகும் பா, பாவினம் போன்ற மரபுக் கட்டுப்பாடுகளில் அதிகம் கவலைப்படாது படைப்பாளர் தம் சிந்தனையை அல்லது உணர்வினை தமக்கு தோன்றிய வடிவத்தில் வெளியிடுவதே புதுக்கவிதையாகும். இன்னும் சற்று விளக்கமாக கூறுவதானால், சொற்சிக்கனம், பேச்சுப் பாங்கு, நூதன படிமப் பிரயோகம், தற்கால சொல்லாட்சி, உணர்ச்சிப் பாங்கு, தத்துவநோக்கு, ஒலிநய அழுத்தம் உடனிகழ்கால உணர்வு இன்றைய இக்கட்டான நிலை இவற்றை தன் உள்ளடக்கத்திற்கும் உருவத்திற்கும் பொருளாகவும் சாதனங்களாகவும் கொண்டு புதுக்குரலில் ஒலித்துக் கொண்டிருப்பதுதான் புதுக்கவிதை. ஒரு கவிதையின் வெற்றி என்பது அதை உணர்த்தும் முறையிலேயே அமைகின்றது. உருவத்தில் அன்று. எனவே பழைய கால யாப்பு வடிவம் இல்லையென்பதால் புதுக்கவிதையை புறக்கணிக்கவியலாது.

மிகச் சமீப காலத்தில் "ஹைக்கூ" கவிதை வெளியீடுகள் இடம் பெற்றதை நாம் மறந்து விடமுடியாது. தமிழ் மொழியில் உள்ளது போல யப்பானிய மொழியிலும் பல கவிதை வடிவங்கள் உள்ளன. அவற்றுள் புதிய வடிவத்தில் ஈட்டி போலப் பாய்ந்து, படிப்பவர் மனதில் நறுக்கென்று தைக்கும் விதத்தில் கருத்துக்களை விளங்க வைக்க பயன்படும் முறையே ஹைக்கூ எனப்படுகின்றது. ஒவ்வோர் அடியிலும் ஐந்து ஏழு ஐந்து அசைகளைக் கொண்டு மூன்று அடிகளால் ஆக்கப்படுவதே "ஹைக்கூ" கவிதை. கவிதை கடுகு போல சிறியதாக இருந்தாலும் கவிதையில் கனமான செய்திகள் அழுத்தத் தோடு காணப்படும்.

ஏன், எப்படி, எதற்காக, எங்கே, யார் போன்ற பல வினாக்களை எழுப்பி நம் சிந்தனையைத் தூண்டுவது இக்கவிதைகள். இக்கவிதைகளில் பயனற்ற வார்த்தைகளுக்கு இடமில்லை. சிந்திக்கத் தெரிந்தவர்களுக்கு இக்கவிதைகள் அள்ளக் குறையாத அமுதசுரபி. ஹைக்கூ கவிதைகளின் ஒரு முக்கியமான பண்பு ஒரு பொருளைச் சுட்டிக் காட்டுவதோடு நின்று விடும். படிப்பவர் தாம் அதில் மறைந்திருக்கும் உணர்ச்சிகளை தேடிச் சுவைக்க வேண்டும். இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் சங்கத்துச் சான்றோர் சில கருத்துக்களை நாகரிகமாக கூறவேண்டும் என்பதற்காக உள்ளுறை உவமம், இறைச்சிப் பொருள்களைப் பயன்படுத்தியது போல ஹைக்கூ கவிதையில் உயிர்நாடியை விளக்கும் சிந்தனை வீச்சுக்கள் மறைந்திருக்கும்.



# "நிம்மதியின்மையின் ஆசீர்வாதம்"

## மனவெழுச்சி - படைப்பு படைப்பாளி - சமூகம் ஒரு சிறு விசாரணை

- த. அஜந்தகுமார்

இலக்கியம் தொடர்பாக ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு கருத்துநிலை இருக்கக்கூடும். அது அவரவர் கொள்கை, விருப்பம் சார்ந்த வெளிப்பாடாக இருக்கும். ஒருவருக்கு நல்ல படைப்பாக இருப்பது இன்னொருவருக்கு தரமற்ற படைப்பாக இருக்கக்கூடும். இந்த முரண் என்பது காலாதிகாலமான ஒரு தொடர்நிகழ்வு. இங்கு நான் இந்த படைப்பாளி சார்ந்த அவன் படைப்புக்கான மனோநிலை மனவெழுச்சி குறித்தும் சில முரண்கள் குறித்தும் பதிவு செய்ய விரும்புகின்றேன். படைப்பாளியின் மனவெழுச்சியே படைப்புத் தொழிற்பாட்டைச் சாத்தியமாக்குகின்றது. இந்த மனவெழுச்சி மேலோட்டமாக நோக்கும் போது தமிழ்ச்சூழலில் இரண்டு நிலைகளில் இடம்பெறுகிறது என்று நம்புகிறேன்.

1. படைப்பொன்றை உருவாக்கவேண்டுமென்ற மனவெழுச்சி

2. படைப்பை வெளிப்படுத்தாது விட்டால் வேறு புகழ் திருப்தி இல்லை என்ற மனவெழுச்சி.

முதலாவது மனவெழுச்சியில் நல்ல படைப்பை எதிர்பார்க்க முடியாது. அது தன் பெயர் புகழ் தேடும் ஆரம்பப் பயணத்தின் சாதாரண மனவெழுச்சி அது கற்பனைவயப்பட்டு அதன் நீட்சிமயப்பட்டது. நல்ல படைப்புக்கான சூழலை அதில் நாம் தரிசிக்க முடியாது என்றே பெரிதும் நம்பலாம்.

இரண்டாவது நிலை சார்ந்த படைப்பு மனவெழுச்சி மிகமுக்கியமானது. ஹரிலெவில் என்பவர் இலக்கியம் என்றால் என்ன என்பதற்கு "இது சமூக காரணிகளின் விளைவு மாத்திரமன்றி சமூக வினாவுக்கான காரணியாகவும் அமைந்து விடுகின்றது" என்று கூறுவது மிகமுக்கியமானது. சமூகக்காரணிகள் படைபாளியை நெருக்கும் போது அவனில் இருந்து பீறிட்டெழும் ஒரு படைப்பு சமூக அசைவியக்கத்தின் மீது பல்வேறு கேள்விகளை எழுப்பும். சமூகத்தை விசாரணைக்கு உட்படுத்தும். இந்தப் படைப்பு மூலம்தான் படைப்பாளி தான் சந்தித்த பாதிப்புகளில் இருந்து சிறிது விடுபட்டு ஒரு திருப்தியைச் சந்திக்கின்றான். இது ஆக்கநிலைச் செயற்பாட்டின் மிகமுக்கியமான கூறாகும். இங்குதான் Max weber (மக்ஸ்வெபர்) போன்றவர்கள் சொல்லுகின்ற தனிமனித விடுதலையூடான சமூக விடுதலை என்பது படைப்பாளியின் அனுபவப் பேறு ஊடாகச் சமூகத்துக்கு கடத்தப்படுகின்றது.

உண்மையில் இந்தப் படைப்பாளியின் அனுபவப்பேறு என்பது நிம்மதியின்மை மற்றும் அலைக்கழிவின் நிழலில் இருந்து தோன்றுவதாகும். இதனாலேயே சுந்தரராமசாமி "ந.பிச்சமூர்த்தி பற்றி எழுதுகின்ற போது. படைப்பாளிக்குரிய நிம்மதியின்மை என்ற ஆசிர்வாதம் அவருக்கு இருந்தது." என்று குறிப்பிடுவது முக்கியமானது. படைப்பாளியிடம் ஏதோ ஒருவகையில் நிம்மதியின்மை இருக்கின்ற போதுதான் அது அவனை நல்ல படைப்பாளியாகப் புடம் போடுகிறது. நல்ல படைப்பையும் உருவாக்குகின்றது. நாளை நமதே என்ற கவிதையில் ஆத்மாநாம்.

*'மனச்சீரழிவே கலையாகத் துவங்கிற்று'*

என்று எழுதிச் செல்வதும் இந்த இடத்தில் ஞாபகம் வருகிறது. இதே போலவே கவிஞர் சண்முகம் சிவலிங்கமும்

*.......................*
*போகட்டும்*
*இன்று முதல் கசப்புகளை வாங்கிப் புசிக்கிறேன்*
*அதற்கென்ன!*
*என்மனதை என்றும்*
*நோகாதிருக்க வேண்டுமென எண்ணேன்*
*நொந்தவர்தான் வாழ்க்கையிலே*
*சாதனைகள் செய்தார்*
*ஆதலினால்*

*என் மனதைக் கல்லாக்கிக் கொள்வேன்*

என்று எழுதியிருப்பது மனக்கோப்பை கசப்புகளாலும் வேதனையாலும் நிரம்பித் தளும்புவதனால் உண்டாகும் மனவெழுச்சிக்காக காத்திருப்பதைச் சொல்லி நிற்கிறது. நாம் அறிந்த வரையில் தோஸ்த தோங்கி, மாப்பஸான், ஜேம்ஸ் ஜொய்ஸ், பாரதி, புதுமைப்பித்தன், தருமு சிவராம், ஜெயமோகன் என்று இன்று வரை பல்வேறு படைப்பாளிகள் முக்கியமான படைப்புகளைத் தருமளவுக்கு நிம்மதியின்மை அவர்களுக்கான மனவெழுச்சியைக் கொடுத்து இருந்திருக்கிறது. இந்த நிம்மதியின்மை, மனச்சிதைவு என்பன எப்போதும் பெரிய வலிமையை ஆற்றலையே கொடுக்கும். இதற்கு வரலாற்றில் இருந்து கூட நாம் உதாரணங்களை அறிவோம். "நேரில் கண்ட ரஷ்ஸ புரட்சி" என்ற நூலில் வரும் பின்வரும் வாசகங்கள் இங்கு நம் கருத்துக்கு வலுச் சேர்ப்பன.

*"மனமுறிவினாலும் ஏமாற்றத்தினாலும் உண்டான*
*உளநிலையில் இப்பொழுது முரட்டுத் துணிச்சலுடன்*
*வன்முறையில் கட்டுத் திட்டங்களை படைத்துத்*
*தகர்ப்பவர்களாக செயலாற்றினார்கள். முக்கியமானது*
*இங்கு செயலாற்றினார்கள் என்பதே"*

இங்கு மனமுறிவும் ஏமாற்றமும் ரஷ்யமக்களுக்கு ஏற்படுத்திய முரட்டுத் துணிச்சல் போலவே படைப்பாளிக்கும் அது மனவெழுச்சியைத் தூண்டுகின்றது. இதனால்தான் ஆர்.டி.லெஸ்ங் "உளச்சிக்கல் ஒரு படைப்பூக்க நிலை" என்று குறிப்பிடுகிறார்.

*"மனிதனது தொல்லை நிலையையும் அதிர்ச்சி*
*ஏற்படுத்தல்களையும் வெளியிடத்தான் நான்*
*இதுவரை எழுதிக் கொண்டிருக்கிறேன்"*

என்று சி.சு.செல்லப்பாவும் ஓரிடத்திலே குறிப்பிட்டு இருக்கிறார். இவ்வாறு சகமனிதனின், சமூகத்தின், தனதின் துயரும் போராட்டமும் கிளர்த்தும் உணர்வுகள் அடிமனதில் இருந்து கலைத்துவத்துடன் படைப்பாக எழுச்சி கொள்ளுகின்றன. ஆனால் சமூககாரணிகளின் விளைவான இந்தப்படைப்பு உடனிகழ்காலத்தில் சமூகத்தில் ஏற்படுத்தும் விளைவு படைப்பாளிக்கு எவ்வளவு சாதகமானது என்ற கேள்வி எழுகிறது. அதாவது அந்தப்படைப்பு படைப்பாளிக்கு சமூகத்தில் எந்தளவு முக்கியத்துவத்தை கொடுக்கிறது? இந்த இடத்தில் வல்லிக்கண்ணன் ஓரிடத்தில் எழுதியது ஞாபகம் வருகிறது.

*"எழுத்து, இலக்கியம், மறுமலர்ச்சி, தமிழை வளம் செய்யும்*
*முயற்சி., புதிய சோதனை என்று சொன்னால்*
*அவர்களுக்குப் புரிவதுமில்லை - பிடிப்பதுமில்லை எல்லாம்*
*பைத்தியக்காரத்தனமாகப்படுகின்றது..."*

இந்தநிலை இன்றுவரை சமூகத்தில் பெருமளவில் இருக்கின்றது என்றே நான் நினைக்கிறேன். இது வக்கற்றவர்களின் பொழுதுபோக்கு ஆகவும் பைத்தியக்காரத்தனமாகவுமே சமூகத்துக்கு தோன்றிவிடுகிறது. ஆனால் உண்மையான படைப்பாளி இதைப்பற்றி அலட்டிக் கொள்வதில்லை. தனக்கான உண்மையான வாசகன் எங்கேயொரு மூலையில் இருப்பான் என்று நம்புவான். சிலவேளைகளில் "மூடா முன்னே பாடல் மொழிந்தால் அறிவாரோ..." என்று தார்மீக கோபத்தோடு சொல்லிவிட்டுச் செல்லும் படைப்பாளிகளும் உண்டு. படைப்பாளி தன் படைப்புவழித் திருப்தியை ஆத்மார்த்தத்தை எப்போதுமே தேடிக் கொண்டு இருப்பான். சிலவேளை தாமரை இலையின் மேல் தண்ணீராய் சமூகமே உன்னோடொட்டிக் கொள்ளாமல் என்பாட்டில் நடக்கிறேன் (ஜெயசீலன்) என்று தனிப்பதும் உண்டு. இங்கு அடுத்த நிலையில் படைப்பாளிக்கும் இன்னொரு படைப்பாளிக்குமான தொடர்பு எப்படிப்பட்டது என்ற கேள்வி தமிழ்ச்சூழலில் மிக முக்கியமானது என்றே கருதுகின்றேன்.

ஈழத்திலும் சரி தமிழகத்திலும் சரி புகலிடங்களிலும் சரி தமக்குத் தமக்கான வட்டங்களுடனே படைப்பாளிகளில் அதிகமானவர்கள் இயங்குகின்றார்கள். இந்த இயக்கத்தின் போது வேறுவட்டம் சார்ந்த படைப்பாளியை சாதாரண ஒரு மனிதனாகக் கூட மதிக்காத அற்பத்தனத்தை நாம் கண்டும் கேட்டும் வருகிறோம். ஓர் இலக்கிய விழாவில் ஒரு படைப்பாளி இன்னொரு படைப்பாளியை இலக்கிய மனநோயாளியென்று அழைத்தது இன்று உடனடியாக எனக்கு ஞாபகத்துக்கு வருகின்றது. இலக்கியவாதி தெரியும். அது என்ன இலக்கிய மனநோயாளி? இன்று வரை இந்தக் கேள்வி என்னை ஒரு நிழல் போல் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

மனுஷ்யபுத்திரனின் "மணலின் கதை" என்ற கவிதைத் தொகுப்பில் உள்ள "என்னைப் பைத்தியம் என்று அழையுங்கள்" என்ற கவிதையை இங்கே தரலாம் என்று நினைக்கிறேன்.

*உங்களை நீங்களே சமாதானப்படுத்திக்கொள்ள*
*நீங்கள் நியாயமாகவே நடந்து கொண்டீர்கள் என்று நம்ப*
*எதற்கும் நீங்கள் காரணமல்ல என்று விடுவித்துக்கொள்ள*
*உங்கள் வெற்றியின் இரகசியங்களை மறைத்துவிட*
*உங்கள் குற்றங்களின் கறைகளைக் கழுவ*
*யாரைப் பாதியில் விட்டுவிட்டு*
*கூட்டத்தில் மறைந்தீர்களோ*
*அவர் உங்களிடம் திரும்பி வராதிருக்க*
*நீங்கள் சாகவிட்ட ஒருவர்*
*எழுந்து வந்து சாட்சியம் சொல்லாதிருக்க*
*உங்கள் கோழைத்தனமான ஏற்பாடுகளை*
*இன்னும் பலப்படுத்திக் கொள்ள*
*உங்கள் பாதுகாக்கப்பட்ட வெளிகளில்*
*ஒரு காலடியோசை மீண்டும் கேளாதிருக்க*
*என்னைப் பைத்தியம் என்று அழையுங்கள்.*

இக்கவிதை பல்வேறு வாசிப்புகளை சொல்லியிருக்கிறது என்று நம்புகிறேன்.

ஒரு படைப்பாளியின் படைப்பில் பித்தமும் பிறழ்வும் இருக்கவே செய்யும் அதற்காய் அவனை பைத்தியம் என்பதா? மனநோயாளி என்பதா? புதுமைப்பித்தன் தன் படைப்புகள் பற்றிச் சொல்லும் போது

*"... நான் பொருள் கொடுக்கும் பித்தன்தான்*
*படைப்பில் புதுமை. புதுமைதான் பித்தமும்"*

என்று குறிப்பிடுவதைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

சில வேளைகளில் படைப்பாளி தன்னை விமர்சனத்துக்கு அப்பாற்பட்ட ஒருவனாகக் கருதுவதும் ஒரு மனப்பிறழ்வாக கருதப்பட்டு வந்திருக்கிறது. தருமு சிவராமு தன் படைப்புகள் சார்ந்த விமர்சனங்களை ஏற்கும் நிதானம் இல்லாமல், தான் எழுதியதை எல்லாம் அற்புதம் என்று நினைத்தமையால் மு.பொ.தருமு சிவராமுக்கு Narcissistic complex எனச் சொல்லப்படும் மனப்பிறழ்வு இருந்திருக்கிறது என்று தன்னுடைய "மீண்டும் ஒரு சத்திமுத்துப்புலவர்" கட்டுரையில் எழுதியிருக்கிறார். தமிழ்ச் சூழலில் பல்வேறு படைப்பாளிகள் பலசிற்றிதழ்களால் மனநோயாளிகளாகச் சித்திரிக்கப்படுவது படைப்பாளி சார்ந்த சமூகப்பிரக்ஞையை கேள்விக்குரியதாக்குகின்றது. விமர்சனம் என்பது இன்று படைப்பின் மீது அல்லாமல் படைப்பாளி பற்றிய கிசுகிசுவாகவும் சில இடங்களில் மாறிவிடுவதைக் காண்கிற போது சிரிப்பாக இருக்கிறது. (உதாரணம் பன்முகம் இதழ் ஜெயமோகனைப் பற்றி எழுதும் போது வெற்றி விரும்பி என்று கிசுகிசு பாணியில் குறியீடாய் எழுதியது ஞாபகம் வருகிறது)

படைப்பாளி தன் சமூகமுக்கியத்துவத்தை உணர்ந்து சக படைப்பாளியுடன் நல்லுறவைப் பேண வேண்டும். அதிர்ச்சி மதிப்பீடுகளுக்காகவும் தன்னைச் சுற்றி ஒளிவட்டம் சுழல் வதற்காகவும் இயங்கக் கூடாது.

கோபிகிருஷ்ணனிற்கு அஞ்சலிக்குறிப்பு எழுதிய சாருநிவேதிதா... "இந்தச் சூழலில் யாருக்குத்தான் மனநோய் வராது" என்று எழுதிவிட்டு சுகன் ஷோபாசக்தி தொகுத்த கறுப்பு இதழில் புதுமைப்பித்தன். கதைகளைப் பற்றி எழுதிய வியாகுல சங்கீதம் என்ற கட்டுரையில் ".. புதுமைப்பித்தனின் பிரதிகளுக்கு மூத்திரம் அடிக்க வேண்டும்.." என்று எழுதியிருந்த தன்மையின் நேர்மை இன்றுவரை எனக்குப் புரியடவில்லை. தத்தம் கருத்தியல்களுக்காக அதிர்ச்சி மதிப்பீடுகளுக்காக இவ்வாறான நேர்மையீனங்களும், வெட்கங்கெட்ட செயல்களும் நடந்தேறிக் கொண்டே இருக்கின்றன. இவற்றில் இருந்து உண்மையான படைப்பாளிகள் வெளியே வரவேண்டும். படைப்பைப் படைப்பாகவும், விமர்சனத்தை விமர்சனமாகவும், படைப்பாளியை சக படைப்பாளியாகவும் ஏற்கின்ற நேர்மை உண்டாக வேண்டும். அப்போதுதான் படைப்பாளி உண்மையான படைப்பாளியாக இருக்க முடியும்.

இலக்கியம் படைப்பாளியின் மனவெழுச்சியால் உருவாக்கப்படுவது. அது சமூகத்தில் யாரோ ஒரு

வாசகனுக்காக வாசகிக்காக அவனால் நம்பிக்கையோடு உருவாக்கப்படுகின்றது. அது அவனின் சகபடைப்பாளி கைக்கு செல்லுகின்ற போது ஆரோக்கியமான விமர்சனத்தை அது ஏற்படுத்த வேண்டும். வட்டங்கள், குழுக்கள் தாண்டி நல்ல ஒரு படைப்பு பயணிப்பதற்கான எல்லை விரிதல்களுக்கு ஒரு படைப்பாளி இன்னொரு படைப்பாளிக்குத் தடையாக உள்ளான். அந்நிலை மாறவேண்டும். ஒவ்வொருவருக்குமான படைப்பின் மனவெழுச்சியை மதிக்க வேண்டும். சமூகமும் சிரிக்கக் கூடியவாறு இலக்கியவாதிகள் தங்களுக்குத் தாங்களே சேறு பூசக் கூடாது.

இது எல்லாம் ஓர் இளம் இலக்கிய ஆர்வலனின் கோரிக்கைகள்.□□□

## இரவு மீது அமர்ந்திருக்கும் சிவப்புப் பறவை

தூரம் நீண்டிருக்கிறது

இரவுமீது ஒருசிவப்புப் பறவை
வந்து அமர்ந்திருக்கிறது

எனது உணவுத்தட்டில்
தண்ணீர் காய்ந்திருக்கிறது.

அம்மாவின்
சிரட்டையிலான அகப்பை
பாவனையற்று
பரணில் வறண்டு கிடக்கிறது.

நூலகத்தோடு
முடிவடையும் வீதியில்
வெறும் சன்லைட்டுப் பைகள்
கிடக்கின்றன.

தொலைத்தொடர்பு கம்பிகளிற்குள்
அடையாள அட்டை
சொருகிய முகங்கள்
அழைப்பிற்காய் காத்திருக்கின்றன.

அம்மாவின் அழைப்பு
வந்து திரும்பிப் போகிறது.

மேலதிக விலையில்
வாங்கப்பட்ட
பேனா அடிக்கடி
விழுந்து உறங்குகிறது.

## இரவு நதி

இரவை மிருகம்
என்ற
நண்பனிடமிருந்து
நான் பிரிந்து விட்டேன்


இரவு நதியாகி பரவுகிறது
படிகள் இல்லாத
மொட்டை மாடியில்
விரிந்து கிடக்கிறது

வெக்கையடிக்கும்
எனது
பாட புததகங்கள்
அறையை பூட்டிவிட்டு போகிறான்
தோழன்

எனதறைக்கு
காதலி ஏறி வர
படிகள் இல்லை என்றாள்
இரவு அறைக்கு
ஏறி வருகிறது

இரவை ஒரு கோப்பையில்
நிரப்பி வைத்து
பார்த்துக்கொண்டிருந்தேன்
மின்குமிழ் அழுதது
படியிறங்கும்
என்னை தின்பதற்காய்
கீழே
ஒரு மிருகம் திரிகிறது.

- தீபச்செல்வன்



# வாழ்க்கை என்பது...

- குப்பிளான் ஐ.சண்முகன்

நண்பரின் மகளின் திருமணத்திற்காக நீண்ட நாட்களின் பின் ஊருக்குச் செல்ல நேர்ந்தது. ஊரின் தென் எல்லைக்கப்பால் அமைந்திருந்த பஸ்தரிப்பிடத்தில் இறங்கி நீண்டதூரம் நடந்து செல்ல வேண்டியிருந்தது. தெரிந்தவர்கள் எவரையும் காணக் கிடைக்கவில்லை. சைக்கிள்களோ மோட்டார்சைக்கிளோ வேறு வாகனங்களோ எதிர்ப்படவில்லை. அங்குமிங்கும் பார்த்து மெதுவாக நடக்கத் தொடங்கினான்.

தோளில் தொங்கும் அவ்வளவு பாரமில்லாத நீல பாய்க், தலையில் தொப்பி, முகத்தை அழகு செய்யும் கண்ணாடி, வழக்கமான காற்சட்டைக்கு மாறாக வேட்டி, காலில் செருப்பு... இத்தியாதி அலங்காரங்களுடன் ஒரு விதமான தொய்வான நடை அவ்வப்போது எதிர்படுவோர் முகங்களை உற்றுப் பார்த்துப் பார்த்து நடக்கும் மெதுவான நடை.

ஊரின் எல்லையில் பச்சை பரந்து உயிர்த்து நிற்கும் அரச மரத்தின் கீழ் கிராமத்துச் சுடுகாடு வீதிக்கரையிலிருந்து சற்று உள்தள்ளி அமைந்திருந்தது. சுடுகாட்டுக்கு செல்லும் கிளைப் பாதையும் வீதியும் சந்திக்கும் இடத்தில் ஒரு சிறிய இளைப்பாறு மண்டபம். மண்டபத்தின் மத்தியில் ஒரு உரபாய்க் மூட்டை சற்றுத்தள்ளி ஒரு சொறி நாய் படுத்திருந்தது.

நேரம் பத்தரைமணியாகி அனல் எறிக்கத் தொடங்கியிருந்தது. செம்மண் தரையாய் பரந்திருந்த தோட்டவெளி ஆங்காங்கே பாலை வனப் பசுந்தரையாய் தோட்ட வெளிக் கிணற்றுச் சோலைகள். வெயில் கண்ணைக் கூசிற்று. செருப்புப் போட்ட கால்களிலும் பரல்கற்கள் உறுத்துவது போல இருந்தது

ஒரு ஒன்றரை மணிப்பொழுதில் செருப்பில்லாத காலும் மனதில் சொல்லமுடியாத தவிப்புமாய் நடந்த கணங்கள். சிறிதே அலங்கரிக் கப்பட்ட பாடை பின்னே வர வெறும் மேலுடன் முன்னே கொள்ளிச்சட்டியைத் தூக்கிக் கொண்டு நடந்தான். ஒன்றிரண்டு நண்பர்களும் சில உறவினர்களும் அயலில் துணைக்கு வர. யாரோ பாட்டுக்காரர்கள் வெறியில் ஏதேதோ பாடல் களைப்பாட பாடையை நாலைந்து உறவுக்கார இளைஞர்கள் சுமக்க பாடையின் பின்னே ஒரு சில பத்துப்பேர் தொடந்து வர தாங்க முடியாத வெக்கை... கால் உறுத்தல்... மனச்சோர்வு... மெளடீக சோகம். விழிகளில் ஒருசில கண்ணீர் துளிகளும் அரும்பி இருக்கலாம்.

எத்தனை கனவுகளைச் சுமந்த நூற்றாண்டு வாழ்வு. தொண்ணூற்று ஐந்து வருடங்கள் இத்தரைமீது நீண்டவாழ்வு. இளமையில் தாங்கொணாத வறுமை போராட்டம், தூரத்துப் பாடசாலையில் ஆங்கிலக் கல்வி. நாடகம், பாட்டு, கூத்து, புலம்பெயரல், அலைக்கழிதல், உத்தியோக வாழ்வு, தலை வணங்கா சுதந்திர மனோபாவம், வியாபாரம் போரட்டம், செல்வச்செழிப்பு கனவான் தனம், சமூக சிந்தை கட்டுப்பாடான ஒழுக்கவாழ்வு, காதல், சகோதர இழப்பு, தாயகம் திரும்பல், நீண்ட யுத்தம், வியாபாரத்தனத்திற்கு போக முடியாத நிலை, மீண்டும் போராட்டம், சலிப்பு, திருமணம், குழந்தையையும் இளம் மனைவியையும் பிரிந்து புலம்பெயர்ந்த நாடு செல்லல், வியாபார மந்தம், இடையறாமுயற்சி, உன்னதச் செழிப்பு, பிரிவுக் கவலை, விரக்தி, சோ என மழை பொழிந்த ஒரு நாள், விரக்திஎதுவுமே வேண்டாம் என்றமனநிலை தாயகம் மீளல், மனைவி குழந்தையுடன் ஒன்றிணைவு, மகிழ்ச்சி, குதூகலம், தொழில் தேடல் செழிப்பு மந்தம், செழிப்பு, மந்தம்... மந்தம்... மந்தம்... பெரு நட்டம்... அரோகரா...

"தம்பி மூத்தவன் படிச்சு முன்னேறி நீதான் குடும்பத்தைத் தூக்க வேணும்"

எல்லாம் முடிஞ்சுது... எல்லாம் முடிஞ்சுது...

என்ன சூத்திரக் கிணற்றடிக்கு வந்து விட்டேனா? வெயில் அனல் பறக்க வெக்கை அடித்துக் கொண்டுதானிருந்தது. இப்போதும் கண்களில் கண்ணீர் துளிகளாக, செருப்புப் போட்ட கால்களிலும்பரல்கற்கள் உறுத்துகிற மாதிரி... வெக்கை ஒரே வெக்கை.

சூத்திரக் கிணறு அந்தக்காலம் எங்கள்

தோட்டத்து அயல் தோட்டக் கிணற்றில் இரட்டைமாடு பூட்டி வளையும் சூத்திரம். நாய்ங்... நாய்ங்... நாய்ங்... என இரும்புச் சங்கிலியில் மேலும் கீழுமாய் கிணற்றில் ஏறியிறங்கும் பெரிய வாளிகள் ஒன்று தொட்டியில் நீரைச் சரித்து ஊற்ற மற்றது அடிக்கிணற்றில் நீரை நிரப்பும். ஒன்று மாறி ஒன்றாய் தொட்டியில் நீரைச்சரிக்க கும்மாளமிட்டுச் சிரித்து கையை காலை ஆட்டிக் குளிக்கும் அவனும்... தம்பியும்...

தம்பியும் போய்விட்டான். கட்டிப்பிடித்து விளையாடி கும்மாள மிட்டு அடிதடி சண்டை பிடித்து விளையாடிய தம்பி... பிறகு அவரவரும் அவரவரது பாடுகளைப் பார்த்துக் கொண்டு... தம்பிக்கு பெரிய குடும்பம்... ஐந்தாறு பிள்ளைகள்... பிள்ளைகள் வளர்ந்து நல்ல நிலைக்கு வரும்போது இடைநடுவில் அவனும் போய்விட்டான். அப்போதும் இதே வீதியில் பரல்கற்கள் காலை உறுத்த... வெக்கை வெக்கை... ஒரே வெக்கை...

பிரமை மயக்கத்தில் நாங்ங்... நாய்ங்... நாய்ங் கென சத்தம் கேட்பதாக திரும்பிப் பார்க்க பழைய இறவல் சைக்கிளில் யாரோ தாடி வளர்த்த கிழவன்...

முன்னால் சுமைதாங்கி இருந்த இடம் அதன் அழிபாட்டின் எச்சசொச்சங்கள் சிதிலமாக... இவ்வளவு தூரம் வந்து விட்டேனா? இன்னும் அரைவாசிக்கும் கூடிய தூரம் நடக்க வேணும்.

பரல் கற்கள் செருப்புப் போட்ட கால்களையும் உறுத்துவதாக... நேரம் பதினொன்றரை இருக்குமா? மதிய வெயில் வெக்கை... வெக்கை.. ஒரே வெக்கை...

கோவிந்தப்பா... கழுத்தில் சலங்கை மணிகள் கிலுகிலுக்க விடிய ஐந்து மணி மட்டில் கோவிந்தப்பாவின் இரட்டை மாட்டு வண்டி சுமை தாங்கியடிக்கு வரும். பலாப்பழங்களை சுமை தாங்கியில் வைத்து அவரது வருகைக்காக எதிர் பார்த்துக் காத்திருக்கும் எங்களைப் பார்த்ததும் ஒற்றைக் கையைத் தூக்கி ஆட்டிக் கொண்டே வண்டியை நிற்பாட்டும் கோவிந்தப்பா ஆர்ப்பாட்ட மாய் சத்தமாய் சிரிப்பார். "என்ன பிள்ளையள் பலாப்பழங்களோ... கொப்பரை ஏழு மணிக்கு முந்தி சந்தைக்கு வரச் சொல்லுங்கோ"

ஒவ்வொன்றாக எடுத்து வண்டியில் இருக்கும் வாழைக்குலைகளுக்கும் காய்கறிச் சாக்குகளுக்கிடையிலும் பத்திரமாக வைப்பார். முதுகில் செல்லமாகத்தட்டி கெட்டிக் காறங்கள் என்று மீண்டும் சிரிப்பார். பலபலவென்று விடியும் பொழுதில் அந்தச் சிரிப்பும்... வெற்றிலை சாறினால் சிவந்த அவரின் வாய் உதடுகளும் கம்பீரமான தலைப்பாக்கட்டும்...


"எல்லாம் முடிஞ்சிது" கால் உளைவும் பரல்கற்களின் உறுத்தலும் வெக்கை... ஒரே வெக்கை...

பரந்த தோட்ட வெளியும் கலட்டு நிலப்பரப்பும் சந்திக்குமிடத்தில் கானல் பரவி இருந்தது. மெல்லிய அனல்காற்று வீசிற்று. தூரத்தில் எங்கோ ஒற்றைக் காகம் கத்திக் கொண்டு பறந்தது நாயொன்று ஊளையிடுவது கேட்டது.

திடீரென வெள்ளைப் பூக்களுடன் வெண்பச்சைப் பரப்பாய் மெல்லிய காற்றிலாடும் வீதிக்கரையோரச் செடிகள் மனதில் ஒரு குளிர்மை கனிவது போலிருந்தது. மீண்டும் வெறுமை உற்றுப் பார்த்ததில் பாதீனியச் செடிகள் கொடிய பாதீனியம் செடிகள்.

இதுவும் ஊருக்குள் வந்து விட்டதோ"

முகத்தில் வியர்வை முத்துக்கள் அரும்பியிருந்தன. கைகால்கள் சோர்வது போல.. தண்ணீர் தாகம் எடுப்பது போல எங்கேனும் ஆசுவாசமாக கொஞ்சம் இளைப்பாறினால் நல்லதெனப்பட்டது.



"என்ன பொன்னுத்துரை கலியாண வீட்டை வாறியோ உன்ரை கூட்டாளியின்ரை பெட்டைதான்"

திரும்பிப்பார்த்தால் தில்லைமாமா. அந்த வேகாத வெக்கையிலும்வாயில் சுருட்டு புகைய. வெறும் மேலுடன் கலட்டு வெளியிலிருந்தும் வீதியில் மிதந்தார்.

"என்ன அங்கையிருந்து நடந்து வாறியே வாகன மொண்டும் கிடைக்கேலையே"

"என்ரா அப்பா தலையெல்லாம் வெள்ளை யாய் போச்சு வேலை செய்யுறியோ அல்லது பென்சன்

எடுத்திட்டியோ"

நீங்கள் எல்லாம் சொகுசுக்காரர் இஞ்சைபார் இந்த வயதிலும் என்ரை தலையிலை நரைமயிர் ஒண்டு காட்டுவியே;

"மனைவி என்ன மாதிரி சுகமாய் இருக்கிறாவோ. இப்பவும் படிப்பிக்கப் போறவாவோ"

"அது சரி பன்ரண்டரைக் கெல்லோ தாலிகட்டெண்டு சொன்னவங்கள் என்னும் எவ்வளவு தூரம் கிடக்கு நான் கொண்டந்து விடட்டா"

வீட்டு மனைகளும் மரங்களும் எதிர்ப்பட கவியும் நிழலுடன் வெப்பம் தணிந்த இதமான காற்று வீசிற்று.

"உதிலை நில் நான் கொட்டிலுக்கை போய் சேட்டையும் போட்டுக் கொண்டு சைக்கிளையும் எடுத்து வாறேன்;

வீதியில் நின்றான். சற்றே இறங்கி தள்ளியிருந்த கொட்டிலில் நாயொன்றின் சந்தோஷ முனங்கல் கேட்டது. மாடொன்று அம்மாவென்று அழைத்தது.

"கிட்டிணா அக்காளின்ரை பொன்னுத்துரை உதிலை நிற்கின்றான். கலியாணத்துக்கு வந்தவனாம். ஒருக்கா பிள்ளையார் கோயிலடியில விட்டிட்டு வாணை" தமையனும் தம்பியுமாய் கொட்டிலிலிருந்து வந்தனர். கிட்டிணன் சேட்டைப் போட்டவாறு சைக்கிளை உருட்டிக் கொண்டு வந்தான். கிட்டிணன் முன்னர் பார்த்ததிலும் இப்போ கிழவனாய் தெரிந்தான். இவனைப் பார்த்து சிரித்து தலையாட்டினான்.

"தம்பி கிட்டினனோடை போ அவன் கொண்டந்து விடுவன் வெய்யில்லை வந்து நல்லாய்க் களைச்சுப் போனாய் நான் நிற்கிறன்"

"பின்னாலை ஏறு என்று சொல்லிக் கொண்டே கிட்டிணன் சைக்கிள்ளை ஏறினான். பொன்னுத்துரை உன்னிலும் பார்க்க நான் இளையவன் தானே! ஏன் கூச்சப்படுகிறாய்"

சைக்கிள் மெதுமெதுவாய் ஊர்ந்து தான் சென்றது. வீடுகளும் நிழல் மரங்களும் வாழைக் கொல்லைகளுமாய் வளர் நிழலில் பொதிந்து கிடப்பதாய் பட்டது. மோட்டார் சைக்கிளில் கெல்மெற்றுடன் முந்திச் சென்றயாரோ பொன்னுத்துரை எனக்கூப்பிட்டு கைகாட்டிச் சிரித்துச் சென்றது இதமாய் இருந்தது. மெல்லிய சங்கீதம் போல கிட்டிணன் குரல் ஒலித்துக் கொண்டே வந்தது. "நான் இரண்டாம் கலியாணம் கட்டினது தெரியுந்தானே. ஒரு பொடியன் தான் படிப்பு அவ்வளவு ஏறேலை. இப்ப சதாசிவ முதலாளி யோடை கடையிலை நிற்கிறான். கெட்டிக்காரன் ஒரு காலத்திலை பெரிய முதலாளியாய் வருவன். சாதகத்திலையும் குற்றம்குறை ஒண்டுமில்லையாம். உங்கடை பக்கத்திலை அவனுக்கு ஒரு பொம்பிளை பாரேன்

பிள்ளையார் கோயில் கோபுரம் தெரிந்தது ஊரும் கோயிலும் ஏதேதோ நினைவுகள் கிளர்வது போல அங்குமிங்குமாய் வண்ணச் சேலைகளும் அலங்காரங்களுமாய்...

டும் டும் டும் மென மேளம் கேட்டது.

"அப்ப பொன்னுத்துரை நான் போட்டு வரட்டே நான் சொன்னதை மறக்காதை"

"ஓம் மறக்க மாட்டேன் தில்லைமாமா விட்டையும் சொல்லு"

பிள்ளையார் வாசலில் நின்று கும்பிட்டான். மண்டபத்தில் நுழைந்த போது கலியாணச்சடங்கு களைகட்டியிருந்தது. வண்ணங்களாய் குவிந் திருந்த பெண்கள். குறுகுறுவென அசையும் குழந்தைகள். பதவிசாய் திரியும் ஆண்கள் சிவந்த குளிர்ந்த சர்பத்...

இருந்து குளிர்ந்து இயல்பாகி நிமிர்ந்த பார்வையில் மணமேடை. பட்டு வேட்டி தலைப் பாகையுடன் மீசைவைத்த இளம் மாப்பிள்ளை ஏதோ சொல்ல. மணப் பெண்ணின் முகத்தில் பரவும் பிரகாசமும் புன்முறுவலும்...

ஐயர் மணி அடித்து. மந்திரம் சொல்லிக் கொண்டிருந்தார். □□□



நூல் அறிமுகம்

*நூல்* - பசியடங்கா இருளிலிருந்து ஒன்பது கதைகள்

*வெளியீடு* - கலைப்பீட மாணவர் ஒன்றியம்,
கலைப்பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

*விலை* - 150/=



# உடல் மொழியின் பயில் நிலையும் அதன் புலப்பாடுகளும்

- பொன்னையா அரவிந்தன்

அறிமுகம்:

உலகில் வாழும் உயிரினங்களில் மனிதன் ஒருவனாலே தனது சிந்தனைக்குட்பட்ட கருத்துக்களை பேச்சு ஊடாக வெளியிட முடிகிறது. எனினும் சில விலங்குகளும் பறவைகளும் ஒலி எழுப்புவதன் மூலமாக தமது கருத்துக்களை வெளிப்படுத்துகின்ற போதிலும் அவற்றால் பேசமுடிவதில்லை. இவ்விரு நிலமைகளையும் ஒப்பிடுகின்ற போது மனித இனம் கருத்து வெளிப்பாடுகளுக்காக மொழியைப் பயன்படுத்தும் தன்மையையும் விலங்குகளும் பறவைகளும் மொழியைப் பயன்படுத்தாத நிலையையும் கண்டு கொள்ளலாம்.அந்த வகையில் மொழியானது கருத்து வெளிப்பாடு, தொடர்பாடல் (Communication) என்பவற்றின் ஊடகமாக அமைந்திருப்பது நோக்கத்தக்கது.

மேலும் மனிதன் தனது தொடர்பாடல்களுக்காக ஒலியை எழுப்புகின்ற நிலையும் (Verbal Communication), ஒலியை எழுப்பாத நிலையும் (Non Verbal Communication) காணப்படுகின்றது. ஒலியினை பயன்படுத்தி நிகழும் தொடர்பாடலில் பல்வேறு பேச்சு மொழிகள் (Speaking Languages) பயன்படுத்தப்படுகின்றன. இங்கு பயன்படுத்தப்படுகின்ற மொழிகள் மனித சமுதாயத்தில் இனக்குழுக்களுக்கிடையே வேறுபாடு உடையதாக காணப்படுகின்றன.எனினும் ஒலியைப் பயன்படுத்தாது நிகழும் தொடர்பாடலும் இயல்பானதாக காணப்படுகின்றது. இந்நிலையில் பேச்சு மொழிகளுக்குப் பதிலாக உடல் மொழியானது ( Body Language ) பயன்படுத்தப்படுகின்றது. இவ் உடல் மொழியானது இனக்குழுமங்களுக்கிடையே வேறுபாடுகள் இன்றி பொதுவானதாக காணப்படுகின்றது.மேலும் உடல்மொழிப் பயன்பாடு ஆனது மனிதன் ,பறவைகள்,வேறு சில விலங்குகளுக்கும் உரியதாக இருக்கின்றது.உதாரணமாக,தனது எஜமானைக் கண்ட நாய் ஆனது உடல்மொழி மூலமாகவே தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்துகின்றது. இக்கட்டுரையில் மனிதனது உடல் மொழி சார்ந்த புலப்பாடுகளே நோக்கப்படுகின்றன.

**உடல்மொழி எண்ணக்கரு விளக்கம்:**

உடல் மொழி என்பது ஒலிகள் எழுப்பப்படாது உடல் அசைவுகள்(Movement), முகபாவங்கள்(Facial Expressions), அங்கநிலை(Postures), இசைகைகள்(Gestures) என்பவை மூலமாக வெளிப்படுத்தப்படுகின்ற உருவ நிலைப்பட்ட கருத்து வெளிப்பாடுகள் ஆகும். இதனை தொல்காப்பியர் 'மெய்ப்பாடுகள்' என குறிப்பிடுகின்றார். அதாவது உடல் பேசும் மொழி (Body speaking Language) உடல்மொழியாகின்றது. மனிதனால் இயற்றிய இலக்கியங்கள் பலவற்றிலே உடல் மொழி பற்றிய குறிப்புகள் இடம் பெற்றிருக்கின்றன.இதனை அடிப்படையாகக் கொண்டு இலக்கியங்களில் உடல்மொழி என்ற ஆய்வுத்துறையானது வளர்ச்சி கண்டிருக்கிறது.

**இலக்கியங்களில் உடல்மொழி:**

மனித உணர்வுகள் சிந்தனைகள் என்பன இலக்கியங்களில் கதாபாத்திரங்களாக சித்தரிக்கப்படுகின்ற போது அப்பாத்திரங்களின் நிலைகள்,முகபாவங்கள்,உணர்வுகள் என்பவற்றுக்குப் படைப்பாளி ஒருவன் உடல் மொழிகளைப் பயன்படுத்துகின்றான்.அப்பொழுதுதான் அப்பாத்திரம் உணர்வு பெற்று வாசகனின் கவனத்தை ஈர்க்கின்றது. பக்தி இலக்கியங்கள் என வர்ணிக்கப்படுகின்ற தேவாரம், திருவாசகங்கள் மற்றும் பிரபந்தங்கள் போன்றவற்றிலே அவற்றின் ஆசிரியர்கள் பல்வேறு இடங்களில் இறைவனின் தோற்றங்களைக் குறிப்பிட உடல்மொழியைப் பயன்படுத்தியுள்ளமை நோக்கற்பாலது.

உதாரணமாக அப்பர் தனது தேவாரப் பதிகங்களில் உடல்மொழி பற்றிய கருத்துக்களைப் பயன்படுத்தியுள்ளமையை பின்வரும் தேவார அடிகள் மூலமாக அறிந்து கொள்ளலாம்.

"குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்" என ஆரம்பிக்கும் அடியில் இறைவனின் அங்க நிலையை சித்திரித்துக் காட்டுகின்றார். அவ்வாறே திருஞான சம்பந்தர் தனது மூன்றாவது வயதிலே ஞானப்பால் அருந்தியதால் இறைவனின் உடல் நிலையை

"தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண் மதி சூடி காடுடைய சுடலைப் பொடி பூசி" என்ற அடிகள் மூலமாக கூறியுள்ளமை இலக்கியங்களில் உடல் மொழி பற்றிய குறிப்புகளைப் புலப்படுத்தி நிற்கின்றன.இவ்வாறாக உடல் மொழி பற்றிய குறிப்புகள் மூலமாக இலக்கியங்கள் சுவை பெறுகின்றன

**உளவியலில் உடல்மொழி:**

மனித நடத்தைகளுக்கு விளக்கம் அளிக்கின்ற உளவியலில் உடல்மொழிக்கென தனியான துறை உள்ளது.மேலும் உடல்மொழி பற்றிய புலப்பாடுகள் மூலமாக ஒருவனின் நடத்தையை அது விளக்கிக் கொண்டு சமூக உளவியலாளர்கள் சீர்மிய நடவடிக்கைகளை(Counselling) முன்னெடுக்கின்றனர்.உளவியல் ரீதியாக ஒருவரை முழுமையாகப் புரிந்துகொள்ள அவர் வெளிப்படுத்துகின்ற வாய்மொழியற்ற உடல் பேசும் மொழியை உற்றுநோக்க வேண்டும் எனச் சீர்மியவாதிகள் கூறுகின்றனர். ஏனெனில் சீர்மியநாடிகள் பலர் தமது உடல்வழியாகத்தான் தங்களை அதிகம் வெளிப்படுத்துகின்றனர்.இவற்றை அவதானிக்கத் தவறுகின்ற சீர்மியர் ஒருவர் பல உளநல உதவிகளை தவறவிட நேரிடலாம்.

அதாவது,ஒருவர் தனது உணர்வுகளை சொற்கள் வாயிலாக 5%,குரல் ஒலியின் வாயிலாக 38%, உடல் இயக்க வகையில் 55% வெளிப்படுத்துகின்றார் என உளவியல் நிபுணர்கள் கூறுகின்றனர்.

சிக்மண்ட் பிரொயிட் என்ற உளவியல் அறிஞர் உடல் மொழியினை ஒருவரின் உடல் வழியாக வெளிப்படும் ஆழ்மன வெளிப்பாடுகள்(Unconscious peeps through the body) என குறிப்பிடுகின்றார்.பிரொயிட்டின் இக்கருத்துக்கள் உளவியலில் ஒரு தனித்துறையாக பரிணமித்துள்ளது.

அன்றாட வாழ்வில் பல்வேறு சந்தர்ப்பங்களில் நம்மில் பலரில் அவர்களின் ஆழ்மன வெளிப்பாடுகள் உடல்மொழியாக வெளிப்படுவதனை உற்றுநோக்கலாம். உதாரணமாக பின்வரும் கதைப்பகுதியை வாசிப்பதன் மூலமாக உடல்மொழி வெளிப்படும் சந்தர்ப்பத்தை அறிந்து கொள்ளலாம்.

ஒரு வகுப்பறையில் பல மாணவர்கள் அங்கும் இங்குமாக அமர்ந்திருக்கின்றனர். அவர்களில் ஒருவனாக அமரந்திருந்த குமரன் தனது கால்களைத் தனக்கு அருகிலிருந்த சிறிய மேசையின் மேல் வைத்திருந்தான்.அவனுடன் அமர்ந்திருந்தவர்கள் அவருக்கு இளையவராகவும்,ஒரு சிலர் அவருக்குச் சமமானவர்களாகவும் இருந்தனர். அவர்கள் குமரனைப் போல் இல்லாமல் சாதாரணமாக அமர்ந்திருந்தனர். இங்கு குமரன் தன் ஆதிக்கத்தையும் உயர் மதிப்பினையும்,ஆட்சிப் பரப்புச் சார்ந்த உரிமைகளையும் தனதாக்கவே அவன் அறியாமல் அந்த மேசையின் மேல் கால்களை வைத்துத் தன் உடல் வழியாகத் தன்னுடைய ஆழ்மனதை வெளிப்படுத்தினான்.அவன் தனக்குரிய தகுதிநிலை எப்பொழுதெல்லாம் அச்சுறுத்தப்பட்டதோ அப்பொழுதெல்லாம் தன் கால்களை அருகில் இருக்கின்ற மேசையின் மேல் வைத்துக் கொள்வான்.

இவ்வாறாக கதைப் பகுதியில் குறிப்பிடப்பட்ட குமரன் தன் உடல் அமர்வு நிலை வாயிலாகத் தன் ஆழ்மனதினை வெளிப்படுத்துகின்றான்.எனவே ஒருவரில் புலப்படுகின்ற உடல் மொழியை உற்றுநோக்கல் மூலமாக அறிவதன் மூலமாக அவரது ஆழ்மன வெளிப்பாடுகளை அறிந்து கொள்ள முடியும். இதனைத்தான் "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்ற முதுமொழி எடுத்துக் கூறுகின்றது.

**உடல் மொழி கூறும் ஆழ்மன சங்கதிகள்:**

ஒருவரில் வெளிப்படுகின்ற ஒரு சில உதாரண உடல்மொழிகளுக்கும் அவற்றின் ஆழ்மனதின் சங்கதிகளுக்கும் உள்ள தொடர்பை பின்வரும் அட்டவணை மூலமாக விளங்கிக் கொள்ளலாம்.

| உடல் மொழி வெளிப்பாடுகள் | ஆழ்மன சங்கதிகள் |
|---|---|
| 01. செங்குத்தாக குவிக்கப்பட்ட கைகள் | துணிவான வார்த்தை. உயர்மதிப்பு |
| 02. உள்ளங்கைகளை உராய்தல் | நேர் எதிர்பார்ப்பு |
| 03.கைவிரல்களை இறுக்கி மூடுத ல் | எண்ணக்குலைவு |
| 04.பின்னப்பட்ட கைகள் | குற்றங்களை மறைக்கின்ற மனப்பான்மை. பிடிவாதம். பயம். மனக் கிளர்ச்சி |

இவ்வாறாக உடல்மொழி வெளிப்பாடுகளை உற்றுநோக்குவதன் மூலமாக ஒருவரின் ஆழ்மன சங்கதிகளை அறிந்து கொள்வதன் மூலமாக அவரது இயல்புகளைப் பற்றிய குறிப்புகளை எடுத்துக் கொள்ளலாம்.

ஒருவரில் வெளிப்படுகின்ற உடல் மொழிக்கு விளக்கம் அளிக்கும் செயற்பாடு உடல் மொழி வாசிப்பு என அழைக்கப்படுகின்றது. இவ்வாறான முயற்சியில் இறங்கும் ஒருவர் பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும்.

01. வெளிப்படும் உடல்மொழியை மொத்தமாக உற்றுநோக்கல்.

02. உடல் மொழியை வெளிப்படுத்துபவரின் கலாசாரத்தை கருத்தில் கொள்ளல்.

03. உடல் மொழியை வெளிப்படுத்துபவரின் சூழமைவைக் கருத்தில் கொள்ளல்.

04. உடல் மொழி தொடர்பான முடிவுகளை தற்காலிகமாகவும் மாற்றியமைக்கக் கூடியதாகவும் கொள்ளல்.

ஏனெனில் ஒருவரில் வெளிப்படுகின்ற உடல் மொழியை அடிப்படையாகக் கொண்டு மனித நடத்தையை முற்றிலும் இதுதான் என வரையறுத்துக் கொள்ள முடியாது.

**உடல் மொழியின் வகைகள்:**

ஒருவரில் வெளிப்படுகின்ற உடல் மொழியினை அவை வெளிப்படுகின்ற சூழமைவு,சந்தர்ப்பங்கள்,நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு உளவியல் வல்லுநர்கள் பின்வருமாறு 12 பிரிவுகளாக வகைப் படுத்தியுள்ளனர்.அவை ஒவ்வொன்றும் பின்வரும் நோக்கங்களுக்காக ஒருவரில் வெளிப்படுகின்றன

| உடல் மொழியின் வகை | புலப்பாட்டு நோக்கம் |
|---|---|
| 01.Aggressive body language | உடல் ரீதியான அச்சுறுத்தல் ஏற்படல் |
| 02. Bored body language | விடயங்கள் எதிலும் விருப்பமற்றிருத்தல் |
| 03. Closed body language | காரணங்களுக்காக வெளித் தொடர்புகள் அற்றிருத்தல் |
| 04.Deceptive body language | பாதுகாப்பு உணர்வு மேலிட்டிருத்தல் |
| 05.Emotional body language | உணர்வு வயப்பட்டிருத்தல் |
| 06.Evaluating body language | விடயம் ஒன்றினை மதிப்பீடு செய்தல் |
| 07.Open body language | காரணத்திற்காக வெளித் தொடர்பை கொண்டிருத்தல். |
| 08. Power body language | தனது வலுவினை வெளிக்காட்ட முனைதல் |
| 09.Ready body language | ஒரு விடயத்தை ஆரம்பிக்க ஆயத்தமாக இருத்தல் |
| 10. Relaxed body language | நெருக்கீடுகள் அற்று ஓய்வாக இருத்தல் |
| 11. Romantic body language | மற்றையவர்களை கவர எத்தனித்தல் |
| 12. Submissive body language | பொருள் ஒன்றினை வழங்கத் தயார் நிலையைக் காட்டல் |

மேற்கூறிய உடல் மொழி வகைகளில் கட்டிளமைப் பருவத்து இளைஞர்.யுவதிகளில் எதிர்ப்பாலாரின் கவர்ச்சியைக்காண உடல் மொழியானது (Romantic body language) பல்வேறு சந்தர்ப்பங்களில் புலப்படுவதனைக் காணலாம். கட்டிளமைப் பருவத்திலுள்ள இளைஞர். யுவதிகள் எதிர்ப்பால் கவர்ச்சிக்காக

சிகை அலங்காரங்கள், உடல் அலங்காரங்கள், உடை அலங்காரங்கள் போன்ற விடயங்களில் தீவர கவனம் உடையவராக இருப்பர். இவ்வாறாக ஒருவரில் அவதானிக்கப்படுகின்ற உடல் மொழிப் புலப்பாடுகள் ஊடாக அவரில் முகிழ்த்தெழுகின்ற மாற்றங்களை அடிப்படையாகக் கொண்டு அவரின் நடத்தைக் கோலங்களை விளங்கி பொருத்தமான வழிகாட்டலைச் செய்யலாம்.

**உடல் மொழியின் சமூகப் பயன்பாடுகள்:**

உடல் மொழி வெளிப்பாடுகள் சமூகப் பயன்பாடுடையதாகவும் காணப்படுகின்றது. பொதுவாகப் பின்வரும் சமூகப் பயன்பாடுகள் ஊடாக உடல் மொழியின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ளலாம்.

* ஒருவரில் வெளிப்படும் உடல் மொழியை அவதானிப்பதன் மூலமாக அவரின் நடத்தையைக் குறிப்பிட முடியும்.
* உள மருத்துவத்துறையில் உடல் மொழியின் பயன்பாடு அளப்பரியது.
* குழுக்களுக்கிடையிலான தொடர்பாடலில் உடல் மொழி முக்கியத்துவம் பெறுகிறது.
* வர்த்தகத்துறையில் உடல் மொழி தொடர்பான தேர்ச்சியுடையவர்கள் சிறந்த வர்த்தகராக விளங்க முடிகிறது.
* வெற்றிகரமான பேச்சாளர்கள், ஆசிரியர்கள், ஆற்றுகையாளர்கள், நெறியாளர்கள் என்போர் உடல் மொழி தொடர்பான தேர்ச்சியுடையவராக இருக்கின்றனர்.

**விமர்சனம்:**

உடல் மொழி பற்றிய நேர் விளக்கமானது வழிகாட்டல் துறை.சமூக ரீதியாக பயன்பாடுடையதாக காணப்பட்டாலும் அதன் எதிர் மறை விளக்கமானது சமூக ரீதியான கட்டுமானக் குலைவுகளை ஏற்படுத்திவிட வாய்ப்புள்ளது. இதனால் உடல் மொழி பற்றிய நேர் விளக்கங்களையும், அவற்றினை மேம்படுத்தும் வழிகள் பற்றிச் சிந்திப்பதே மிக முக்கியமானதாக இருக்கின்றது.அத்துடன் ஒருவர் தனது உடல் மொழி வெளிப்பாடுகளை சுயமாக உற்றுநோக்குவதன் மூலமாக தனது நடத்தைகளை மேம்படுத்திக் கொள்ள முடியும்.

**முடிவுரை:**


தொகுத்துப் பார்க்கும் போது உடல் மொழி புலப்பாடுகள் பற்றிய விளக்கமானது ஒருவரின் ஆழ்மன நடத்தைகளைத் தெறித்துக் காட்டும் தளவாடியாக அமைவதனை அறிந்து கொள்ள முடியும்.இவ் எண்ணக்கருவானது சமூக நலனோம்பு நடவடிக்கைகளை மேற்கொள்பவர்களுக்கு பெரிதும் பயன் உடைய விடயமாக அமைவதனைக் காணலாம்.

நூல் அறிமுகம்




*நூல்* - பண்மகள்
*வெளியீடு* - பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை
ஆசிரியர் - சு. ஶ்ரீ.குமரன்
*விலை* - 10/=

நூல் அறிமுகம்




*நூல்* - வெள்ளிமலை
*வெளியீடு* - வலிகாமம் தெற்கு பிரதேச வாசகர் வட்டம்
ஆசிரியர் - க.சௌந்தரராஜன்
*விலை* - 50/=

# வாழவைக்கும் நினைவுகள்

சென்றொழிந்த காலம்
திரும்பி வரமாட்டாதாம்
உண்மை தான்
என்முற்றத்து மண்ணிலே
முழுநிலவின் ஒளியிலே
மகிழ்ந்திருந்து கதைபேசி
உணவுண்ட காலங்களும்

வயலுக்குச் சென்று
வரம்பு கட்டி விதைவிதைத்து
பார்த்துப்பார்த்து பயிர்வளர்த்து
சுற்றம் சேர்ந்து சூடடித்து
புதிர் சோறுண்டு மகிழ்ந்திருந்த காலங்களும்

ஊர் கூடி ஒன்றுபடும்
எங்களூர் பிள்ளையார் கோயில் திருவிழாவில்
தேரிழுப்பும் காவடியும்
தீர்த்தமாடலும் தீமிதிப்பும்
அன்ன தானமும் அரட்டையடிப்பும்
வெட்ட வெளி வீதியிலே
நிலவொளியின் கீழே
புதைமணலில் புதைந்திருந்து
கச்சான் கொறித்தபடி
மேளக்கச்சேரி கேட்டிருந்த காலங்களும்

இன்னும் கண்ணுக்குள்
கலையாமல் மிதக்கும்
மார்கழியின் விடியலில்
சாணியில் பிடித்தபிள்ளையாரில்
பூசனிப்பூ வைத்து வாசலிலே அம்மா போட்ட
அழகான கோலங்களும்


நினைக்கையிலே
நீரூறி நாநனைக்கும்
ஊறுகாயும் தயிரும் போட்டுக்
குழைத்துண்ட பழஞ்சோற்றின் தனி ருசியும்
கறுத்தக் கொழும்பு
மாம்பழத்தின் சுவையும்
கருவாட்டுக் குழம்பின்
வாசனையும்..
இன்னும்...
நெஞ்சுக்குள் விதையுண்டு
விளைந்து நிற்கும்
நிகழ்வுகளும் காலங்களும்
மீண்டுமினி வரப்போவதில்லை
ஆனால்...

என் நாசியின் அடிவேரில்
சேர்த்து வைத்த என்
மண்ணின் வாசனையும்
அலையடிக்கும்
நெஞ்சுக் கடலின் கரைகளிலே
சேர்த்துவைத்த
நினைவு முத்துக்களும்
இடையிடையே அலைக் கரத்தின் தீண்டலால்
வெளிக்கிளம்பி
இன்பத்தோடு வேதனையையும்
சேர்த்தொன்றாய் தருகிறதே!

ஊர்விட்டு ஊர்வந்து
இயந்திர வாழ்க்கைப் போராட்டத்தில்
களைப்புற்று சோர்கையிலே
கரைகளிலே சேர்த்துவைத்த
ஞாபக முத்துக்களை
ஒவ்வொன்றாய் தேர்ந்தெடுத்து
அழகாக கோர்த்து ரசித்திருக்கும்
பொழுதொன்றில்
இயந்திரத்தனத்தின் இழுகைக்கு
ஈடுகொடுக்க முடியாமல்
கோர்த்தவற்றைப் பாதியிலே
கலைத்துவிட்டு மீண்டும்
முத்துக்களைக் கரைகளிலே ஒதுக்குவது
தினமும் பழகிப்போய்விட்டது.

கோர்ப்பதும் பின்
கலைப்பதுமே இங்கு
வழக்காகிப் போன வாழ்க்கையிலே
கோர்ப்பது மட்டுமே
சோர்ந்து போன உள்ளத்திற்கு
ஊட்டம் தந்து
உற்சாகப்படுத்தும்
ஔடதமாகிப் போனது.
சென்றொழிந்த காலம் திரும்பிவர மாட்டாது
என்றாலும்...
சொந்த மண்ணின்
சென்ற கால நினைவுகளே
என்பிராண வாயுவாய்
என்னிருப்பை உறுதிப்படுத்திக்
கொண்டிருக்கின்றது...!

**- மிருசுவிலூர் எஸ்.கார்த்திகாயினி**



# "ஔவையை மறுதலிக்கும் அவ்வைகள்" பெண்கவிஞர் தொடர்பான இருதுருவ நோக்கு

- இ.இராஜேஸ்கண்ணன்

இன்றைய இலக்கிய ஆய்வுகளில் தவிர்க்க முடியாத ஓர் அம்சமாக பெண்ணிய ஆய்வுகள் அமைந்துவிட்டன. பெண்களையும் அவர்கள் பற்றிய சமூக விபரிப்புக்களையும் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளும் "பெண்ணிலைவாத" ஆய்வு அணுகுமுறைகள் வளர்ச்சி பெற்றுள்ளன. இவ் அணுகுமுறைகள் நவீனத்துவ வரைவெல்லைகளுக்குள் பெண்களைக் கொண்டுவரும் சிந்தனைகளாக முனைப்புப் பெற்றுள்ளன அல்லது நவீனமயப்பட்ட உலக வாழ்வில் பெண்களின் வகிபாகங்களின் அடித்தளத்தில் நின்று பெண்கள் பற்றிய முன்னைய சித்திரிப்புக்களை மறுதலிப்பதாக அமைந்து விடுகின்றன.

இலக்கியங்களில் பால்நிலைப் பாரபட்சங்கள் (Gender discriminations) அவ் இலக்கியங்கள் தோன்றிய சமூகத்தின் பிரதிபலிப்புகளாக நிலைபெற்று வந்துள்ளன. இவை ஒரு வகையில் ஆண் மேன்மை நோக்கு நிலைகளாகவே (Male Dominance ViewPoint) விளங்கிவந்துள்ளன. இலக்கியத் திறனாய்வுகளில் இவை "பால்நிலை அரசியல்" (Sexual Politics) என்று Kale Millet என்பவரால் விளக்கப்பட்டுள்ளது. அதாவது ஆண், பெண் என்ற இருவகைப் பால்நிலைகள் தொடர்பான சமுதாயப் பிரதிபலிப்புகளாக அமைந்துவிட்ட இலக்கிய உள்ளடக்கங்களை ஆணாதிக்கம், பெண்ணிலைவாதம் என்ற இரு எல்லைக் கோடுகளிடையே வைத்துத் தரிசிக்கின்றபோது அதன் பின்புலத்தில் தொழிற்படுகின்ற பால்நிலை அரசியலை வெளிக்கொணர்வது அவசியமாகிவிடுகின்றது.

"ஆண்மையமான" (Male Centered) கருத்துகளின் அடித்தளத்தில் நின்று பெண்ணை விபரிக்கும் நிலை இன்றுவரை இலக்கியங்கள், காண்பியக் கலைகள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், போன்ற பல்வேறு ஊடகங்களில் தொடரப்படுகின்றது. எனினும் பெண்ணிய இயக்கங்களின் தீவிர எழுச்சியின் பின்னர் குறித்த ஊடகங்களின் கருத்துக்கள் மறுவாசிப்புச் செய்யும் நிலை உண்டானது. அத்தகைய மறுவாசிப்புகளின் போது அவற்றின் பால்நிலை அரசியல் தோலுரித்துக் காட்டப்படும் நிலை ஏற்பட்டது.

பொதுவாக பெண்ணிலைவாதிகள் ஆணாதிக்க மனோபாவத்தின் வெளிப்பாடாகவே பால்நிலைப் பாரபட்சத்தினை நோக்குவர். ஆனால் முற்காலத்தில் வாழ்ந்து மறைந்த இலக்கிய ஆளுமைகளான பெண்களிடத்திற்கூட சமூகம் திணித்துவைத்த ஆணாதிக்க மனோபாவம் அமைந்துவிட்டமை மறுக்க முடியாத உண்மை. அவர்கள் மரபுவழிப்பட்ட போக்கில் நின்றவாறே பெண்கள் தொடர்பான சித்திரிப்புக்களைத்தந்தனர். அவையத்து முந்தியிருந்த ஔவையார் போன்ற வீறார்ந்த இலக்கிய கர்த்தாக்களைக் கூட ஆணாதிக்க மனோபாவ பால்நிலை அரசியலின் கண்கொண்டுதான் பெண்ணிலை ஆய்வுகள் நோக்க வேண்டியுள்ளன.

"பேதமை யென்பது மாதர்க் கணிகலன்" என்பது ஔவையார் பாடிய கொன்றை வேந்தனின் அறுபத்தாறாவது அடி. பெண்புலவரான ஔவையாரின் இந்தக் கருத்துநிலை தொடர்பாக இன்றைய கவிஞர்கள் அவரை கூண்டேற்றி நீதிகேட்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

ஔவையாரின் கருத்துப்படி பேதமை என்பது "மடம்" என்ற பெண்ணின் குணமாகும். "மடம்" என்பது "அறிந்தும் அறியார் போன்று இருத்தல்" என பாஷியகாரர்களால் விளக்கப்படுகின்றது. ஆண்கள் அரசர்களாக இருந்த அரசவைப் புலவர்களில் மதிக்கப்பட்ட ஔவையாருக்கு இப்படிப் பாடவேண்டிய தேவை என்ன இருந்தது என்பது வினாவாகி நிற்கின்றது. தொல்காப்பியத்தின் பொருளதிகாரத்திலே களவியலில் "அச்சமும் நாணும் மடனும் முந்தறுத்த நிச்சமும் பெண்பாற்குரிய" என்று பெண்ணுக்குரிய இயல்புகள் வரையறுக்கப்பட்டன. உலகப் பொதுமறைதந்த திருவள்ளுவர் தன் மனைவி மறைந்தபோது

*"அடிசிற் கினியாளே யன்புடையாளே*
*படிசொற் றவறாத பாவாய் - அடிவருடிப்*
*பின்றூங்கி முன்னெழுந்த பேதையே போதியோ*
*என்றூங்கு மென்க ணிரா"*

என்று தன்னை அடிவருடிக் கண்தூங்க வைத்துப் பின்தூங்கும் "பெண்ணாள்" இன்றி தூக்கம் இரவு எப்படி வரப்போகின்றது என்று கவலைப்படுகின்றார். தன் வாழ்க்கைத் துணையிழந்து புலம்பிய வார்த்தைகளில் மட்டுமன்றித் திருக்குறளிலும்.

*"தெய்வந் தொழா அள் கொழு நற்றொழு தெழுவாள்*
*பெய்யெனப் பெய்யும் மழை"*

என்று பாடிப் பதிவு செய்துள்ளார். இத்தகைய கருத்துக்கள் ஓர் ஆணாதிக்க மனோபாவத்தின் வெளிப்பாடாகக் கிளர்ந்த பெண்மை பற்றிய "ஒரே வார்ப்பான" (Steriotype) கருத்தியல்களாக அமைந்து விட்டபோதிலும். பெண்புலவரான ஔவையாரின் "பேதமை என்பது மாதர்க் கணிகலன்" என்ற மனோபவம் மேலும் உறுதிப்படுத்தப்பட பல ஆதாரங்கள் உள்ளன.

ஔவையார் தான் பாடிய ஆத்திசூடியில் "தையல் சொற்கேளேல்" என்று பாடியுள்ளார். மனையாளின் சொல்லைக் கேட்டு நடவாதே என்றுபாட ஔவையாருக்கு எப்படி முடிந்தது? பெண்ணை "மெல்லினல்லாள்" என்று அதே ஆத்திசூடியில் சித்திரிக்கும் ஔவையார்-பரத்தையருக்கு எதிரான ஒரு இயல்பினைக் கருதித் தான் சித்திரித்தார் எனக்கூறும் விளக்கவுரைகளும் உள்ளன. அது மட்டுமன்றி தான்பாடிய 'வாக்குண்டாம்' என்பதில் வரும் அவ்வாறுவாழ்க்கைத் துணைநலம் பற்றிய பாடலில்.

'இல்லாள் / வலிகிடந்த மாற்றம் உரைக்குமேல் அவ்வில் / புலிகிடந்த தூறாய் விடும்; என்று பெண் எதிர்வார்த்தை பேசாத மௌன பொம்மையாக அமைய வேண்டும் என்ற சிந்தனையை விட்டுச் சென்றார்.

ஒருவித ஆணாதிக்க மேலாண்மைக் கருத்தினை அறிந்தோ அறியாமலோ தன் பாடல்களின் உள்ளடக்கமாக வைத்துச் சென்ற ஔவையாரும் பெண்கள் பற்றிய வாலாயமான வார்ப்பினைத்தான் தந்துள்ளார். வெறுமனே பெண்ணின் "முன்மாதிரியான படிமங்களாக" காட்டப்பட்ட சீதை, அருந்ததி, கண்ணகி, நளாயினி என்பவர்கள் பற்றிய இலக்கியச் சித்திரிப்புக்களை எவ்வாறு பெண்ணிய அணுகுமுறைகள் அவற்றின் அரசியலோடு சேர்த்து மறுவாசிப்புச் செய்கின்றனவோ அவ்வாறே ஔவையாரின் கருத்துக்களையும் மறுவாசிப்புக்கு உட்படுத்தவல்ல கருத்தியல் தளங்களுடன் இன்று ஈழத்தில் அவ்வை, சிவரமணி, ஊர்வசி, மைத்ரேயி போன்ற பல பெண் கவிஞர்களின் கவிதைகள் வீறு பெற்று எழுந்துள்ளன. அவ்வாறே தமிழகத்தில் குட்டிரேவதி, கனிமொழி, உமாமகேஸ்வரி, சல்மா, இளம்பிறை, சுகந்தி சுப்ரமணியன் போன்ற பெண்கவிஞர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

அவ்வை என்ற பெண் புதுக்கவிஞர் "ஒரு தோழியின் குரல்" என்ற தனது கவிதையில்

*மானாக மருளாதே*
*அனனம் போல அசையாதே*
*வீறு கொண்டு எழு*
*எமது உரிமைகளை வென்றெடுப்போம்.*
*..................................................*
*உன்னைச் சுறறிக் கிடுகு வேலிகள்*
*இனியும் இருப்பதை அனுமதிக்காதே;*

(எல்லை கடத்தல் பக்: 18 - 19)

என்று பாடுவது ஔவையாரின் "மெல்லினல்லாள்" மீது விழுந்த ஒரு பலமான அடி. சிவரமணியின் கவிதைகளில் ஒன்றான "வையகத்தை வெற்றிகொள் " என்பதில்,

*இன்னுமா தலைவார*
*கண்ணாடி தேடுகிறீர்*
*சேலைகளைச் சரிப்படுத்தியே*
*வேலைகள் வீணாகின்றன*
*வேண்டாம் தோழிகளே*
*வேண்டாம்*
*....................................*
*ஆடையின் மடிப்புகள்*
*அழகாக இல்லை என்பதற்காக*
*கண்ணீர் விட்ட நாட்களை*
*மறுப்போம்"*

(சிவரமணி கவிதைகள் பக்: 17)

என்ற வரிகள் ஆடைகளாலும் அலங்காரங்களாலும் மூடி மறைக்கப்பட்ட பெண்ணின் கண்ணீரைச் சித்திரிக்கின்றன.

அவ்வையின் "என்னுடைய சிறிய மலர்" என்ற கவிதையும் மேற்கண்ட போலியான வார்க்கப்பட்ட பெண்மைப் பண்புகளை உடைத்து எறியும வகையில்

*'பொட்டும் பிறவும்*
*அலங்கரிக்கும்*
*மேனியழகு உன் அழகல்ல*
*வெறியும் திமிரும்*
*அதிகாரமும்*
*உடைந்து சிதற எழுந்து நில்*
*உன்னை மீறிய எந்தக் குறியும்*
*உனது உடலைத் தீண்டாதவாறு*
*அக்கினிக் குஞ்சாய்*
*உயிர்த்தெழு'* (எல்லை கடத்தல் பக் : 48)

என்று சமூக அதிகாரங்களின் வழிவந்த போலி நியமங்களைத் தகர்க்க முனைகின்றது. அவ்வையின் கவிதைகளில் "கலியாணம்" என்ற தலைப்பிலமைந்த ஒரு கவிதை

*"தாடி இருக்கலாம்*
*மீசையும் இருக்கலாம்*
*அந்நிய நாட்டில் வாழ*
*அனுமதியும் இருக்கலாம்*
*இதற்கப்பால் என்ன?*
*ஓடு. கன்னி கழிப்பதே வாழ்வின் இலட்சியம்*
*தாலி நகை கூறையுடன்*
*ஓடு"* (எல்லை கடத்தல் : 23)

என்று ஒரு பெண் கலியாணத்தின் மூலமாக சமூகம் வகுத்த ஒரு வரையறைக்குள் எவ்வாறு உருச்சிதைக்கப்படுகின்றாள் என்பதை உறைக்கப் பாடுகின்றது.

சிவரமணியின் கவிதை ஒன்றில் குடும்பம், சமூகம், அரசியல் ஆகியவற்றின் அதிகாரத்தனத்தின் விலங்குகளை உடைத்தாற்தான் பெண்ணின் உண்மையான விடுதலை பெறப்படும் என்பதை கீழ் வரும் வரிகள் புலப்படுத்துகின்றன.


*"விலங்குகளுக் கெல்லாம்*
*விலங்கொன்றைச் செய்தபின்*
*நாங்கள் பெறுவோம்*
*விடுதலை ஒன்றை*

தமிழகப் பெண்கவிஞர் இளம்பிறையின் "பூதவுடல்கள் பொய்மொழிகள்" என்ற கவிதையில் பெண்மையின் பூதவுடல் பாடி நாற்றம் வீசுகின்ற பழைய இலக்கியங்களைச் சாடுவதாக

*"துர் நாற்றம் வீசும்*
*எழுத்துக்களில் அடுக்கப்பட்டுள்ள*
*பெண்களின் பூதவுடல்கள் பார்த்து*
*பழக்கப்பட்ட நினைவை*
*சொல்லாமல் விடுவதும் பொய்"* (காலச்சுவடு இதழ் 47 - பக் : 34)

என்ற வரிகள் அமைந்தன. இவ்வரிகள் இந்தக் கட்டுரையின் நோக்கத்தை நிறைவு செய்யப் பொருத்தமாக அமைவதை குறிப்பிடலாம்.

இவ்வாறு மரபு வழிவந்த பெண் தொடர்பான சித்திரிப்புக்களுடன் நவீனமயமான இன்றைய சமுதாயத்தின் சித்திரிப்புக்களை முழுதளாவிய நிலையில் ஒப்பீடு செய்து நோக்குவதன் மூலமாக பெண்மை தொடர்பான அன்றைய நாட்களின் அர்த்தமற்ற சித்திரிப்புக்கள் மறுவாசிப்புச் செய்யப்படுவது மட்டுமன்றி மறுதலிக்கப்படுவதும் தவிர்க்க முடியாத ஒன்றாக அமைந்து விட்டது. இன்றைய பெண் படைப்பாக்க கர்த்தாக்களுக்கு அன்றைய பெண்பற்றிய வார்ப்புகளை நிராகரித்தல், இன்றைய பெண்களின் சவால்களை வெளிப்படுத்தல், எழுத்தின் மூலம் தங்களை வெளிப்படுத்துதலின் போதான பிரச்சினைகளை எதிர் கொள்ளல் போன்றன தவிர்க்க முடியாத கடமைகளாயுள்ளன. படைப்புக்களின் இத்தகைய பால் நிலை அரசியலை ஒரு முழுதளாவிய ஆய்வுமூலமாகத்தான் சரியாக வெளிக் கொணர முடியும். □□□



# ஒடுக்கப்பட்டோரின் கலகக்குரல் தலித் இலக்கியம்

- மு.அநாதரட்சகன்

இன்றைய இலக்கியச்சூழலில் தலித்இலக்கியம், புலம்பெயர்ந்தோர் இலக்கியம், நீக்ரோ இலக்கியம் போன்ற இலக்கிய வடிவங்களை எதிர்ப்பு இலக்கியம் (Pro test - Literature) என வரையறுக்கலாம். இந்தியச் சூழலில் தலித் இலக்கியத்தின் உருவாக்கத்திற்கு வலுச்சேர்த்தகாரணிகள் பல. அவற்றுள் முக்கியமானது இந்திய சமூக வாழ்வின் அடிநிலை மக்களது. எழுச்சிக்கு வழிகாட்டி அம்மக்களது விடுதலைக்காகக் குரல் கொடுத்த தலைவர்களான ஜோதியா பூலே (1828 - 1890), எம்.எம்.மாதே (1886 - 1957), பாபா சகேப் அம்பேத்கார் (1891 - 1957) ஆகிய சிந்தனையாளர்களது தாக்கம் குறிப்பிடத்தக்கது. அடிநிலை மக்களின் தலைவர்களான இவர்களது எழுத்துக்களாலும் கருத்துக்களாலும் கருத்தேற்றம் செய்யப்பட்ட புதியதலைமுறை தலித் அரசியல் இயக்கத்தினை முன்னெடுத்து அதன் வழி, தலித் இலக்கிய இயக்கத்தினையும் முன்னெடுத்தனர்.

தலித் இலக்கியத்தின் எழுச்சிக்கு சர்வதேச சூழலில் மேலெழுந்த எதிர்ப்பு இலக்கியமான கறுப்பு இலக்கியம் (Black Literature) அல்லது நீக்ரோ இலக்கியம் (Negroid Literature) உந்துவிசையாக இருந்தது. அமெரிக்க நீக்ரோக்கள் தங்கள் அடையாளத்தை ஒளிவு மறைவின்றி இலக்கியத்தில் வலியுறுத்தத் தொடங்கினார்கள். அதேபோல தலித்துக்களும் தங்களது அடையாளங்களை பெருமையுடன் பேசத் தொடங்கினர் என்பது குறிப்பிடப்படவேண்டும்.

"தலித்" என்பது மராட்டிய மொழிச்சொல் ஆகும். மராட்டியமொழியில் இது பூமியையும் மண்ணையும் அதில் வேர் பிடித்தவர்கள் என்பதையும் குறிக்கிறது. அதனை ஒட்டியே "இந்த மண்ணில் வேர் பாய்ச்சியவர்கள்" என்ற பொருளில் "தலித்" என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது.

"தலித்" இலக்கியம் முன்னர் மாராட்டியத்திலும், கர்நாடகத்திலும் பெரும்பரபரப்பை ஏற்படுத்தியது. அம்மாநிலங்களில் தலித் எழுச்சி என்பது ஏதாவது ஒரு மதத்துக்குள்ளே, சாதிக்குள்ளே வரையறுக்கப்பட்டிருந்தது. ஆனால் தமிழகத்தில் தலித் மக்களின் எழுச்சிக்கு பெரியாரின் பகுத்தறிவுச் சிந்தனையின் தாக்கமும், திராவிடப்பாரம்பரியமும், மார்க்சிய அரசியல் பொருளாதார சித்தாந்த அறிமுகமும் வாய்ப்பான சூழலை உருவாக்கிக் கொடுத்தன. சாதியக் கொடுமைகளும், வர்ணாச்சிரமதர்மமும் புரையோடிக்கிடந்த இந்திய சமூக வாழ்வியலின் அடிப்படைகளையே பெயர்த்து ஒரு புதிய சமூக அமைப்பின் ஆக்கக்கூறுகளை "தலித் இலக்கியம்" அடையாளம் காட்டியது எனலாம். மகராட்டிராவில் ஐம்பதுகளில் தலித் இலக்கியம் ஒரு கிளர்ச்சிப்பூகம்பமாக வெடித்தது. ஆனால் தமிழகத்தில் சற்று காலந்தாழ்த்தியே எழுச்சிகண்டது. 1980க்குப்பின் தாழ்த்தப்பட்டோர் விடுதலைக்கான அரசியல் பன்முகப்பட்ட தன்மையில் மேலெழ இது 1990களின் பின்னர் ஆழங்காண்பதை அவதானிக்க முடியும். இக்காலத்தில் தலித் இலக்கியத்துக்கெனவே புதிய முயற்சிகளுக்கு களமமைத்துத்தந்த இதழ் 'மனுசங்க' என்பதாகும் மனுசங்க என்ற இந்த இதழ் வெளிவந்த பின்னரே தலித்இலக்கியம் என்ற இலக்கிய வடிவம் வெளி உலகுக்கு தெரிய ஆரம்பித்தது. இவ்இதழைத் தொடர்ந்து 1992இன் கடைக்கூறில் தலித் பண்பாட்டுப் பேரவை என்கிற அமைப்பு இலக்கியம், பண்பாடு என்பவற்றினை மையப்படுத்தி அமைக்கப்பட்டது. இம்முயற்சிக்குப்பின் 1993இல் பாண்டிச்சேரியில் நடைபெற்ற "தலித் கலைவிழா" தலித்துக்களின் அடையாளங்களை பல்வேறு கலைவடிவங்களுடன் வெளிப்படுத்தியது. இதன் பின்னரே தமிழகத்தின் இலக்கியச்சூழல் கண்விழித்துக்கொண்டது.

தமிழகச்சூழலில் திராவிட இலக்கியத்திலிருந்தும், முற்போக்கு இலக்கியத்திலிருந்தும் தலித்இலக்கியம்; எந்தப் புள்ளியில் வேறுபடுகின்றதென்பதையும் எந்தப் புள்ளியில் ஒன்றிணைகிற தென்பதையும் "நிறப்பிரிகை" என்ற இதழ் தலித்தியப்பார்வையில் முன்வைத்தது. தலித் இலக்கியத்தின் உருவாக்கம் தமிழக இலக்கியக்களத்தில் ஒரு கலகக் குரலாக மேலெழுப் பல படைப்பாளிகள் பங்களித்தனர். இன்று தமிழகத்தில் "தலித் இலக்கியம்" சிறுகதை, நாவல், சுயசரிதை, கவிதை பாட்டு, நாடகம், என பல

வடிவங்களில் விரிவுகண்டுள்ளது. இவ்வடிவங்களின் முதன்மையான படைப்பாளிகள் பலர் இனங்காணப்பட்டனர்.

சிறுகதை, நாவல் :- பாமா, சிவகாமி, விழி.பா.இதயவேந்தன், உஞ்சைராசன், இமயம், குருசுசாக்கிரடீஸ், ஸ்ரீதர்கணேசன், விடுதலை, பூமணி, டி.செல்வராஜ், மாற்கு, இவர்களுடன் தலித் அரங்கியல் நாட்டார் கலை வடிவங்களின் செயற் பாட்டாளராக கே.ஏ.குணசேகரன்.

கவிதை :- பாரதி வசந்தன், ராசமுருகுபாண்டியன், பிரதிபா.ஜெயச்சந்திரன், கந்தசாமி, இனந்துறவி, புரட்சிகவிராசன், திருநாவுக்கரசு, கருப்பையாபாரதி, சுப்பையன்

கட்டுரை :- ராஜ்கௌதமன், ரவிக்குமார், அ.மார்க்ஸ், காளிமுத்து, பரமேஸ்வரி.

ஓவியம் :- இந்திரன், சந்ரு, சிற்பிஜெயராமன்

இவர்கள் தவிர இன்னும் சில இளம்படைப்பாளிகள் "தலித்" இலக்கியத்துக்கு வளம் சேர்த்துள்ளனர். என்பது குறிப்பிடத்தக்கது.


தலித் இலக்கியத்தின் சிறப்பு யாதெனில், தலித்துக்களைத் தாழ்ந்தவர்களாகப் பார்த்துப்பழகிப் போனவர்களிடம் கட்டமைந்துள்ள மரபான மனப்பதிவை கலைக்கமுயன்றமையாகும். தலித் அல்லாதவர்கள் மத்தியில் தலித்இலக்கியம் ஏற்படுத்திய இந்த மனோநிலை மாற்றம் முக்கியமான ஒன்றெனலாம். சாதியின் பெயரால் ஒடுக்கப்பட்டிருக்கும் தலித்தின் மனவலியை உணரவைத்து, தலித்தாக தங்களை நினைத்துப் பார்க்க வைக்கின்ற பணியை தலித் இலக்கியம் செய்துள்ளது. தலித் இலக்கியத்தின் இன்னொரு சிறப்பான பண்பு தலித் அடையாளங்களை ஒளிவுமறைவின்றி வெளிப்படுத்துகின்ற பாங்குடன், அதில் கலகப்பண்பும், எதிர்ப்பும் இயல்பாகவே அமைந்துள்ளமையாகும். மனித உரிமை, சமூகநீதி, சமத்துவம் ஆகியவற்றுக்காக தயவுதாட்சண்யமின்றி குரல் கொடுக்கின்ற. உலகளாவியரீதியில் படைக்கப்படுகின்ற ஒடுக்கப்பட்டோர் இலக்கியத்தின் தமிழ் வடிவமாக தலித் இலக்கியத்தைக்காண முடியும்.

"தலித் இலக்கியம்" என்ற கருத்தாக்க வடிவத்துக்கு எதிராக காரசாரமான எதிர்வினைகள் இந்தியாவிலும் இலங்கையிலும் முன்வைக்கப்பட்டபோதும் அவற்றையெல்லாம் மீறி இலக்கிய உலகில் அதிர்வலைகளை தலித் படைப்புக்கள் ஏற்படுத்தியது என்பதை மனங்கொள்ள வேண்டும்.

இதன் மீதான எதிர்வினை புரிவோர் முன் வைக்கும் குற்றச்சாட்டுக்களில் முக்கியமானவை தலித் இலக்கியத்திற்கு மதம், மொழி, கலை என அனைத்துக் களங்களிலும் விரிந்த உலகப்பார்வை இல்லை எனவும், இந்த விரிந்தபார்வை கொள்ளாமல் வரலாற்றில் இயக்கம் இல்லை என்பதுடன் தலித்தியம் என்பது வாழ்வின் தரத்தினைக் கீழ்நோக்கிக் கொண்டு செல்கின்றது என்ற குற்றச்சாட்டாகும்.

இதன் மீதான இன்னொரு குற்றச்சாட்டு தலித் படைப்புக்களில் பெரும்பாலானவை ஒரேமாதிரியான கசப்பான. கோபதாபங்களோடு கூடிய கதாபாத்திரங்களையே உருவாக்குகின்றன என்பதாகும்.

இத்தகைய எதிர்வினைகள் விமர்சனங்களை யெல்லாம் புறந்தள்ளி பார்க்கின் தலித் இலக்கியத்தின் ஒடுக்கு முறைக்கெதிரான எதிர்ப்புக்குரலும், எதிர்மறையான அணுகு முறையும், கோபாவேசமும், ஒடுக்குமுறையாளரின் புனிதங்களையும் விக்கிரகங்களையும் கேள்விக்குள்ளாக்குகின்ற தன்மையும் தலித்துக்களிடம் ஓர் எழுச்சியை ஏற்படுத்தின என்பதை மறுக்க முடியாது.□□□


## நூல் அறிமுகம்

*நூல்* - **நளதமயந்தி**
*வெளியீடு* - மேதினிகா வெளியீடு,
34/ 3, செட்டித்தெரு, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
ஆசிரியர் - இ. சு. முரளிதரன்
*விலை* - 100 /-

# நினைவுகளாகிப்போன சித்திரைக்கோலங்கள்

சித்திரைப் புத்தாண்டு...
ஆண்டாண்டு காலமாய்
வந்து போவது தான்
இன்றைய இளைஞர்களுக்கு
எங்கே தெரியும்
அன்று அது வரைந்த கோலம்.


வீர வீராங்கனைகளின்
வீர தீரச் சாகசங்கள்
மாலை இடம்பெறும்
போட்டி நிகழ்வுகள்
இரவில் மலரும்
கலைக் கோலங்கள்...
எல்லாம் நிகழ்ந்தன
நெஞ்சங்களில்-
இனிய தடம் பதித்துச் சென்றன.

காலையில்-
முகம் கழுவ முன்னரே வீதியில்
ஆரவாரம் கேட்கும்.
பத்து மைல் மரதன் ஓட்டம், இருபது
மைல் சைக்கிள் ஓட்டம்
ஊருக்குக் குறுக்காய் ஓடும் வீரர்க்கு
வாளியோடு தண்ணீர்
அடிப்பதில் தான்
எத்தனை ஆனந்தம்.

மாலை நிகழ்ச்சிகளில்-
முதல் நாளில்
மல்யுத்தம், குத்துச்சண்டை....
கட்டிளம் காளைகள்
சாகசம் புரிவர்
மறுநாளில்
இளைஞர்களோடு சிறுவரும்
ஆண்களோடு பெண்களும்
மகிழ்ச்சியோடு பங்கு கொள்வர்
தட, களப் போட்டிகளில்...

இரவிலே கண்கள் பூக்கும்
வருவாள் 'அடங்காப்பிடாரி'
தொடரும் 'வடக்கும் தெற்கும்'
'வெளிக்கிடடி விசுவமடுவுக்கு'
வயிறு குலுங்க வைக்கும்.
'பரமேஸ்-கோணேஸ்' குழுவின்
'பொப்' இசைப்பாடல் அதிர்வில்
நித்திரை பறந்தோடும்.
அரிச்சந்திர மயான காண்ட
'ஆரடீ கள்ளி நீ தான்...'
உயிரைக் குலை நடுங்க வைக்கும்.
மறக்க முடியுமா?
எத்தனை காட்சிகள்
எத்தனை கோலங்கள்
எல்லாமே நினைவுகளாகிப் போக...
வந்தது இம்முறையும்
சித்திரைப் புத்தாண்டு!
அனுமதி கிடைத்தது
ஐந்து கிலோமீற்றர்
மரதனுக்கு மட்டும்.
மாலிசந்தி-வதிரிச் சந்தி-திக்கம் சந்தி
முடியுமிடம் பொலிகண்டி
விரைந்து புறப்பட்ட வீரர்
வேகத்தைச் சீர்செய்து
நிதானமாய் ஓடினர்
வெற்றி இலக்கை நோக்கி,
ஒன்றரைக் கிலோமீற்றர்
இன்னும் ஓடவேண்டும்.
திக்கம் சந்தியையும் நெருங்கி விட்டனர்.
திடீரென ஒலித்தது 'விசில்' சத்தம்
அதில் நின்ற ஒருவர்
சொன்னார் '
'கொன்வேயாம்"

- **மைத்திரேயி**



# ஏற்றம்

- ச.முருகானந்தன்

பத்திரிகையை விரிக்கும் போதே அவனுக்கு கைகள் நடுங்கின. மனதிலும் பதட்டம். இன்று என்னென்ன செய்தியோ?

அவனது கைகள் நடுங்குவதைக் கண்ட மனைவி சிரித்தாள். "ஏன் பயப்படுகிறீர்கள்?... தினமும் பத்திரிகையில் ஒரே மாதிரியான செய்திகள் தானே வருகின்றன? ஆட்கடத்தல், துப்பாக்கிப் பிரயோகத்தில் கொலை செய்யப்பட்டமை, விமானக் குண்டு வீச்சில் புலிகளின் முகாம் அழிப்பு, அமைச்சரவை பேச்சாளர் தெரிவிப்பு, கொல்லப் பட்டது சிறுவர்கள் அழிக்கப்பட்டது முகாமல்ல, விடுதி.. கிளைமோர் தாக்குதலில் பாரளுமன்ற உறுப்பினர், கொலை, ஊடகவியலாளருக்கு அச்சுறுத்தல், நாட்டின் பிரச்சினைக்குத்தீர்வு காண ஜனாதிபதி திடசங்கற்பம்... வேறென்ன இருக்கிறது? இதற்குப் போய் பயப்படுகிறீர்களே! உங்களுக்கு வயது தான் போய்விட்டது." கேலியாக அவனை நோக்கினாள்.

"எனக்கு வயது போய்விட்டது. என் தலையில் முளைக்கும் வெள்ளி மயிரிலிருந்து கண்டு கொண்டாயா?... அல்லது நடுக்கத்தில் இருந்தா?

இப்போதல்ல.. நேற்றிரவே கண்டு கொண்டேன். கனவிலும் குழறினீர்கள்.. எனக்கு வயதாகும் போது உங்களது வயது மட்டும் ஏறாமல் நிக்குமா?

அவன் மனைவயின் பதிலில் கவனம் செலுத்தாமல் யோசித்தான். இனிமேல் ஏறாமல் நிலையாக நின்றால் சரி தான் என முணு முணுத்தபடி பத்திரிகையில் பார்வையைப் படரவிட்டான். எல்லாமே ஏற்றமாக இருந்தது. இதற்கு ஒரு முடிவே இல்லையா என்று எண்ணிய படி இதற்கு மேலும் ஏறிக்கொண்டு போனால் சந்திர மண்டலத்தைத் தொட்டு விடும் போலிருக்கிறதே

"என்ன யோசிக்கிறீர்கள் பத்திரிகையாளர் களைப்போல் எழுத்தாளரான உங்களிடமும் வந்து விடுவார்கள் என்று பயமா?"

"பயமா?.. எனக்கா?.. சீ... நான் ஏன் பயப்பட வேண்டும்? உண்மைகளைப் புட்டு எழுதினாலல்லவா பயப்பட வேண்டும்? மூதாட்டியை றோட்டைக் குறுக்கே கடக்க உதவிய இராணுவ சிப்பாய், சோதனைச் சாவடியில் கௌரவமாக நடக்கும் போலிசார் என்று தானே எழுதுகிறேன்."

"இப்படி எழுதுவதால் இவங்களுக்குப் பயமில்லையா?"

"அவங்கள் இங்கில்லைத்தானே அத்தோடு புனை பெயரிலதானே எழுதுகிறேன்."

"இல்லை என்று யார் சொன்னது? நாராயணன் தூணிலும் இருப்பான் துரும்பிலும் இருப்பான் என்ற பிரகலாதனின் கூற்றை மறந்து விட்டீர்களா?"

"இப்போது நீ ஏன் என்னைப் பயப்படுத்து கிறாய், நான் துப்பாக்கிகளுக்குப் பயந்தவனில்லை. தூக்குமேடை பஞ்சு மெத்தை என்ற கட்டப்பொம்மன் பரம்பரையில் வந்தவன்..

வாய் சவடாலுக்கு ஒன்றும் குறைவில்லை பயத்தில கைகள் ஏன் நடுங்க வேண்டும்? நேற்று குடிக்கக் கூட இல்லையே ! நோயேதும் இல்லை, அப்படியாயின் பேப்பர் பார்க்கும் போது ஏன் நடுங்கு கிறீர்கள்? சம்பந்தமில்லாமலும் உளறுகிறீர்கள்...

"இது ஆம்பிளைங்க சமாச்சாரம். நீ கொஞ்சம் சும்மா இருக்க மாட்டாயா? உனக்கென்ன வாங்கிப் போட்டதைச் சமைப்பாய்."

அவள் அமைதியானாள் பேப்பரைப் பார்த்துமுடித்த அவன் அமைதியாக நிம்மதிப் பெருமூச்சு விட்டான்.

மனைவி சொன்ன மாதிரி எல்லா செய்திகளும் இருந்தன. ஆனாலும் அவள் சொல்லாத செய்தி இல்லாததில் மகிழ்ச்சி தான். தினமும் அவ்வாறான செய்திகள் என்றால் எவ்வாறு தாங்கிக்கொள்ள முடியும்? எதற்கும் ஒரு வரம்பே இல்லையா? மக்கள் என்ன பொதி சுமக்கும் கழுதைகளா?

எதிர்பார்த்த செய்தி நொடிக்குள் தெறித்து உடனே உணர்வு எழுச்சியை ஏற்படுத்திய தோடு நின்றுவிட்டால் பரவாயில்லை வாழ்நாள் பூராவும் சுமையாய் அழுத்துமல்லவா?

அவளுக்கென்ன வீட்டோடு இருந்தபடி எல்லாக் கடமைகளையும் செய்வாள். முகம் கொடுக்கப்போகும் அவனல்லவா திக்கு முக்காட வேண்டும்?

தினமும் இப்போதெல்லாம் கனவுகளே அச்சுறுத்துகின்றன. இளமையில் ஸ்கலிதக் கனவுகளில் இவளை மட்டுமல்ல இன்னாரென்ன சினிமா நடிகைகளையும் ஏன் சமயங்களில் தெருப்பிச்சைக்காரியையும் கண்டிருக்கிறான். பின் நாளில் வாழ்வின் சாதனைகள் கனவுகளும் வந்த துண்டு. எட்ட முடியாத அபிலாசைகள் எல்லாம் ஏதோ ஒரு வித கனவாகி கணநேர இன்பத்தை தந்தாலும் நிஜவாழ்வில் அவை இல்லையே என்ற ஏக்கத்தைத் தந்ததுண்டு. அவனது ஆசைகள் எப்போதுமே அளவுக்கு மேலாக இருந்ததில்லை. அழகான மனைவி அளவான வீடு, ஒரு ஸ்கூட்டர், கௌரவமான மாதச் சம்பளவேலை, ஆசைக்கு ஒரு ஆணும், ஆஸ்திக்கு ஒரு பெண்ணுமாய் இரு குழந்தைகள் கடனற்ற மகிழ்ச்சியான வாழ்வு என நியாயமான கனவுகள் எல்லாமே கிட்டத்தட்ட நிறைவேறி யிருந்தன.

வாழ்வு நீரோட்டத்தில் தேசத்தின் பிரச்சினைகளுக்கு ஆயுதங்களைக் கொண்டு பரிகாரம் தேட முற்பட்ட போது யுத்தம் கூர்மை யடைந்து கண்முன்னே இழப்புக்கள் தரிசனமான போது கனவுகளிலும் இயம தூதர்கள் தரிசனமான துண்டு. இப்போது அதுவும் பழக்கப் பட்ட ஒன்றாய் போக அதிகம் அவ்வாறான பயங்கரக் கனவுகள் வருவதும் குறைந்து விட்டது.

இப்போதெல்லாம் அவனது ஒரே ஒரு பிரச்சினையாக மிஞ்சி நிற்பது இது ஒன்று தான். தினம் தினம் அவனை அச்சுறுத்தும் இச்செய்திகள்! கண்ணால் கண்டது, கனவு அவிழ்த்தது. நிஜதரிசனமானது சமாளிக்க முடியாமல் மனதில் அசைபோட்டது. என கொத்துக் கொத்தாய் இதே நினைவுகள் தான்.

தினசரியை மூடி வைத்த பின்னரும் யோசனையில் ஆழ்ந்திருந்த அவனைப் பார்த்து மனைவி கேட்டாள். "என்ன யோசிக்கிறியள்? இராத்திரி நடந்ததைப் பற்றியா? யோசிக்காதீர்கள் என்னாலும் இந்த வயசுக்கு மேல் ஏலாது தான்..."

அவன் சிரித்தான் அதில்லையப்பா என்று மௌனமானாள் பன்றிக்கு எப்பவும் பீ தின்னும் நினைப்புத்தான் என்று எண்ணினான். இப்போது இளமை சரிந்து முதுமை அரவணைக்கும் போது இவ்விடயங்கள் இவ்வாறான சலிப்பையே ஏற்படுத்து கின்றன. ஒரு வயதில் வாழ்வே அது என்றிருந்தது. சுருங்கி தேய்ந்து கழுதை கட்டெறும்பாகி.. கண் விழிப்பில' அரைகுறை உறக்கத்தில் அயர்ந்த தூக்கத்தில் எப்பொழுதுமே பால் நினைவுகள் வருவதில்லை... வருவதெல்லாம் ரூப அரூப சஞ்சாரமாக பாலின் விலை, பாணின் விலை, மாவின் விலை, அரிசி பருப்பின் விலை...ம்... சொற்ப ஓய்வூதியத்தில் எல்லாவற்றையும் எப்படிச் சமாளிக்க முடியும்?


"இப்ப என்ன யோசிக்கிறீங்க; மனைவி உலகுக்கு கொண்டுவந்தாள்.

"இந்த நாட்டிலை மனிசனுக்கு வேறென்ன யோசனை? தினமும் உயர்ந்தபடி செல்லும் வாழ்க்கைச் செலவு தான். இன்று என்ன பொருள் விலையேறியுள்ளது என்று தான் பார்த்தேன். பயந்து நடுங்கினேன்!..□□□

## எதைக்கொடுத்தோம்?

பாழ்பட்டும் போகிறது
எங்கள் பண்பாடு
நாளாக நாளாக
கீழ்ப்பட்டுப்போகிறது
நாங்கள் தன்பாடு
கனாக்காணும் காலம் என்றும்
கல்லூரிக் காலம் என்றும்
ஒரு கூட்டம்
"ஆனந்தம்", "கோலங்கள்", "அரசி"யென
ஒரு கூட்டம்
"மானாட மயிலாட"
"ஆட்டம் பாட்டம்" என
ஒரு கூட்டம்
புலம் பெயர்விலே
புரியாத புதிரான வாழ்வுக்குள்
ஒரு கூட்டம்
கற்பனை கனவுகளுக்குள்
குளித்தபடி நிஜம் மறந்து
கண்டதையும் பேசும்
ஒரு கூட்டம்
இப்படியே போனால்
எப்படி மிஞ்சும் எம் தேட்டம்
குப்பைகளுக்குள் குதூகலிக்கப்
பழகிவிட்ட இவர்களுக்கு
நாங்கள் எதைக் கொடுத்தோம்
குற்றம் சுமத்துவதைத

- வேல்நந்தன்



# இலக்கியமும் எதிர்காலமும்

- க.பரணீதரன்

மானுட நாகரிக வளர்ச்சியின் அடையாளச் சின்னம் மொழி. அம்மொழியின் வளர்ச்சியில் நமக்கு கிடைத்த ஒப்பற்ற மானுடக்கலையே இலக்கியம். இலக்கியம் என்பது ஒரு கலை நிகழ்வு அல்லது தோற்றப்பாடு எனலாம். இலக்கியம் மனித வாழ்வைப் படம்பிடித்துக் காட்டுவது. அது மனித வாழ்வை பிரதிபலிக்கும் கண்ணாடி. இலக்கியம் என்பது மனித வாழ்வை எழுத்து வடிவில் எடுத்துச் செல்லும் கருவூலமாகும். அது எழுதப்படும் காலத்திற்கு மட்டுமன்றி எதிர்காலத்திற்கு பயன்படுமாறு எழுதப்படுவதே இலக்கியமாகும். இலக்கியம் என்பது செய்யுள் வடிவிலிருந்து உரை நடை வடிவிற்கு மாறியது. செய்யுள் வடிவில் சிறுபாடங்களாக உள்ளவை இன்றைய சிறுகதைகளை ஒத்தவையாகும். இவ்வாறு வளர்ந்த இலக்கியங்கள் மனிதநேயத்தையும், மனிதரிடையே நல்லிணக்கத்தையும் வளர்க்கின்றன.

ஆங்கிலம் வாணிபத்தின் மொழி எனவும், இலத்தீன் சட்டத்தின் மொழி எனவும், கிரேக்கம் இசையின் மொழி எனவும், ஜேர்மன் தத்துவத்தின் மொழி எனவும், பிரெஞ்சு தூதின் மொழி எனவும், இத்தாலியம் காதலின் மொழி எனவும் சொல்லப்படும். இவ்வகையில் தமிழைப் பக்தி மொழி எனவும் அழைப்பர். பக்தி இலக்கியங்கள் இவ்வாறு சொல்வதற்கு காரணமாக அமைகின்றன. எனவே தமிழை நாம் இலக்கியத்தின் மொழி என சொல்வது பொருத்தமாக அமையும். இலக்கியமானது காலம்காலமாக படிப்படியாக வளர்ச்சி அடைந்து வந்து கொண்டிருக்கின்றது. இலக்கியங்கள் எழுதப்பட்ட காலங்களை அந்த இலக்கியங்களை வைத்தே தெரிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. நல்ல இலக்கியங்களில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் என்றைக்கும் பயன்படக்கூடியவையாக அமையும்.

நமக்கு கிடைத்த இலக்கியங்களை வகைப்படுத்தினால் வாய்மொழி இலக்கியம், சங்க இலக்கியம், காப்பிய இலக்கியம், நீதி இலக்கியம், சிற்றிலக்கியம், தனிபாடல் இலக்கியம், பாரதியுகம் தொடங்கிய கவிதை இலக்கியம், நாடக இலக்கியம், கட்டுரை இலக்கியம், பயணக்கடிதம், பக்தி இலக்கியம், பத்தி இலக்கியம் ஹைக்கூ இலக்கியம், சிறுகதை இலக்கியம், நாவல் இலக்கியம் என தமிழரின் இலக்கிய வகை நீண்டு வருவதை காணக்கூடியதாக உள்ளது. இந்த இலக்கியங்கள் நாளுக்கு நாள் மாறுபாடுகளைக் கொண்டும், புதிதுபுதிதாய் வடிவ மாற்றம் பெற்றும், காலத்தின் தேவைக் கேற்பவும், மனிதரின் தேவைக்கேற்பவும், மாற்றமடைந்து வருகின்றன.

இலக்கியங்கள் மனிதனது அறிவு மேம்பாட்டிற்கு உதவுகின்றன. மனிதனது ஆளுமைகளை வெளிக்கொணர்வதற்கு வழிகோலுகின்றன. புதிய புதிய எழுத்தாளர்களை உருவாக்குவதற்கு இலக்கிய ஈடுபாடே காரணமாக அமைகின்றது. படைப்பாக்கத் திறன் மிக்க ஒரு மனித சமுதாயத்தை உருவாக்குவதில் இலக்கியம் முக்கிய பங்கினை ஆற்றுகின்றது. இவ்வாறாக இலக்கியத்தினூடான பயன்பாடு அதிகரித்து செல்கின்ற அதேவேளை இன்று இளைஞர்களிடத்து இலக்கிய ஆர்வம் குறைந்து கொண்டு செல்வதை அவதானிக்கவும் முடிகின்றது.

ஒரு காலத்தில் புலவர்கள் போற்றப்பட்டனர். இலக்கியப் படைப்புக்கள் காப்பற்றப்பட்டன. இந்த மரபு இன்று ஒரு தேய்பிறையாக உள்ளது. முன்னைய காலங்களில் கவியரங்குகள், இலக்கியப் பேச்சுக்கள், முத்தமிழ் விழாக்கள், பட்டிமன்றங்கள், சிந்தனை மேடைகள் முதலியன உணர்வோடு எங்கும் நடைபெற்று வந்தன. கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் ஆராய்ச்சிகள், திறனாய்வுகள், விவாதங்கள், அதிக அளவில் பல நிலைகளில் மொழிக்கும், இலக்கியத்திற்கும் வளம் சேர்க்கும் வகையில் இடம் பெற்றன. ஆனால் இன்று இவ்வாறான செயற்பாடுகள் மிகவும் அருகி வருகின்றன. இவற்றிற்கு மூலகாரணமாக அமைபவன் இளைஞனே. இன்றைய இளைஞனிடத்து வாசிப்பு என்பது அருகி வருகின்றது. இலக்கியத்தேடல் என்பது மிகவும் குறைவடைந்து காணப்படுகின்றது. சினிமா, கணினி, ஆடம்பர வாழ்க்கை, அரட்டை என்பவற்றில் இன்றைய இளைஞனின் முழுக்கவனமும் திரும்பியுள்ளது. இன்றைய யுகம் கணிணியுகம் என்பதனாலோ என்னவோ

இளைஞர்களைப் பொறுத்தவரை கணினி ரீதியான கற்கைகளில் ஈடுபடுவோரே அதிகமாக உள்ளனர் இதன் காரணமாக தமிழை, இலக்கியத்தை கற்போர் எண்ணிக்கை குறைவடைந்து செல்கின்ற தன்மையை உணர முடிகின்றது.

இவ்வாறு இளைஞரிடத்து இலக்கியம் வீழ்ச்சி அடைந்து செல்வதற்கு இன்று தோன்றும் இலக்கியங்களும் காரணமாக உள்ளன. இன்று நல்ல இலக்கியங்கள் குறைவாகவும் நச்சிலக்கியங்கள் மிகுதியாகவும் அமைந்துவிட்டமையே காரணம் என்று இன்று நாம் கூறுகின்றோம். எனவே அதற்குரிய உண்மையான காரணம் என்ன என்பதைக் கண்டறிவதோடு ஏன் நச்சிலக்கியங்கள் பெருகின? நல்ல இலக்கியங்கள் செல்வாக்கு பெறக்காரணம் என்ன? எனப்பல வினாக்களை எழுப்பி விடை காண முயல வேண்டும். நச்சிலக்கியங்களின் வளர்ச்சியைத் தடுத்து இளைஞர்களை நல்ல இலக்கியங்களின் பால் ஈர்க்க வேண்டுமெனின்

1) இலக்கியங்களைப் பற்றி பல்வேறு ஆய்வுகள் வளரவேண்டும்.

2) சிறந்த இலக்கியங்களைப் படைப்பதற்கு நாம் இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டும்.

எமது நாட்டில் பாடசாலை முதல் பல்கலைக்கழகம் வரை ஒரே சீரான கல்விக் கொள்கை நம்மிடம் இல்லை. எல்லோருக்கும் பொதுவான சமவாய்ப்பை நல்கும் கல்வி முறையை உருவாக்க வேண்டும். கல்வி சரியான முறையில் இருந்தால் தான் இலக்கியம் இளைஞனிடத்து சரியான முறையில் முன்னெடுக்கப்படும். இலக்கியத்தினூடாக இளைஞர்களிடத்து ஆளுமைகளை வளர்க்கவும், பயங்களை அகற்றவும், நெருக்கடிகளை எதிர் கொள்ளவும் தயார் செய்ய வேண்டும். விமர்சனப் பண்பை ஏற்படுத்தவும், சமூகத்தோடு பல பிணைப்புகள் ஏற்படுத்தக் கூடிய வகையிலும், படைப்பாக்கத்திறன்களை வெளிக் கொணரக் கூடியவகையிலும் அமைய வேண்டும். இலக்கியங்கள் பற்றிய பரிசோதனைகள் நிகழ்த்தப்பட வேண்டும்.

1) இளைஞர் படிக்கும் இலக்கியம் மேம்படக் காலத்திற்கு தேவையான மாற்றம் வேண்டும். நம் விதிமுறைகளில் மாற்றங்களை புகுத்த வேண்டும்.


2) பாடத்திட்டம் கவனிப்பு ,வாசிப்பு, எழுத்து, பேச்சு, ஆகிய நிலைகளில் சமமாக வடிவமைக்க வேண்டும்.

3) இளைஞர்களுக்கு பல இலக்கியங்கள் தொடர்பான திறன்களை வளர்க்கும் திட்டங்களை உருவாக்கி பயிற்சி தரவேண்டும்.

4) தமிழ் பல்கலைக்கழகங்கள் தாய்மொழிக் கொள்கையை வளர்க்கும் நிறுவனமாகவும் நூல்களை உருவாக்கும் அமைப்பாகவும், மொழிபெயர்ப்புகளில் தரப்படுத்தும் மையமாகவும் செயற்பட வேண்டும்.

கால பரிமாணத்தில் உலகுக்குக் கிடைத்த வளங்களில் ஒன்று மனிதவளம், அந்த வளம் மேம்படவும், அந்தமேம்பாட்டால் வீட்டையும், நாட்டையும் வளம்படுத்த முதன்மையாகவும், முறையாகவும் பயன்படுத்தப்பட வேண்டியது இலக்கியம். இலக்கியத்திற்கும் இளைஞனுக்கும் பிரிக்க முடியாத உறவு வளரவேண்டும். இதனூடாக பண்பாட்டை வளர்க்க வேண்டும். மனித உறவுகள் சீராகப் பேணப்படவேண்டும். இவ்வாறு தமிழ் இலக்கியம் எதிர்காலத்தில் எண்ணங்களில் விரிந்தும், எழுத்துக்களில் விரிந்தும் வளர இளைஞர்களின் படைப்பாக்கம் அதிகரிக்க வேண்டும். கடிதம் எழுதும் முறை மறந்து செல்பேசியில் எஸ்.எம்.எஸ்[தகவல்] முறை வந்து விட்ட இக்காலத்திலும் இலக்கியம் பரந்து வளர்ச்சி காண இளைஞனின் பேனாவே காரணமாக அமைய வேண்டும். ஆரம்ப காலம் முதல் இன்று வரை இலக்கியங்களில் கருப்பொருளாக பேசப்படும். சாதி, மத எதிர்ப்பு, தீண்டாமை எதிர்ப்பு, பழையசடங்கு சம்பிரதாய முறைகளை எதிர்த்தல், முதலாளிகள் கொடுமைகளை எதிர்த்தல், விடுதலைப் போராட்டத்தை ஆதரித்து சுற்றிய ஏகாதிபத்திய எதிர்ப்பு, தொழிலாளர் பிரச்சினை, கூலி உயர்வுப் பிரச்சினை, வேலையில்லாப் பிரச்சினை, குழந்தை தொழிலாளர் பிரச்சினை, பெண்ணடிமைப் பிரச்சினை, பாலியல் பிரச்சினை போன்றவையை இலக்கியக் கருப்பொருளாக இருந்தன. இவற்றோடு இன்றைய காலத்தில் உள்ள புதிய பல பிரச்சினைகளை பிரதிபலிக்கும் கருப்பொருட்களை தன் இலக்கியக் கருப்பொருளைக் கொண்டு இலக்கியத்தை படைத்து இலக்கிய வளர்ச்சிக்கு உதவுதல் வேண்டும்.

உலக நாடுகளில் தமிழ் இலக்கியங்கள் நல்வரவேற்பு அடையவும், தலை நிமிர்ந்து நிற்கவும், எதிர்கால சமுதாயத்திற்கு நல்ல இலக்கியங்களைக் கொடுக்கவும், கருத்துக்கள் பரவவும், மக்களை சிந்திக்க வைக்கவும் கூடிய இலக்கியங்களை படைக்கும் திறன் இளைஞர்களுக்கு உண்டு. எனவே இளைஞர்கள் இலக்கியத்தில் மிகுந்த ஈடுபாட்டுடன் செயற்பட்டு இலக்கிய வளர்ச்சியை மேம்படுத்த வேண்டும்.□□□



# கிணறு

- பி.கிருஷ்ணானந்தன்

"அம்மா சாப்பிட்டுப் படுங்கோ"

"..........................................."

"அம்மா ...சொல்லுறதைக் கேளுங்கோ. சாப்பிட்டிட்டுப் படுங்கோ"

"..........................................."

"அக்கா. நீங்கதான் வந்து எழுப்புங்கோ. என்னாலை இனி ஏலாது. பிடிவாதத்திற்கும் ஒரு அளவு இருக்க வேணும்;

"நேற்று தொடக்கம் அவாவைக் கேட்டுக் கேட்டு களைச்சுத்தானே உன்னை விட்டனான். என்னதான் இருந்தாலும் இந்த வயசிலை இப்பிடிப் பிடிவாதங் கூடாது"

"பொறு பொறு தம்பியிட்டை ஆள் அனுப்பியிருக்கிறம் தானே. அவர் தானே அம்மாவின்ரை செல்லப்பிள்ளை. வந்து இரண்டு செல்லங்களும் சேர்ந்து சாப்பிடட்டும்."

பவானியும் தங்கை தயானியும் தீர்மானித்து விட்டார்கள். தம்பி வரதன் வந்து தாயுடன் மல்லுக்கட்டி ஏதோ ஒரு முடிவுக்கு வரட்டுமென்று.

நேற்றையிலிருந்து தாய் தேவியம்மா பச்சைத் தண்ணீர்கூட வாயில் விடவில்லை. இதுதான் அவர்களுடைய பிரச்சினை. தேவியம்மா தன் கணவனை இழந்தபின் கொஞ்சம் பிடிவாத குணம் கூடத்தான். பேரப்பிள்ளைகள் வந்து "அம்மம்மா" என்று சொல்லி கழுத்தைப் பிடித்து முத்தமிட்டு தேவியம்மாவின் கோபத்தையோ பிடிவாதத்தையோ மாற்றி விடுவார்கள். புருசனின் மறைவுக்குப்பின் பெற்ற பிள்ளைகளென்றாலும் கூட தனது மகனுடையதோ அல்லது பெண்பிள்ளை களுடையதோ உழைப்பில் தண்டச்சோறு தின்னக்கூடாது என்பது அவவுடைய வைராக்கியம். அதனால் பிள்ளைகளுக்கு கொடுத்தது போக மிகுதியாக இருந்த தனது நகைகளை விற்றுப் பெற்ற தொகையையும், கையிருப்பில் இருந்த பணத்தையும் கொண்டு போய் வங்கியில் வைப்புச் செய்து அதிலிருந்து வருகிற மாதவட்டியை இரண்டு பெண்பிள்ளைகளிடமும் கொடுத்துத்தான் அவர்களுடன் சாப்பிடுகிறா நாளைக்கு பிள்ளைகளோ மருமக்களோ தன்னைச் சினந்து விடக்கூடாது என்பதில் அவ்வளவு உறுதி. தாயின் இந்தச் செயல் பிள்ளைகளுக்கு மனவருத்தத்தை தந்தாலும் ஏதோ அப்படியாவது தங்களுடன் சேர்ந்திருக்கட்டும் என்று விட்டுவிட்டார்கள்.

ஆனால் இப்போது பிரச்சனை வேறு. பெண் குஞ்சுகளிரண்டும் வளவுக்குள் குழாய்கிணறு அமைக்க வெளிக்கிட்டமைதான் பூதாகரமாகி தேவியம்மாவின் உண்ணாவிரதத்தில் வந்து நிற்கிறது.

குழாய்க்கிணறு தோண்டுவதென்பது ஏதும் செய்யக்கூடாத ஒரு குற்றமல்ல. வீட்டுக்கு வீடு ஒவ்வொருவரும் தங்கள் தேவைகருதி வளவுக்குள் அமைத்து வருகிற ஒரு விஷயம்தான். ஆனால் தேவியம்மாவைப் பொறுத்தவரையில் யார் எப்படியும் என்னவும் செய்து விட்டுப் போகட்டும்?, தனது பெண் பிள்ளைகள் இருவரும் தங்கள் வளவுக்குள் குழாய்க்கிணறு அமைக்கக்கூடாது என்பதுதான் பிரச்சனையே.

அந்தக்காலத்தில் இப்பகுதிகளில் கிணறு என்றால் அது பெரிய வெட்டுக்கிணறு தான். ஐம்பது அடி ஆழத்திற்கு முன்பின்னாகத் தண்ணீரைக் காணுகிற இந்த ஆழக்கிணறுகளை சாதாரணமாக யாரும் அமைத்துவிட முடியாது. இனிமேல் இல்லையென்ற வசதியான ஒருவர் இந்த முயற்சியில் இறங்கலாம். இல்லையோ கிராம சபைகள், கிராம அபிவிருத்திச்சங்கங்கள் ஊரின் மத்தியில் ஒன்றை அமைத்துக் கொடுத்தால்தான் உண்டு. ஐம்பது அறுபது குடும்பங்களுக்கு ஒரு கிணறு என்று கூட அமைவதுண்டு. குளிப்பது முதற்கொண்டு குடம்கொண்டு தண்ணீர் அள்ளுவது வரைக்கும் வந்த ஒழுங்கின் படி காத்துநிற்க வேண்டும். ஒழுங்கு தப்பி யாராவது செயற்பட முயன்றால் அடிதடியில்தான் முடியும். இதனால் ஆண்கள் சிலர் தூரத்திலுள்ள தோட்டக்கிணறு களுக்குப்போய் அங்கு நுகத்தில் மாடுகள் பூட்டிச் சூத்திர வாளிகள் மூலம் இறைக்கப்பட்டு வாய்க்கால் வழியோடும் தண்ணீரில் ஓரமாய் நின்று குளித்து விட்டு வருவார்கள். தவிர, கூலிவேலைக்குப் போகிறவர்கள் கிணற்றடியில் சனம் குறைந்ததும் இரவு பத்துமணியளவில் கூட வந்து குளிப்பார்கள். தைப்பொங்கல், தீபாவளி போன்ற விசேஷ தினங்களில் சொல்லவே தேவையில்லை.

அதிகாலை நான்கு மணிக்கே சனம் கூடத் தொடங்கினால் மாலையில்தான் கிணறு ஓய்ந்து கிடக்கும்.

இப்படியான சூழ்நிலையில்தான் செல்லையா தான் ஒரு கிணறு வெட்ட வேண்டுமென்று தீர்மானித்தார். ஆரம்பத்தில் கணவனின் எண்ணத்திற்குத் தேவியம்மா ஒத்துக் கொடுக்கவில்லை. இரண்டு பெண்குழந்தைகளைப் பெற்று வைத்துக் கொண்டு இப்படியான ஒரு பெரிய வேலையைச் செய்யத் தங்களின் பொருளாதார நிலை ஒத்துவராது என்பதுதான் அவவின் அபிப்பிராயமாக இருந்தது. ஆனால் கடும் உழைப்பாளியான தனது கணவனின் பிடிவாதத்திற்குத் தேவியம்மாவும் சம்மதிக்க வேண்டியதாயிற்று.

வாலிப வயது தொட்டு கொழும்பில் சப்பாத்துத் தொழில் செய்து வந்த செல்லையா இரண்டு பெண்பிள்ளைகளும் பிறந்தபின் அவர்களின் நன்மை கருதி ஊரோடு வந்துவிட்டார். வந்து தன்னுடன் மேலும் மூன்றுபேரை வேலைக்கமர்த்தி சிறியளவில் பாதஅணி உற்பத்தி நிலையத்தை நடாத்தினார். தனது நாற்பதாவது வயதில்தான் இந்தக்கிணறு வெட்டுங் கைங்கரியத்தில் இறங்கினார். கிணற்றுவேலை முழுமையாக முடிய இரண்டு வருடங்கள் சென்றன. கிணற்றுடன் அவ்வளவு கால அவருடைய உழைப்பினால் வந்த தேட்டமும் கரைந்து போயிற்று. மீண்டும் பிள்ளைகளுக்காக அவர் "ஆனா" விலிருந்து தொடங்க வேண்டியதாயிற்று. ஆனாலும் அவர் கவலைப் படவேயில்லை. தாதுசேன மன்னன் "காலவாவி" குளத்தை வெட்டி முடித்தபோது அடைந்த சந்தோஷத்துக்கு ஒப்பானது இவர் இந்தக்கிணற்றை வெட்டி முடித்துத் தண்ணீர் எடுத்துக் கிணற்றுப் பொங்கல் படைத்த அன்று அடைந்த சந்தோஷம். சுமார் இருபத்தைந்து குடும்பங் களுக்குக் குறையாமல் இந்தக் கிணற்றினால் முழுமையாகப் பயன் அனுபவிப் பதையிட்டு மனங்குளிர்ந்தார்.

தனது வீட்டு வளவுக்கு அடுத்துள்ள தனது காணியில் வெட்டப்பட்ட இந்தக் கிணற்றுக்கு என அரைப்பரப்பை ஒதுக்கி எந்த நேரத்திலும் யாரும் வந்து கிணற்றைப் பாவிப்பதற்கு வசதி செய்தார். பிரதான தெருவிலிருந்து கிணற்றுக்கு வருவதற்குப் பெரிய ஒழுங்கை ஒன்றைப் புறம்பாக்கி விட்டுத்தான் வேலியடைத்தார். செல்லையா பெரிய கிணறு ஒன்றை அமைத்த பின்னர்தான் சூழலில் உள்ள வீடுகளிலும் பச்சைநிறம் தலை காட்டியது. ஒவ்வொருவரும் இந்தக்கிணற்றில் தண்ணீர் அள்ளித்தங்கள் வீடுகளில் மா, பலா, தென்னை, என்று நிரந்தரப் பயிர் வளர்க்கலாயினர்.

காலதேவனின் ஓட்டத்திற்கிணங்க ஊருக்கு மின்சாரம் வந்தது. குழாய்க்கிணறு முறையும் வந்தது. அவரவர் வீடுகளில் தமக்குத் தமக்கென குழாய்க்கிணறு அமைத்து மோட்டர்பூட்டி இலகுவாக நீர் இறைக்கும் முறையும் வந்தது. பெரிய கிணற்றுக்குச் சனம் வருவது வெகுவாகக் குறைந்து போய்விட்டது. காலத்தின் மாற்றத்தை ஏற்கத்தான் வேண்டுமென்றாலும் மக்களின் ஆரவாரமின்றி கிணறு ஓய்ந்திருப்பது செல்லையாவுக்கு மெல்லிய வேதனையைத் தந்தது. மின்சாரம் தொடர்ச்சியாக மூன்று நான்கு நாட்களுக்கு தடைப்பட்டிருந்தால் மீண்டும் கிணற்றடியில் சனம் ஆரவாரப்படும். அல்லது அப்பகுதியில் அந்தியேஸ்டிக் கிரியை என்றால் கிணற்றடியில் நிறைந்த சனத்தைக் காணலாம். அவ்வளவுதான்.

இப்போது பவானியும் தயானியும் பெரிய கிணறு இருந்தும் தங்கள் வசதி கருதி வீட்டு வளவுக்குள் குழாய்க்கிணறு அமைப்பதற்கு இடம் எடுக்க சாத்திரியாரை வரச்சொன்னதுதான் தேவியம்மா வீட்டுக்குள் போர்த்துக்கொண்டு படுத்திருந்து உண்ணாநோன்பிருக்கக் காரணமாய் அமைந்துவிட்டது.

* * *

தமக்கைமார் இருவரும் ஆள் விட்டனுப்பி இதோ வரதனும் வந்துவிட்டான். அவன் திருமணம் செய்தது பக்கத்து ஊரில்தான் என்றாலும் பள்ளிக்கூடம், ரியூட்டரி என்று ஆசிரியத் தொழிலில் முழுநேரமாக ஈடுபடுகின்ற காரணத்தால் சனி, ஞாயிறுகளில் மட்டும் மாலையில் தாயிடமும் தமக்கைமாரிடமும் வந்து போவான். இன்று அவன் வரும்போதே அக்காக்கள் ஆள்விட்டனுப்பியதற்கு அம்மாதான் ஏதும்காரணமாக இருக்குமென்று யூகித்துவிட்டான்.

"வாடா... வா ! அங்கைபார் ஒரு குழந்தைப்பிள்ளை இரண்டு நாளாச் சாப்பிடாமல் அடம் பிடிக்குது. வந்து என்னெண்டு கேள்" பவானி தம்பியைக் கண்டதும் ஒரு வித மகிழ்வில் சொன்னாள்.

"வளவுக்குள்ளை குழாய்க்கிணறு தோண்ட வேண்டாமாம். தோண்டினால் பெரிய கிணறு பாழ்ங் கிணறாகி விடுமாம். ஐயாவின்ரை பதினைஞ்சு பதினாறு வருஷ உழைப்பு முழுவதும் அந்தக் கிணற்றுக்குத்தான் செலவழிஞ்சுதாம்."

"அது உண்மைதானே. அக்கா ஐயா இருக்கிற காலந்தொட்டு போனாப்பிறகும் அடிக்கடி அம்மா சொல்லுறவாதானே"

"அட... அதுக்காக புதிய புதிய வசதியள் வரேக்கை பழசைக் கட்டிப் பிடிச்சுக்கொண்டு அழ ஏலுமே... நாங்களும் வேலைக்குப் போகிறனாங்கள். வளவுக்கேயே எல்லாம் இருந்திட்டால் எவ்வளவு வசதி. நேரமும் மிச்சம்.; இது பவானி.

"ஐயா இருக்கேக்கை கிணற்றுக்குத் துலாப் போடுறதுக்கு உயரப்பனை வாங்க எவ்வளவு இடங்கள் அலையிறவர். பிறகு கப்பியளுக்கு மாத்தினாப்பிறகு கப்பியள் அடிக்கடி பழுதாகும். வாளியள் மோதிப் பழுதாகும். கயிறு அடிக்கடி அறுந்து போகும். ஐயா இருக்கேக்கை அவர் எல்லாத்தையும் கவனிச்சுக் கொள்ளுவார். எங்களுக்கு உதெல்லாம் முடியுமே" இது தயானி.

வரதன் குறுக்கிட்டான். "அதெல்லாம் உண்மைதான் அக்கா. ஆனால் ஐயா பொது நோக்கோடை இந்தக் கிணற்றை வெட்டினவர். ஊரிலை, அயலிலை கன வெட்டுக் கிணறுகள் கைவிடப்பட்டு பாழ்ங்கிணறாகி, பிறகு குப்பை போட்டு நிரப்பி மூடப்படுகிறதையும் அவர் கண்டவர். வேதனைப் படுகிறவர். அதைப்பார்த்து அம்மா வேதனைப்படுகிறவா. தங்களின்ரை உழைப்பு, தேட்டம், தங்களின்ரை கண்ணுக்கு முன்னாலேயே அழிஞ்சு போறதை அவையாலை ஜீரணிக்க முடியாது."

"அப்ப... ஒண்டு செய்வம். அப்புவின்ரை மாட்டுவண்டில் பழுதாகி வீட்டுக் கோடியுக்கை கிடக்கு. பழசை விடக்கூடாது எண்டதுக்காக நாங்கள் எங்கையெண்டாலும் போறதுக்கு அதைத் திருத்திப் பாவிப்பமோ"

தயானி சாதுவாகக் கிண்டலடிப்பதுபோல் வரதனுக்குப்பட்டது. அவன் சற்று சினங் கொண்டவன் போல் தயானியைப் பார்த்துக் கூறினான்.

"அதையும் இதையும் ஒப்பிட்டுக் கதைக் காதையக்கா. அந்தக் காலத்தில் ஐயா இந்தக் கிணற்றை வெட்டேக்கைதான் பொன்னுத்துரை மாமா அந்தப் பெரிய வீட்டைக் கட்டினவர். அதே காலத்திலை பெரியம்மா பக்கத்திலுள்ள பத்துப் பரப்புக் காணியை வாங்கி பிள்ளைகளின்ரை பேரிலை எழுதினவா. இதுகளைவிட ஐயா கிணறு வெட்டச் செலவு கூட முடிஞ்சுதாம். ஆனால் ஐயா பொது நலத்தைத்தான் சிந்திச்சவர்."

"அதுக்காக நாங்கள் இப்ப கிடைக்கிற வசதியளைப் பாவிக்கக்கூடாது எண்டு சொல்லுறியோ!" பவானி கேட்டாள்.

"நான் அப்பிடிச் சொல்லேல்லையக்கா. இண்டைக்கு நாட்டிலை நடக்கிற சண்டையிலை எத்தனை உயிர்கள் எவ்வளவு பெறுமதியான உடைமையள் அழிஞ்சு போகுது. ஆனால் நாங்களாகவே எங்களைப் பெத்ததுகளின்ரை கண்ணுக்கு முன்னாலையே அவையள் உயிராய் நேசிச்சதைச் சீரழிஞ்சு போகவிடக்கூடாது. அம்மா தன்ரை கூடுதலான நேரத்தை அந்தக் கிணற்றடி வளவுக்குள்ளை செலவழிக்கிறதைக் கவனிக் கிறனீங்கள் தானேயக்கா. அவா அந்தக் கிணற்று வடிவத்திலை ஐயாவைத்தான் காணுறா. அம்மா இருக்கும் வரைக்குமாவது கிணறு பாழாக விடக்கூடாது!..ஆ... நீங்கள் இரண்டு பேரும் உங்கடை வீட்டு வளவுக்கை குழாய்க்கிணறு தோண்டினாலும் தண்ணீர்தொட்டி, பாத்றூம் எல்லாம் கட்டப்போறியள்தானே."

"ஓமோம்... அதில்லாமலே" தயானி பதிலையே கேள்வியாக்கினாள்.

"அப்ப ஒண்டு செய்வம். பெரிய கிணற்றிலை மோட்டரைப்பூட்டி உங்கடை தண்ணீத் தொட்டிக்கு தண்ணீர் வரப்பண்ணுவம். உங்கடை தேவையும் நிறைவேறும். கிணறும் பாவனையிலிருக்கும். நான் இதைப்பற்றி இரண்டு அத்தான்மாரோடையும் கதைக்கிறன்."

"உம் சரியடா. உதுவும் நல்ல ஐடியா தான். இனியாவது அம்மாவைச் சாப்பிடப்பண்ணு. போ... போடா... நாங்களுமெல்லோ இந்த மனிசியாலை பட்டினி கிடக்கிறம்". பவானி உற்சாகத்தோடு கூறினாள்.

வரதன் எழுந்து தாயிடம் போனான்

"அம்மா எழும்புங்கோ. அக்காக்கள் குழாய்க்கிணறு தோண்டுற எண்ணத்தைக் கைவிட்டிட்டினம். எழும்பிச் சாப்பிடுங்கோ."

"......................................"

"அம்மா எழும்பியிருங்கோ. உங்களாலை எல்லாருமெல்லோ சாப்பிடாமல் இருக்கினம்."

தேவியம்மா எழும்பி உட்கார முயலும் போது வரதன் தானும் பக்கத்தில் உட்கார்ந்து உதவி செய்தான். தயானி சாப்பாடும் தண்ணீரும் கொண்டு வந்து வைத்தாள். வரதன் இன்னொரு கோப்பைக்குள் தாயின் கையைத் தண்ணீர் விட்டுக் கழுவுகிறான். தானே சோற்றைக்குழைத்து உருண்டையாய்த் திரட்டி தாயின் கைக்குள் வைக்கிறான். தேவியம்மா அதை வாய்க்குக்கிட்ட கொண்டு போவதற்கிடையில் கண்களிலிருந்து இரண்டு சொட்டுக் கண்ணீர் அந்தச் சோற்று உருண்டையின்மேல் விழுந்து கலக்கிறது. அக்காட்சி வரதனின் கண்களையும் ஈரமாக்குகிறது.

□□□

# எழுத மறந்த குறிப்பு

மனங்கிறங்கிப் போன
ஒரு துயர நிலையிலிருந்து
உனக்கான குறிப்பை வரைகிறேன்

உனக்கு ஏதாவது
எழுத வேண்டும்
என நினைக்கும் போது
யாராவது வந்து
எனது (எழுதும்) ஆயுதத்தை
அபகரித்து விடுகின்றனர்.

எனது தேவைகள் பற்றி
அல்லது ஆசைகள் பற்றி
உள்ளம் அவாவுவதை விட
வேறு பிரச்சினைகள்
பற்றிய பிரக்ஞை
எழுதும் எனது மனோநிலையை
குழப்பி விடுகிறது.

நமது உறவுக்கான தொடர்பாடலை
இணைக்க எத்தனிக்கும் போது
யாருடையதாவது மரணத்தின் நாதி
என் முன் முரசுகிறது.

குருதி பற்றியும் மரணம் பற்றியும்
வெளிவரும் பத்திரிகைச்
செய்திகளை
வாசிப்பதால் தாள்களை எடுக்க
இயலவில்லை.
அதற்கு முன்
இறந்து விடுகின்றன
எனது எண்ணங்களும்
சிந்தனைகளும்.
ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில்

நானும் நீயும்
மனிதம் பற்றி பேசும் மொழியை
யாரோ வெளியில் நின்று
விலை
பேசுகின்றனர்

இனி இருத்தல் பற்றியோ
வாழ்தல் பற்றியோ
பேச முடியாது
அதற்கு மேல்
சமரசம் பற்றியோ
சமத்துவம் பற்றியோ
எங்கும் எழுத முடியாது.
உனது முகத்தை நானும்
எனது முகத்தை நீயும்
பழைய மழலை புன்னகையுடன்
நினைத்துப் பார்த்தால்...
இன்று?
காலம் இரத்தம் பூண்டு
திரிவதால்
நீயும் நானும் எப்போதும்
கொல்லப்படுதலைப்
பற்றி அஞ்சுகிறது மனம்
அதற்காக யாராவது
கொல்லப்படுதலை
எதிர்க்காமல் விடுவதா...?

கேள்விகள் முன்
வேள்விகள் செய்தாவது
நமது பழைய சிநேக வாஞ்சையை
வென்றெடுப்போம்
நமது உறவுகளை மீள
மீட்டெடுப்போம்...

- எல்.வஸீம்அக்ரம்



# பிள்ளை நேயம்

- தனா

ஓநாய்கள் நடுவே சிக்குண்ட ஆட்டுக்குட்டி போல அவர்கள் நடுவே அவள்...

'என்ன... ஏன்...'

எனக்கு எதுவுமே பிடிபடாமல் இருக்கிறது.

"பதினோராம் வகுப்புக் கிளாஸ் ரீச்சரைப் பிரின்ஸிபல் வரட்டாம்..."

பியோன் செய்தி சொல்லிச் சென்றதும் உடனடியாகவே என் நெஞ்சு அடித்துக்கொண்டது. என் பெயரைக் குறிப்பிடாமல் 'பதினோராம் வகுப்புக் கிளாஸ் ரீச்சர்' என்று அழைக்கப்பட்ட போதே எனது வகுப்பில் ஏதோ அசம்பாவிதம் நிகழ்ந்திருக்க வேண்டும் என்று தோன்றியது. என் நினைப்பு ஒன்றும் பிழையில்லைஎன்பதற்குச் சான்றாக அனிதாவைச் சுற்றி அவர்கள் நின்றுகொண்டிருக்கிறார்கள்...

யார் யாரெல்லாம் நிற்கிறார்கள் என்று ஒருமுறை சுற்றிவரப் பார்க்கிறேன்... மாலா ரீச்சர், மிஸிஸ் கந்தவேள், மிஸிஸ் ராமச்சந்திரன், சித்திரா, பிரின்ஸிபல், கையில் பிரம்புடன் திரவியநாதன்... எல்லோரும் பாடசாலை ஒழுக்காற்றுக் குழுவினர்.

என்னைக் கண்டதும் திரவியநாதன் அனிதாவை அதட்டினான்.

"சொல்லடி... உங்கடை ரீச்சரும் வந்திட்டா... என்ன நடந்ததெண்டு சொல்லு..."

அனிதா என்னைப் பார்க்கிறாள். அவளின் கண்கள் என்னிடம் எதையோ யாசிக்கின்றன. நான் ஒன்றும் விளங்காமல் அனிதாவையே பார்க்கிறேன்.

அனிதா ஒன்றுமே பேசாமல் நிற்கிறாள். இது திரவியநாதனுக்கு எரிச்சலைத் தந்திருக்க வேண்டும். உறுமத் தொடங்கினான்.

"சொல்லடி, உனக்கு அவன் என்ன தந்தவன்..."

புதிய ரீச்சரான எனது முன்னிலையில், அனிதாவின் மௌனத்தினால் தாம் எல்லோருமே அவமதிக்கப்படுகிறோமே என்ற விசனம் மிஸிஸ் கந்தவேளுக்கும் உறைத்திருக்க வேண்டும். கண்களை நெரித்து முகத்தை விகாரமாக்கிக் கொண்டு கேட்டா.

"நாங்கள் இவ்வளவும் கேட்கிறம், நீ பேசாமல் நிற்கிறாய், என்னடி... வாய்க்குள்ளை என்ன கொழுக்கட்டையே..."

திரவியநாதன் இடைமறித்தான். மிஸிஸ் கந்தவேள் தனக்குச் சாதகமாகத் தான் கதைக்கிறா என்பது விளங்கினாலும் மற்றையோரின் கை ஓங்கத் திரவியநாதன் விடமாட்டான். அதனால் செருமிக் கொண்டு இன்னும் உரத்த குரலில் கத்தத் தொடங்கினான்.

"நான் என்ன வேலை மினைக்கெட்ட ஆரோவே... என்னைப் பேய்க்காட்டிப்போட்டு கொட்டமடிக்கலாம் என்ற நினைப்பே... அவன் கமல் உன்னட்டை என்ன தந்தவனெண்டு சொல்லனடி..."

"ரீச்சர் பார்த்தியளே, இவள் பேசாமல் நிற்கிறதை... நான் கண்ணாலை பார்த்தனான். அவன் கமல் ஏதோ மேசையிலை வைச்சிட்டு ஓடினவன், இவள் அதை எடுத்தவள். என்னென்று கேட்கச் சொல்லுறாளில்லை..."

எனக்கு இப்போது விளங்குகிறது. இது திரவியநாதனின் வழமையான ராஜாங்க விசாரணைகளில் ஒன்று என்று. பாவம்! இன்று அனிதா மாட்டிக் கொண்டிருக்கிறாள்.

இந்த நினைப்புத் தோன்றியதுமே என் மனம் அனிதா மீது பச்சாத்தாபம் கொள்கிறது... அனிதா சூட்டிக்கையான பிள்ளை. வயதுக்கு மீறிய ஒரு முதிர்ச்சி அவளிடம் நிரம்பியிருப்பதை இந்தக் குறுகிய காலத்திலேயே நான் உணர்ந்திருக்கிறேன். நல்ல ஒரு பள்ளிக்கூடத்தில் படித்திருந்தால் அவள் மேலுக்கு வரக் கூடியவள். குடும்பத்தின் வறுமை நிலை இந்தப் பாடசாலைக்கு அவளைக் கொண்டு வந்து விட்டிருக்கிறது.

உள்மனத்தில் அனிதா பற்றிய விவரணப் படமொன்று ஓடிக் கொண்டிருக்கையில் நான் அவளைப் பரிவாகப் பார்க்கிறேன். என் பரிவுப் பார்வையைத் திரவியநாதனின் கழுகுக் கண்கள் கொத்திக் கொண்டன. அடித்தொண்டையில் குரலெடுத்துக் கத்தினான்.

"ரீச்சர், நீங்களும் பேசாமலிருக்கிறியள்... இவையளுக்கு நீங்கள் தான் இடம் குடுத்திட்டியள்... நான் கண்டனான் ரீச்சர், இதுகள் லவ் லெற்றர்

குடுத்துத் தான் விளையாடுதுகள்... நீங்களும் கவனிக்கிறேல்லை...'

எனக்குள் கோபம் கிளர்ந்து கொண்டெழுகிறது. 'இவன் சாட்டுச் சாட்டாக உன்னோடு சருவுகிறான்' என்று என் உள்மனம் இடித்துரைத்தது.

இவனுக்கு நான் தன்னைப் பொருட்படுத்துவதில்லை என்ற கோபம். அது தான் சந்தர்ப்பம் கிடைத்தவுடன் என்னையும் இழுத்துக் குறை சொல்லிக் கொண்டிருக்கிறான்.

நான் பிரின்ஸிபலைப் பார்க்கிறேன்.

என் மதிப்பீட்டில் அவர், பாவம்! அப்பிராணி. திரவியநாதனுக்கு அடங்கிய பெட்டிப்பாம்பு. பிரின்ஸிபல் மாத்திரம் அல்ல, இங்குள்ள அனைவருமே இவனுக்குப் பயந்து போய் இருக்கிறார்கள். இவன் அடிதடிக்காரன் என்பதனாலோ என்னவோ பாடசாலையைப் பொறுத்தவரை பல தீர்மானங்களை எடுப்பவன் திரவியநாதன் தான். இவ்வளவுக்கும் இவன் ஒன்றும் பெரிய ஆளில்லை. வயதும் முப்பத்தைந்துக்குள் தான். 'இவனுக்குப் போய் இந்த வயசு போன மனிசனும் பயந்து நடுங்கிக் கொண்டிருக்கிறாரே' என்று எண்ணம் அலைமோத பிரின்ஸிபலையே உற்றுப் பார்க்கின்றேன். என் பார்வையின் உறுத்தலில் என் மனவோட்டத்தை உணர்ந்து கொண்டவர் போல் பிரின்ஸிபல் மெல்லக் கேட்டார்.

'சொல்லு பிள்ளை... உண்மையைச் சொன்னால் உன்னை ஒன்றுஞ் செய்யமாட்டம்... இல்லையென்றால் அவன் கமலைக் கூப்பிட்டு விசாரிக்கப்போறம். அப்ப உன்ரை பொட்டுக் கேடெல்லாம் வெளியே தெரிய வந்துடும்... சொல்லு. அவன் உனக்குக் கடிதம் தானே தந்தவன்... எங்கை வைச்சிருக்கிறாய் கடிதத்தை...'

அனிதா இப்போது சற்று இறுக்கமானாள். கண்களில் இப்போது மிரட்சி இல்லை. தன்னைத் திடப்படுத்திக் கொண்டவள் போலக் குனிந்த தலையை நிமிர்த்தி என்னையே பார்க்கிறாள். எனது பிரசன்னம் அவளுக்குத் தைரியத்தைத் தந்திருக்கவேண்டும். தொடர்ந்தும் மௌனம் சாதித்தாள்.

இவளது மௌனம் எனக்கும ஆச்சரியமாக இருக்கிறது. இவள் தனது மௌனத்தின் மூலம் என்ன சொல்கிறாள்? சம்மதத்தின் அறிகுறி என்று தன் மீதான குற்றச் சாட்டை ஏற்றுக் கொள்கிறாளா? அல்லது... அதனை மறுத்துரைக்கும் குறியீடாக மௌனத்தைக் கொள்கிறாளா? இரண்டுமே இல்லையென்றால் தான் வாய் திறந்தால் தன்னைப் 'பிடுங்கித் தின்று விடுவார்கள்' என்று மௌனித்துப் போய்விட்டாளா? எனக்கு ஒன்றுமே விளங்காமல் இருக்கிறது.

பிரின்ஸிபல் அனிதாவுக்கு ஆதரவாகக் கதைத்ததைத் திரவியநாதனால் அங்கீகரிக்க முடியவில்லை. பிரின்ஸிபலைச் சினந்தான்.

'ஸேர், உதுகளுக்கு இரக்கம் காட்டக்குடாது ஸேர்... நாளைக்குப் பள்ளிக்கூடம் விட்டிட்டுப் போனால் ரெண்டு வருசத்திலை மூன்று பிள்ளையள் பெத்துப்போட்டு நிற்குங்கள் ஸேர்... நல்ல அடி போடோணும். பெம்பிளைப் பிள்ளை என்று கூடிப் பார்க்கேலாது.

'சரியான அமசடக்கி... எங்கேயடி அந்தக் கடிதம்? திரவியநாதன் ஸேர் என்ன பொய்யே சொல்லுறார்... உங்கடை நல்ல பழக்க வழக்கங்களுக்காகத் தானே அவர் கஷ்டப்படுறீர்...' திரவியநாதனுக்கு உச்சி குளிர்ந்திருக்க வேண்டும். தனது பெருமையப் 'பீற்றிக் கொள்ளத் தொடங்கினான்.



'ஓம் ரீச்சர். இப்பவும் என்னை 'ஹிண்டுக் கொலிச்'சுக்கு கேட்டுக் கொண்டிருக்கினம்... நான் தான் மறுத்துக் கொண்டிருக்கிறன். தெரியாமல் இங்கை வந்திட்டன்... கொஞ்சக் காலம் இந்தப் பள்ளிக்கூடத்துக்குச் சேவை செய்து போட்டுப் போகவேணும்... இந்தப் பெடியளை மேய்க்கிறதுதான் கொஞ்சம் கஷ்டமாக் கிடக்கு... இதுகளோடை கத்துறதிலை சீவன் போகுது...'

இந்தத் தருணத்தைப் பார்த்துக் கொண்டிருந்தவர் போல மிஸிஸ் கந்தவேள் சொன்னா.

'ஓம் ஸேர். எங்களுக்கு நீங்கள் படுற கஷ்ரம் விளங்குது... நாங்களும் அதுதான் ஸீனியர் ரீச்சர், யூனியர் ரீச்சர் என்று வித்தியாசம் பாராமல்

உங்களோடை ஒத்துழைக்கிறம்..."

திரவியநாதனுக்கு எல்லாம் விளங்கும். சந்தர்ப்பம் பார்த்து மிஸிஸ் கந்தவேள் யூனியர் என்று தன்னைக் குத்திக் காட்டுவது அவனுக்கு விளங்காமலில்லை. அவனும் குத்திக் காட்டினான்.

"எனக்கும் விளங்காமலில்லை, ரீச்சர். ஏன் இந்தப் பள்ளிக்கூடத்திலை ஒதுங்கியிருக்கிறியள் என்று நானும் யோசிக்கிறனான் தான். இந்தப் பள்ளிக்கூடத்து வசதியீனங்களை எல்லாம் இவ்வளவு காலமும் எப்பிடித்தான் தாங்கி வந்தியளோ தெரியேலை..."

பெரிய பாடசாலைக்குச் சென்றால வேலை செய்ய வேண்டும். வேலைக்குக் 'கள்ளப்பட்டு' இந்தப் பள்ளிக்கூடத்தில் ஒதுங்கியதால் பலருக்கு வசதியாக 'ஆரச் சோர' இருக்க முடிகிறது. பாடக்குறிப்புகள் தினமும் எழுத வேண்டியதில்லை. பரீட்சை வைக்காமலே புள்ளிகள் வழங்கலாம். பிள்ளைகளின் முன்னேற்றம் குறித்துப் பெற்றோர் 'தொந்தரவு கொடுக்க மாட்டார்கள். லீவு போடாமலே சொந்த அலுவல்களைச் சாவகாசமாக முடித்துக் கொண்டு பள்ளிக்கூடத்துக்கு ஆறுதலாக வரலாம். குழு மேற்பார்வைக்காகவோ 'ரீம் இன்ஸ் பெக்ஷனுக்காகவோ' வருகின்ற கல்வி அலுவலக அதிகாரிகளும் பிள்ளைகளின் சமூகப்பின்னணிச் சீர்கேடுகள் குறித்தும் பிள்ளைகளின் நடத்தைப் பிறழ்வுகள் குறித்தும் சொல்லி, ஆசிரியர்களோடு சேர்ந்து ஒரு பாட்டம் அழுது தீர்த்துவிட்டு, 'இப்படியான ஒரு பாடசாலையில் பணிபுரியும் இந்த ஆசிரியர்களின் சேவை பாராட்டுக்குரியது' என்று அறிக்கையிட்டுச் செல்வார்கள்...

'இவற்றை விட வேறென்ன வசதி வேண்டும்? இவற்றையெல்லாம் நான் இப்போது தானே அநுபவிக்கத் தொடங்கியிருக்கிறேன்... நீங்க ளெல்லோரும் இவ்வளவு காலமாக இவற்றை அநுபவித்துக் கொண்டு வருகிறீர்கள் தானே' என்று எல்லோருக்கும் சேர்த்துத் தான் திரவியநாதன் 'சாட்டையடி' கொடுத்தான்.

'புதிதாக வந்த என்னையும் இங்கு "ஒதுங்கத்தான்" வந்ததாக இவன் நினைத்துக் கொள்வானோ...'

ஒரு கணம் தான் இந்தத் தடுமாற்றம். 'இவன் எப்படி நினைத்தால் எனக்கென்ன? என்று என்னைச் சமாதானப்படுத்திக்கொண்டு இந்தப் பள்ளிக் கூடத்துக்கு வந்து சேர்ந்ததை ஒரு முறை நினைத்துப் பார்த்துக் கொள்கிறேன்.

தலவாக்கொல்லையில் ஒரே பாடசாலை யில் பதினெட்டு வருடப் பணி என்பது ஒருவருமே நினைத்துப் பார்க்காத ஒன்று. ஆரம்பத்தில் மலைநாட்டுக் குளிரும் சூழலும் ஒத்துவராமல் கஷ்டமாகத் தான் இருந்தது. பழகப் பழக அக்குளிரும் சூழலுமே பிடித்துப் போய்விட்டது. வரண்ட பூமியாக இல்லாமல் எங்குமே 'பச்சைப்பசேல்' என்று இருப்பது கண்ணுக்குக் குளிர்ச்சியையும் மனதுக்குப் பரவசத்தையும் தந்தது. லீவுக்கென்று ஊருக்குப் போனால் கூட 'எப்போது தலவாக் கொல்லைக்குத் திரும்பலாம்? என்றிருக்கும்.

பள்ளிக்கூடத்தில் சக ஆசிரியர்களும் பிள்ளைகளும் காட்டிய குறைவில்லாத அன்புதான் பதினெட்டு வருடங்களாகக் கட்டிப்போட்டது. யாழ்ப்பாணத்து ரீச்சர், யாழ்ப்பாணத்து ரீச்சர் என்று அழைக்கத்தொடங்கி ரீச்சரை நன்றாக விளங்கிக் கொண்டபின்னர் எங்கடை ரீச்சர் என்றே எல்லோரும் சொல்லத்தொடங்கியதும் கூட பரவசத்தைத் தந்தது. பொருளியலில் சிறப்புப் பட்டமும் கல்வி டிப்ளோமாப் பயிற்சியும் பெற்ற ரீச்சர் அவர்களைப் பொறுத்தவரை ஓர் அசையாச் சொத்து. பதிலுக்கு பாடசாலையும் பாடசாலைச் சமுதாயமும் ரீச்சருக்கான பாதுகாப்பு அரண்.....

தலவாக்கொல்லைப் பாடசாலையை விட்டு வெளியேறிய நாளில் பிள்ளைகளும் சக ஆசிரியைகளும் கூட வாய்விட்டு அழுது பிரியா விடைக்குப் பதிலாக பிரியவிடை தந்து அனுப்பி யதை நினைக்கையில் என் கண்களில் கண்ணீர் துளிர்ப்பதைத் தவிர்க்க முடியாமல் மறுபுறம் முகத்தைத்திருப்பிக் கண்களைத் துடைத்துக் கொள்கிறேன்.

திரவியநாதன் அசகாயசூரன். நான் கண் கலங்கியதைக் கண்டு கொண்டான். அதனைத் தப்பர்த்தம் செய்து கொண்டு எனக்குப் புத்திமதி சொல்லத் தொடங்கினான்.

ஏன் ரீச்சர், இங்கை வந்ததை நினைச்சே கண்கலங்கிறியள். எங்கேயோ மலைநாட்டுப்பக்கம் நீண்ட காலம் நீங்கள் வேலை பார்த்ததாக் கதைச்சினம்.. இங்க சிற்றீலை ஒரு நல்ல பாடசாலை எடுக்க முடியாமல் போச்சே... அப்படியென்றால் யூனியனோடை கதைச்சு நான் ஏதாவது முயற்சி பண்ணிப் பார்க்கட்டுமே...

இவனுக்கு ஏதாவது உறைக்கச் சொல்ல வேண்டும். இவன் இந்தக் கதையை இனிமேல் எடுக்காதபடி ஏதாவது சுட்டிப்பாகச் சொல்ல

வேண்டும்... என் நெஞ்சம் குறுகுறுத்துக் கொண்டிருக்கிறது.

பிள்ளைகள் எல்லாம் உத்தியோகம் பார்க்க ஊரைவிட்டுப் போனபின் வயது மூப்போடு சேர்ந்து அம்மாவுக்குத் தனியே இயங்க முடியாமற் போனதையும் என்னுடன் அம்மாவைத் தலவாக் கொல்லைக்குக் கூட்டிப் போவதை கொழும்பிலிருந்த சகோதரங்கள் விரும்பாததையும் கொழும்பில் ஆளும்பேருமாய் எல்லோரும் அம்மாவைப் பார்த்துக்கொள்ளலாம் என்று அவர்கள் சொன்னதை என்னால் மறுக்க முடியாமற்போதையும் இவனிடம் ஏன் சொல்லவேண்டும் என்று என் அந்தராத்மா எனக்குச் சொன்னது.... ஆனாலும் இவனுக்கு சூடு கொடுக்கவேண்டும்.

நான் இந்தப் பள்ளிக்கூடத்தை விரும்பித்தான் வந்தநான்....

சற்றுக் காட்டமாகத்தான் சொன்னேன்.

நீங்களுமோ ரீச்சர்...?

கேட்டுவிட்டு எதையோ அர்த்தப்படுத்திக் கொண்டு திரவியநாதன் பெரிதாகச் சிரித்தான். இப்போது அந்தச் சிரிப்பில் மிஸிஸ் கந்தவேளும் சேர்ந்து கொண்டா. அவர்கள் இப்போது என்னைப் பொது எதிரியாகக் கருதி, தங்கள் வேற்றுமைகளை மறந்து ஒன்றானார்கள் போலும்.

இவர்கள் என்னைப் பொது எதிரியாக நினைக்குமளவுக்கு இவர்களுக்கு நான் என்ன செய்தேன்? என்னையே நான் கேட்டுக்கொண்டேன்.

மேல்மாகாணத்துக்கு மாற்றம் கிடைத்ததும் வளமான நகரப் பாடசாலை ஒன்றுதான் கிடைக்கும் என்பது அம்மாவின் எதிர்பார்ப்பாக இருந்தது. கல்வித் திணைக் களத்துக்குப் போனபின்புதான் இந்தப் பாடசாலைக்கு என்னைப் போட்டு வைத்திருக் கிறார்கள் என்பது தெரியவந்தது. இதுவும் நகரப் பாடசாலை தான்'. ஆனால், நகரின் ஒதுக்குப் புறத்தில். நகரின் தாழ்வாரம் போன்ற இடத்தில் அமைந்திருக்கிறது. இப்படி ஒரு பாடசாலை இருப்பதுகூட நகரவாசிகளில் எத்தனைபேருக்குத் தெரிந்திருக்குமோ என்னவோ.

பாடசாலை பெயருக்குத்தான் இரண்டாம் வகைப்பாடசாலை.... நகரின் ஆரம்பப்பாடசாலை யென்றிலுள்ள அடிப்படை வசதிகூட இங்கு கிடையாது. கல்வித்திணைக்களம் என்னைச் சாதுவான பசுவாக நினைத்திருக்கிறது. பதினெட்டு வருடங்களாக தலவாக்கொல்லையில் ஒரே பாடசாலையில் இருந்தவளிடமிருந்து எந்தவித எதிர்ப்பும் கிடைக்காது என்று எண்ணி இங்கே என்னை அனுப்பிவைத்திருக்கிறது.

இப்போது ஆறுமாதமாக காலையில் ஏழுமணிக்கே பாடசாலைக்கு வந்து, பாடசாலைவிட்டபின் ஆறுதலாக வீடுதிரும்பிக் கொண்டிருக்கிறேன். அம்மா கூடக்கேட்டா... 'ஏன் பிள்ளை உன்னை மாய்க்கிறாய் மற்றவையைப்போல போய்வாவன்...' பின்னேர வகுப்பு, எழுத்துப்பயிற்சி வகுப்பென்றெல்லாம் உன்னையேன் உலைக்கிறாய், என்ற அம்மாவின் கூற்றிலும் நியாயமில்லாமல் இல்லை... ஆனால் என்னால் முடியவில்லை.

பிள்ளைகளின் பின்னணிபற்றி ஆராயத் தொடங்கிய போதுதான் அவர்கள் இந்தச் சமூகச் சூழலிலிருந்து தலையெடுக்க முடியாதபடி சிலுவை சுமந்து கொண்டிருக்கிறார்கள் என்பது விளங்கியது. தனியாக நின்று ஒன்றும் செய்ய முடியாதுதான். ஆனாலும் இந்தப்பிள்ளை களின் மனங்களை வெல்ல வேண்டும். அவர்களுக்கு நன்மை தீமைகளைப் பகுத்துணர்தலின் முக்கியத் துவத்தை எடுத்துரைக்கவேண்டும்.. முயற்சித்துத் தான் பார்ப்போமே என்று செயலில் இறங்கி, பாடம் எடுக்கும் எல்லா வகுப்புகளிலும் ஓரளவுக்கு ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் ஏற்படுத்தி விட்டோம் என்று திருப்தியடைந்திருந்த வேளையில தான் அனிதாவின் பிரச்சினை எழுந்து எல்லா வற்றையும் தவிடுபொடியாக்கியிருக்கின்றது...

அனிதாவின் பிரச்சினையை ஒரு முடிவுக்குக் கொண்டுவரவேண்டும்... என்ன செய்யலாம்? என்று யோசித்துக்கொண்டிருக்கின்ற வேளையில் தான் மிஸிஸ் ராமச்சந்திரனின் குரல் ஒலிக்கிறது.

நாங்கள் பேசிக்கொண்டிருக்கிறம் ஸேர்.... ஆனால் இன்ரேவல் முடிஞ்சு பாடமும் தொடங்கப் போகுது இவளை இப்படியே விட்டுவிடுவதே... இவளின்ரை கொப்பி புத்தகங்களை ஒருமுறை சோதிச்சுப் பார்ப்பம்... கடிதத்தை எங்கேயும் ஒளிச்சுக்கிழிச்சு வைச்சிருப்பாள்.....

சொன்னதோடு நிற்காமல் மாலா ரீச்சருடன் சேர்ந்து அனிதாவின் கொப்பிகளையும் புத்தகங்களையும் மிஸிஸ் ராமச்சந்திரன் கிளறத்தொடங்குகிறா.

கடிதம் ஏதும் இவர்கள் கையில் கிடைத்து விடக்கூடாதே என்று நான் இறைவனை மன்றாடுகிறேன். ஒன்றும் கிடைக்கவில்லை.

இவ்வளை இப்பிடியே விடக்கூடாது. அசெம்பிளியைக் கூட்டி மற்றப் பிள்ளைளுக்கு முன்னாலை தண்டனை கொடுக்கவேணும்... அப்பத்தான் மற்றக் கழிவுகளுக்கும் இது ஒரு பாடமாக இருக்கும்..

திரவியநாதன் கோபமாகச் சொல்லிக் கொண்டே போகிறான். அவன் சொன்னதைச் செய்யக் கூடியவன்.

இப்போது இதைத்தடுத்தாக வேண்டும்... என்ன விதப்பட்டேனும் தடுக்க வேண்டும் இதனால் அனிதாவுக்கு மட்டுமல்ல, கிளாஸ் ரீச்சரான எனக்கும் அவமானம்தான். இதனால் இத்தனை நாட்களாக கஷ்டப்பட்டு, உலகநடப்பை கட்டி எழுப்பிக்கொண்டு வந்த கட்டுப்பாடும் ஒழுங்கும் எல்லாம் குலைந்துவிடும்...

ஒரு தீர்மானத்துக்கு வந்தவளாய் பிரின்ஸிபலைப் பார்த்துச் சொல்கிறேன்

ஸேர் பிள்ளையளை அப்பிடி எல்லாம் அவமானப்படுத்தக்கூடாது மாறாத வடுவாய் அது பதிஞ்சிடும்... இந்தப்பிரச்சினையை என்னட்டை விடுங்கோ, நான் பார்த்துக்கொள்கிறன்.....

திரவியநாதனுக்கு ஆத்திரம் நெஞ்சில் முட்டியது. என்னைச் சுட்டெரித்து விடுபவனைப் போலப் பார்த்து உறுமினான்.

இவ்வளவு நேரமும் உங்களையும் வைச்சுக்கொண்டுதானே விசாரிச்சம். இவளட்டையிருந்து இனியென்ன தனியாய்ப் பிடுங்கப் போறியள்...

கெட்ட வார்த்தைகளும் கலந்து உறுமிக் கொண்டிருக்கும் இவனிடம் என் கோபத்தைக் காட்டப்போய் இந்த விவகாரத்தில் குட்டை குழப்பிவிடக் கூடாது என்ற நிதானத்துடன் நான் சொல்கிறேன்.

'இங்கே பாருங்க மிஸ்ரர் திரவியநாதன் நாங்கள் எல்லோரும் பார்க்கிறம்தானே... பிள்ளையளின் சூழல் அப்பிடி அதுக்காக பிள்ளையளைக் காயப்படுத்தக் கூடாது... அந்தப் பிள்ளையளுக்காக நாங்கள் இரக்கப்படவேண்டும்...'

தன்னை மற்றெல்லோரும் ஸேர் என்று அழைக்கையில் நான்மட்டும் மிஸ்ரர் திரவியநாதன் என்று குறிப்பிட்டதைத் தனக்கு சூடுபோட்டது போல அவன் உணர்ந்திருக்க வேண்டும். இனி நீங்களும் உங்கடை வகுப்பும் பட்டபாடு என்று புறுபுறுத்துக் கொண்டே வகுப்பை விட்டகன்றான்.

'ஓம் ஸேர் ரீச்சர் சொல்லுறது தான் சரி. இந்தப்பிரச்சினையை ரீச்சரிட்டையே விடுவம்...'

இதுவரை வாய் திறக்காதிருந்த சித்திராதான் சொன்னாள்.

சித்திராவை நான் கனிவாகப் பார்க்கிறேன் எல்லோரும் சித்திராவின் கூற்றை ஆமோதித்தவர்கள் போல அவ்விடத்தை விட்டுச் செல்கிறார்கள். எல்லோரும் போனபின் நான் அனிதாவையே உற்றுப்பார்க்கிறேன்.. அனிதா எதையோ சொல்லத் தயங்குவது போலத் தெரிந்தது அவளை உற்சாகப்படுத்தினேன்.

என்னம்மா... பயப்படாமல் சொல்லு...

அனிதா மெல்லச் சொல்லத் தொடங்கினாள்

ரீச்சர் அவன் கமல் பாவம் ரீச்சர் அவன் நல்லவன்...

தயங்கித்தயங்கி அனிதா சொல்லிக் கொண்டிருக்க என்மனம் வேறு கணக்குப்போட்டது.

உண்மையில் அனிதாவும் கமலும் சிறுபிள்ளைத்தனமாக ஒருவரையொருவர் காதலிக்கிறார்களோ.

ரீச்சர் கமலுக்கு அம்மா இல்லை ரீச்சர்.. அவனுக்கு அவன்ரை அப்பாவும் சித்தியும் நெடுக அடிக்கிறவை ரீச்சர்.. அவனுக்கு ஒருவரும் இல்லை ரீச்சர்..

அனிதா சொல்லிக்கொண்டே செல்ல, இவள் கமலைக் காதலிக்கிறாள் தான் என்று என் உள்மனம் சொன்னது அதை உறுதிப்படுத்த எண்ணி அவளிடம் கேட்கிறேன்.

சொல்லம்மா... நீயும் அவனை விரும்புறாயா?

என்னுடைய கேள்வி அவளைத் திகைக்க வைத்தது.

ரீச்சர் நீங்கள் நினைக்கிறமாதிரி நானில்லை ரீச்சர்...

அவன் ஐ லவ்யூ என்று சொல்லிப போட்டுத்தான் இந்தக் கடிதத்தை வைச்சிட்டுப் போனவன்.. இந்தாங்கோ ரீச்சர் நான் வாசிச்சுக்கூடப் பார்க்கேல்லை...

சொல்லிக்கொண்டே, தன் நெஞ்சுச் சட்டைக்குள்ளிருந்து அந்தக் கடிதத்தை எடுத்துத் தருகிறாள்.

ஏனம்மா இதைப்பற்றி இவ்வளவு நேரமும் ஒன்றும் சொல்லாமல் இருந்தாய்...


என்னையும் மீறி என் குரலில் தொனித்த கோபத்தை உணர்ந்தவளாக கண்கலங்கிக் கொண்டே அனிதா கூறினாள்.

ரீச்சர்.. கமல் நல்லவன் ரீச்சர் வீட்டாராலை தான் அவன் இப்பிடிச் செய்திருக்கவேணும்... நீங்கள் தான் அவனுக்குப் புத்தி சொல்லவேணும் ரீச்சர்... இந்தக் கடிதத்தை அப்ப காட்டியிருந்தால் திரவியநாதன் ஸேர் சேர்ட்டிபிகற்றையும் குடுத்து பள்ளிக்கூடத்தாலை அவனைக் கலைச்சுப் போடுவார் ரீச்சர்.. அவன்ரை ஓ. எல். சோதினையும் குழம்பிப்போகும் ரீச்சர்...

அனிதா கண்கலங்கிக் கொண்டே சொல்லச் சொல்ல என்னை அறியாமலே என்கண்களிலும் கண்ணீர் துளிர்த்து நிற்கிறது. அனிதா என்னையே பார்த்துக்கொண்டு மலைத்துப் போய் நிற்கிறாள்.□□□


# வெறிச்சோடும் மனங்கள்...

முக்காலமும் முகம்மலர்ந்து
முகிழ்ந்து நின்ற காலம்
எக்காலத்தையும் எக்கணமும்
சிந்திக்க வைத்த நேரம்
தீர்க்கதரிசனங்களினால்
நெஞ்சம் நிறைத்து
நாளை வருவேன் என்று
நம்பிக்கையுடன் நகர்ந்த காலம்
எங்கோடிப் போயின...?
முன்பெல்லாம்
“இம்முறை இல்லாவிடினும்
மறுமுறை பார்ப்போம்” என்ற
நம்பிக்கை நெஞ்சில் துளிர்க்கும்
இன்றோ
எதிர்கால நம்பிக்கைகளைக் கூட
ஏமாற்றங்கள் முந்தும்நிலை
கற்பனைகளைக் கூட
கரைசேரா நதியாக்கும்.
மறுமுறை என்ற
பேச்சுக்கே இடமின்றி
சூனியம் எங்கும் சூழும்
நாளை என்ற பேச்சே
நாதியற்றுப்போக
நகர்கின்ற நாழிகைகளின்
ஆயுட்காலம் கண்டு
நீர்க்குமிழிகளே
பரிதாபம் கொள்ளும்
எதிர் கால பிரசவங்களை
கண்ணாடி பேழைக்குள்
வைத்தும் கூட



தப்புவிக்க முடியாத் நிலைமை
எண்ணத்திரைகளிற் கூட
வண்ணக்கனவுகளை
நினைக்க முடியவில்லை
சூழலில்
எத்தனை சத்தங்கள்
முக்காடு போட்டு
கருச்சிதைவு செய்கின்றன.
வளங்கள் பல இருந்தும்
வாழ்வியல் விழுமியங்களின்
சேமிப்பு ஏதுமின்றி
மனவங்கிக் கணக்குகள்
வெறிச்சோடிக் கிடக்கின்றன.

- வெ. துஷ்யந்தன்



# செம்மொழித் தமிழில் பெண்களின் புலமைத்துவம் : பொன்முடியார்

- செல்வஅம்பிகை நடராஜா

கவி பாடித் தமிழ் வளர்த்த சங்க காலப் பெண்பாற் புலவர்களுள் பொன்முடியார் குறிப்பிடத்தக்கவராவார். பொன்முடியார் ஔவையாரைப் போன்றே தகடூர் அதியமான் நெடுமான் அஞ்சியின் அன்புக்கு ஆளானவர் தகடூர்ப் பெருவள்ளலாக விளங்கிய அதியமானைப் பாடியவர்களுள் இப் பொன்முடியாரும் ஒருவர்.

பொன்முடியார் பாடியதாக மூன்று பாடல்கள் மட்டும் புறநானூற்றில் காணப்படுகின்றன. புறநானூறு 299, 310, 312. ஆகிய மூன்று பாடல்களும் வெவ்வேறான பார்வை உடையவை நொச்சி, தும்பை, வாகை என அமைந்த திணைகளில் குதிரை மறம், நூழிலாட்டு, மூதின்முல்லை என அவ்வத்திணைகளின் துறைகளில் பாடியுள்ள மூன்று பாடல்களும் சிறப்பானவை. புலவரின் திறம் தனித்து எண்ணத்தக்க வகையில் அப்பாடல்கள் அமைந்துள்ளன. இவை தவிர 'தகடூர் யாத்திரை' என்னும் நூலில் பொன்முடியாரின் பாடல்களாகச் சில பாடல்கள் காணப்படுகின்றன. சேர மன்னன் பெருஞ்சேரலிரும் பொறை என்பான் தகடூரை முற்றுகையிட்டபோது அவனை எதிர்த்து அதியமான் ஆற்றிய வீரப் போரைப் பற்றிய செய்திகள் பாடல்களாக தகடூர் யாத்திரை நூலில் உள்ளன.

சங்கப் புலவர்கள் பலரும் கடமைகளை வலியுறுத்திக் கவி பாடியுள்ளனர். ஆனால் அவர்கள் ஒவ்வொருவருக்கும் உரிய கடமைகள் எவையெனக் கூறவில்லை. பொன்முடியார் நேரடியாக வலியுறுத்துவதற்காக ஒவ்வொருவருக்கும் உள்ள கடமைகள் குறித்துப் பாடியுள்ளார். இப்பாடலினூடாகப் பொன்முடியாரின் உலகியல் உணர்வும், சமுதாய உணர்வும், சுய அநுபவமும் வெளிப்படுகின்றன.

கடமை என்பது ஒவ்வொருவரும் தவறாது செய்து முடிக்க வேண்டிய நற்செயலைக் குறிக்கின்றது. மனிதன் பிறந்தது முதல் இறக்கும் வரையுள்ள காலப்பகுதியில் நிறைவு செய்ய வேண்டிய கடமைகள் பல உள்ளன. மனிதன் தனியாக வாழ்ந்த காலத்தில் நிறைவு செய்யும் கடமைகள் ஒருவகை. சமுதாயமாகக் கூடி வாழும் காலத்தில் செய்யும் கடமைகள் மற்றொருவகை. சமுதாய வாழ்வு பெருகப் பெருக்கக் கடமைகளும் விரிந்து செல்கின்றன. பொன்முடியார் கடமைகளின் நிலையையும் அவற்றால் சமுதாயத்திற்கு ஏற்படும் மேன்மையையும் சீர்தூக்கி ஆராய்ந்துள்ளார். கடமை தொடங்கும் இடத்தையும் கண்டறிந்து கடமைகளை ஐவகைப்படுத்தியுள்ளார்.

கடமை தொடங்கும் இடம் வீடு. அது நிறைவு பெறும் இடம் நாடு. வீடு சிறந்தால் நாடு சிறக்கும் என்பது பொன்முடியார் கொள்கை. வீடு என்பது தாய், தந்தை, பிள்ளை, உறவினர் என்ற குடும்ப உறுப்பினர்களை உள்ளடக்கியது. வீட்டிற்குத் தலைமையும், உரிமையும் உடையவளாகி அதனை நிர்வகிப்பவள் மனைவி. அந்த மனைவியே தாயாகத் திகழ்கின்றாள். மனைவிக்குத் துணையாக அமைபவன் கணவன். இவர்களின் கருத்தொருமித்த இல்லறத்தின் பயனாகக் கிடைப்பது மக்கட்பேறு. தாய், தந்தை, மகன் மூவரும் தத்தம் கடமையின் வழி ஒழுகும் போது வீடு சிறப்படைகின்றது.நாட்டுக்குத் தலைமை வகிப்பவன் மன்னன். தொழில்வினைஞர்களால் நாடு வளமடைகின்றது. வீரர்கள் நாட்டைக்காத்து வெற்றியை தேடித்தருகின்றார்கள். இவர்கள் மூவரின் கடமைத்திறத்தால் நாடு சிறப்படைகிறது. தாய் தந்தைக்கு மகனாக இருப்பவன் நாட்டிற்கு வீரனாக வெற்றி வாழ்வை அளிக்க வேண்டும். வீடும், நாடும் சிறக்கக் காரணமாகின்றவன் மகன். இவனுடைய கடமைக்குத் துணையாக தாய், தந்தை, கொல்லன், வேந்தன் அமைகின்றார்கள். எனவேதான் பொன்முடியார் வீடும், நாடும் கடமையில் சீர்மை பெறும் வகையில் தாய், தந்தை, கொல்லன், வேந்தன், மகன் எனக் கடமைகளை முறைப்படுத்திக் கூறுகின்றார்.

*ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே*
*சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே*
*வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே*

*நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே*
*ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்*
*களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே* (புறநானூறு 312)

தாயின் கடமையாவது குழந்தையை ஈன்றெடுத்து வளர்த்தலாகும். குழந்தையைக் கருவிலே சுமந்து பெற்றெடுத்து, தன் இரத்தத்தைப் பாலாக்கி ஊட்டிப் பேணி வளர்த்து அக் குழந்தை பெரியவனாக தாயானவள் படுகின்ற துன்பங்கள் சொல்லில் அடங்காதவை. தாயின் கருவில் இருக்கும் போதே குழந்தை கல்வி கற்க ஆரம்பிக்கின்றது. தாயின் மடிதான் குழந்தையின் ஆரம்பப் பள்ளிக் கூடம். தாய்தன் கடமையைச் செய்வதற்காகத்தன் நலத்தையெல்லாம் தியாகம் செய்கின்றாள். தாயின் கடமையை உலகிற்கு உணர்த்தும் வகையில் பொன்முடியார், ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே எனப்பாடியுள்ளார்.

தாயின் கடமையைக் கண்டுரைத்த பொன்முடியார் அடுத்து தந்தையின் கடமையை நினைவுபடுத்துகின்றார். சமுதாயத்தில் பிள்ளை பண்பும், அறிவும் உடையவனாக விளங்க வேண்டும். வளர்கின்ற பிள்ளை சமுதாயத்திற்குப் பயன்படும் வகையில் சால்புடையவனாக்குதல் தந்தைக்குரிய கடமை. பிள்ளையின் தவறைக் கண்டவிடத்து கண்டித்து வளர்க்கும் பொறுப்பு தந்தைக்குண்டு. தந்தையின் உரிய வழிகாட்டுதலில் பிள்ளைக்கு வாழ்வியல் ஒழுங்கு உணர்த்தப் பெறும். வாழ்வியல் நெறியில் ஒழுகும் பிள்ளை பண்புடையவனாக அறிவுடையவனாக அன்பும் கருணையும் கொண்டவனாக சால்புடையவனாக விளங்குவான். எனவே தான் 'சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே' என்றார்.

அறிவும் பண்பும் உடைய சான்றோனாக வளர்ந்த மகன், தன்கடமையைச் செய்வதற்கு சந்தர்ப்பத்தைத் தருவது சமுதாயம். மகனுக்கேற்ற தொழிலைத் தந்து, அதனால் பயனடைய வேண்டியது சமுதாயத்தின் கடமை. தொழில் வினைஞர் இனத்தில் கொல்லன் திண்மையும் வலிமையும் வாய்ந்த இரும்பு வேலை செய்பவன். கொல்லன் செய்யும் கருவிகளில் வேல் மிகவும் உயர்ந்தது. வேல் வெற்றிக்குரியது. வெற்றியின் சின்னம். கொல்லன் அம்மகனுக்குக் கொடுக்கும் வேல், சமுதாயத்தில் மகன் ஆற்றவேண்டிய பணியைக் குறிப்பிடுகின்றது. மகன் மேற்கொள்ளும் பணியில் வெற்றி காண வேலைக் கொடுத்துக் கொல்லன் துணைபுரிகின்றான். அம்மகன் மெற்கொள்ளும் வினையில் வெற்றி பெறச் சமுதாயம் உதவ வேண்டியதும் அவன் வினையால் நலம் பெற வேண்டியதும் சமுதாயத்தின் கடமை. இதனை நினைவுபடுத்தும் வகையில் பொன்முடியார் 'வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே' என்றார்.

சமுதாயத்தில் தனக்கு ஏற்ற தொழிலை மேற்கொண்டு வாழ முற்படுபவனுக்கு வேண்டிய வசதி வாய்ப்புக்களை வழங்க வேண்டியது வேந்தனின் கடமையாகும். பகைவர்கள், கள்ளவர் முதலிய தீயவர்களால் ஏற்படும் அச்சத்தைப் போக்கி நல் வாழ்வில் வாழச் செய்வது அரசின் கடமை. இதனையே பொன்முடியாரும் 'நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே' என்றார்.

தாய், தந்தை, கொல்லன், வேந்தன் ஆகியோரின் உதவிபெற்று வாழும் அம்மகன் எல்லோருக்கும் நன்மையும் பெருமையும் பிறக்கும் வகையில் வாழ்ந்து வாழ்வில் வெற்றி பெறுவது அவனது கடமையாகும். வாழ்க்கை என்பது போராட்டங்கள் நிறைந்தது. ஆளணிகளும் வசதி வாய்ப்புக்களும் நிறைந்திருந்தாலும் போராட்டம் இல்லாத வாழ்வை உடையவர்கள் எவருமில்லை. வாழ்க்கைப் போராட்டத்தில் உறுதியோடு எதிர்த்துப் போராடி வெற்றி காண்பவர்கள் உள்ளனர். போராட்டங்கள் நிறைந்த வாழ்வில் வெற்றியைக்காண வேண்டியது அம்மகனின் கடமை. அம்மகனின் கடமையை நினைவு கூர்ந்த பொன்முடியார், 'ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே' எனக் கூறினார். ஒளி பொருந்திய வாளினை வீசி ஆண்யானையை வென்று மீளுதல் வீரனின் கடமை என்பது இப் பாடலடியின் நேர்பொருள். இதன் உட்பொருள் கூர்மையான அறிவினால் ஊக்கம் கொண்டு உழைத்து வாழ்வின் சவால்களை எதிர்கொண்டு வென்று மீளுதல் மகனின் கடமை என்பதாகும். ஒளிறுகின்ற வாள் கூரிய அறிவையும், களிறு என்பது வாழ்வில் ஏற்படும் பிரச்சினைகளையும் சவால்களையும் குறிக்கின்றன. ஒவ்வொரு மகனும் ஊக்கத்தால் வாழ்வில் ஏற்படும் இடையூறுகளை வென்று வாழ்வானாயின் வீட்டின் பெருமையும் நாட்டின் முன்னேற்றமும் உயரும். இன்றைய காலத்தைப் பொறுத்தவரையில் வாழ்வின் சவால்களை எதிர்கொண்டு வாழ்ந்து வெற்றி பெறுவது மகனுக்கு மட்டுமல்ல மகளிருக்கும் கடமையே எனக் கொள்வது சாலப் பொருத்தமானது. இவ்வாறு வீட்டிலே தொடங்கி நாட்டிலே நிறைவு பெறும் கடமைகளை வகைப்படுத்திய பொன்முடியாரைக் கடமை பாடிய கவியரசியாகப் போற்றுவது பொருத்தமுடையதே.

# ஆற்றுப்படை

"ஆனை யின்விலை சீனி விற்கவும்
அரிசி உச்சியில் சஞ்சரிக்கவும்
வானை முட்டுபால் மாவை எட்டிநான்
வசப் படுத்தக் கரணம் அடிக்கவும்
போன மாத ஏற்றத்தின் பின்னரும்
புதிய தொன்றை எரிபொருள் சுட்டவும்
நான் கலங்கி நடுங்கி ஒடுங்க நீ
நடக்கி றாய்தலை நிமிர்ந்து - நியாயமா?"


"கையிரண்டிலும் நாலுபை தலையிலே
கனம்மிகுந்த உரப்பை, பின்னால்வரும்
பையன் தாவர (?) எண்ணெய் சுமக்கிறான்
பவனி கண்டு பொறாமைப் படுகிறேன்
ஐய எந்த வள்ளலை அண்டி இவ்
வரிய பண்டங்கள் பெற்று வருகிறாய்?
உய்யு மாறுரைப் பாய்வழி! என்பசிக் (கு)
உணவு வேண்டும் உன்பாதம் சரண் சரண்!"

"காளி கோயிலின் மேற்கில் இருக்கும் அக்
கையொழுங்கையின் ஊடு நடந்துபோ!
ஆல மாமரம் கானுவை எதிரிலே
அந்த வீடுதான் கிராம அலுவலர்
வாழுகின்றது, ஒருசில நூறுபேர்
வந்து நாளும் வழிபடும் சங்கமம்!
ஏழை கட்கு ஒரே புகலிடம் யாவுமே
இழந்தவர்களை எழுப்பி விடுவது!

கூடழிந்து குலைந்த கதைசொல்லு
கொடிய போரில் உழன்ற கதை சொல்லு
கோடி தோறும் அலைந்த கதை சொல்லு
கும்பி காய நலிந்த கதை சொல்லு
ஓடி ஓடி உளைந்த கதை சொல்லு
ஊனமுற்று விழுந்த கதை சொல்லு
பாடுபட்டு வளர்த்த பயிரெலாம்
பசுமை தீய்ந்து கரிந்த கதை சொல்லு!

படிவம் பற்பல தருவர், நிரப்புக;
பணித்த வாறு கை ஒப்பமிடுக; போர்
முடியும் பாடிலை ஆக நிவாரணம்
முகாம் எனும் சுழற்சிக்குள் முடங்குவாய்!
கொடிது போரென நாங்கள் உணர்கிறோம்
கோட்பாட்டாளர் உணர்வதாய் இல்லையே!
மிடியும் வெம்பசிநோயும் அலைச்சலும்
மிச்சமாம், வெயில் ஏறுது, வாறன் நான்!

- சோ.பத்மநாதன்



# பெண்மொழிக் கவிதை

- பெரிய ஐங்கரன்

தமிழ் கவிதை உலகு தொண்ணூறுகளுக்குப் பிறகு பாரிய மாற்றங்களைக் கண்டு பயணிக்கத் தொடங்கியது. உலகமயமாதல், நகரமயமாதல், தொழில்மயமாதல், நவீன ஏகதிபத்தியம், பன்னாட்டு மூலதனங்கள், தனியார் மயமாதல் போன்ற சமூக அரசியல் நிகழ்வுகள் பிற இலக்கியத்துறைகளைப் போலவே கவிதைத்துறையையும் பாதித்தன. இத்தகைய பாதிப்புக்களோடு தமது சுய ஆளுமையை வெளிப்படுத்திய பல கவிஞர்கள் தமிழ் கவிதைக்கு வரப்பிரசாதமாக அமைந்தனர். குறிப்பாக தொண்ணூறுகளின் பின்னரான நவீன தமிழ்க்கவிதைக்கு பெண் கவிஞர்களின் பங்களிப்பு மிகமிக முக்கியமானதாக அமைந்தது. மாலதி மைத்ரி, குட்டி ரேவதி, சல்மா, சுகிர்தராணி, உமா மகேஸ்வரி, திலகபாமா, நிர்மலா சுகந்தி சுப்பிரமணியன், கனிமொழி, மு.சத்யா, யூமா வாசுகி எனப் பெண்கவிஞர்கள் பலர் புதிய புதிய பாடுபொருட்களோடு தமிழ்க்கவிதைக்குள் நுழைந்தனர். அவர்களின் வருகையோடு தமிழ்க்கவிதை புதிய பாய்ச்சலைச் சந்திக்கிறது. "பெண் எழுத்து தமிழ்க்கவிதைக்கு உத்வேகத்தையூட்டி மரபார்ந்த சிந்தனை வாதிகளிடையே பெரும் கலக்கத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியது. தொண்ணூறுகளுக்குப் பிறகுதான் பெண்ணியச் சொல்லாடல்களை உருவாக்குதல், ஆணாதிக்க மதிப்பீடுகளைத் தகர்த்தல் 'தங்களை உடலின் வழி இனங்கண்டு உடலைக் கொண்டாடுதல், பிரபஞ்சத்தின் உற்பத்தி சக்தியாய் பெண்ணைப் போற்றுதல் எனப் பெண்களைக் கொண்டாடும் கவிதைகளைப் பெண்களே இயற்றினர்." என்கிறார். "நவீன தமிழ்க்கவிதையின் போக்குகள்" என்ற நூலை எழுதிய கரிகாலன்.

இதுவரை காலமும் பெண் விடுதலை என்று ஆணே முழங்கி வந்தான். அண்மைக்காலத்தில் பெண்களே வீறுகொண்டெழுந்து வீரியம் மிக்க கவிதைகளைப் படைத்தனர். பெண்கள் தாமாகவே முன்வந்து எழுதத் தொடங்கிய பிறகுதான் அவர்களின் விருப்பங்கள், வேட்கைகள், தங்கள் மீது சுமத்தப்படும் இழிவுகள், ஒடுக்கு முறைகள், உடல் உள சம்பந்தமான இச்சைகள் என்பன புற உலகிற்கு தெரியவந்தன. சமுதாயம் ஆண்களால் கட்டமைக்கப்பட்டதால் பெண்ணின் விருப்பம், காமம், வேட்கை, இலட்சியம் என்பன இதுவரை காலமும் அவளது நனவிலி மனத்தில் தேங்கிக்கிடந்தன.

*எனது*
*கருவறை*
*உனது குழந்தைக்காக*
*காத்திருக்கிறது.*

என்பன போன்ற பிறமொழிக் கவிதைகளை சந்தர்ப்பம் உணர்ந்து சுவைக்கும் போதெல்லாம் இப்படியான கவிதைகள் தமிழில் பெண் கவிஞர்கள் ஏன் எழுதுவதில்லை என்ற கேள்வி எமக்குள் எழாமல் இல்லை. இதற்கு தடையாக இருந்த போலியான மரபுகளையும் பண்பாட்டுக் குப்பைத் தொட்டிகளையும் உடைத்தெறிந்துவிட்டு தமிழ் நவீன கவிதையில் பெண்மொழி பெருக்கெடுப்பதை அண்மைக்கால ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. பின் நவீனத்துவம் ஒரு தத்துவப் போக்காகவும் இலக்கிய வடிவமாகவும் நிலைநிறுத்தப்பட்டதும் பெண்மொழி வளர்ச்சி பெறுவதற்கு ஒரு காரணமாக இருந்திருக்கலாம்.

பெண் கவிஞர்களில் மாலதிமைத்ரி முதன்மையானவர். பல பெண் கவிஞர்களுக்கு வழிகாட்டியாக விளங்கும் இவர், பெண்மொழி கவித்துவத்திற்கு வடிகாலாக விளங்குவதையும் நிரூபித்துக் கொண்டு வருகிறார். "முந்தைய தலைமுறையினரின் தத்துவ விசாரங்களும் கோட்பாட்டு முழக்கங்களும் மொழியில் இருந்தே மறக்கடிக்கப்பட்டுவிட்டன. மனித உறவுகளுக்கிடையிலான நீரோட்டங்களும் அவற்றின் சொல்லாடல் களுக்கிடையிலான புனைவோட்டங்களுமே இறுதியாக ஒரு மொழியில் மீந்து நிற்கும் போலும் என்று தனது "சங்கராபரணி" என்ற முதல் நூலின் இரண்டாம் பதிப்பின் முன்னுரையில் குறிப்பிடுகிறார். இவரின் கவிதைகளில் நீரின் ஈரத்தையும் குளிர்ச்சியையும் காணலாம். "சங்கராபரணி" "நீரின்றி அமையாது உலகு" என இவரது நூல்கள் ஈரம் தோய்ந்தவை. பெண்ணும் நீரும் "ஆற்றலுடையவை. உயிர் காப்பவை. பசுமையைத் தருபவை என்பது அவரின் திடமான நம்பிக்கை. இவரது "தன்னை அவிழ்த்துக்கொள்ளும் உடல்" "சுழல்" போன்ற பல கவிதைகள் பலரது

விமர்சனத்திற்கும் உள்ளானவை. மாலதி மைத்ரி ஈழத்துத் தமிழ் மக்களைப் பற்றியும் எழுதிவருபவர் என்பது குறிப்பிடத்தக்கது.

*"எங்கிருந்து வந்தாள்*
*யாரிவள்*
*ஒருவருக்கும் தெரியாது*
*பட்டாசுச் சத்தம் கேட்டால்*
*புளியமரத்தின் வேர்களுக்குள் பதுங்கிக் கொண்டு*
*அழுது கதறுகிறாள்"*

என அவரது "அகதி" என்ற கவிதை முடிகிறது. கூப்பிடும் தூரத்தில் உனது தீவு என்ற அவரது கவிதையும் பலரைச் சிந்திக்கவைத்தது.

"முலைகள்" என்ற நூல் மூலம் அதிகம் அறியப் பெற்றவர் குட்டிரேவதி. இவரும் கவிதைகளில் மிக லாவகமாக படிமங்களைக் கையாள்கிறார். இவரது கவிதைகள் பலவற்றை "ஆபாசம்" எனப்பலர் விமர்சித்திருக்கிறார்கள். "பெண்மொழி கவிக்கொள்ளும்போது அதை சந்தேகிப்பது, பண்பாட்டைச் சொல்லி மிரட்டுவது கேலி செய்வது என்பதெல்லாம் பிற்போக்கு ஆண் ஆதிக்க மனோபாவத்தின் வெளிப்பாடு என்று இதற்கு பதில் விமர்சனம் வந்தமையும் குறிப்பிடத்தக்கது. மாலதி மைத்ரியைப் போலவே பெண் உடலை ஆராதித்து கவிதை எழுதுவதில் குட்டிரேவதியும் சளைத்தவர் அல்லர். சுகிர்தராணியும் அதிகம் பெண்ணுடல் சார்ந்த கவிதைகளை எழுதுபவர். "இரவு மிருகம்" கைப்பற்றி என் கனவு கேள் ஆகிய இவரது இரண்டு கவிதைத் தொகுதிகளும் எதிர்ப்பையும் விமர்சனத்தையும் சந்தித்தவை. ஆனாலும் இவரது பெண் மொழி காட்டாற்று வெள்ளமெனப் பாய்ந்து தமிழிற்கு புது இரத்தம் பாய்ச்சுவது குறிப்பிட்டுப் போற்றத்தக்கது.

"ஒருமாலையும் இன்னொரு மாலையும்" என்ற கவிதை நூலின் மூலம் அறிமுகமான சல்மாவும் கவிதையுலகில் முக்கிய சில தடங்களைப் பதித்துவருகிறார். "நவீன கவிதை சொற்களின் வழியே எழுந்து சொல்லுக்கு எதிராகவே போராடி மௌனத்தை அடைவதாக இருக்கிறது. வாசகன் கவிதையின் இடைவெளியில் அந்த மௌனத்தைப் பூர்த்தி செய்து அனுபவம் கொள்ளும் போது கவிதை வெற்றி பெறுகிறது என்று எழுதிச் செல்லும் சல்மா தனக்கேயுரிய பார்வையோடும் அணுகுமுறையோடும் வாழ்க்கைத் தத்துவங்களை கவிதைக்குள் சிறைப்பிடித்து சிந்திக்கவைக்கிறார். "வெறும் பொழுது" "கற்பாவை" போன்ற பல கவிதைத் தொகுதிகளை வெளியிட்ட உமா மகேஸ்வரி பெண் கவிஞர்களுக்குள்ளே அதிக கவிதைகள் எழுதுபவர் எனக் கருதப்படத்தக்க வகையில் நிறைய எழுதி வருபவர். அதிக ஆடம்பரம் இன்றியும் அழகியலின் எளிமையோடும் உணர்ச்சி வேகத்தோடும் எழுதிவரும் இன்னொருவர் மு.சத்யா.

"புதையுண்ட வாழ்க்கை" "மீண்டெழுதலின் ரகசியம்" போன்ற பல தொகுதிகளை வெளியிட்ட சுகந்தி சுப்பிரமணியன் பெண்கவிஞர்களில் வித்தியாசமானவர். இவர் பற்றி பெருமாள் முருகன் "இவரது கவிதைகள் தமிழ்க்கவிதை நுழையாத பகுதிகளுக்குள் எல்லாம் செல்கின்றன. இதுவரை பதியப்படாத காட்சிகள் பதிவாகின்றன. பெண்ணின் உடல் பிரச்சினைகளில் இருந்து, தொலைந்துபோன அடையாளம் வரை அனைத்தையும் கூர்மையான தன் பார்வையால் இவர் கவிதையாக்கியிருக்கிறார்" என்கிறார்.

*"நான் அகப்படவில்லை இன்னும்*
*என் வெளியில் நான்மட்டும்*
*இப்போது வரை*
*சொற்களின் அவசியம்*
*உணராமலே*
*மொழி வழியும் எனக்குள் என்றிருந்தேன்*
*மொழிபிடிபடாமலே*
*நழுவுகிறது வாழ்க்கை*
*என்றோ ஒரு நாள்*
*எனது நம்பிக்கை எனக்குள் ஒளிரும்*
*எனக் காத்திருக்க ஆரம்பிக்கிறேன் எனக்குள்*
*என் வாசலில்*

*எப்போதும் மௌனமாய்*
*ஏதுமற்று என்தரை"*

என்ற இவரது கவிதையைப் பலமுறை வாசித்தபோது சல்மாவின் கீழ்வரும் கவிதை மனதில் ஊசலாடியது.

*"இன்றைக்கில்லையெனில் நாளை*
*நாளை இல்லையெனில்*
*இன்னொரு நாள்*
*இப்படித்தான் தெரியும்*
*வாழ்வை*
*நினைவு தெரிந்த நாளிலிருந்து"*

பெண்களின் வாழ்வை எப்படியெல்லாம் கவிதையில் சித்திரிக்க முடியுமோ அப்படியெல்லாம் சித்திரித்தவர் சுகந்தி. பெருமாள் முருகன் சொல்வதைப் போல சுகந்தியின் கவிதைகள் எம்மை வேறோர் உலகத்திற்குக் கொண்டு செல்கின்றன.

"சூரியனுக்கும் கிழக்கே" "சூரியாள்" "சிறகுகளோடு அக்னிப் பூக்களாய்" "எட்டாவது பிறவி" எனப்பல கவிதைத் தொகுதிகளைத் தந்த திலகபாமா. "எனது கவிதைகளை பெண்ணியம் என்கிற வார்த்தைக்குள்ளும் பெண்மொழி என்கிற சொற்களுக்குள்ளும் அடக்கிவிட வேண்டாம்" என்றும் "புதிய சொல்லாடல்கள் தமிழிற்கு வளம் சேர்க்க வேண்டும். மனிதருக்குள் இருக்கும் பேதங்களை மொழிக்குள்ளும் கொண்டு வருவதாய் இருத்தல் கூடாது" என்றும் எச்சரிக்கை விடுக்கிறார்.


*"உதயமென்றும் அஸ்தமனமென்றும்*
*நீ பெயரிட்டுச் சொல்ல*
*சொல்லிய வார்த்தைகளின்*
*பொருளுக்குள் சிக்காத உணர்வோடு*
*சுதந்திரச் சூரியாளாய் நான்*
*தனித்துதான் இருந்தேன் என்றாலும்*
*என்னைச் சுற்றும் கோள்கள்*
*நெருங்க முடியவில்லை என புலம்பி*
*என் ஒளி வாங்கித் தீர்க்க நினைத்து*
*தோற்றுப் போகும்"*

என்பன போன்ற ஆண் - பெண் பால் வேறுபாடு கடந்த ஞானத்தெளிவோடு இவரது கவிதைகள் ஒளிர்வதைக் காணலாம்.

*"பிறரின் ஊனங்களைப்*
*பரிகசிப்பவர்களை*
*கழுவிலேற்றுங்கள்"*

என்ற முழக்கத்தோடு கவிதையுலகில் குதித்தவர் நிர்மலா. இவரது "ஒரு நீதியன் குரல்" என்ற நூல் சாதிவெறியர்களையும் பெண்களை அடிமைப்படுத்த நினைப்பவர்களையும் சுட்டுப் பொசுக்குகிறது.

இவ்வாறு பெண்கவிஞர்கள் பலர் உள்ளடக்கத்திலும் உருவத்திலும் புதிய பலமாற்றங்களை செய்து வருகின்றனர். இவ்வாறான பெண்மொழியின் ஆரம்ப அறுவடை கவிதையுலகிற்கு புதிய நம்பிக்கையைத் தருகிறது. ஆனாலும் சில விமர்சனங்களும் அவ்வப்போது எழுந்து மறைகின்றன. எது எவ்வாறாயினும் 'இருபத்தியோராம் நூற்றாண்டு பெண்மொழிக் கவிதைக்கான நூற்றாண்டாக இருக்கப்போகிறது' என கரிகாலன் போன்றவர்கள் முன்மொழிந்திருப்பது உண்மையாக இருக்கும் போலவே தோன்றுகின்றது.



## வாழ்த்துகின்றோம்

நூல்களைத் தந்தவரும் ஆக்க இலக்கிய கர்த்தாவும் வைத்திய கலாநிதியும் மருத்துவ இலக்கியத் திறனாய்வாளரும் மனிதாபிமானியுமான டொக்ரர் எம். கே. முருகானந்தன் அவர்களின் மணிவிழா ஆண்டு இதுவாகும். டொக்ரர் அவர்கள் ஆரோக்கியமாகப் பல்லாண்டு காலம் வாழவேண்டும் என ஜீவநதி வாழ்த்துகின்றது.



# அல்சர் (Peptic ulcer)

டொக்ரர்.வே.கமலநாதன்

இரைப்பையானது உருவமுடைய உணவுக்கால்வாயின் ஒரு பகுதியாகும். இதன் கொள்ளளவு 1500ml ஆகும். இது தற்காலிக உணவு சேமிப்பிடமாகவும் புரதஉணவின் பகுதிச் சமிபாட்டிற்கு உதவும் அங்கமாகவும் தொழிற்படுகிறது. இரைப்பையில் சுரக்கப்படும் இரைப்பைச்சாற்றில் பெப்சினொஜன் என்ற நொதிய முன்னோடியும் ஐதரோகுளோரிக்கமிலமும் (HCl) முக்கிய கூறுகளாகும். HCl ஆனது (PH 1 - 2) இரைப்பையில் நிகழும் சமிபாட்டிற்கான அமில ஊடகத்தை ஏற்படுத்துகின்றது. சாதாரணமாக இரைப்பையின் Mucosa பகுதி அமிலத்தினால் பாதிக்கப்படாமலிருப்பதற்கு சில தற்காப்புப் பொறிமுறைகள் காணப்படுகின்றன.

1) இரைப்பையின் Mucosa பகுதியிலுள்ள இருகாபனேற் கவசம் (Gastric mucosal barrier)
2) அமிலத்தை நடுநிலையாக்கும் கலப் பொறிமுறைகள். (Cellular mechanism for neutralizing acid)
3) நுண்சுற்றோட்டத்தின் பங்களிப்பு (Role of micro circulation)

Peptic ulcer என்பது இரைப்பை mucosa ஐ அமிலமும் பெப்சின் நொதியமும் தாக்கும் பொறிமுறையினதும் அதனை எதிர்க்கும் mucosa ன் பாதுகாப்புப் பொறிமுறையினதும் சமநிலை குழப்பமடைவதால் ஏற்படுகின்றது. அதாவது பாதுகாப்புப் பொறிமுறையினை விட அமிலத்தின் தாக்கம் அதிகரிக்கும் போது mucosa பாதிப்படைந்து புண் உண்டாகிறது.

| Protective | Aggressive |
|---|---|
| 1) Prosta glanding | Acid |
| 2) Mucus | Pepsin |
| 3) Bicarbonare | NSA IDS |
| 4) Mucosal blood flow | Helicobactor pylori |

NSAIDS - Non Seroidal Anti inflammary drugs
Eg :- Asprin

**Peptic ulcer ஐ ஏற்படுத்தக்கூடிய காரணிகளாவன**

1) அமிலம்
2) பெப்சின் நொதியம்
3) Helicu bacter pylori எனும் பக்றீரியா
4) நோ நிவாரணிகளாகப் பயன்படுத்தப்படும் சில மருந்துகள் Eg :- Asprin, Brufen
5) அற்க கோல்
6) புகை பிடித்தல்

**Peptic Ulcer.**

இந்நோயானது புண் காணப்படும் அமைவிடத்தை பொறுத்து இருவகைப்படும்.

1) இரைப்பை புண் (Gastric ulcer)
2) முன்சிறுகுடல் புண் (Duodenal ulcer)

பொதுவாக இந்நோயினால் முதியவர்கள் இளையோரை விட அதிகமாக பாதிக்கப்படுகின்றனர். மற்றும் ஆண்கள் பாதிக்கப்படும் அளவு பெண்களை விட கூடுதலாகவுள்ளது.

**Gostric ulcer - இரைப்பைப்புண்**

இது பொதுவாக இரைப்பை அழற்சியுடன் (Gastritis) தொடர்புடையது. இரைப்பையின் உடற்பகுதியும் கழுத்துப் பகுதியும் வழமையாக இரைப்பை அழற்சி ஏற்படுகின்ற பாகங்களாகும். இந்நோய் உள்ளவர்கள்

உணவு உண்பதற்கு பயப்படுவார்கள். ஏனெனில் சாப்பிட்டு அரைமணித்தியாலத்திற்கிடையில் மேல்வயிற்றில் நோ ஏற்படலாம். சிலரில் வாந்தி எடுத்த பின்னர் நோ குறைவாகக் காணப்படுகின்றது.

## Duodenal ulcer - முன்சிறுகுடல் புண்

முன் சிறுகுடல் புண் இரைப்பை புண்ணை விட ஏறத்தாழ 3 மடங்கு அதிகமாகக் காணப்படுகின்றது. ஏறத்தாழ சனத்தொகையில் 10 - 15% முன்சிறுகுடல் புண்ணினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நோய் உள்ளவர்களில் 95% னோர் Helicobacter pylori என்ற பக்றீரியாவினால் தொற்றுதலுக்கு உள்ளாக்கப் பட்டிருக்கின்றனர். இப்பற்றீரியா எவ்வாறு இந்நோயுடன் சம்பந்தப்படுகின்றது. என்ற பொறிமுறை இன்னமும் தெளிவாக அறியப்படவில்லை. பொதுவாக peptic ulcer உயர்பதவி வகிக்கின்ற உத்தியோகத்தர்களில் உருவாகக் கூடிய வாய்ப்புகள் அதிகமாகவுள்ளன ஏனெனில்

1) அவர்களின் கடமைப் பொறுப்புகள் அதிகமாக விருத்தல்

2) உடல் ரீதியாகவும் உளரீதியாகவும் கடினமாக உழைத்தல்

3) உள நெருக்கடிகளுக்கு ஆளாகுதல்

இவ்வாறான சந்தர்ப்பங்களில் அமிலம் சுரக்கப்படும் தன்மை அதிகமாக காணப்படும்.

## Helico bacter pylori

இது சுருளி வடிவமுடைய gram negative பற்றீரியா ஆகும் இவை கூட்டமாகச் சேர்ந்து இரைப்பை, முன்சிறுகுடல் ஆகியவற்றின் mucosa ல் வாழ்கின்றன இப்பற்றீரியாவின் பாதிப்பு 15.20 சதவீதம் peptic ulcer ஐ உருவாக்கக் கூடியது. அதேவேளையில் 1 - 5 சதவீதம் இரைப்பை புற்றுநோய் உருவாகவும் வாய்ப்பு காணப்படுகின்றது. இப்பற்றீரியாவின் நிலவுகையினால் கூடுதலான அளவில் முன்சிறுகுடல்புண் (Duoderal ulcer) ஏற்படுவதற்கான வாய்ப்புகளே அதிகம். நோயின் அறிகுறிகள் Clinical features

1) மேல்வயிற்றுப் பகுதியில் நோவு (Epigastric pain) பொதுவாக இந்நோவானது வயிறு எரிதல் போல உணரப்படும் இது வயிற்றில் ஏற்படும் அசௌகரியத்திலிருந்து (mild abdominal discomfort) கடுமையான வலிவரையில் (Severe pain) Nவறுபடலாம்.

2) வயிற்றில் புளிப்புத்தன்மை. (Acidity) சமிபாட்டுக்கோளாறு (Indigestive problems)

3) சாப்பிட்ட உணவு மேல் நோக்கி வருவது போன்ற உணர்வு (Regurgitation of food)

4) பசியின்மை (Anorexia) உடல்நிறை குறைதல் (loss of weight)

5) சிலரில் இந்நோயின் தாக்கம் அதிகரிப்பதனால் இதைத்த வாந்தி எடுத்தல் (Haematemesis) மலம் கறுப்பு நிறமாக வெளியேறுதல் (Melaena) போன்ற அறிகுறிகளும் காணப்படலாம்.

## Investigations பரிசோதனைகள்

1) Upper gantro intestinal endoscopy ஒளியுடன் கூடிய குழாய் ஒன்றை உணவுக்கால்வாயின் மேற்பகுதியினுள் செலுத்தி Ulcer ன் தன்மையை அவதானித்தல் (தொலைக்காட்சி திரையில்) இதன் நோக்கங்களாவன.

a) எப்பகுதியில் Ulcer காணப்படுகின்றது என்பதை அறிதல் உதாரணம் இரைப்பை முன்சிறுகுடல்

b) குருதி இழப்பினால் ஏற்படும் புள்ளிகளை (bleeding spots) அறிந்து கொள்ளுதல்

c) இழையத்துண்டு (Tissue biopsy) ஒன்றை ஆய்வுக்காக வெட்டியகற்றுதல்.

Helicobacter pylori என்ற பற்றீரியாவை இனங்காண்பதற்கான சில ஆய்வு கூடப்பரிசோதனைகளும் காணப்படுகின்றன.

1) $^{13}C$ Urea breath test

2) Serological test

## Management சிகிச்சை

இந்நோய்க்குரிய சிகிச்சை மூன்று வழிமுறைகளில் நடைபெறுகின்றது

1) பொதுவாகத் தடுக்கின்ற வழிமுறைகள் General measures

2) மருந்துச்சிகிச்சை Pharmacological management

3) அறுவைச்சிகிச்சை முறை Surgical management

**பொதுவான தடுக்கும் வழிமுறைகள்**

1) புகை பிடித்தலை தவிர்த்தல்
2) மதுபானம் அருந்துவதைத் தவிர்த்தல்
3) உரிய வேளைகளில் உணவை உள்ளெடுத்தல்
4) அதிக காரம் உள்ள (Spicy foods) உணவுகளை தவிர்த்தல்
5) Stress ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களைக் குறைத்துக் கொள்ளுதல்
6) நோ நிவாரணிகளை (pain killers) வைத்தியரின் ஆலோசனை தேவையான நேரத்தில் மட்டும்பயன்படுத்தல்

**மருந்துச்சிகிச்சைமுறை**

1) சுரக்கப்படும் அமிலத்தை நடுநிலையாக்கக் கூடிய மருந்துகள். இவை Antacids என அழைக்கப்படும். பொதுவாக இவற்றில் காரப்பதார்த்தங்கள் காணப்படும்.
உதாரணம் - Aluminium hydroxide - Aeudrox Gelusil and Digene
2) அமிலம் சுரக்கப்படும் அளவைக் குறைத்துக் கொள்ளும் மருந்துகள்
a) H2 receptor antagonists
உதாரணம் - Cimitidine, Ranitidine, Famotidine
b) Proton pump inhibitors
உதாரணம் - Omeprazole, Pantoprazole, Lansoprazole
3) Mucosa பகுதியின் பாதுகாப்புப் பொறிமுறையை அதிகரிக்கக் கூடிய மருந்துகள்.
உதாரணம் - bismuth chelate, Sncralfate
4) Helicobacter pylori என்ற பற்றீரியாவை அழித்தொழிக்கும் மருந்துகள்
இம்மருந்துகளை உபயோகிக்கும் காலப்பகுதி ஒரு வாரமாகும்.
உதாரணம் - Omeprazole zomg இருதடவை
Clarithromycin 500mg இருதடவை
Amoxicillin 1g இருதடவை
Omeprazole 20mg இருதடவை
Clarituramycin 500mg இருதடவை
Metronidazole 400mg இருதடவை


**அறுவைச் சிகிச்சை முறை**

இந்நோயைக் குணப்படுத்துவதற்கு சில அறுவைச்சிகிச்சை முறைகளும் காணப்படுகின்றன. நிறைவாக நோயினைக் குணப்படுத்துவதை விட நோய்வருமுன் காப்பதே சிறந்த வழிமுறையாகும்



**நூல் அறிமுகம்**

*நூல்* - **பீலிக்கரை**
*வெளியீடு* - ஞானம் பதிப்பகம்,
3 - B, 46ஆவது ஒழுங்கை,
கொழும்பு - 6
*ஆசிரியர்* - பிரமிளா செல்வராஜா
ஊவா கட்டவளை, ஹாலி எல.
*விலை* - 150/=




# ஜீவநதியின் ஐந்து இதழ்கள் : ஒரு பறவைப்பார்வை

- தனலஷ்மி நகுலேசபிள்ளை

ஆண்டொன்று போனால் வயதொன்று போகும் இந்த ஜீவநதிக்கும் இது பொருந்தும் வாசனை (வாசிப்பு) இல்லாது வறண்டுபோகாது செந்தமிழும் இலக்கியமும் துளிர்விடவும், சீர் இழுந்து வாடிக்கிடக்கும் நெஞ்சங்களை உரமூட்டி எழுந்திடச் செய்யவும், உள்ளத்து உணர்வுகளை, கலைகளை மண்ணின் பாரம்பரியங்களை, சிறைப்பாடுகளை மைவடித்துக் கொண்டுவரும் ஜீவநதி இருதிங்கள் ஏடைந்தைக்கிளை பரப்பி ஆறாவது கிளையுடன் ஆண்டொன்றை நிறைவு செய்கின்றது. இவ்வேளையில் முன்னைய கிளைகள் பற்றி ஏதும் கூறாதிருக்க முடியவில்லை. கூறத்தான் வேண்டும். காகிதாதிகள், அச்சுக்கூட செலவினங்கள் உட்பட எல்லாமே உச்சத்திலிருக்கும் போது விளம்பரங்களின் இடையீடுகள் இன்றி கைக்கடக்கமான கனதியான ஏடாக நியாயவிலையில் அதுவும் யாழிலிருந்து வெளிவருவது பெரிதும் மன மகிழ்வைத் தருகின்றது. வர்த்தக நோக்கிலன்றி, மண்வாசனையுடன் கூடிய கலை இலக்கிய வெளிப்பாடுகளைத் தாங்கி ஓடிவரும் ஜீவநதியின் கிளைகள் அர்த்தமுள்ள அட்டைப்படங்களைக் கொண்டிருக்கின்றன. அட்டைப்படங்களை வரைவதில் பலருக்கு சந்தர்ப்பத்தைக் கொடுத்துள்ளது. அவசர உலகின் அசுரவேகத்துடன் போட்டிபோட்டு தம்மை நாளுக்குநாள் மாற்றிக் கொண்டும், இயல்பில் மாறிக் கொண்டுமிருக்கும் இளைஞர்கள் மத்தியில் அர்ப்பணிப்புடன் இலக்கியப்பணி செய்யும் இளவல்கள் தமது கால விரயத்தையும் பாராது கடின உழைப்புடன் எழுத்துலக அநுபவமிக்க ஆலோசகர் குழுவின் வழிகாட்டலுக்கமைவாக காலந்தாழ்த்தாது ஜீவநதியினை வெளியிட்டு வருகின்றனர். இது அவர்களின் ஆளுமையையும் இப்பணியின் கண் அவர்களின் ஆர்வத்தையுமே வெளிப்படுத்துகின்றது. இந்த உத்வேகம் குறையாது தரத்தில் குன்றாது நதியைப் பெருக்கெடுத்தோடச் செய்வது அவர்கள் முன்னுள்ள சவாலென்றே கருதவேண்டியுள்ளது.

ஒவ்வொரு ஏட்டையும் பிரித்தவுடன் முதலில் வரும் பாரதிதாசனின் கவிதைவரிகள் ஜீவநதியின் மகுட வாசகம் போன்று அமைந்து இதன் ஒவ்வொருகிளையும் கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், நேர்காணல், கருத்துரைகள், கலை இலக்கிய நிகழ்ச்சிகள், பத்தி எழுத்து, நூல் மதிப்பீடு என்ற வகையில் பல்சுவை அம்சங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது.




ஐந்து ஏடுகளிலுமாக மொத்தம் 38 கட்டுரைகள் உள்ளன. கட்டுரைகள்யாவும் தகுதி வாய்ந்தவர்களால் எழுதப்பட்ட தரமான கட்டுரைகளாகக் காணப்படுகின்றன. இவற்றின் வாயிலாக கவிதை, சிறுகதை, நாடகம், நாட்டியம், அரங்கு பற்றியும், இலக்கியவாதிகள் அவர்தம் படைப்புகள் பற்றியும் அறியக்கிடைப்பது பயன்மிக்கதாயுள்ளது. இலக்கியம் சார்ந்த கட்டுரைகள் மட்டுமன்றி கல்வி, மருத்துவம், வரலாறு, சினிமா, உணவு, பால்நிலைசமத்துவம் எனப்பல விடயங்களை உள்ளடக்கி விரிந்து செல்கின்றது. மூத்த எழுத்தாளர்களின் ஆக்கங்கள் ஒன்றிற்கு மேற்பட்ட தடவைகள் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. தெணியான், கி.நடராஜா, க.திலகநாதன், மனோன்மணி சண்முகதாஸ், அம்மன்கிளி முருகதாஸ், றஞ்சி, குப்பிளான் ஐ.சண்முகன் ஆகியோரை சிறப்பாகக் கூற முடியும்.மனோன்மணி சண்முகதாஸ் எழுதிய இலக்கியக்கல்வி எதற்காக? என்ற கட்டுரையில் இலக்கியம் கற்கவேண்டியதன் அவசியத்தைகுறுந்தொகைப்பாடலொன்றை உதாரணங்காட்டி விளக்கியுள்ளமை இலக்கிய ஏடொன்றின் பணி எதுவாக இருக்கவேண்டும் என்று குறிப்பிட்டுக் காட்டுகிறது. இது முதலாவது இதழின் முதலாவது ஆக்கமாக இடம் பெறுவது பொருத்தமாகவுள்ளது. சோழர்கால வரலாற்றுச் சான்றுகளுடன் வடமராட்சிபற்றிப் பேராசிரியர் செ.கிருஷ்ணராசா எழுதியிருப்பது வடமராட்சியின் பண்பாட்டுத் தொன்மையை

பறைசாற்றுவதாக உள்ளது. மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி பெரிது என்று எழுதியிருப்பது போன்றே கி.நடராசாவின் சிறுகதை பற்றிய சிறுகுறிப்பு அமைந்துள்ளது.

மிருதங்க வித்துவான் இரத்தினம் பற்றிய சில நினைவுகளை பேராசிரியர் சி. மௌனகுரு மீட்டியுள்ளார். இப்பகுதியில் இசைகளின் சங்கமத்தைக் காணமுடிகிறது. பாடும் போது வாயைக்கவனித்தும், ஆடும் போது காலைக் கவனித்தும் வாத்தியத்திற்கு வாசிக்கையில் கையைக் கவனித்தும் மிருதங்கம் வாசிக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருப்பதிலிருந்து மிருதங்கம் வாசிப்பதில் இவ்வளவு அவதானிப்புகளா? என்று பிரமிக்கவைக்கின்றது. வாசிப்பு நல்லதொரு சமுதாயத்தை தோற்றுவிக்கும் என பரணி எழுதியதை வாசிப்பாரோ? என ஆதங்கமாக உள்ளது.

கவனப்பிசகு எல்லோருடைய வாழ்க்கையிலும் தன்கைவரிசையைக் காட்டியிருக்கும் என்பது எனதெண்ணம். கவனப்பிசகிற்கு எடுத்துக்காட்டாக இயல்பான சம்பவமொன்றை வெகுசாதுரியமாகக்




கையாண்டுள்ளார் லம்போதரன். எடுத்துக் கொண்ட தலைப்பிற்கு, சிலப்பதிகாரத்தில் கவனப்பிசகு ஏற்படாமல் அரங்கை அமைப்பதில் கவனமெடுத்த பாங்கைக்கூறி முடித்திருப்பது வெகு ஜோராக உள்ளது. புனைகதைகளில் கேட்கும் புதிய குரல்களினூடாக சமூகத்தில் இடம் பெற்றுவரும் பெண்களின் நிலைமாற்றங்களை பரிணாமப் போக்கில் வளர்த்துச் சென்றுள்ளார் ம.இரகுநாதன் ஈழத்துச் சிறுகதை முன்னோடிகள் வரிசையில் பித்தனின் முக்கியத்துவம் பற்றி பல்வேறு எடுத்துக்காட்டுகளுடன் விளக்கியுள்ளார் செ. யோகராசா. அல்லும்பகலும் பாடசாலையுடன் களிக்கும் ஒருவரின் நிலையைக் கல்வியும் பாடசாலைச்சமூகமும் என்ற கட்டுரை விளக்குகிறது. வலிகளில் வலியது எதுவோ... என சுவாரசியமாக தொடங்கி சிறுநீரககல்குத்துபற்றி அனைவர்க்கும் பயனுள்ள வகையில் தெரியத்தந்துள்ளார் டொக்டர் எம்.கே.முருகானந்தன். உலகை ஊடறுத்து சகலமட்ட மக்களையும் அதனுட்புகுத்தி எவ்வாறெல்லாம் இயங்க வைக்கிறது இந்த ஊடகத்துறை வளர்ச்சி என்பதுபற்றி பேராசிரியர் கா.சிவத்தம்பி விபரித்துள்ளமை சிறப்பாக உள்ளது. நவீன கலை இலக்கியப் புலப்பாடுகள் பற்றி பேராசிரியர் சபா.ஜெயராசா தனக்கேயுரித்தான சொல்லாட்சியுடன் நல்ல பல விடயங்களை துல்லியமாக எடுத்துக் காட்டியுள்ளார். இவ்வாறே அனைத்துக் கட்டுரைகளும் தரமானவையாக உள்ளன.

இதுவரை ஜீவநதியில் 38 கவிதைகள் இடம்பிடித்துள்ளன. கவிதை எழுதுவதில் நன்கு பரிச்சயமானவர்களாலும் இளைய சந்ததியினராலும் கவிதைகள் ஆக்கப்பட்டுள்ளன. விசேடமாக பாடசாலையில் பயின்று கொண்டிருக்கும் மாணவர்கள் தமது ஆக்கத்தை கவிதைவடிவில் வெளிப்படுத்தியுள்ளனர். கவிதைகள் அத்தனையும் அர்த்தமுள்ள எதனையோ சொல்லி நிற்கின்றன. அதிற்பல நன்றாகப்புரிகின்றன. சில புதிர்போடுகின்றன. அவை எல்லாம் சொந்த அநுபவங்களையும், அந்தரங்கமான இருப்பிடவாழ்வையும் அது கலைந்துபோய் புலம்பெயர் அவலங்களையும் பறிபோன பலவற்றையும் பட்டும்படாமலும் சொல்லிவைக்கின்றன. கல்வயலாரின் கவிதைபற்றி நான் சொல்ல வேண்டியதில்லை (மேமன்கவி, சோ.ப., ஜெயசீலன், கவிஞர்.ஏ.இக்பால்...). அத்தனையும் அசல்.

"பல்லி + வீடு + நான் + அவள்" அஜந்தகுமாரின் கவிதைத் தலைப்பே சற்று வித்தியாசமாய் உள்ளது. உள்ளுக்கும் அப்படித்தான். ஆர். வேலின் பொய்யகல நீ பேசு, சி. விமலனின் நமக்குள்ளேயே மூன்றாவது மனிதனும், இளையகுட்டியின் குடியிருப்பும் சுகிர்தராணியின் பெரும்பாம்பு ஆகியன குறிப்பிட்டுச் சொல்லும் வண்ணம் உள்ளன.

சோ.ப.வின் எண்ண எண்ண.. ஜெயசீலனின் அடக்கி வைத்த அமைதி , கல்வயல் வே. குமாரசாமியின் யாழ்ப்பாலை, சின்னராஜனின் வாய்க்கரிசிக்காக வாழ்க்கை ஓட்டுகின்றோம் ஆகிய கவிதைகள் கேட்பாரற்று இருக்கும் மக்களின் வாழ்வின் நிதர்சனங்களைப் படம்போட்டுக் காட்டுகின்றன. முதியோர் அந்நியப்படுத்தப்படுவது நம்மண்ணிலும் தொற்றுநோய்போல் மெல்லப் பரவிவரும் வேளையில் ம.பா.மகாலிங்கசிவம் முதியோரைப் பேணுவோம் என தனது உணர்வுகளை ஆதங்கத்துடன் கவிதையில் வடித்துள்ளார். கோயில் சென்று தொழுவதிலும் பார்க்க பாயிற்கிடக்கும் முதியோர்க்கு பணிவிடை செய்தல்





பெரிதென்றும். அவர்களின் தேவையறிந்து ஆறுதல் கூறி முதுசொமெனக் காப்போம் என இளைய தலைமுறையை விளித்திட்டார். இதனைம் புரிந்திடல்வேண்டும் இளைஞர் எல்லோரும் வட அல்வை சின்னராஜனின் வல்லைவெளி வல்லை முனியப்பர் இரவும்பகலும் காத்துநிற்பார் என முடிவுற கொற்றை பி.கிருஸ்ணானந்தனின் வல்லைவெளி எல்லை முனியப்பர் வருவோர்போவோரை அல்லும்பகலும் காத்து நிற்பார் என்றாலும்... எனத்தொடங்கியிருப்பது அந்தாதியைப் போன்றிருக்கிறது. இருவரது பார்வையும் இருவேறு கோணங்களாக இருப்பினும் இரண்டுமே சிறப்பாக உள்ளன. பள்ளிமாணவர் துஷ்யந்தனின் ஆறாம் அறிவு கவிதையில் யதார்த்தத்தில் ஆறறிவு ஜீவன்கள் தொலைத்து நிற்பதை ஐந்தறிவு ஜீவனிடம் கண்டு நெஞ்சம் நெகிழ்ந்து போகின்றது. ச.நிரஞ்சனியின் "பெண்ணென்பதால்...", "இனியாவது". சாரங்கா தயானந்தனின் "எனது கனவில் சிரித்தவர்கள்". கெக்கிறாவ ஸுலைகாவின் "இளம்மனைவி" இவை பெண்களால் எழுதப்பட்டவை. பெண்கள் தொடர்பான கவிதைகளில் குறிப்பிடத்தக்கவை. சிறுகதைகள் என்ற வகையில் மொத்தம் பதினைந்து சிறுகதைகள் காணப்படுகின்றன. அத்தனை கதைகளும் சமூகத்தின் கண்ணாடியாக அன்றாடம் நிகழும் நிகழ்வுகளைப் பிம்பங்களாகப் பிரதிபலிக்கின்றன.

குப்பிளான் ஐ.சண்முகனின் "மழைதூறிய ஒரு மாலைப்பொழுது" கேவியூ. காவல்களின் இடையூறு என்பவற்றின் அவலங்களால் துன்பத்தில் நண்பனைக் கைவிட்டு.. வீடுவந்து சேர்ந்தகதை சிந்திக்கவைக்கிறது. "பாதுகாப்பு" இரு தளங்களிலிருந்து சுவாரஸ்யமாக எழுதியுள்ளார் தெணியான்.

சி.கதிர்காமநாதனின் "நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா..." பச்சைப்பாலனைக் கிள்ளிக் கிள்ளி துயிலவிடாது அழவைத்து அதன் இளமையை. துயிலை. எதிர்காலத்தைச் சிதைத்து ஓய்ந்திருக்கவிடாது அழச் செய்து வயிற்றுப் பிழைப்பிற்காக அலையும் பெண்ணின் நிலையை (கதையை) எழுதியுள்ளார். இப்படி எத்தனையோ பாலகர்கள் எம்மிடையே பெரியவர்கள் செய்யும் பாவத்திற்காக சிலுவை சுமக்கிறார்கள். இது கதையல்ல. யதார்த்தமேதான். "மனச்சிறை". "உதயம்". "சீதனம்கொடுத்தால்". "மூன்றுகால் முயலைத் தேடி". "வைரவர் உலா" ஆகியனவும் நடைமுறை விடயங்களைக் கருப்பொருளாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளன. பொதுவில் சிறுகதைகள் யாவும் சிறப்பாகவேயுள்ளன.

நேர்காணல் நிகழ்ச்சி மூலம் செங்கை ஆழியான் ஈழத்து இலக்கியங்கள் பற்றி நல்ல விடயங்கள் பலவற்றையும் தான் ஆற்றிய இலக்கியப் பணிகளையும் பவ்வியமாக விளக்கியுள்ளார். அவற்றை வெளிக்கொண்டுவரும் வகையில் செவ்விகண்டவரின் வினாக்கள் அமைந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. யாழ். பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறை பேராசிரியர் திருமதி கலைவாணி இராமநாதனுடைய நேர்முகம் மகளிர்தினத்தை முன்னிட்டு மகளிர் ஆக்கங்களைக் கொண்ட ஐந்தாவது இதழில் இடம்பிடித்துள்ளது. இதன் வெளிப்பாடும் மகளிர் பற்றியதாகவே உள்ளது.




பத்தி எழுத்து என்ற பகுதியில் வித்தியாசமான விடயங்கள் பலவற்றிற்கு கருத்துரை வழங்கப்பட்டுள்ளமை வெளிப்படையாக அமைந்துள்ளது. சிறிதாக இருப்பினும் அதன் அடக்கம் பெரிது. புதிது. இலக்கிய உலகினில் காலெடுத்துவைக்கும் புதியவர்களை வரவேற்று புதுப்புனல் என்பதனால் புகைப்படத்துடன் அறிமுகப்படுத்தி அவர்தம் ஆக்கங்களுக்கு களமமைத்துக் கொடுக்கின்றது. இதுவரை ஐவரை புதுப்புனலாக அறிமுகப்படுத்தியுள்ளது. அத்துடன் உள் ஓவியம் வரைந்த அன்றூ சுதர்சனையும் அறிமுகப்படுத்தியுள்ளது.

வாழும்போதே வாழ்த்துவது சிறந்தபண்பு. அமுதவிழா காணும் மல்லிகை டொமினிக் ஜீவா, பவளவிழா காணும் பேராசிரியர் சி.தில்லைநாதன், கவிஞர் கலாநிதி முருகையன், மரியசேவியர் அடிகளார், பல்கலைக்கழக துணைவேந்தராக நியமனம் பெற்ற பேராசிரியர் என். சண்முகலிங்கன்

ஆகியோரை வாழ்த்துகின்றோம் என ஜீவநதி வாழ்த்தியுள்ளது. அது மட்டுமன்றி மறைந்தவர்களை மறக்காது அவர்களுக்காக தனது இரங்கலையும் தெரிவித்துள்ளது. ஈழத்தின் படைப்பாளி செ.யோகநாதனுக்காக ஜீவநதி தனது இரங்கலைத் தெரிவித்துள்ளது. இவைகளை நோக்கும் போது ஜீவநதி இலக்கிய ஏடாகமட்டுமன்றி சமூகநேயமுள்ள மனிதனாகவும் தொழிற்படுவதாகத் தெரிகிறது.



நூல் அறிமுகம் என்ற பகுதியிலுள்ள ஐந்து நூல்களை நூலின் பெயர், ஆசிரியர்கள், பதிப்பாசிரியர், வெளியீடு, விலை சகிதம் நூலின் சிறுபுகைப்படத்துடன் கட்டமிட்டு அறிமுகப் படுத்தியுள்ளது. அறிமுகம் மாத்திரமன்று நூல் மதிப்பீடும் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அவ்வப்போது நிகழ்ந்து முடிந்த கலை இலக்கிய நிகழ்வுகள் பற்றி கால ஒழுங்கில் தரப்பட்டுள்ளது இதுவும் ஒரு நல்ல முயற்சியே. எது எங்கு நடக்கிறது என்று அறிந்து கொள்ள விரும்பும் ஆர்வலர்களுக்கும் இவைபோன்றவற்றைச் செய்ய நினைப்பவர்களுக்கும் பயனுள்ளதாக தூண்டுதலாக இருக்கும்.

ஒவ்வொரு ஏடும் மிகவும் சிரத்தையுடன் அழகுற எழுத்துப் பிழை, அச்சுப்பிழைகளின்றி வெளியிடப்பட்டுள்ளமை பாராட்டப்பட வேண்டிய விடயம். தொடர்ந்து வரும் இதழ்களும் தழுவல்கள் ஏதுமின்றி சுயத்துடன் தரச்சிறப்பு குன்றாது வெளிவருதல் வேண்டும்.□□□

# இடர்


மகிழ்ச்சியில் பிரதிபலித்த முகத்தெழில்
பொலிவிழந்து கண்ணீரில் மிதக்கின்றது
பாற்கடலில் விஷத் துளிகள்
கலக்கப்பட்டு விட்டதனால்!

நெருப்பை விழுங்கிப் புழுவாய்த்துடித்தபடி
அவன் கூதல் குளிருக்குப் போர்வையாகும்
தேவதையாய் தேவைகளுக்கு மட்டுமான
உறவு கசந்து வாந்திக்கிறது.

சிறகொடிக்கப் பட்டதனால்
வானவெளியெங்கும் பறக்கமுடியவில்லை
ஆனாலும் அழுகை ஒலி
காற்றில் கலந்து வானவெளி தாண்டி
பிரபஞ்ச வெளியெங்கும் ஒலிக்கிறது.

தாகத்தின் ஒளியும் நிழலும் கலைந்து
தாம்பத்யம் தனலிடைப்பட்ட புழுவாகி
நம்பிக்கைக்கும் நம்பிக்கையின்மைக்குமிடையே
நரகமாய் நகர்ந்து செல்கின்ற இவ்வாழ்வில்
இனியாவது இடர் தராமல் இருப்பானோ?.

– ச.முருகானந்தன்



# பேச்சுக் கலையை அறிவோம்

- ச.லலீசன்

"பேச்சு" என்ற சொல்லைப் பல நிலைகளில் நாம் பயன்படுத்துகின்றோம்

"அவர் பேச்சு மாறாதவர்"

"நான் ஒரு பேச்சுக்குத்தான் சொன்னேன்"

"உந்தப் பேச்சுக்கள் என்னோடு வேண்டாம்"

"அவர் கூட்டத்தில் பேசுகிறாராம்"

"பிள்ளைக்குப் பேச்சுக்கால் நடக்கிறது"

"பிரச்சினைகளைப் பேசித் தீருங்கள்"

"அவருக்கு நல்ல பேச்சுக் கொடுத்தேன்"

இவற்றுள் பேச்சு என்பது, "உறுதி", "ஒப்புக்காக ","முறையற்ற", "சொற்பொழிவு" , "திருமணத்தேடல்", "உரையாடல்", "ஏசுதல்", எனப் பல்வேறு பொருள்களை குறித்து நிற்கிறது.

இங்கு கட்டுரையாளரால் "பேச்சு" எனக் குறித்து நோக்கப்படுவது உயர் நோக்கோடு கூடிய அரிய கலை எனப் போற்றப்படும் சொற்பொழிவுக் கலை பற்றிய செய்திகளாகும். பிரசங்கம், கதா காலட்சேபம், சொற்பொழிவு, மேடைப் பேச்சு, உரை, எனப் "பேச்சு" சார்ந்த நிலைகள் விரிந்து செல்கின்றன.

*"ஆர்த்த சபை நூற்றொருவர் ஆயிரத்து ஒன்றாம் புலவர்.*
*வார்த்தை பதினாயிரத்து ஒருவர்..."*

என்பது ஔவையார் வாக்கு. உயர்ந்த சபைகளில் அமரும் தகுதி நூறு பேரில் ஒருவருக்கே வாய்க்கிறது. கவிஞராய்த் திகழும் தகுதி ஆயிரம் பேரில் ஒருவருக்கே அமைகிறது. ஆனால் பேச்சாளராய் இருக்கக் கூடிய தகுதி பதினாயிரம் பேரில் ஒருவருக்கே கிடைக்கிறது. இவை ஔவை குறிப்பிட்ட நிகழ்தகவுகள்.

தமிழியல் சார்ந்த மேடைப் பேச்சில் வல்லவராகத் திகழ வேண்டும் என நினைப்போர் பின்வருவனபற்றிக் கவனிக்க வேண்டும்.

*பேசும் பொருள் பற்றிய ஆழமான அறிவு
*தெளிவான உச்சரிப்பு
*கருத்திலே தெளிவு
*மொழிநடை
* உணர்வு வெளிப்பாடு
* குரலிலே ஏற்ற இறக்கம்
*சம்பவங்களை குறுக்கு வெட்டாகவும் நெடுக்கு வெட்டாகவும் தொடர்புபடுத்தும் திறன்
*உடல்மெய்ப்பாடுகள்

சிறந்த மேடைப் பேச்சாளன் ஒருவன் இவற்றிற்குச் சொந்தக்காரனாக இருப்பான்.

பேச்சுலக வளர்ச்சிக்கு அனுபவமே அடிப்படையானது. மேடையிலே முதன் முதலாக உரையாற்றச் செல்கின்றவர்கள் சுவாரசியமான அனுபவங்களைச் சந்திப்பர். கைகள் பதறுதல், கால்கள் கிடுகிடுத்தல், உடலெங்கும் குளிரல், நா நீர் வற்றித் தவித்தல், வார்த்தைகள் முட்டுதல். இந்த உணர்வுகள் பேச்சுலகப் பிரவேசத்தில் இன்பமானவை. பேச்சுலக அனுபவ வளர்ச்சியில் நான்கு படிநிலைகளைக் குறித்துக் காட்டலாம்.

படி 1. வார்த்தைக் கோர்வையின்றிப் பேச்சை வெளிப்படுத்துவது

படி 2. குறிப்புக்கள் வைத்திருந்து அதற்கேற்பப் பேசுவது

படி 3. எந்தக் குறிப்பும் இல்லாமல் இயல்பாகப் பேசுவது

படி 4. தயாரித்த செய்திகளைவிட அரங்கில் அமர்ந்திருப்போரின் இயல்பறிந்து புதியவற்றைச் சிந்தித்துச் சமயோசிதமாகப் பேசுவது.

*'அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய*
*நூலின்றிக் கோட்டி கொளல்'*

என்பது வள்ளுவர் வாக்கு. பேசப் போகும் விடயம் பற்றிய ஆழ்ந்த அறிவே பேச்சாளனுக்கு மிகவும் வேண்டப்படுவதாகும்.

பேச்சை ஆரம்பித்தலில் பல பேச்சாளர்கள் பல முறைகளைக் கையாளுகின்றனர். சிலர் பாடல் ஒன்றைச் சொல்லிப் பேச்சை ஆரம்பிப்பர். சிலர் நிகழ்ச்சி நிரலைப் பார்த்து வரிசை வழுாமல் வந்திருந்தோரை விளித்துப் பேச்சை ஆரம்பிப்பர். தொடர்ந்து பேசும் கருப்பொருளுக்கு ஏற்ற தலைப்பை முன்வைப்பர். அடுத்து சபையோரை ஈடுபாடு கொள்ளுமாறு Engagement வளைப்பர். தொடர்ந்து விடய விரிவாக்கம் செய்து எடுத்துக்கொண்ட பொருளை அழுத்தி - தொடர்புகள், ஆதாரங்கள் காட்டி நிறுவி பேச்சை விரிவாக்கம் செய்வர். நிறைவாகப் பேச்சின் முக்கிய விடயங்களை ஓரிரு வார்த்தைகளில் தொகுத்துக் கூறி வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுவர்.

சபையேறிப் பேசுவதற்கு முன்பு நிலைக் கண்ணாடிக்கு முன்பு பேசிப்பார்ப்பதும் பேச்சின் வெற்றிக்குச் சாதகமாக அமையும். புகழ் பெற்ற பேச்சாளரான வின்ஸ்டன் சேர்ச்சில் இத்தகைய வழக்கத்தைக் கொண்டிருந்தார் என்கின்றனர்.

பேச்சின் வெற்றிக்கு பேசும் சந்தர்ப்பத்தில் சில விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும்.
*பேசும் போது எல்லோரையும் நோக்கியவாறு பேச வேண்டும். குறித்த ஒரு திசையைப் பார்த்துப் பேசக் கூடாது.
*பேச்சின் இடையிடையே அன்பர்களே.. நண்பர்களே.. என விளித்தல். இது சபையோருடனான நெருக்கத்தை மிகைப்படுத்த வாய்ப்பாக அமையும்.
*ஒரே சொல்லை மீண்டும் மீண்டும் பயன்படுத்துவதைத் தவிர்த்தல் (சிலர் அதாவது அதாவது.. என்று அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பர்)
*இலக்கிய விடயங்களை முன்வைக்கும் போது காட்சி பற்றிய கள விபரிப்பு. பாடல் பொருள் என்பவற்றைச் சொல்லிய பின்னர் பாடலைச் சொல்லல். இதனால் எல்லோரும் பாடலை. சம்பவங்களை விளங்கிக் கொள்ள வாய்ப்பாக அமையும்.
*சம்பவ விபரிப்புக்களை மேற்கொள்ளும் போது நிகழ்காலத்தில் உரையாற்றுகை செய்தல். எடுத்துக்காட்டாக 'தலைவன் வருகிறான் தலைவி நாணி நிற்கிறாள்...'
*சபையின் கவனத்தைக் கலைக்கக் கூடியவாறு நடந்து கொள்வதைத் தவிர்த்தல். எடுத்துக் காட்டாக அடிக்கடி நேரத்தைப் பார்ப்பதைத் தவிர்த்தல்.

பேச்சுலக மேதைகளால் உலகின் தலைவிதியே மாற்றி எழுதப்பட்டிருக்கிறது. அரசியல்வாதிகளிற் பலர் மக்களை வசீகரிக்கும் சிறந்த சொற்பொழிவாளர்களாக இருக்கின்றனர். அனுபவம் என்ற ஆசானின் துணை பேச்சுலகில் வெற்றிப் பாதையில் வழி நடத்திச் செல்லும். 'செந்தமிழும் நாப்பழக்கம்' என்று சும்மாவா சொல்லி வைத்தார்கள்? □□□


**'ஜீவநதி' சந்தா விபரம்**


தனிப்பிரதி - 50/= ஆண்டுச்சந்தா - 400/=
ஓராண்டுக்கு உரிய சந்தா செலுத்த விரும்புவோர், காசோலை மூலமாகவோ, மணியோடர் மூலமாகவோ அனுப்பலாம். மணியோடரை அல்வாய் தபால் நிலையத்தில் மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.
அனுப்ப வேண்டிய பெயர்\ முகவரி - K . Bharaneetharan
Kalaiaham
Alvai North west
Alvai.
வங்கி மூலம் சந்தா பணம் செலுத்த விரும்புவோர் - K.Bharaneetharan & S.Vimalan
HNB - Nelliady.
சேமிப்பு கணக்கு இலக்கம் -118-00-02-0945701-1
என்ற வைப்பில் வைப்பு செய்து வங்கி ரசீதை எமக்கு மேற்குறிப்பிட்ட முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். வெளிநாடு ஓராண்டுக்கு சந்தா $20 (us)
(உங்கள் பெயர், விலாசம் என்பவற்றை விரிவாக எழுதவும்)

1 வது ஆண்டு நிறைவு மலர்
ஜீவநதி

# இரசித்ததும் சுவைத்ததும்

- விஷ்ணு

1) சடங்கின் அடியாக தோன்றிய நாடகமானது இன்று பல வகை வடிவங்களைப் பெற்று ஆற்றப்படுகின்றது. இவற்றுள் மக்கள் மிகவும் ஈடுபாட்டுடன் ரசிக்கும் நாடக வடிவமாக இசைநாடகம் விளங்குகின்றது. ஆனால் இன்றைய சினிமா மோகமும், சின்னத்திரை வளர்ச்சியும் இசைநாடகத்தை அழிவுப்பாதைக்கு இட்டுச் செல்வதை அவதானிக்க முடிகின்றது. இருப்பினும் வடமராட்சியில் இசைநாடகமானது அன்று போல் இன்றும் சிறப்பாக ஆற்றப்பட்டு




வருகின்றது. அந்த வகையில் சிவராத்திரி தினத்தன்று அல்வாய் செல்லையா அரங்கில் "சங்கரதாஸ் சுவாமிகள்" நாடக சபாவினரால் ஆற்றப்பட்ட "சத்தியவான் சாவித்திரி" நாடகத்தினை கண்டு கழித்தேன். இவ் நாடகசபா ஜீவநதி ஆசிரியர்களான து.இராஜவேல், க.பரணீதரன் ஆகியோரால் முதன்முதலாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. இளைஞர்களாகிய சி.விமலன், து. இராஜவேல், க.பரணீதரன், வி.செந்தூரன், வெ.துஸ்யந்தன், க.ஜெயதர்சன், மு.செந்தூரன், க.தம்பேஸ், செ.சுரேந்திரா, சி.நவராஜ், து.நிலோஜன், ர.இதயரதன், ஆகியோர் நடித்தார்கள். தொடங்கி முடியும் வரை இவர்களின் நாடகம் விறுவிறுப்பாக நடைபெற்றது. சத்தியவானாக நடித்த வெ.துஷயந்தனதும், தூய்மைசேனனாக நடித்த ஜீவநதி இணையாசிரியர் சி.விமலனினதும் பாட்டுகள் சுருதி லயத்தோடு மிகவும் இனிமையாக இசைக்கப்பட்டன. நாரதராக நடித்த ஜீவநதியின் நிர்வாக ஆசிரியருக்கு வேடம்



மிகவும் பொருத்தமாக அமைந்ததுடன் அவரது வசனப்பேச்சுகள் கம்பீரமாக அமைந்தன. சாவித்திரியாக நடித்த செந்தூரன் பெண்ணுக்கு உரிய நளினத்தை சிறப்பாக வெளிப்படுத்தினார். மற்றும் யமனாக நடித்த ஜீவநதி இணையாசிரியர் க.பரணீதரன் நடிப்பு யமனிற்கு உரிய கம்பீரத்தை வெளிக்காட்டுவதாக இருந்தது. மற்றைய அனைவரும் சிறப்புற தமது நடிப்பினை வெளிப்படுத்தி இசைநாடகமான சத்தியவான் சாவித்திரியினை உயிர்த்துடிப்புடன் ஆற்றினர். நாடகம் 1 மணித்தியாலம் நடிக்கப்பட்டது. எனினும் இவ் இளைஞர்கள் இவ் நாடகத்தை இன்னுமொரு 3 மணித்தியாலம் நடிக்கமாட்டார்களா! என்ற ஆவல் என்னை தூண்டியது. அத்தோடு இந்நாடகத்தை சிறந்த முறையில் நெறியாள்கை செய்த கலாநிதி. திரு.த.கலாமணியும் பாராட்டப்பட வேண்டியவர். இவ்வாறான இளைஞர்களின் இசை நாடகம் மீதான ஈடுபாடு. எமது பாரம்பரிய கலைகளை அழியவிடாது பாதுகாக்கும் என்பதில் அச்சம் இல்லை. இவ் இளைஞர்களின் செயற்பாட்டை எதிர்கால நோக்கில் நோக்குகின்ற போது அவர்களிடம் மரபு பேணும் தன்மை காணப்படுவதையும் உணர முடிந்தது.


2) 2008 - அன்று 14 ஆவது "அவை" நிகழ்வின் போது **Dr.M.K.** முருகானந்தனிற்கு அவரது பிறந்த இடமான வடமாராட்சிப் பிரதேசத்தில் மணிவிழாவிற்கான முதல் வாழ்த்து நிகழ்வு கலாநிதி. திரு.த.கலாமணி



அவர்களின் இல்லமான "கலையகத்தில்" மூத்த எழுத்தாளரான தெணியான் தலைமையில் நடத்தப்பட்டது. Dr.M.K. முருகானந்தனிற்கு மணிவிழா எடுப்பது என்றால் சிறிய விடயமல்ல. அது ஒரு பெரிய அளவில் செய்யப்பட வேண்டிய விடயம். எனினும் முதல் மணிவிழா வாழ்த்தை "அவை"யில் நடத்தியது பாராட்டப்பட வேண்டிய விடயமாகும். இவ் நிகழ்வின் போது டாக்டரின் இலக்கிய ஈடுபாடு, மருத்துவத்தில் அவரது மகோந்நதம், அவரது குணஇயல்பு, விமர்சனப்பாங்கு, அவரது நூல்கள், நோயாளர்களுடன் அவர் பழகும் விதம் என அவரைப் பற்றிய தகவல்களை பேச்சாளர்கள் வாழ்த்துரை மூலம் தெரிவித்தனர். டாக்டர் தனது பாரியாருடன் இவ்நிகழ்வில் கலந்து சிறப்பித்தார்.

3) நாடக பாடமானது இன்று நன்கு வளர்ச்சி அடைந்து வருகின்றது. இளைஞர்கள் நாடகத்தை ஒரு கற்கை நெறியாகக் கொண்டு கற்று வருகின்றார்கள். பல்கலைக்கழகத்தில் நாடகத்திற்கு என நாடகசிறப்புப் பட்டம் வழங்கப்படுகின்றது. நாடகத்திற்கு என ஒரு பிரிவும் உண்டு. அந்த வகையில் மார்ச் 27 (வியாழன்) உலக நாடக தினமாகும். அன்று யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் நாடகவிழா வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது. யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலும் நாடகவிழா சிறப்பாக நடத்தப்பட்டது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பேராசிரியர். என். சண்முகலிங்கன் கலந்து சிறப்பித்தார். நாடகப்பிரிவு விரிவுரையாளர் திரு.க.ரதீதரன். திருமதி..க. நவதர்சினி ஆகியோரின் சிறந்த வழிகாட்டல், நெறியாள்கை மூலம் நாடக ஆற்றுகைகள் நிகழ்த்தப்பட்டன. அனைத்து ஆற்றுகைகளிலும் பல்கலைக்கழக நாடகப்பிரிவு மாணவர்கள் பங்கு கொண்டு அசத்தினார்கள். சுனாமியின் அவலத்தை படம்பிடித்துக் காட்டும் "**2004 : 9.0**" நாடகம் வெகு சிறப்பாக மாணவர்களால் நடிக்கப்பட்டது. நீலச்சீலைகளை கொண்டு அலை போல மாணவர்கள் மேடையை அலங்கரித்தது அவர்களின் படைப்பாக்க திறனை வெளிக்கொணர்ந்தது. 1ம் வருட மாணவர்களினால் ஆற்றப்பட்ட "முகத்திரை" நாடகமானது பல்வேறு கருத்துக்களை சுமந்து கொண்டு வந்ததாக காணப்பட்டது. நாடக நடிகர்கள் அனைவரும் முகத்திற்கு முகமுடி அணிந்து நடித்தார்கள். அவர்களின் செயற்பாடுகளை உடல் அசைவுகளை கொண்டே உணர முடிந்தது. ஊமைச்சித்திரிப்பின் ஊடாக இவர்களின் நாடகம் வெளிப்படுத்தப்பட்டது. "ஒவ்வொருவனிடமும் களையப்படாமல் பல களைகள் (அழுக்குகள்) உண்டு. அவை களையப்பட வேண்டும். ஆனால் ஒருவனும் தன் அழுக்கை அகற்ற விரும்பாது மற்றவனின் உடம்பில் உள்ள அழுக்கை பார்க்க விரும்புபவனாக காணப்படுகின்றான்" என்பதை கருப்பொருளாக கொண்டமைந்தது இவர்களது நாடகம். மற்றும் "**காத்தவரயன் கூத்து**", "**மூடி**", "**கட்டுவன் வசந்தன் கூத்து**", "**சாட்சி**" ஆகிய நாடகங்கள் இந் நிகழ்ச்சியில் மேடையேற்றப்பட்டன.

4) 2008 - 05 -08 அன்று கைலாசபதி கலை அரங்கில் பேராசிரியர் எஸ் .சிவலிங்கராஜா தலைமையில் வித்தியானந்தன் நினைவுப் பேருரையை "**இசைநாடகம் : நேற்று - இன்று - நாளை**" என்ற தலைப்பில் கல்வியிற் துறை சிரேஸ்ட விரிவுரையாளரும், நாடக நடிகருமாகிய கலாநிதி த.கலாமணி அவர்கள் நிகழ்த்தினார். இவர் தனது உரையாற்றலின் போது அரங்குபற்றிய அறிமுகத்தினை செய்ததுடன் இசை நாடகப்பாடல்களை பாடிக்காட்டி அரங்கினை மகிழ்வுடன் வைத்திருந்தார். பார்வையாளர்களை தன்பால் ஈர்த்து நாடகம் பற்றிய நல்ல உரை ஒன்றினை ஆற்றினார். சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி கி. விசாகரூபன் நெறியாள்கையில் நாட்டார் வழக்கியற் கழகத்தின் "**காத்தவராயன் கூத்தும்**" நடைபெற்றது. இவ் நிகழ்வில் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள், நலன் விரும்பிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மொத்தத்தில் நல்ல ஒரு நிகழ்வை கண்டு கழித்த உணர்வு ஏற்பட்டது.



# காலமான காவியம்
# மதுரைப் பண்டிதர் கலாநிதி க.சச்சிதானந்தன்
# (1921 - 2008)

**- பா.இரகுவரன்**

*சாவிற்றமிழ் படித்துச் சாகவேண்டும் என்றன்*
*சாம்பல் தமிழ் மணத்து வேகவேண்டும்.*

மேற்படி கவிதைவரிகளின் சொந்தக்காரர் பண்டிதர் க.சச்சிதானந்தன் அவர்கள் தான் பாடி வைத்தபடியே இறுதிவரை தமிழ்படித்தும் தமிழ் மணத்தை காற்றில் வீசிவிட்டும் இந்த ஆண்டு மார்ச்மாதம் இந்துக்களின் பங்குனி உத்தரம் கிறிஸ்தவரின் பெரிய வெள்ளிக்கிழமை என்பன சந்தித்த நாளில் 21 மார்ச் 2008ல் அதிகாலை வேளையில் ஆவி நீங்கினார்.

இவரின் தகப்பனாரும் அவர்வழி மூதாதையரும் பருத்தித்துறையில் தும்பளைக் கிராமத்தைச் சேர்ந்தவர்கள். தாயார் மாவிட்ட புரத்தைச் சேர்ந்தவர். மாவிட்ட புரத்தில் பிறந்த சச்சிதானந்தன் ஹாட்லிக்கல்லூரியில் விஞ்ஞானத்துறையில் கற்றார். படிக்கும் காலத்தில் தும்பளையிலே தன் நாட்களைக்கழித்தார். திருமணமாகி மாவிட்டபுரவாசியாகினார். 1995 வலிகாம இடப்பெயர்வின்போது தும்பளைக்கு வந்து இறுதிவரை இங்கேயே வாழ்ந்து மறைந்தார்.

நான் பலாலி ஆசிரிய பயிற்சிக்கலாசாலையில் பயின்றவேளை (1988 - 89) விரிவுரையாளராக இருந்த சோ.பத்மநாதன் மூலமாக பண்டிதர் சச்சியின் கவிதைச் சிறப்பை அடிக்கடி அறிந்து கொள்ளும் வாய்ப்புக்கிட்டியது. பண்டிதரின் "விண்ணின் அமுதம்" என்ற கவிதையின் இறுதி நான்கு வரிகளையும் சோ.ப. தன் வெண்கலக்குரலில் உணர்வு படக்கூறிய போது சொற்சுவையும் பொருட்சுவையும் இணைந்த பரவசத்துடன் வரிகள் நெஞ்சில் பதிந்தன.

*ஊது குழற் சத்தம் கேட்டு அவதிப்பட்டு ஓடிவருகையிலே*
*பாதி வழி வந்து தாமரைக்கை தந்த பச்சை அமுதமையா*

மாவிட்டபுரத்தில் தனது வீட்டில் இருந்து அதிகாலையில் புகை வண்டியின் ஊது குழற் சத்தம் கேட்டு விழுந்தடித்துக் கொண்டு சாப்பாட்டுப்பொதியை எடுக்க மறந்து காங்கேசன்துறை புகையிரத நிலையத்துக்கு ஓடும் வேளையில் இவரின் துணைவியார் சாப்பாட்டுப்பொதியுடன் பின்னால் ஓடிவந்து இவரிடம் கொடுத்த இனிய நினைவுகளை மீட்டி எழுதிய கவிதையின் இறுதிவரிகள் இவை.

பண்டிதர் சச்சிதானந்தன் தனது 17 வயதிலேயே மதுரைப் பண்டிதர் பட்டத்தைப் பெற்றுக் கொண்டவர். விஞ்ஞானத்துறையில் இவரின் பௌதிக அறிவு காரணமாக சுவாமி விபுலாநந்தரின் "யாழ்நூல்" பற்றிய ஆய்வில் 1943ல் உதவியாளராகப் பணிபுரிந்து ஆய்விற்காக சுவாமிகளுடன் இந்தியாவெல்லாம் சுற்றித் திரிந்தவர். பின்னாளில் சுவாமிகளின் வழிகாட்டலில் "தமிழர் யாழியல்" என்ற நூலை பண்டிதர் சச்சி எழுதியுள்ளார்.

பண்டிதர் சச்சியின் தகப்பன் வழி பரம்பரையினர் வானியல் அறிஞர்கள். 1641ம் ஆண்டு தொடக்கம் ஏட்டில் பஞ்சாங்கம் எழுதி வெளியிட்டவர்கள். பாட்டனார் வேற்பிள்ளை 1899ல் அச்சுவேலியில் இருந்த அச்சகத்தில் பஞ்சாங்கத்தை அச்சு வடிவில்தாளில் வெளியிட்டார். பின்னர் சச்சியின் தந்தை கணபதிப்பிள்ளை கொக்குவில் இரகுநாதையர் பஞ்சாங்க நிறுவனத்தாருடன் இணைந்து செயற்பட்டார். அதன்வழி பண்டிதர் சச்சியும் கொக்குவில் பஞ்சாங்கக் கணிப்பில் இறுதிவரை இணைந்து செயற்பட்டார். இவர் இலங்கை வானியற்கழகத்தின் உபதலைவராக 1980 முதல் இருந்து வந்தார்.

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் கல்வியியல் உளவியல் விரிவுரையாளராகவும், உப அதிபராகவும் கடமையாற்றியவர். பௌதிகம், கணிதம், தமிழ் இலக்கண இலக்கியம், ஆங்கிலம், சமஸ்கிருதம் போன்ற பல்துறைவித்தகராக திகழ்ந்தார். கவிதை, சிறுகதை, நாவல், நாடகம், ஆய்வுக்கட்டுரைகள் போன்றவற்றில் தனது வல்லமையைக் காட்டினாலும் கவிதையே இவரின் பிரதான வெளிப்பாட்டுச்சாதனமாக இருந்தது.

1939ல் ஈழகேசரி பத்திரிகையில் இவர் எழுதிய "தண்ணீர்த் தாகம்" என்ற சிறுகதை சாதிக்கொடுமை, தீண்டாமை என்பவற்றுக்கு எதிராக எழுதப்பட்ட ஈழத்தின் முதற்சிறுகதையாகவும் கலை நேர்த்தி கொண்ட ஈழத்து முன்னோடிச் சிறுகதைகளில் ஒன்றாகவும் கணிப்புப் பெற்றுள்ளது.

இவரின் முதலாவது கவிதைத் தொகுப்பு "ஆனந்தத்தேன்" என்ற பெயரில் வெளிவந்தது. "மஞ்சுகாசினியம்" என்ற நூல் தொல்காப்பிய இலக்கணத்தை எளிமைப் படுத்தியும் தெளிவுபடுத்தியும் எழுதப்பட்டதாகும். யாழ்ப்பாண காவியம், இலங்கைக் காவியம், என்ற காவியங்களையும் "எடுத்த மலர்களும் தொடுத்தமாலையும்" என்ற கவிதைத் தொகுப்பையும், சிறுவர் பாடல் தொகுபபொன்றையும் வெளியிட்டுள்ளார். 80 வயதின் பின்னர்தான் மேற்குறிப்பிட்ட பலநூல்கள் எழுதப்பட்டன.

தொல்காப்பியம் பற்றி ஆங்கிலத்திலும் எழுதியுள்ளார். அச்சில் வெளிவர வில்லை. இதேவேளை வானியல் பற்றியும் தனது இறுதிநாட்களில் ஆங்கிலத்தில் எழுதிக் கொண்டிருந்தார். தமிழரின் இலக்கணம் மற்றும் வானியல் அறிவின் சிறப்பை உலகிற்கு எடுத்துக்காட்டும் முயற்சியாக இவை அமைந்திருந்தன.

பண்டிதர் சச்சியின் சாவிற்றமிழ் படித்து சாக வேண்டும் என்ற வரிகளை தமக்காக்கிக் கவிதை எழுதிய பிரபல்யங்களாக பலர் உள்ளனர். அவற்றில் ஒரு பிரபல்யம் எழுதிய கவிதை

சாவிற் தமிழ்பாடிச் சாகவேண்டும் என்றன்; / சாம்பல் தமிழ் மணந்து வேகவேண்டும் பாடையிலே படுத்தூரைச் சுற்றும் போதும் / பைந்தமிழில் அழும் ஓசை கேட்கவேண்டும் / ஓடையிலே என்சாம்பல் ஓடும் போதம் ஒண்தமிழே சலசலத்து ஓடவேண்டும்.

ஆனால் பண்டிதர் எழுதிய கவிதைவரிகள் "ஆனந்தத்தேன்" என்ற தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. அக்கவிதையின் ஒருபகுதி பின்வருமாறு.

*பொன்னின் குவையெனக்கு வேண்டியதில்லை - என்னைப்*
*போற்றும் புகழெனக்கு வேண்டியதில்லை*
*மன்னன் முடியெனக்கு வேண்டிய தில்லை - அந்த*
*மாரன் அழகெனக்கு வேண்டியதில்லை!*

*கன்னித் தமிழெனக்கு வேணுமேயடா - உயிர்க்*
*கம்பன் கவியெனக்கு வேணுமேயடா*
*தின்னத் தமிழெனக்கு வேணுமேயடா - தின்று*
*செத்துக் கிடக்கத் தமிழ் வேணுமேயடா!*

*கால்கள் குதித்து நடமாடுதேயடா - கவிக்*
*கள்ளைக்குடித்த வெறியேறுதேயடா*
*நூல்கள் கனித்தமிழில் அள்ளிட வேண்டும் - அதை*
*நோக்கித் தமிழ் பசியும் ஆறிட வேண்டும்*

*தேவர்க் கரசு நிலை வேண்டிய தில்லை - அவர்*
*தின்னும் சுவையமுது வேண்டிய தில்லை*
*சாவிற் றமிழ் படித்துச் சாகவேண்டும் - என்றன்*
*சாம்பர்தமிழ் மணந்து வேகவேண்டும்.*

பண்டிதரின் பல்துறை ஆற்றல் பற்றிய சரியான மதிப்பீடுகள் அவசியமானவை குறிப்பாக வானசாஸ்திரம், தொல்காப்பியம் பற்றி இவர் எழுதியவை பற்றிய மதிப்பீடுகள் கவனிக்கப்படாமலே உள்ளன. பண்டிதரின் ஆக்கங்கள் அனைத்தும் சேர்க்கப்படவேண்டும். தொகுக்கப்பட வேண்டும்.□□□

ஈழத்து இலக்கிய வரலாற்றில் கவிதை, சிறுகதை, நாடகம், வானசாஸ்திரம் மற்றும் பல்வேறு துறைகளிலும் முன்னோடியாய் விளங்கி அண்மையில் காலமான மதுரைப் பண்டிதர் க.சச்சிதானந்தன் அவர்களின் மறைவிற்கு ஜீவநதி தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறது.



# வற்றாது வளம் பெருக்கும் ஜீவநதி

**- அ.விந்தன்**

ஜீவநதி தனது ஒரு வயதினைப் பூர்த்தி செய்கின்றமை பேருவகையைத் தருகின்றது. ஜீவநதிக்கும் அதன் வெளியீட்டாளர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். நேற்றுப்போலிருக்கிறது. சவால்களை எதிர்கொள்ளத் திராணியற்று அற்ற குளத்து அறுநீர்ப் பறவை போல யாழ்ப்பாணக் குடாநாட்டைக் கைவிட்டு, அதனூடான தொப்புள்கொடி உறவுகளையும் அறுத்துக்கொண்டு வசதியான வாழ்வுதேடி நாங்கள் புறப்பட்டோம். அக்கரை மாட்டுக்கு இக்கரை பச்சையென எங்கள் எதிர்பார்ப்புகள் வெறும் கானல் நீரேயென உணர்ந்து மனம் வெதும்பி விரக்தியுற்று நின்ற வேளையிலேதான் அந்த அற்ற குளத்திலிருந்து ஜீவநதி பிரவகித்தது.

**"சிறு பையன்கள் ஏதோ பருவக்கோளாறினால் இப்படி ஒரு சஞ்சிகையைத் தொடங்கிவிட்டார்கள், இரண்டாவது இதழ் வெளிவந்தாலே பெருஞ்சாதனைதான்"** என முணுமுணுத்த மூத்தவர்கள் இன்று மூக்கின்மேல் விரல் வைத்து அதிர்ந்து போய் நிற்கின்றார்கள்.

இந்த ஜீவநதி மலையிலிருந்து ஊற்றெடுக்கவில்லை. பகீரதன் ஆகாய கங்கையைப் பூவுலகுக்குக் கொணர்ந்தது போல, நலிவுற்றுப்போன யாழ். குடாநாட்டிலிருந்து ஊற்றெடுக்கும் பாதாள கங்கையாக ஜீவநதி பிரவகிக்கின்றது. உலகெங்கும் பரந்து வாழ்கின்ற தமிழ்பேசும் மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக ஜீவநதி மிளிர்கின்றது. எத்தனை தடைகள் நேர்ந்தாலும் அவை யாவற்றையும் உடைத்துக்கொண்டு உலகுதழுவிய ரீதியிலே தமிழ்பேசும் மக்களை இணைக்கின்ற ஓர் உறவுப் பாலமாக ஜீவநதி ஊற்றெடுக்கின்றது.

இதுவரை ஜீவநதியின் ஐந்து இதழ்கள் மட்டுமே வெளிவந்திருப்பினும் தமிழ் இலக்கிய சிற்றிதழ்களின் வரலாற்றிலே அது பதித்துள்ள தடம் மிகப்பெரியது. ஜீவநதியிலே பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள், கலாநிதிகள், பேராசிரியர்கள், இளநிலை எழுத்தாளர்கள், முதுநிலை எழுத்தாளர்கள், அரசியலாளரெனப் பல தரப்பினரும் எழுதுகின்றனர். இலங்கையின் மூலைமுடுக்கிலிருந்தெல்லாம் ஆக்கங்கள் வந்து குவிகின்றன. குறிப்பாக ஈழத்திலிருந்து வெளிவரும் மற்றெந்த சஞ்சிகையையும் விட பெருமளவிலே புலம் பெயர்ந்த எழுத்தாளர்களின் பங்களிப்பினை ஜீவநதியிலே தரிசிக்கமுடிகிறது. இது மிக ஆரோக்கியமானது.

ஜீவநதியின் ஒவ்வொரு ஆசிரியத் தலையங்கமும் முத்துப்போன்றது. சொற்சிக்கனம் பொருள் ஆழத்திற்கு வழி செய்கின்றது. முத்துக்களை விளக்கம் செய்வதுபோல ஆசிரியத் தலையங்கத்தைத் தொடர்ந்துவரும் கனதியான கட்டுரைகள்! கலை இலக்கியமென்பது அனுபவப் பகிர்வே வெறும் பட்டறிவு கலை இலக்கியமாகிவிடாது. பெற்றுக்கொண்ட உயிர்த்துடிப்புள்ள அனுபவத்தினை படிப்பவன் மனதைத் தொற்றிக்கொள்ளும் வகையிலே அளிக்கை செய்தல் வேண்டும்.

கவிதை, சிறுகதை, நாவல் ஏன் கட்டுரைக்குக்கூட இது பொருத்தமானதே. அத்தகைய ஓர் உயிர்த்துடிப்புள்ள அனுபவ அளிக்கையாக கார்த்திகாயினி சுபேஸ் எழுதிய "உதயம்" சிறுகதை (பங்குனி - சித்திரை 2008) விளங்குகின்றது. கிராமியக் கலையான கூத்தும் சாஸ்திரியக் கலையான பரதமும் ஒன்றுடன் ஒன்று இரண்டறக் கலந்து விகசிக்கும் அற்புதக் கலையனுபவத்தை எம் கண்முன் நிறுத்துகிறார் பேராசிரியர் சி.மௌனகுரு (ஒரு நந்தியின் மறைவு - புரட்டாதி - ஐப்பசி 2007) இத்தகைய அருமையான கலையாக்கங்களை ஜீவநதியில் நிறையவே தரிசிக்க முடிகிறது. மேற்குறித்தவை சில எடுத்துக்காட்டுக்கள் மட்டுமே. அனுபவப் பகிர்வு என்ற வகையிலே மிகமிக மலினமான சம்பவங்களையெல்லாம் மாபெரும் சாதனைகளாகச் சித்திரித்து வாசகன் தலையிலே கட்டியடிக்கும் அவலமான எழுத்துக்களை ஜீவநதி தவிர்த்துக்கொள்ளவேண்டும்.

ஜீவநதியின் பங்குனி - சித்திரை 2008 இதழ் "பெண்கள் சிறப்புமலராக" வெளிவந்திருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும். இவ்வாறே ஒவ்வொரு முக்கிய தினத்தையும் உள்ளடக்கி சிறப்பு மலர்கள் வெளிவரல் வேண்டும். சிறப்பு மலர்களை வெளியிடும் அதே நேரம் அவற்றின் உள்ளடக்கத்திலும் கூடிய கவனம்

செலுத்தவேண்டும். பெண்கள் சிறப்பு மலரில் எழுதிய பெண்கள் யாவரும் அடிநிலையிலுள்ள உழைக்கும் வர்க்கப் பெண்களின் அவலங்களைச் சுட்டிக்காட்ட மறந்துவிட்டனர். சமூகத்தின் மேல்நிலையிலுள்ள இவர்கள் இன்றும் கிராமப்புறங்களிலும் பெருந்தோட்டப்புறங்களிலும் ' அடிமைத் தளையில் சிக்குண்டு பரிதவிக்கும்' பெண்ணினத்தின் அவலங்களைப் புரிந்துகொள்ள மறுக்கின்றனர். போர்ச் சூழலிலே சமூகத்தினதும் குடும்பத்தினதும் சுமக்கமுடியாத பெருஞ்சுமைகளைத் தாங்கிக்கொண்டு குற்றுயிரும் குலைஉயிருமாக வாழ்ந்துவரும் பெண் இனம் இன்னும் எம் நாட்டில் பரந்து வாழ்கிறது. இத்தகையோரின் அனுபவப் பகிர்வுகள் மிகமிக முக்கியமானவை. முதன்மையானவை. பாதிக்கப்பட்டவர்களின் அனுபவங்களிலிருந்தே பாடங்கள் பலவற்றைக் கற்றுக்கொள்ள முடியும். எனவே எழுதுபவர்களைத் தெரிவு செய்வதிலும் கவனம் வேண்டும்.

அரசியல் இல்லாமல் எதுவுமே இல்லை என்னும் ஒரு காலகட்டத்திலே கலை இலக்கியத்தையே முதன்மைப்படுத்தி ஜீவநதி வெளிவருவதன் உட்கிடக்கையைப் புரிந்துகொள்ள முடிகிறது.

ஜீவநதி ஒரு கனதியான வளம் மிகுந்த பகைப்புலத்திலிருந்து ஊற்றெடுப்பதனால் என்றும் வற்றாத வளம் கொளிக்கும் பெருநதியாகப் பிரவகிக்கும். பிரவாகிக்க வேண்டுமென வாழ்த்துகிறேன்.□□□


## ஜீவநதியின் தொடர் வரவுக்கு கை கொடுத்தோர்.

**விநியோகத்தில் உதவியோர்**

1) க. சத்தியசீலன்
2) க. திலகநாதன்
3) ச. லலீசன்
4) திருமதி கோ. தேவகி
5) மு. அநாதரட்சகன்
6) த. சிவகுமார்
7) திருமதி கு. கலாமணி


**விளம்பர அன்பளிப்பு தந்த அன்பு நெஞ்சங்கள்**

1) Info System உரிமையாளர்
2) கட்டைவேலி.நெல்லியடி.ப. நோ.கூ. சங்கம்
3) துளசி வீடியோ சென்ரர் உரிமையாளர்
4) நெல்லை சில்க்ஸ் உரிமையாளர்
5) சஜா ரெக்ஸ் உரிமையாளர்
6) திருமால் பேக் கவுஸ் உரிமையாளர்
7) கதிரவன்ஸ் பாதணி நிலைய உரிமையாளர்
8) கோ.தவராசா.
9) நியூ கிருஷ்ணா cream house உரிமையாளர்
10) Dora உரிமையாளர்
11) R. V. Electricals உரிமையாளர்
12) இரத்தினசிங்கம் உரிமையாளர்
13) Jana M. T. பாதணி நிலையம்
14) Mayura gift centre உரிமையாளர்
15) நியூ star ரெயிலறிங் உரிமையாளர்
16) பாபா motors உரிமையாளர்
17) Jeya motors உரிமையாளர்
18) செல்லமுத்தூஸ் உரிமையாளர்
19) பவித்திரா ஆடையக உரிமையாளர்
20) பார்த்திபா Bajaj and motor உரிமையாளர்
21) ஆனந்தா ஸ்ரோர்ஸ் உரிமையாளர்
22) Y. M. C. A.
23) Everest shoe palace உரிமையாளர்
24) விதுஷா பான்சி and Bata உரிமையாளர்
25) மக்கள் வங்கி(வல்வெட்டித்துறை) முகாமையாளர்
26) Yaso text உரிமையாளர்
27) ஜெயசெந்தினி நகைமாட உரிமையாளர்
28) Royal sports shop உரிமையாளர்
29) Srikanth ecence and grocery உரிமையாளர்
30) Mohan Mobile Video உரிமையாளர்
31) NSB(பருத்தித்துறை). முகாமையாளர்
32) கலைவாணி உரிமையாளர்
33) P. C பார்க் உரிமையாளர்
34) வர்ஷன் எலக்ரோணிக்ஸ் உரிமையாளர்
35) தேவா புகைப்படக் கலையகம் உரிமையாளர்
36) நியூ சிற்றி எலக்ற்றோணிக்ஸ் உரிமையாளர்




# NEW CITY ELECTRONIC

*Phone, TV, VCR, VCD - DVD, Radio, Fan* மற்றும் மின்சார உபகரணங்களை சிறந்த முறையில் திருத்துவதற்கும் உதிரிப்பாகங்களை பெற்றுக் கொள்வதற்கும் வாடிக்கையாளர்களின் ஏகமனத் தெரிவாக விளங்குவது



**நியூ சிற்றி எலக்ரோனிக்**






V.V.T றோட்
உடுப்பிட்டி.

உரிமையாளர்,
S.நவீன்றாஜா

# MoHAN'S MOBILE VIDEO

*Ever ready to glorify all your home entertainments*
*Weddings.*
*Birthdays*
*House warning ceremonies*
*Puberty ceremonies*



T.P - 777046120


S.Mohanraj
SEGAR ILLAM
VATHIRY.

# STUDIO THEVA

பிறந்தநாள் கொண்டாட்டமா, திருமண விழாக்களா, பூப்புனித நீராட்டு விழாக்களா வண்ணமயமான படப்பிடிப்பிற்கு நீங்கள் நாட வேண்டியது.

**தேவா புகைப்படக் கலையகம்**

(கறுப்பு, வெள்ளை வர்ணப்படப்பிடிப்பாளர்)




மத்திய மகாவித்தியாலயவீதி
நெல்லியடி.


# Varsan Electronics

**இன்றைய இலத்திரனியல் யுகத்தில் தரமான பொருட்களுக்காய் வேறெங்கும் அலையாமல் உங்கள் மனம் கவர்ந்த அனைத்து வகை இலத்திரனியல் சாதனங்களையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாட வேண்டியது.**

## வர்ஷன் இலக்ற்றோனிக்ஸ்




கொடிகாமம் வீதி
நெல்லியடி.
T.P.0777112122




## கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்.

**எமது சங்கச் சேவைகள் :**



நுகர்ச்சிச் சேவை
தரமான நூலக சேவை
கிராமிய வங்கிச் சேவை
புலமைப்பரிசில் வழங்கல்
வாடகைச் சேவைகள்
தரமான திரைப்படக்காட்சிக்கூடாக புதிய ரசனையை ஏற்படுத்துதல்
எரிபொருள் சேவை
விவசாய சேவை
நூல்வெளியீடும் விமர்சனங்களும்
கூட்டுறவுக் கலாசாரப் பெருமன்றம்
"சங்கம் செய்தி" மாதாந்த வெளியீடு.



தொலைபேசி இலக்கம் :- 0212263263 தொலைநகல் 0212263263
0212264474, 0212264725

கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்கம் கரவெட்டி.


இச்சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாநிதி த.கலாமணி அவர்களால் சதாபொன்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.


சுதாறேட் சென்ரர்
Sutha Trade Centre
உங்களுக்குத் தேவையான
சகல கட்டடப்பொருட்களையும் வாங்க
நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்
Sutha Trade Centre
நெல்லியடியின்
சிறந்த கட்டடப் பொருட்கள் விற்பனையாளர்
பிரதான வீதி,
நெல்லியடி, கரவெட்டி

# EMERALD HARD WARE STORES


நீண்ட காலமாக



*TOKYO சிமெந்து

*அன்ரன் PVC குழாய்கள்

*SURIYA LACK PAINT



முகவர்களாக விளங்கி உடுப்பிட்டியில் தன்னிகரில்லா
சேவையை வழங்கி வருபவர்கள்.

## EMERALD HARD WARE STORES.

கட்டட நிர்மாணத்திற்கு தேவையான அனைத்து பொருட்களையும்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

யாழ்ப்பாண வீதி,
உடுப்பிட்டி.

T.P- 0212263468